ஜெயமோகன்

புல்வெளி தேசம்

ஆஸ்திரேலியப் பயணம்

ஜெயமோகன்
புல்வெளி
தேசம்

ஆஸ்திரேலியப் பயணம்

புல்வெளி தேசம்

ஆஸ்திரேலியப் பயணம்

ஜெயமோகன்

கிழக்கு பதிப்பகம்

ஜெயமோகன்

பிறந்தது 1962, ஏப்ரல் 22ல். பள்ளி நாள்களில் ரத்னபாலா என்கிற சிறுவர் இதழில் முதல் கதையை எழுதினார். 1987ல் கணையாழியில் எழுதிய 'நதி' சிறுகதை பரவலாகக் கவனம் பெற்றது. 1988ல் எழுதப்பட்ட 'ரப்பர்' நாவல் அகிலன் நினைவுப்போட்டியின் பரிசைப் பெற்றது. இது தவிர கதா விருதும் சம்ஸ்கிருதி சம்மான் தேசிய விருதும் பெற்றுள்ளார். இவர் எழுதிய விஷ்ணுபுரம் தமிழ் இலக்கிய உலகில் பெரிய கவனத்தைப் பெற்றதோடு விவாதத்தையும் ஏற்படுத்தியது. இவரது படைப்புகள் தொடர்ந்து தமிழ் இலக்கிய உலகில் அதிர்வலைகளையும் புதிய சாத்தியங்களையும் ஏற்படுத்திய வண்ணம் உள்ளன. தமிழ் மற்றும் மலையாளத் திரைப்படத் துறைகளிலும் இவரது பங்களிப்பு தொடர்கிறது.

நண்பர் ஈரோடு கிருஷ்ணன் அவர்களுக்கு...

பொருளடக்கம்

புதிய விழிகள்...

புதிய புல்வெளியில்...

1. பயணம்

2. புல்வெளிதேசம்

3. புதர்த் தீ

4. எழுத்தாளர் விழா

5. தங்கவேட்டை

6. வீடு, சாலை, வெளி

7. கான்பரா

8. கலிபோலி

9. கலைக்கூடம்

10. கங்காரு

11. காடும் வீடும்

12. பிலம்

13. வேட்டையும் இரையும்

14. அறைகூவலும் ஆட்டமும்

15. துறைமுகம்

16. மண்ணின் மனிதர்கள்

17. நீலமலை

18. ரயிலில்

19. நதிக்கரையில்

20. மெல்பேர்ன்

21. விழாவும் விடையும்

22. ஊர் திரும்புதல்

23. கடலின் அலை

24. சுவையறிதல்

25. ஆஸ்திரேலியாவில் இனவெறித் தாக்குதல்

புதிய விழிகள்...

ஒ ருநாட்டில் வாழ்ந்து உணர்ந்து அதை அறிவதற்கும் ஓரிருநாட்களில் அங்குசென்று அதை அறிவதற்கும் பெரும் வேறுபாடுண்டு. உண்மையில் அங்கே வாழ்பவர்கள் அறியாத பலவற்றை சிலநாட்கள் வந்துசெல்பவர் அறியமுடியும். காரணம் அவரது பார்வை பழகாமலிருப்பதுதான். தேவை தேவையின்மை, நன்று தீது என அது பகுக்கப்படாமலிருக்கிறது.

இவ்வியல்பையே கலைகள் செய்கின்றன. ஒவ்வொரு நாளும் காணும் ஒரு பொருளை ஓவியத்தின் சட்டகத்திற்குள் காணும்போது அறிமுகம் அழிப்பு ஒன்று நிகழ்கிறது. அப்பொருள் புதியகோணத்தில் தென்படத்தொடங்குகிறது. பயணக்கட்டுரைகளின் பயன்மதிப்பு இதுவே.

நான் எழுதிய பயணக்கட்டுரைகளில் முதலில் நூல்வடிவம் பெற்றது இதுதான். ஆஸ்திரேலியாவின் சில பகுதிகளில் நான் செய்த பயணங்களைப் பற்றிய குறிப்புகள் இவை. என் ஊரின் நினைவுகளிலிருந்து ஆஸ்திரேலியாவின் நிலத்திற்கும் அந்நிலத்தில் இருந்து அதன் வரலாற்றுக்கும் அவ்வரலாற்றில் இருந்து சில மானுட அறிதல்களுக்கும் செல்லும் ஒரு பயணம் இந்நூலில் உள்ளது.

பத்தாண்டுகளுக்கும் மேலாக என் பயணத்துணைவராக இருந்து வருபவர் வழக்கறிஞர் கிருஷ்ணன். அவரால் ஈரோடு எனக்கு இனிய ஊராகவும் இருந்து வருகிறது. இந்நூல் அவருக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது என்பதே இதை எனக்கு மேலும் இனிதாக்குகிறது.

ஜெயமோகன்

அக்டோபர் 2015

புதிய புல்வெளியில்...

உ தயம் மாத இதழும் மெல்பேர்ன் தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்திய விழாவுக்காக நானும் என் மனைவி அருண்மொழி நங்கையும் 2009 ஏப்ரல் முதல் ஒரு மாதம் ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் செய்த அனுபவங்கள் இவை.

பொதுவாக பயணக் கட்டுரைகளுக்கு சென்ற காலகட்டங்களில் இருந்த முக்கியத்துவம் இப்போது உண்டா என்ற ஐயம் எனக்கு இருந்தது. ஏனென்றால் இது ஊடக யுகம். உலகம் முழுக்க நம்முடைய தொலைக்காட்சியில் ஓடிக்கொண்டிருக்கிறது. நாம் பார்க்காத இடங்களே குறைவு. அது ஒரு மாபெரும் சாளரம்.

ஒரு தமிழ்ப்படத்தில் 'மலைராணி முந்தானை சரியச் சரிய' என்ற பாடலில் சில கணங்கள் நயாகரா நீர்வீழ்ச்சியைக் காட்டுவார்கள். அருவியைப் பார்ப்பதற்காகவே அக்காலத்தில் மாணவர்களாக இருந்த நாங்கள் அந்தப் படத்தை பலமுறை பார்த்திருக்கிறோம். மெக்கென்னாஸ் கோல்ட் படத்தில் கிராண்ட் கான்யன் சரிவுகளைப் பார்ப்பதற்காக நூறுமுறை அந்தப் படத்தைப் பார்த்தவர்கள் உண்டு. இன்று அதல்ல நிலைமை. இன்று காமிரா தொடாத கன்னிநிலமே மண்மீது இல்லை.

ஆகவே பயணக்கட்டுரைகள் காலாவதியாகிவிட்டன என எண்ணிக் கொண்டிருந்த எனக்கு 2008 செப்டெம்பரில் நான் நண்பர்களுடன் சென்ற இந்தியப் பயணம் பெரிய திறப்பாக இருந்தது. அப்பயணத்தைப் பற்றிய தகவல்களை தொடர்ச்சியாக இணையத்தில் ஏற்றிக் கொண்டே இருந்தேன். அதற்கு உலகம் முழுக்க இருந்த வாசக வரவேற்பு பிரமிப்பூட்டியது. பயணம்

எப்போதுமே ஒரு பெரும் கவர்ச்சிதான். எத்தனை பார்த்தாலும் பயணத்தைப் பற்றிப் பேசுவது மனிதர்களுக்குப் பிடிக்கும் என எண்ணிக்கொண்டேன்.

இது என்னுடைய முதல் பயணக் கட்டுரை நூல். இந்நூலை நான் எழுதிய விதம் குறித்துச் சொல்லவேண்டும். குறிப்புகளை எடுத்துக் கொண்டு சீராக எழுதப்பட்ட பதிவுகள் அல்ல இவை. பயணம் முடிந்து இரண்டு வாரங்களுக்குப் பின்னர் நினைவில் இருந்து எடுத்து எழுதியவை. எந்த விஷயம் நினைவில் நிற்கிறதோ அதுவே முக்கியமானது என்பதே என் நியதியாக இருந்தது. தேவையான சில தகவல்களை மட்டும் குறிப்புகள் மற்றும் அந்த இடங்களில் சேகரித்த விளம்பரக் காகிதங்களில் இருந்து எடுத்தேன்.

இந்தக் கட்டுரைகளின் வடிவம் நினைவுகூர்தலாக இருப்பதை வாசகர்கள் கவனிக்கலாம். ஓர் இந்திய நினைவில் இருந்து ஆஸ்திரேலிய அனுபவம் நோக்கிச் செல்வதாக இவற்றின் அமைப்பு உள்ளது. தெரிந்த மொழியை வைத்து தெரியாத மொழியைக் கற்பதைப்போல நாம் அறிந்த நிலமே அறியாத நிலத்தை அடையாளப்படுத்துகிறது. நம் மொழிபோல நம் நிலமும் கூடவே வந்து கொண்டிருக்கிறது.

என்னுடைய பயணத்தோழர் நண்பர் ஈரோடு கிருஷ்ணன். வழக்கறிஞர் தொழில் செய்பவர். சிறந்த வாசகர். சலிக்காத ஆர்வமும் பயணவெறியும் கொண்டவர். என்னுடைய மனவேகத்துக்கு ஈடாக அல்லது ஒருபடி மேலாக எப்போதும் இருப்பவர். எந்தப் பயணத்திலும் ஒரு புது இடத்தைப் பார்த்தால் அவருடன் ஒரு மானசீக உரையாடலுக்குள் செல்வதுண்டு நான். நண்பருக்கு இந்நூல் சமர்ப்பணம்.

ஜெயமோகன்

1. பயணம்

2009 ஏப்ரல் ஏழாம்தேதி காலையில் சென்னை வந்திறங்கினேன். நண்பர் கெவின்கேர் பாலா சென்னை எழும்பூர் ரயில்நிலையத்துக்கு வந்திருந்தார். காலை நாலரை மணிக்கே வந்துவிட்டார் என்றார். ரயில் நேரமே ஆறரைதான். கேட்டால் எழும்பூர் ரயில்நிலையத்தை அதிகாலையில் பார்ப்பது பிடிக்கும் என்று சொன்னார். அவரது வீட்டுக்குச் சென்று காபி குடித்ததுமே நேரடியாக இலக்கிய சர்ச்சைக்குள் புகுந்துவிட்டேன்.

பாலாவின் மனைவி விஜியை நான் நேரில் அப்போதுதான் பார்க்கிறேன். தொலைபேசியிருக்கிறேன், இணையதளத்தில் தொடர்பு கொண்டிருக்கிறேன். நிறைய பேசினோம். அவரது குழந்தைகள் பள்ளிக்குச் சென்று கொண்டிருந்தார்கள். பள்ளிக்குச் செல்லவில்லையா என்று கேட்டேன். பள்ளிக்குத்தான் செல்கிறார்கள் என்றார். சீருடை இல்லையா என்றேன். அவர்கள் ஜெ.கிருஷ்ணமூர்த்தி பள்ளியில் படிக்கிறார்கள். அங்கே சீருடை, சீரான கல்வி ஏதும் இல்லை. அவரது பெண் இப்போது ஒன்பதை நெருங்குகிறாள். தேர்வு முறைக்குள் நுழையப் போகிறாள். தேர்வு உருவாக்கும் பதற்றம் இப்போதுதான் அறிமுகமாகிறது என்றார் பாலா. ஆனால் எனக்கு அது முதல் தேர்வு எழுதும்வரைதான் இருக்கும் என்று தோன்றியது.

பாலா அலுவலகம் சென்றார். விஜியும் அருண்மொழியும் ஒரு காரில் துணிகளும் பொருட்களும் வாங்கச் சென்றார்கள். நான் பாலா ஏற்பாடு செய்த வாடகைக்காரில் சென்னையில் சுற்றினேன். முதலில் நேராக என் பயணமுகவரிடம் சென்று அன்னியச் செலாவணி வாங்கினேன். அதன்பின் மனுஷ்யபுத்திரனைப் பார்க்கப்போனேன். அவரது சிறிய ஏஸி அறையில்

வழக்கம்போன்ற உற்சாகமும் சோர்வும் சரிவிகிதமாகக் கலந்த மனநிலையில் இருந்தார். அவரிடம் என் நூல்களை வாங்கிக்கொண்டேன்.

அங்கிருந்து கிளம்பி எனி இண்டியன் கடைக்குப்போய் 'ஈழ இலக்கியம் விமரிசனப் பார்வை' நூலை 20 பிரதிகள் வாங்கிக் கொண்டேன். தி.நகரில் காரை ஒரு கிலோமீட்டர் தள்ளியே நிறுத்த முடிந்தது. கையில் சுமையுடன் வெயிலில் அலைய வேண்டியிருந்தது. அங்கிருந்து ராயப்பேட்டையில் வசந்தகுமாரின் வீடு. தமிழினி நூல்கள் சிலவற்றை வாங்கிக்கொண்டேன்.

மதியம் மீண்டும் பாலா வீடு. பாலா வந்தார். சாப்பிட்டுவிட்டு நானும் பாலாவும் விஜியும் லைஃப் ஸ்டைல் கடைக்குச் சென்று இரு சட்டைகள், பெல்ட் என சில பொருட்களை வாங்கிக் கொண்டோம். எனக்கு பொதுவாக எல்லா சட்டைகளும் நன்றாக இருப்பதாகவே பட்டது. அவர்கள் தேர்வு செய்ததை வாங்கிக் கொண்டேன்.

மாலை எட்டரை மணிக்கு விமான நிலையம் கிளம்பினோம். ஆஸ்திரேலியா உள்ளே நுழையும் பொருட்களுக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்திருக்கும் நாடு. தாவரப்பொருட்கள், விலங்குத் தயாரிப்புகள் மேல் மிகக் கடுமையான கண்காணிப்பு. விதைகளும் நோய்களும் பரவாமல் இருப்பதற்காக. ஆகவே எதையுமே கொண்டு செல்ல வேண்டியதில்லை என்ற முடிவில் இருந்தோம்.

ஒன்பதேமுக்காலுக்கு சென்னை சர்வதேச விமானநிலையத்துக்குள் நுழைந்துவிட்டோம். முதல் தேடலிலேயே அருண்மொழி எனக்குத் தெரியாமல் உள்ளே வைத்திருந்த கத்தரிக்கோலை எடுத்து இது என்ன என்று கேட்டார்கள். பரிதாபமாக 'தெரியாது' என்று சொல்லி அருண்மொழியை கடுப்பாகப் பார்த்தேன். புத்தகங்கள் கட்டுக்கட்டாக இருந்ததனால் அதிகமாக கேள்வி ஏதும் கேட்கவில்லை.

பன்னிரண்டு மணிக்கு விமானத்தில் ஏறி அமர்ந்தோம். தூங்கலாம் தான். ஆனால் தூக்கம் வரவில்லை. தூக்கம் வரும்போது எதையாவது தின்னக் கொண்டுவந்தார்கள். விளக்கைப் போட்டார்கள். காலை ஆறு மணிக்கு பாங்காங்.

பாங்காங் பிரம்மாண்டமான விமான நிலையம். அதில் எல்லாம் தெரிந்த சகஜபாவனையுடன் நடந்தேன். பொதுவாக இந்தியாவுக்கு வெளியே எதுவும் குளறுபடி ஆவதில்லை என்பதே என் அனுபவம். தேவையான அனைத்துமே எழுதப்பட்டிருக்கும். கேட்டால் சரியான பதில்கள் கிடைக்கும். ஆனால் ஒரு சாக்லேட் டிரிங்குக்கு மூன்று அமெரிக்க டாலர் என்றதை ரூபாய்க்கு மாற்றிப் பார்த்து மன அதிர்ச்சி அடைந்தேன்.

ஒன்பதரை மணிக்கு தாய் ஏர்வேய்ஸின் விமானம். விமானத்தில் பாதி இடம் காலியாகவே இருந்தது. படங்களை தேர்வு செய்து போடலாம். நான் ஏற்கெனவே பார்த்த எனிமி இன் த கேட்ஸ் என்ற படத்தை மீண்டும் பார்த்தேன். முதல் தடவை பார்த்தபோது இருந்த வேகம் கொஞ்சம்கூட இல்லை. சவசவ படம். தூங்கிவிட்டேன். இந்திய சைவ உணவு இருமுறை கொண்டுவரப்பட்டபோது மட்டுமே விழித்தேன்.

எட்டாம்தேதி இரவு எட்டு மணிக்கு மெல்பேர்ன் வந்தேன். முருகபூபதியும் டாக்டர் நடேசனும் விமானநிலையம் வந்திருந்தார்கள். குளிர் லேசாக இருந்தது. அவர்கள் கோட்டுகள் கொண்டு வந்திருந்தார்கள். முருகபூபதியின் வீட்டுக்கு வந்தோம். சாப்பிட்டுவிட்டு படுத்துக்கொண்டோம்.

அசோகமித்திரன் ஒருமுறை எழுதினார் — மிகமிகக் குறுகலான இடத்தில் நீங்கள் சௌகரியமாக இருக்கிறீர்கள் என்னும் எண்ணத்தை எப்படி உருவாக்குவதென விமானத்தில்தான் பார்க்கலாம் என. கைகால் நீட்டிப் படுத்தபோதுதான் விமானத்தின் இடுங்கல் புத்தியை அறைந்தது.

2. புல்வெளிதேசம்

பா ங்காங் முதல் மெல்பேர்ன் வரையிலான பயணம் கொஞ்சம் நீளமானது. விமானப்பயணங்களில் என்னால் தூங்கமுடிவதில்லை. அந்த அளவுக்குப் பழகவில்லைபோலும். மண்ணிலிருந்து முப்பதாயிரம் அடி உயரத்தில் இருக்கிறோம் என்னும் உணர்வை வெல்லவே முடிவதில்லை. மேலும் காது அடைத்துக்கொள்ளும்போது விமானத்தின் இசையும் இரைச்சலும் பேச்சுகளின் ஒலியும் கலந்து கீழ்ஸ்தாயியில் ஒலிப்பதனால் ஒருவகையான கனவுநிலை உருவாகிறது. காய்ச்சலின்போதோ சிலவகை மாத்திரைகள் உண்ணும்போதோ உருவாவதுபோன்ற ஒரு அரை மயக்கநிலை.

இரவு எட்டுமணிக்கு மெல்பேர்ன் வந்துசேர்ந்தோம். பிரமையிலேயே வெளியே வந்து அம்புக்குறிகளால் வழிகாட்டப்பட்டு பெட்டிகளை மீட்கும் இடத்துக்கு வந்தேன். ஆஸ்திரேலியா அவர்கள் மண்ணுக்கு நுழையும் விஷயங்களைப்பற்றி மிகக் கவனமாக இருக்கிறது. பல்லாயிரம் கிலோமீட்டர் கடலால் சூழப்பட்ட அந்நிலம் அதற்கே உரிய இயற்கைச்சமநிலை கொண்டது. அங்கிருந்த தாவரங்களும் விலங்குகளும் தங்களுக்கே உரிய தனிப்பாதையில் பரிணாமம் கொண்டவை. பல உயிரினங்கள் அங்கே மட்டுமே உள்ளவை, மிகச்சிறந்த உதாரணம் கங்காரு.

அங்கே குடியேறிய வெள்ளையக் காலனியர்கள் தங்களுக்குரிய தாவரங்களையும் உயிரினங்களையும் அங்கே கொண்டுவந்து சேர்த்தார்கள். புதியசூழலில் உயிர்ச்சமநிலை இல்லாத நிலையில் பல உயிர்கள் மிதமிஞ்சி பெருகின. ஆங்கிலத்தில் எதிர்மறையான அபார வளர்ச்சியைச் சொல்ல ‘கான்ஸரஸ்’ என்கிறார்கள். உதாரணமாக ஆஸ்திரேலியாவுக்கு வந்த முயல் ஒருகட்டத்தில் அக்கண்டத்தையே மூடிவிடுமளவுக்கு பெருகியது. பெரும்

திட்டங்கள் மூலம் வருடக்கணக்கில் கொன்று அதை ஒழிக்க வேண்டியிருந்தது – இன்னும் ஒழிக்க முடியவில்லை.

இப்போது ஆஸ்திரேலியா இதில் மிகமிகக் கவனமாக இருக்கிறது. தாவரப்பொருட்கள், மாமிசப்பொருட்கள் போன்றவற்றை எவ்வகையிலும் அனுமதிப்பதில்லை. எங்களிடம் அப்படி எந்தப்பொருளும் இல்லை. அருண்மொழி வைத்திருந்த ஷாம்பூவைப் பிடுங்கி பிளாஸ்டிக் பையில் போட்டு குப்பையில் வீசினார் பரிசோதகர். என் பெட்டியைத்திறந்து பார்த்தார். உள்ளே அடுக்கடுக்காக புத்தகங்கள். 'என்ன புத்தகங்கள்?' என்று கேட்டார். 'நான் எழுதிய நூல்கள்' என்றேன். மேற்கொண்டு பார்க்காமல் 'நீங்கள் போகலாம்' என்றார்.

வெளியே நல்ல குளிர் இருக்கும் என்று சொல்லியிருந்தார்கள். பெட்டியுடன் வெளியே செல்லும்போதே குளிரடித்தது. ஆனால் அது ஒரு பிரமைதான், அவ்வளவு பயங்கரமான குளிர் ஏதும் இல்லை. வெளியே செல்லும் வழியிலேயே டாக்டர் நடேசனும் முருகபூபதியும் எங்களைப் பார்த்துவிட்டார்கள். கையசைத்தார்கள். இந்த விசித்திரமான விஷயத்தை பின்னர் கவனித்தேன். இந்தியாவில் நாம் ஓர் விமானநிலையத்தில் இறங்கினோம் என்றால் நம்மை அடையாளம் காண கொஞ்சம் கஷ்டப்படுவார்கள் — நாம் ரஜினிகாந்தாக இல்லாமலிருக்கும்பட்சத்தில். வெளிநாட்டில் அந்தச்சிக்கல் இல்லை. உடனே கண்டுகொள்கிறார்கள். மாநிறத்தோலே ஒன்றிரண்டுதான் கண்ணில்படும் என்பதனால்தான்.

டாக்டர் நடேசன் கோட்டு கொண்டுவந்திருந்தார். ஆவலாகப் போட்டுக்கொண்டேன். 'ஒண்ணும் கேக்கலியா?' என்றார் முருகபூபதி.'புஸ்தகங்களை பாத்ததுமே விட்டுட்டான்' என்றேன். 'இலங்கைன்னா புஸ்தகம் இருந்தா தள்ளிகிட்டு போயிடுவான்' என்றார் . பெட்டிகளைத்தள்ளியபடி நடந்து லிஃப்ட் வழியாகச்சென்று கார் பார்க்கிங் பகுதியை அடைந்தோம். முதல் உலக நாடுகளுக்கே உரிய சுழல்சுழலான மாபெரும் கார் நிறுத்துமிடம். அது எஃப் பிளாக்கா இல்லையா என்று டாக்டருக்கும் முருகபூபதிக்கும் குழப்பம். ஒருவழியாக காரைக் கண்டுபிடித்து கிளம்பினோம்.

மெல்பேர்ன் விமானநிலையம் வழக்கம்போல மெல்பேர்னுக்கு சம்பந்தமில்லாமல் தூரத்தில் இருந்தது. அங்கிருந்து கிளம்பி ஒருமணிநேரம் கிட்டத்தட்ட அறுபது கிலோமீட்டர் சென்றால்தான் முருகபூபதி வசிக்கும் கிராமம் வருகிறது. அது மெல்பேர்னின் வெளிஎல்லை. அங்கிருந்து கிளம்பி மெல்பேர்னைத்தாண்டி மறுபக்கம் சென்றால்தான் டாக்டர் நடேசனின் வீடிருக்கும் பகுதி.

இரவு பத்து மணிக்கு முருகபூபதி வீட்டுக்குச் சென்றோம். லெ.முருகபூபதி இலங்கையில் நீர்க்கொழும்பு பகுதியைச் சேர்ந்தவர். ‘தினக்குரல்’ நாளிதழில் நெடுங்காலம் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். அங்கிருந்து புலம்பெயர்ந்து ஆஸ்திரேலியா வந்து பதினாறு வருடங்களாகின்றன. அவரது இரு மகள்களுக்கும் திருமணம் ஆகி தனியாக இருக்கிறார்கள். மகன் இருபதுவயதில் ஆஸ்திரேலிய ராணுவத்தில் சேர்ந்து மறுவருடமே ஒரு ஆஸ்திரேலியப்பெண்ணை மணமும் செய்துகொண்டிருக்கிறார்.

‘அவன் கிழக்கு திமோருக்கு போகிறான்’ என்றார் முருகபூபதி. கிழக்கு திமோர் சுதந்திரம் கிடைத்தபின்னரும்கூட ஐக்கியநாடுகள் சபையின் கண்காணிப்பில்தான் இருக்கிறது. ஆஸ்திரேலிய ராணுவம் அங்கே அமைதிப்படையாக இருந்துகொண்டிருக்கிறது. ‘அங்கே போர் ஒண்ணும் இல்லியே’ என்றேன். ‘இருந்தா என்ன? இவனாகவே விரும்பித்தானே சேர்ந்தான்...’ என்றார் முருகபூபதி. அவரது மனைவி மாலதி வீட்டில் இருந்தார்கள்.

மைக்ரோ வேவ் ஓவனில் வைத்து சூடுசெய்த இடியப்பம் சிக்கன் குழம்பு சாப்பிட்டேன். மதியம் சாப்பிடாதது போல் இருந்தது. அல்லது சாப்பிட்டது எந்நேரம் என்ற குழப்பம். எங்களுக்கான அறையில் பெட்டிகளை வைத்துக்கொண்டு வந்து அமர்ந்தோம். முருகபூபதி அவர் தமிழகத்துக்கு முதல்முறையாக வந்ததைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்தார். கி.ராஜநாராயணன், ஜெயகாந்தன், ராஜம் கிருஷ்ணன் ஆகியோரைச் சந்தித்தாராம். அவரது பூர்வீகம் திருநெல்வேலி. மறைந்த எழுத்தாளர் தொ.மு.சி.ரகுநாதனுக்கு அவர் உறவினர். அவரது உறவினர்கள் சிலர்

அப்போதும் நெல்லையில் இருந்தார்கள். பாஸ்கரத்தொண்டைமானுடைய வீட்டைச் சென்று பார்த்து புகைப்படம் எடுத்துக்கொண்டதாகச் சொன்னார்.

பன்னிரண்டு மணிக்குத் தூக்கம் வராமலேயே தூங்கச் சென்றோம். குளிரில் போர்வைக்குள் சுருண்டு தூங்குவது எனக்குப் பிடிக்கும் – முதல் அரைமணிநேரம். அதன் பின் கைகால் வலிக்கும். மாடியிலிருந்து கீழே விழுந்த உடல் போல கைகால் பரப்பி தூங்குவதுதான் ஊரில் என் வழக்கம்.

காலையில் ஏழுமணிக்கு எழுந்துவிட்டேன். முருகபூபதி உரக்க ரேடியோ வைத்திருந்தார். ஆஸ்திரேலியத் தமிழர்களுக்கு வானொலி முக்கியமானது. அதுதான் ஊருடனான தொடர்பு. தமிழில் கதைத்துக்கொண்டே இருந்தது – நுரைத்துக்கொண்டே இருந்தது என்று சொல்ல வேண்டும். எழுந்ததும் தலையைச் சுற்றியது. தமிழக நேரத்தின்படி அப்போது இரவு ஒன்றரை மணி. உடல் அந்த நேரத்தைத்தான் அறியும். திருவனந்தபுரம் மிருகசாலைக்கு வந்த ஒரு அமெரிக்கப்புலி வாழ்நாள் முழுக்க விசுவாசமாக உடலில் அமெரிக்க நேரத்தைப் பேணியது என்பார்கள். ராத்திரியில் பிறந்த குழந்தைகள் ஒருமாதம் வரை ராத்திரியையே விழித்திருக்கும் நேரமாக எண்ணிக்கொண்டு நள்ளிரவில் விளையாடி தாய்தந்தையரை படுத்தி எடுக்கின்றன.

ஜெட்லாக் என்னும் உடல்நேரச் சிக்கலைத் தீர்க்க சிறந்த வழி என்பது சென்ற ஊரின் நேரத்தை மூர்க்கமாக முதல்நாளே பின்பற்றி விடுவதுதான். கஷ்டம்தான். தூக்கித் தூக்கி போடும்தான். ஆனால் அந்த ஒருநாளைத் தாண்டிவிட்டால் பின்னர் பிரச்சினை இல்லை.

அருண்மொழியை அதையெல்லாம் சொல்லி ஏற்கவைத்துக் கொண்டுவந்திருந்தாலும் புதைந்துபோய் தூங்கிக் கொண்டிருந்தாள். மெத்தைப்போர்வையைத் தூக்கி வீசி புஜங்களைப் பிடித்துத் தூக்கி அகழ்ந்து எடுத்து உட்காரச்செய்து எழுப்பினேன். கொட்டாவிகள் விட்டபடி வந்து காபி சாப்பிட்டாள். காலையில் ரொட்டியும் குழம்பும் சாப்பிட்டதுமே கொட்டாவி விட்டபடி கண்கள் செருக உட்கார்ந்திருந்தாள். நான் ஆர்வமாக இலக்கியம்பேசி அசப்பில் பார்த்தால் ஆளைக் காணவில்லை. போய்ப்பார்த்தேன். திரும்பி தூங்க முயன்றுகொண்டிருந்தாள். அப்படியே அள்ளி மருந்துக்குப்பியைக் குலுக்குவதுபோல குலுக்கினேன். ‘இன்னைக்கு தூங்கினா

நீ ஒருவாரம் தூங்கிட்டிருப்பேஞ்வெளியே போகிறப்ப விட்டுட்டுபோயிடுவேன். அப்றம் கேட்கக்கூடாது' என்று சொல்லி மிரட்டி திருப்பி கூட்டிக்கொண்டு வந்தேன்.

காலையில் முருகபூபதி மீண்டும் விமானநிலையம் சென்று மலையக எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்பை கூட்டிவந்தார். தெளிவத்தை ஜோசப் சிறிய உற்சாகமான கரிய மனிதர். கொழும்புவில் ஒரு சாக்லேட் நிறுவனத்தின் கணக்கெழுத்தாளர். எழுபது வயது தாண்டிவிட்டது. சமீபத்தில் நான் மானசீகமாக எந்த மூத்த எழுத்தாளரிடமும் இந்த அளவுக்கு நெருங்கவில்லை. மிகமிக உற்சாகமான சிரிப்பு, உரத்த குரல், அழுத்தம் திருத்தமானபேச்சு. மலையகத்தில் ஆரம்பத்தில் கொஞ்சநாள் ஆரம்பப்பள்ளி ஆசிரியராக இருந்திருக்கிறார். ஆரம்பப்பள்ளி ஆசிரியராக இருந்தவர்களை கூப்பிடு தூரத்திலேயே கண்டுபிடித்துவிடலாம். தெளிவத்தை ஜோசப்பின் 'காலங்கள் சாவதில்லை' என்னும் நாவலையும் சில சிறுகதைகளையும் நான் வாசித்திருந்தேன்.

முருகபூபதி மீன்வாங்கப்போவதாகச் சொன்னார். அவரும் நானும் அருண்மொழியும் ஜோசப்பும் அவரது காரில் கிளம்பி ஒரு பெரிய 'மால்'லுக்குச் சென்றோம். என் அப்பா எந்த ஊருக்குச் சென்றாலும் அந்த ஊர் சந்தையைப் பார்க்கச் செல்வார். 'சந்தை காணல்' என்று அதற்குப் பெயர். சந்தை பார்ப்பதற்காகவே கிளம்பிச்செல்வதும் உண்டு. சந்தையில் அந்தப்பகுதியின் வாழ்க்கையை மரத்தை விதை வடிவில் பார்ப்பதுபோலப் பார்த்துவிடலாம். விற்கப்படும் பொருட்கள் வழியாக அங்குள்ள விளைச்சலும் உற்பத்தியும் தேவையும் தெரியும். உதாரணமாக கன்யாகுமரிமாவட்டச் சந்தைகளில் நைலான் கயிறுகளும் நீலநிறமான பிளாஸ்டிக் ஷீட்டுகளும் நிறைய விற்கும் – ஈரமான மழைமிக்க நாடு என்பதனால். கூடவே அங்குள்ள மக்கள். மால்களும் அப்படித்தான்.

கடைகள்தோறும் வேடிக்கை பார்த்தோம். என்னை பெரிதும் கவர்ந்தவை இரண்டு. ஒன்று காய்கறிக்கடை. தேங்காய் அளவுள்ள ஊதாநிறமான கத்தரிக்காய்கள். பலவகையான கீரைகள். நம் நாட்டில் நினைத்தே பார்க்கமுடியாத அளவுள்ள முள்ளங்கிகள், உருளைக்கிழங்குகள்.

பலவகையான பீன்ஸ்கள். அவற்றை வாங்கியவர்களில் அதிகமும் சீன இனத்தவரே இருந்தார்கள். 'அவங்கதாம்பா ஒழுங்கா சமைச்சு சாப்பிடுகினம். வெள்ளைக்காரங்க வாங்கிதிங்கிறவங்க' என்றார் முருகபூபதி.

இரண்டாவது சுல்தான் என்னும் மாபெரும் இறைச்சிக்கடை. பெரிய மாட்டுத்தொடைகள் இயந்திரம் மூலம் கனகச்சிதமாக ஓவல் வடிவில் குறுக்காக வெட்டப்பட்டிருந்தன. நடுவே சிறிய வட்டமாக எலும்பு. பெரிய ஒரு பூவின் இதழ்போல இருந்தது. அவற்றை வரிசையாக அழகுற அடுக்கி பாலிதீன் உறைபோட்டு காட்சிக்கு வைத்திருந்தார்கள். விதவிதமான வெட்டிய இறைச்சிகள். சிவப்பின் நிறபேதங்கள். பிரம்மாண்டமான அல்வாக்கடைபோல. ஆழ்ந்த தூக்கத்தில் இருப்பதுபோல உறைந்த உரித்த பன்றிகள்.

கடைவாசலில் ஒருவன் இறைச்சியை சிறு துண்டுகளாக வெட்டி ஒரு கம்பியடுப்பில் எண்ணெய் பொசுங்கச் சுட்டு 'எங்கள் கம்பெனி விளம்பரத்துக்காக சார்' என சும்மா கொடுத்துக் கொண்டிருந்தான். சிறு குழந்தைகள் வாங்கி சப்பித்தின்றுகொண்டிருந்தன. 'நெஜம்மான அன்போட கொடுக்கிறான்' என்றார் தெளிவத்தை ஜோசப்.

ஏராளமான துருக்கியர்கள் தென்பட்டார்கள். பெரும்பாலும் பெரும் குடும்பங்கள். அதீத எடைகொண்ட அப்பாவும் அம்மாவும் குழந்தைகளும் தாத்தாவும் பாட்டியும் கொண்ட குடும்பம் ஒன்று சென்றது – ஒரு வெள்ளையானைக்கூட்டம்போல. அந்தக்கிராமத்தில் துருக்கியர் அதிகம் என்றார் முருகபூபதி. கரிய முக்காடு போட்ட பெண்களும் நிறைய தென்பட்டார்கள். அவர்கள் அரேபிய நேரத்தை கடைப்பிடிக்கிறார்கள். அரேபியா ஆயிரம் வருடம் பழைமையான நேரத்தை கடைப்பிடிக்கிறது.

வீட்டுக்கு வந்து மதியம் சாப்பிட்டோம். எனக்கு தூக்கக்கலக்கத்தில் பேச்சு அவ்வப்போது குழறியது. நான் பார்த்தபோது பலமுறை அருண்மொழியின் கண்விழிகள் மேலே செருகி இருந்தன. இருந்தாலும் பிடிவாதமாக அமர்ந்திருந்தோம்.

மதியம் தாண்டியதும் வெளியே சென்றுவரலாம் என்றார் முருகபூபதி. அருகே ஒரு சிங்கள பௌத்த கோயில் புதிதாகக் கட்டப்பட்டிருந்தது.

ஆஸ்திரேலியாவில் சிங்களர்கள் ஏராளமாக வந்து குடியேறி வலுவான சமூகமாக இருந்தார்கள்.

ஊருக்கு வெளியே ஒரு புல்வெளி நடுவே இருந்தது சிங்கள பௌத்தக் கோயில். இலங்கையில் பிரபலமாக இருப்பது தேரவாத பௌத்தம். ஸ்தவிரவாதம் என்று சமஸ்கிருதம். மாற்றமில்லாத என்று பொருள். ஹீனயானம் என்பதன் இன்னொரு பெயர். ஹீனயானிகள் – சிறிய பாதையைச்சேர்ந்தவர்கள் – என்பது மகாயானிகள் போட்ட பெயர். புத்தரையே மகாதர்மத்தின் பருவுடல்வடிவமாக பார்க்கும் மகாயான பௌத்தத்தின் நோக்கை ஏற்காமல் அவரை ஒரு வீடுபேறடைந்த ஞானியாக மட்டுமே காண்பவர்கள். ஆகவே இவர்களில் உருவவழிபாடு இருந்ததில்லை. பின்னர் உருவ வழிபாடு வந்தபோதுகூட அதில் மகாயான பௌத்தத்தின் இறைவழிபாட்டுத் தன்மைகள் பலதும் இருக்கவில்லை.

கான்கிரீட்டால் கட்டப்பட்ட கோயில். நாங்கள் சென்றபோது யாருமே இல்லை. ஒரு பிட்சு மட்டும் புன்னகைசெய்தபடி கடந்து சென்றார். ஒரு சதுக்கத்தின் நடுவே பெரிய புத்தர்சிலை. இந்தியாவில் உள்ளது போன்ற புத்தர் அல்ல. அலங்காரங்களும் பெரிய கிரீடமும் கொண்ட மைத்ரேய புத்தர். புத்தர் ஞானத்தின் அவதாரம் என நம்பும் தேரவாதிகள் அவர் மறுபடியும் வருவார் என எண்ணுகிறார்கள். அந்த இரண்டாம் புத்தரே மைத்ரேய புத்தர். அவர் பெரும் வலிமையுடன் தண்டிக்கும் புத்தராக வருவார் என நினைக்கிறார்கள். இந்த பௌத்தக் கருத்துருவம் சில நூற்றாண்டுகள் கழித்து பட்டுப்பாதை வழியாக மத்திய ஆசியாவுக்குச் சென்று கிறிஸ்துவின் மறுவருகை என்னும் கருத்தாக ஆகியது.

சதுக்கத்தின் நான்கு மூலைகளிலும் போதிசத்துவர்களின் சிறிய கோயில்கள். அவற்றுக்குள் சிறிய உலோகச்சிலைகள். நுட்பமான நகை போல அழகிய வேலைப்பாடுகள் கொண்ட சிலைகள் அவை. பொன்னிறமான சிலைகள் மூன்று. ஒருசிலை நீலவண்ணமானது.

அங்கே அனுராதபுரத்தில் இருந்து கொண்டுவரப்பட்ட போதி (அரசமரம்) மரத்தின் கிளையை நட்டு மிகுந்தசெலவில் அதற்கு தட்பவெப்ப நிலையில் இருந்து பாதுகாப்பளித்து வளர்த்து வருவதைக் கண்டோம். பல்லாயிரம்

வருடங்களுக்கு முன்பு அசோகரின் மகள் சங்கமித்திரை புத்தரின் செய்தியுடன் கையில் ஒரு அரசமரக்கிளையுடன் இலங்கைக்குச் சென்றாள். இலங்கையில் இன்றிருக்கும் பல புனித அரசமரங்கள் அந்த மரத்தின் வழித்தோன்றல்கள்தான்.

இருட்டுவது வரை அங்கிருந்துவிட்டு திரும்பிவந்தோம். குளிர ஆரம்பித்திருந்தது. இந்தியாவில் பல நூற்றாண்டுகளாக சேர்ந்து வாழ்ந்தாலும்கூட இஸ்லாமியருக்கு இந்துமதம் குறித்தும் இந்துக்களுக்கு இஸ்லாமியமதம் குறித்தும் ஒன்றுமே தெரியாது. அதேநிலைதான் இலங்கையிலும். ஈழத்தவர்களில் பௌத்தம் பற்றிய அறிமுகமோ ஆர்வமோ கொண்டவர்கள் மிக மிகக் குறைவு. இன்றைய பிரச்சினைகளுக்கு முன்னரேகூட அதுதான் நிலைமை. சிங்கள மொழியில் இருந்து ஒரு நல்ல படைப்புகூட தமிழர்களால் மொழிபெயர்க்கப்பட்டதில்லை.

திரும்பி வரும் வழியில் குருத்வாரா ஒன்றைப்பார்த்தோம். பெரிய வெங்காய வடிவக் கும்மட்டங்களுடன் தாஜ்மகாலை நினைவுறுத்தும் கட்டடம். ஆஸ்திரேலியாவில் சீக்கியர் ஒரு முக்கியமான சமூகம். இந்தியாவிலிருந்து புலம்பெயர்ந்து வந்துகொண்டே இருக்கிறார்கள். பிற சமூகத்தவர்களைப்போல அகதிகளாகவோ அல்லது தொழில்நிபுணர்களாகவோ இவர்கள் வரவில்லை. பெரும்பாலும் விவசாயம்செய்யவே வருகிறார்கள். நிலங்களை வாங்கி கடுமையாக உழைத்து விவசாயம் செய்கிறார்கள். ஆஸ்திரேலியாவில் அதிகமாக வாழைப்பழம் உற்பத்தி செய்பவர்கள் இவர்கள்தான். அவர்கள் தங்களை ஒரு மூடிய சமூகமாகவே வைத்திருக்கிறார்கள். திருமணங்கள் அதிகமும் இந்தியாவில் இருந்துதான்.

ஆஸ்திரேலிய வாழைப்பழம் இந்தியாவின் ரோபஸ்டா பச்சைவாழைப்பழத்தின் ஒரு வகை. சப்பென்று இருக்கிறது. அதை சர்தார்ஜிகள் வெயில் இல்லாமலேயே விளையவைத்திருப்பார்கள் என்று நினைத்துக்கொண்டேன்.

3. புதர்த்_தீ.

ஆ ஸ்திரேலியாவின் நிலத்துக்கு ஒரு தனித்தன்மை உண்டு. அங்கே மேல்மண் ஆழமில்லை. ஒரு நிலத்தின் அனைத்து உயிரம்சமும் இருப்பது மேல்மண்ணில்தான். அடிமண் என்பது பெரும்பாலும் இறுகிய ஈரமில்லாத பாறை. மேல்மண் ஆழமில்லாத காரணத்தால் அங்கே பெரிய மரங்கள் தழைத்து வளர முடியாதென்று சொல்கிறார்கள். அங்கே உள்ள மரம் என்பது பெரும்பாலும் யூகலிப்டஸ்தான். வானுயர வளர்ந்தாலும் யூகலிப்டஸுக்கு ஆழமான வேர் கிடையாது. ஊட்டிபோன்ற மேல்மண் இல்லாத ஊர்களில் யூகலிப்டஸை ஆஸ்திரேலியாவிலிருந்து கொண்டுவந்து நட்டு வளர்த்தார்கள் ஆங்கிலேயர்கள். ஊட்டியில் யூகலிப்டஸ் வேருடன் பிடுங்கிவிழுந்து கிடப்பதை அடிக்கடி பார்க்கமுடியும்.

கொஞ்சம் ஆழமாக மண் போகும் பள்ளமான பகுதிகளில் பைன் மரங்கள் உள்ளன. சில இடங்களில் புதர்கள். இதைத்தவிர ஆஸ்திரேலிய நிலம் என்பது முழுக்க முழுக்க புல்வெளிதான். நான் பார்த்தது ஆஸ்திரேலியாவின் ஒரு சிறு பகுதி – தெற்கு ஆஸ்திரேலிய கடலோர நிலம். அது ஒரு பெரிய கண்டம். அங்கே பெரும்பகுதி பாலைவனம். ஆனால் என்னுடைய கண்கள் ஆஸ்திரேலியா ஒரு மாபெரும் புல்வெளியாகவே நீடிக்கிறது. அலையலையாக கண்ணுக்கு எட்டிய தூரம் வரை விரிந்து பரந்து கிடக்கும் புல்வெளி.

ஆஸ்திரேலியாவில் மரங்கள் குறைவாக இருப்பதற்கு இன்னொரு காரணம் அங்கே மழை மிக மிகக் குறைவு என்பதுதான். பூமத்தியரேகையை ஒட்டியபகுதிகளில் மழை உண்டு. தெற்கே உடைத்துக்கொட்டும் பெரிய மழை பெய்வதேயில்லை. எப்போதும் தூறல்தான். மண் ஈரமாகுமே ஒழிய ஊறித்தேங்குமளவுக்கு மழை பெய்யாது. மலைகளில் பெய்யும் மழையும் பனி

உருகும் நீருமாக ஊறி சிறிய ஆறுகளாக ஓடுகின்றன. ஆஸ்திரேலியாவில் புகழ்பெற்ற பெரிய ஆறுகள் ஏதுமில்லை.

ஆஸ்திரேலியாவில் கோடை காலம் கடுமையானது. இந்தியாவில் கடுமையான கோடை காலம் என்பது வட இந்தியாவில்தான். தக்காணபீடபூமியில் இருந்து கிட்டத்தட்ட இமயமலை அடிவாரம் வரையில் உக்கிரமான கோடை காலம் வந்து மண்ணை எரியச்செய்யும். டெல்லியில் கோடைகாலத்தில் சாலைகளில் பகலில் மனித நடமாட்டமே இல்லாமல் ஆகும் விந்தையைப் பார்க்க முடியும். ஆஸ்திரேலியாவிலும் கிட்டத்தட்ட அந்த அளவுக்கு வெப்பம் உருவாகிறது. ஆனால் ஆஸ்திரேலிய வெப்பத்தின் மாற்று இன்னும் அதிகம். ஏனென்றால் அங்கே காற்றில் ஈரப்பசை மிகவும் குறைவு. காரணம் மேல்மண்ணுக்கு அடியில் கடுமையான சுண்ணாம்புப்பாறைகள் ஈரமில்லாது இருப்பதுதான்.

ஆகவே ஆஸ்திரேலியாவில் கோடைகாலத்தில் வெப்பம் உச்சத்தை அடைகிறது. சிறிய பொறிகள் கூட சட்டென்று பெரும் தீயாக ஆகின்றன. அத்துடன் அங்குள்ள முக்கியமான தாவரங்கள் எல்லாமே தைலத்தன்மை கொண்டவை. இக்காரணத்தால் புதர்த்தீ என்று அவர்கள் சொல்லும் பெரும் காட்டுத்தீ ஆஸ்திரேலியாவின் முக்கியமான இயற்கைச்சாபம். சென்ற பெப்ருவரியில் மெல்பேர்ன் அருகே நிகழ்ந்த பெரும் காட்டுத்தீ பல நாட்கள் தொடர்ந்து எரிந்து பலரைக் காவுகொண்ட செய்தி நம் தொலைக்காட்சிகளில்கூட தொடர்ந்து வந்துகொண்டிருந்தது.

ஏப்ரல் பத்தாம்தேதி நண்பர் கிருஷ்ணமூர்த்தியின் முறை, எங்களை வெளியே கூட்டிக்கொண்டுசெல்ல அவர் காலையில் வந்தார். எங்கே போகலாமென பேசிக்கொண்டோம். புதர்த்தீ வந்த மேரீஸ்வில் கிராமத்துக்குச் செல்லலாம் என்று முருகபூபதி சொன்னார். எங்கே வேண்டுமானாலும் போகலாம், ஆஸ்திரேலிய நிலத்தைப் பார்த்தால்போதும் என்று நான் சொன்னேன். மெல்பேர்ன் நகரிலிருந்து 500 கிலோமீட்டர் தூரத்தில் உள்ள கிராமத்துக்கு காரில் சென்றோம். நாங்கள் சென்றபோது மழைபெய்து சிலநாட்கள் ஆகியிருந்ததனால் புல்வெளிகள் காய்ந்திருந்தன. தவிட்டுநிறமான காய்ந்த புற்பரப்புகள் பெரிய அலைகளாக பக்கவாட்டில் வந்துகொண்டே இருந்தன. பாலைவனம் என்றே சிலசமயம் தோன்றியது.

அங்கே முக்கியமான தொழில் என்பது மாடு ஆடு வளர்ப்புதான். பல ஆயிரம் ஏக்கர்களுக்கு புல்வெளியை வேலிபோட்டு வளைத்து பண்ணையாக ஆக்குகிறார்கள். அதற்குள் ஆடுகளையும் மாடுகளையும் விட்டு வளர்க்கிறார்கள். வளர்க்கிறார்கள் என்பது தப்பு. அவை வளர்கின்றன. கிட்டத்தட்ட காட்டுவாழ்க்கை. புல்வெளியில் மேய்ந்து அங்கேயே தூங்கி குட்டிபோட்டு பெருகுகின்றன. 'அறுவடை' மட்டும் செய்துகொள்கிறார்கள். குதிரைகளில் சென்று மாடுகளைத் திரட்டிவருகிறார்கள். வேலி வலிமையானது அல்ல. மெல்லிய கம்பிவேலி. அதில் சில நாட்கள் மெல்லிய மின்சாரத்தை ஓடவிடுகிறார்கள். அதைத் தொட்டு மின்னதிர்ச்சி பெற்று பழகிய பின்னர் அந்த வேலி மாடுகளின் உள்ளத்தில் ஒரு சமூக ஒழுக்கமாக மாறிவிடுகிறது. பிறகு மின்சாரமே தேவையில்லை.

எங்கு நோக்கினாலும் மாடுகள்தான். இந்தியாவில் ஜெர்சி இனப்பசுக்கள் என இவை எழுபதுகளில் அறிமுகம் செய்யப்பட்டன. கனத்த தலையும் திமில் இல்லாத மேஜைபோன்ற முதுகும் சிறிய கொம்புகளும் கொண்ட பெரிய பசுக்கள் அவை. இந்தியாவில் வெள்ளைப்புரட்சியின் ஒரு பகுதியாக இவை வந்தன.

ஜெர்சி நல்ல பசு. நாட்டுப்பசுவைவிட இருமடங்கு தீனி, மூன்றுமடங்கு பால். ஆனால் அக்காலத்தில் அவை அடிக்கடி நோய்வந்து செத்துப்போகும். குறிப்பாக தகரத்தில் கொட்டகை போட்ட தொழுவங்களில் கோடைகாலத்தில் அவை தளர்ந்து விழுந்து சாகும். கொட்டகை மேல் வைக்கோலைப் போட்டு அதில் நீரைக்கொட்டி குளிர்விக்க வேண்டும். முதுகில் நீர் தெளித்த சாக்கை காயக்காயப்போட்டுக்கொண்டே இருக்க வேண்டும். மாதம்தோறும் ஊசி போடவேண்டும். ஆனால் ஆஸ்திரேலியாவின் குளிரில் அவை மகிழ்ச்சியாக மேய்ந்து கொண்டிருப்பதை பார்த்தேன். நம்முடைய நாட்டுப்பசு அங்கே குளிரில் செத்துவிடும்.

ஆனால் உயிர்கள் எங்கும் வாழும். இப்போது நம்நாட்டில் இருப்பவை ஜெர்சியின் பத்தாம்தலைமுறை. அவற்றின் முடி குறைந்துவிட்டது. நன்றாகவே வெயில்தாங்குகின்றன. வெள்ளைப்புரட்சி இந்தியாவில் ஒரு பெரிய வெற்றி. குஜராத்தில் மொரார்ஜி தேசாயின் வழிகாட்டலில் குரியன் ஆரம்பித்தது. இன்று

இந்தியாவில் உண்மை மதிப்பில் விலை குறைந்துகொண்டே இருக்கும் பொருட்கள் பாலும் கோழியிறைச்சியும் முட்டையும்தான். என் சின்னவயதில் பால் மிக அபூர்வமான ஒரு பொருள். வெள்ளைப்புரட்சியால்தான் நம் குழந்தைகள் இளம்வயதில் அதிக பால் குடிக்கின்றன. நம்மைவிட உயரமானவர்களாக வளர்கின்றன.

புல்வெளியைத்தாண்டி புதர்த்தீ வந்த கிராமத்துக்குச் சென்றுசேர்ந்தோம். போகும்வழியிலேயே யூகலிப்டஸ் காடுகள் அப்படியே கரிக்கட்டையாக நிற்பதைக் கண்டோம். விசித்திரமான சர்—ரியலிச ஓவியக்காட்சிபோல. வெண்ணிற வானத்தின் பின்னணியில் கன்னங்கரிய காடு. யூகலிப்டஸ் விசித்திரமான மரம். எரிந்து கருகினாலும் முளைத்து உயிர்கொண்டு எழும். ஆகவே அவற்றை அப்படியே நிறுத்தி வைத்திருக்கிறார்கள்.

நாங்கள் சென்ற நாள் ஈஸ்டரை ஒட்டிய விடுமுறைக்காலம். ஆகவே ஏராளமானவர்கள் கிராமத்திற்கு வந்திருந்தார்கள். அது ஒரு சுற்றுலாத்தலமாக ஆகிவிட்டிருந்தது. வழியெங்கும் பளீர் மஞ்சள்நிற காப்புடை அணிந்த சிறுவர்களும் பெற்றோர்களும் நின்று உண்டியல் ஏந்தி நிதிவசூல் செய்தார்கள். கிராமத்தை மறுநிர்மாணம் செய்யப்போகிறார்கள் என்றார்கள்.

அங்கே சிலநாட்களுக்கு முன்னர் மழைதூறியிருக்கிறது. புல் தழைத்திருந்தது. கடுமையான புதர்த்தீ வெப்பத்தில் உருகிய கார்களும் மோட்டார்பைக்குகளும் ஆங்காங்கே நிறுத்தப்பட்டிருந்தன. வீடுகள் எரிந்தபின் உருகி நெளிந்த தகரங்கள் மட்டுமே நின்றன. எங்கு பார்த்தாலும் கரியான மரங்கள்.

புல்வெளியில் சென்று அமர்ந்துகொண்டோம். யூகலிப்டஸ் எரியும்போது அதன் தடியும் காய்களும் வெடித்து கிட்டத்தட்ட எரிகுண்டுகள் போல பறந்து வெகுதூரத்துக்கு சென்று விழுமாம். புல்வெளியில் பல இடங்களில் அவ்வாறு விழுந்த தீக்கோளங்கள் எரிந்து கருகிய பகுதிகளைப் பார்த்தேன்.

புதர்த்தீ பற்றிய எச்சரிக்கைகளை அரசு பல இடங்களில் வைத்திருக்கிறது. புதர்த்தீக்கு எளிதில் இரையாகிறவர்கள் இருவகையினர். தீ வெட்டவெளியை நெருங்காது என்று எண்ணி நின்றவர்கள். தீ ஒரு குறிப்பிட்ட பகுதியில் நிற்கிறது என இவர்கள் எண்ணும்போது அது காற்றில் கிளம்பி சூழ்ந்து விடுகிறது. மேலும் புதர்த்தீயின் அதிக வெப்பம் காரணமாக வெப்பக்கதிர்வீச்சே

ஒருவரைக் கொல்ல போதுமானது. இரண்டாவதாக காரில் தப்பி ஓடமுயல்பவர்கள். கார் மிக எளிதில் தீப்பற்றிவிடக்கூடியது. தீயின்போது தீ அணுகாத வீடுகளில் இருப்பதே பாதுகாப்பானது என்று அறிவிப்புகள் சொல்லின.

கிராமத்தில் ஓய்வான ஒரு கிராமியத்திருவிழாவின் மனநிலை. குழந்தைகள் கூவிச் சிரித்து ஓடி விளையாடின. பாட்டிகள் இளவெயிலில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். ஒரு சிறிய கிராமத்து இசைக்குழு கிட்டாரை இசைத்து பாடிக்கொண்டிருந்தது. கண்ணாடிக்கதவுக்கு அப்பால் ‘பப்’புக்குள் ஏராளமானவர்கள் கூடி பேசிக்கொண்டிருந்தார்கள். நிறையபேர் குழந்தைகளைக் கொண்டு வந்திருந்தார்கள். வெள்ளைக்கண்கள் கொண்ட குண்டுக் குழந்தைகள் பொம்மைகள் போல தெரிந்தன. ஒரு விஷயம் கவனித்தேன். வளர்ந்தபின்னர் வெள்ளையர் கறுப்பர் சீனர் இந்தியர் என ஒவ்வொரு இனத்துக்கும் ஒருவகை உடல்மொழி இருக்கிறது. ஆனால் கைக்குழந்தைகளுக்கு உலகம்முழுக்க ஒரே உடல்மொழிதான்.

மாலைவரை அங்கேயே சுற்றிவந்தோம். புல்வெளியில் நடந்தபடி இலக்கியம் அரசியல் என பேசிக்கொண்டோம். கிருஷ்ணமூர்த்தி இந்தியாவில் சென்னையில் கொஞ்சநாள் இருந்திருக்கிறார். ஆஸ்திரேலியாவில் ஒரு சாக்லேட் நிறுவன ஊழியர். இரு பெண்குழந்தைகள் அவருக்கு. இலக்கியவாசகர். சினிமா விமரிசனங்கள் எழுதுவதும் உண்டு. ‘நான் கடவுள்’ படம் பற்றி ஒரு நல்ல விமர்சனம் எழுதியிருக்கிறார்.

திரும்பும்போது கிருஷ்ணமூர்த்தியின் வீட்டுக்குச் சென்று அவரது குழந்தைகளையும் மனைவியையும் பார்த்தோம். அந்தியில் திரும்பி முருகபூபதியின் வீட்டுக்கு வந்துசேர்ந்தோம். என்ன பார்த்தீர்கள் என்றார் முருகபூபதி. நிலமும் முகங்களும்தான் ஓர் ஊர், அதைப்பார்த்தேன் என்று சொன்னேன்.

4. எழுத்தாளர் விழா

ஏ றத்தாழ ஆயிரம் வருடங்களுக்கு முன்பு தஞ்சையில் சோழனுக்கு மெய்க்காவலர்களாக இருந்த ஒரு சிறிய உபசாதியினர் என்ன காரணத்தாலோ அங்கிருந்து துரத்தப்பட்டு இடம்பெயர்ந்து சேரமண்ணுக்கு வரும்படியாக ஆகியது. குமரிமாவட்டத்தில் குடியேறியவர்கள் தொழில்செய்து வாழும் கட்டாயத்துக்கு ஆளானார்கள். அக்காலத்திலும் சரி பிறகும் சரி தென்திருவிதாங்கூர் நாட்டில் நெசவுக்கு ஆள்பஞ்சம் உண்டு. ஆகவே இவர்கள் நெசவாளர்களாக மாறினார்கள். அவர்களுக்கு சாதிவகையில் ஓர் இழிவு அது. ஆனாலும் அவர்கள் அதைச்செய்ய வேண்டியிருந்தது. மேலும் அன்றிருந்த நெசவாளர்களான வாணியர் இந்த கூலித்தொழிலாளர்களை தங்களைவிட ஒருபடி கீழேதான் வைத்திருக்க வேண்டும் என்று எண்ணி ஒரு விதிசெய்தார்கள். இவர்கள் மேடைபோட்டு அமர்ந்து தறிநெய்யக்கூடாது என்றும் பள்ளத்துக்குள் அமர்ந்துகொண்டு நிலமட்டத்துக்கு உள்ள தறியில் நெய்ய வேண்டும் என்றும் வகுத்தார்கள்.

இன்றும் இந்த வழக்கம் நீடிக்கிறது. இவ்வாறு குடியேறிய சாதியினர் தங்களை கைக்கோள முதலியார்கள் என்று சொல்கிறார்கள். தங்களுடைய தஞ்சாவூர் வேர்களையும் இவர்கள் குலச்சடங்குகளாகவும் குலதெய்வங்களாகவும் மாற்றிக்கொண்டு இன்றளவும் பாதுகாத்து வருகிறார்கள். அதேசமயம் அவர்கள் மீதான ஆதிக்கத்தின் குறியீடான அந்தப் பள்ளத்திலமர்ந்து நெசவுசெய்யும் வழக்கமும் அவர்களின் குலச்சின்னமாக நீடிக்கிறது.

வரலாறு முழுக்க மக்கள் புலம்பெயர்ந்தபடியே இருப்பதைக் காணலாம். படையெடுத்து வந்து நாடுகளைப்பிடித்து அங்கே குடியேறுவது எப்போதும் இருந்துவந்தது. தமிழகத்தில் உள்ள தெலுங்கர்கள் நாயக்கர்படையெடுப்பு

காலத்தில் வந்தவர்கள். உருது — பட்டாணி முஸ்லீம்களும் படையெடுப்பில் வந்தவர்களே. இந்தியாவில் ஆரம்பகாலங்களில் சாதிவிலக்கு புலம்பெயர்வதற்கான ஒரு காரணமாக இருக்கிறது. பின்னர் போர்களும் பஞ்சங்களும். 1530ல் தலைக்கோட்டைப்போரில் விஜயநகரப்பேரரசு வீழ்ச்சியடைந்தபோதுதான் தென்னிந்தியாவின் மாபெரும் மக்கள்பெயர்வு நிகழ்ந்தது. ஆந்திர கர்நாடகப்பகுதியைச் சேர்ந்த மக்கள் கூட்டம் கூட்டமாக தமிழகம் வந்தார்கள். அதன்பின்னர் பதினேழு பதினெட்டு பத்தொன்பதாம் நூற்றாண்டுகளின் பெரும்பஞ்சங்களில் பெருமளவில் தமிழர்கள் கூலி உழைப்பாளர்களாக கடல்தாண்டிச் சென்றார்கள். முதல் உலகப்போரிலும் இரண்டாம் உலகப்போரிலும் அவ்வாறு சென்றவர்களில் ஒருசாரார் மீண்டும் அகதிகளாக இந்தியா திரும்பிவந்தார்கள்.

புலம்பெயர்தலை எழுதாமல் இந்தியவரலாற்றை, தமிழக வரலாற்றை எழுத முடியாது. தேசப்பிரிவினையின்போது புலம்பெயர்ந்து தமிழகம் வந்தவர்கள் இங்குள்ள சிந்திகளும் மார்வாரிகளும். திபெத் அகதிகள் பெருமளவில் தமிழகத்துக்கு வந்திருக்கிறார்கள். சீனப்புரட்சியின்போதும் பர்மியப்போரின்போதும் ஏராளமான அகதிகள் தமிழகம் வந்திருக்கிறார்கள். அந்தமானில் வங்கதேசப்பிரிவினை அகதிகள் குடியமர்த்தப்பட்டிருக்கிறார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தேயிலைத்தோட்டங்களுக்கு புலம்பெயர்ந்து சென்ற தமிழர்கள் மலையகமக்கள் என்ற பேரில் இலங்கையில் அங்குள்ள ஈழத்தமிழர்களாலும் சிங்களர்களாலும் ஒதுக்கியே வைக்கப்பட்டிருந்தார்கள். பின்னர் அவர்களில் மூன்றில் ஒரு பங்கினரை அங்கிருந்து வெளியேற்றினார்கள். அறுபதுகளில் சாஸ்திரி — பண்டாரநாயகா ஒப்பந்தம் மூலமும் பின்னர் இந்திரா—சிரிமாவோ ஒப்பந்தம் மூலமும் வெளியேற்றப்பட்ட அம்மக்கள் இன்று தமிழகத்து மேற்குமலைக்காடுகளை அழித்து உருவாக்கப்பட்ட தேயிலைத்தோட்டங்களில் (Tantea) குடியமர்த்தப்பட்டு அப்படியே மறக்கப்பட்டு கிட்டத்தட்ட அதே அகதிவாழ்க்கையை மூன்றாம் தலைமுறையிலும் நீட்டித்து வாழ்கிறார்கள்.

புலம்பெயர்ந்தவர்கள் தங்களின் உயிர்வாழ்தலுக்காகவும் தங்கள் பண்பாட்டைப் பாதுகாப்பதற்காகவும் போராடவேண்டியிருக்கிறது. இரண்டும் இரு திசைகளில் செல்லும் போராட்டங்கள். உயிர்வாழ்தலுக்கான போராட்டத்தில்

மெல்லமெல்ல தங்கள் பண்பாட்டை மறந்தே ஆகவேண்டியநிலை. தமிழகத்துக்கு வந்த சீனர்களும் பர்மியர்களும் இப்போது தனிச்சமூகமாக இல்லை. ஐம்பதுகளில்கூட சென்னை, திருச்சி, தஞ்சை பகுதிகளில் அவர்கள் பல்மருத்துவர்களாகவும் பல்வேறு ரசாயனப்பொருள் உற்பத்தியாளர்களாகவும் இருந்தார்கள். இங்கேயே திருமணம் செய்வதன்மூலம் திராவிடரத்தம் என்ற கடலில் கரைந்து மறைந்தார்கள். சென்ற வருடம் திருச்செந்தூர் அருகே உள்ள திருவள்ளுவர் காலனி என்னும் ஊருக்குச் சென்றேன். எண்பதுகளில் வந்த ஈழ அகதிகளுக்காக அரசு உருவாக்கிய குடியிருப்பு அது. அங்குள்ள ஈழமக்களில் ஈழத்தமிழ்கூட இல்லை. திருமணம் மூலம் அவர்கள் அப்படியே தமிழகத்தில் இணைந்துவிட்டார்கள்.

இது தவிர்க்க முடியாத விஷயம் என நினைக்கிறேன். சில வருடங்களுக்கு முன்னர் புகழ்பெற்ற தென்னாப்ரிக்க எழுத்தாளர் ஒருவரின் கதைகளைப் படித்தேன். டீனா படையாச்சி என்ற அந்த அம்மையார் ஒரு பேட்டியில் தன்னுடைய மூதாதையர் இந்தியாவில் எங்கிருந்தோ வந்தவர்கள் என்றும் தன்னுடைய இணைப்புப் பெயருக்கு என்னபொருள் என்று தெரியவில்லை என்றும் சொல்லியிருந்தார். அவர் தமிழகத்தைச் சேர்ந்த ஒரு வன்னியர் என்று அவர் அறிந்தாலும் அவருக்கு அது பொருள்படப்போவதில்லை. பாலி போன்ற தீவுகளில் இன்றுள்ள இந்திய வம்சாவளியினரிடம் எஞ்சுவது இந்தியப்பெயர்கள், சில சடங்காசாரங்கள், மதநம்பிக்கைகள் மற்றும் சில குறியீடுகள் மட்டுமே. மொழி சீக்கிரமே விலகிச்சென்றுவிடுகிறது. காரணம் மொழி என்பது ஓர் அன்றாட விஷயம். குறியீடுகளையும் சடங்குகளையும் எப்போதாவது வெளியே எடுத்தால்போதும்.

இதுதான் புலம்பெயர்ந்த ஈழத்தமிழர் விஷயத்திலும் நடக்கிறது. அவர்களின் புதிய தலைமுறையினருக்கு தமிழ் அனேகமாக தெரியாது. அவர்களில் கணிசமானோர் தமிழர்கள் அல்லாதவர்களை மணம்புரிந்து வருகிறார்கள். அன்றாட வாழ்க்கையில் தமிழடையாளம் ஏதும் இல்லை. அவர்களின் தமிழடையாளம் என்பது பெரும்பாலும் உணவு,சில உறவுகள், சடங்குகள், மதம் ஆகியவற்றில் மட்டுமே உள்ளது. வரும் தலைமுறையில் – அதாவது இப்போது வாழும் மூத்தவர்களின் மறைவுக்குப் பின்னர் – அந்தசடங்குகளும் மதமும் மெல்ல மெல்ல சுருங்கி சில ஆதாரமான குறியீடுகளாக மாறி

நீடிக்கும். தனியடையாளத்துக்கான ஒரு சிறிய ஆதாரமாக அவை இருக்கும், அவ்வளவுதான். அவர்களை தமிழர்களாக அடையாளம் காண முடியும், அவர்கள் தமிழர்களாக இருக்க மாட்டார்கள்.

இந்த வழக்கமான விஷயம் நிகழ்ந்துவிடக்கூடாதென்று புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களில் பண்பாட்டுக்கவலை கொண்டவர்கள் சிலர் கடுமையான முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். ஈழவாழ்க்கையின் ஈழப்பண்பாட்டின் நீட்சியை தாங்கள் வாழும் நாடுகளில் தக்கவைத்துக்கொள்ளவேண்டும் என்றும் அதை அடுத்த தலைமுறை அறிந்துகொள்ள வேண்டும் என்றும் ஆசைப்படுகிறார்கள். இரு தளங்களில் இந்த முயற்சிகள் நிகழ்கின்றன. ஒன்று மதம், இன்னொன்று கலையிலக்கியம். ஈழத்தவரின் முக்கியமான மதம் சைவம். செல்லுமிடங்களில் அவர்கள் சைவத்தை தக்கவைத்துக்கொள்ள முயல்கிறார்கள். இது ஓரளவு வெற்றியை அளிக்கிறதென்றே நினைக்கிறேன். மொழியை விட்டுவிடும்போதும்கூட நாலைந்து தலைமுறைக்கு முன்பு புலம்பெயர்ந்த ஆப்ரிக்க, தென்கிழக்காசிய புலம்பெயர்ந்த தமிழர்கள் மதத்தை விட்டுவிடுவதில்லை. காரணம் மதம் குறியீடுகளின் களஞ்சியம். ஆகவே பண்பாட்டு உரையாடல்களின் அடிப்படைமேடை அது. மனிதர்கள் அதில்தான் பிறந்து விழுகிறார்கள். மொழிமாறினாலும் மதக்குறியீடுகள் மாறாது.

ஆனால் கலையிலக்கியங்களுக்கு அந்த இடம் இருக்கிறதா என்ற ஐயம் எனக்கு இருக்கிறது. மரபுக்கலைகளும் மரபிலக்கியமும் மதத்துடன் கொண்டுள்ள தொடர்பு காரணமாக ஓரளவு முக்கியத்துவம் பெறுகின்றன. ஆனால் மதத்துடன் உறவை வெட்டிக்கொண்ட நவீனகலையிலக்கியத்துக்கு மக்கள் மனதில் நீடிக்கும் வல்லமை இல்லாமலிருக்கிறது. ஈழநாட்டிலேயே இலக்கியம் போன்றவற்றுடன் தொடர்பு கொண்டவர்கள் மிகச்சிலரே இருப்பார்கள். புலம்பெயர் வாழ்க்கையில் அது இன்னும் குறைகிறது.

லெ.முருகபூபதி ஒன்பதாண்டுக்காலமாக தனிமனித பிடிவாதத்துடன் மெல்பேர்ன் நகரில் ஓர் எழுத்தாளர் ஒருங்குகூடலை நடத்தி வருகிறார். அவுஸ்திரேலிய தமிழ் கலை இலக்கிய சங்கம் என்னும் இந்த அமைப்பின் மூலம் பொதுவான உதாசீனத்தை மீறி அதை நண்பர்கள் ஆதரவைத் திரட்டி நடத்துகிறார். இவ்வருடம் ஏப்ரல் 11 ஆம் தேதி மெல்பேர்ன் நகரில் அந்த விழா

நடைபெற்றது. அதற்காகத்தான் தெளிவத்தை ஜோசப் வருகை தந்திருந்தார். அவரது பவளவிழாவும் அங்கே கொண்டாடப்பட்டது. நான் அதற்கு பார்வையாளன் மட்டுமே. முழுக்க முழுக்க அது ஓர் ஈழத்தமிழ் விழா.

விழாவுக்காக கன்பராவில் இருந்து ஆழியாள் (மதுபாஷினி ரகுபதி) வந்திருந்தார். முந்தினநாள் இரவு அவர்கள் முருகபூபதி வீட்டுக்கு வந்திருந்தார்கள். இரவு வெகுநேரம் வரை பேசிக்கொண்டிருந்தோம். மதுபாஷினிக்கு ஒரு பெண்குழந்தை, துகிதை. நடேசன் வந்திருந்தார். இலக்கியம் குறித்தும் இலக்கிய அரசியல் குறித்தும் பேசினோம். தமிழர்கள் இலக்கியம் படைக்கிறார்களோ இல்லையோ இலக்கிய அரசியலை கண்டிப்பாக படைத்துக்கொண்டே இருக்கிறார்கள். யாராவது ஏதாவதுசெய்யும்போது அதுவரை கண்ணுக்குத்தெரியாமல் இருந்த சக்திகள் தடைகளாக மாறி வந்து முன்னால் நிற்கின்றன.

தெளிவத்தை ஜோசப் அவரது நாவல் வந்த காலகட்டத்தில் அதை கைலாசபதி தலைமையிலான முற்போக்கு அணி எப்படி புறக்கணிக்க முயன்றது என்பதைச் சொன்னார். மலையக மக்களின் வாழ்க்கையைச் சொல்லும் அந்நாவலில் தொழிற்சங்க அரசியல் இல்லை என்று குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. மலையக இலக்கியம் என்று ஜோசப் சொன்னபோது அது ஈழத்தை கூறுபோடும் முயற்சி என்று முத்திரை குத்தப்பட்டது. தொடர்ச்சியான விவாதம் மூலமே தன்னுடைய குரலை நிலைநாட்ட ஜோசப்பால் முடிந்தது என்றார்.

சிட்னியில் இருந்து ஜெயசக்தி பத்மநாதன் வந்திருந்தார். அவரை முருகபூபதி கொண்டுசென்று தன் மகள் வீட்டில் விட்டுவிட்டு வந்தார். இரவு தூங்க சற்றுநேரம் பிந்தியது. காலையில் எழுந்தபோது ஜெட்லாக் இல்லை. புத்தம்புதிதாக இருந்தது காலைநேரம். காலையில் நாகர்கோயிலின் ஒலிகளே வேறு. இங்கே மாக்பீயின் கிராக் கிராக் ஒலி அதிகம் கேட்டது. குளித்து உடைமாற்றிவிட்டு கிளம்பினோம்.

அரங்கத்தில் ஓரளவே கூட்டம் இருந்தது. அரங்குக்கு வெளியே ஒரு பெரிய புல்மைதானமும் சுற்றிலும் நடப்பதற்கான சிமிண்ட் நடைபாதையும் இருந்தது. நானும் அருண்மொழியும் அதில் நடை சென்றோம். இனிமையான குளிரும்

இளவெயிலும். நிறைய வெள்ளையர் நடந்துகொண்டிருந்தார்கள். எதிரே செல்பவர்கள் அனைவருமே முகம் மலர முகமன் சொல்லிச் சென்றார்கள். அது பொதுவாக மேலைநாட்டு வழக்கம். இந்தியாவில் அந்த வழக்கம் இல்லை. முன்பின் தெரியாத ஒருவர் நமக்கு வணக்கம் சொன்னால் என்ன செய்வதென நமக்குத்தெரியவில்லை.

ஒருமுறை குன்னூரில் நானும் கிருஷ்ணனும் சிவாவும் நடந்துகொண்டிருந்தபோது ஒரு வெள்ளையர் எதிரே வந்து ‘காலைவணக்கம், நல்ல பருவநிலை இல்லையா?’ என்றார். நாங்கள் சீரியஸாக ‘ஆமாம்’ என்றோம். பிறகுதான் அவர் முகமன் சொல்லியிருக்கிறார் என்று உணர்ந்து அடாடா மண்ணாந்தை மாதிரி இருந்துவிட்டோமே என்று வருந்தினோம். அதற்கென்றே அவ்வழியில் திரும்பி வந்தோம். அவரை மீண்டும் பார்த்தபோது ஒரு சில சொற்கள் மரியாதை நிமித்தம் பேசி சிரித்து விடைபெற்றோம்.

பலர் நாய்களுடன் சென்றுகொண்டிருந்தார்கள். அதிகமும் டால்மேஷன் வகை சிறிய நாய்கள். ஒரு நாய் திபெத்திய நாய், லாசா என்று பெயர். கண்கள் கோலிக்குண்டுபோல இருக்கும். முகம்மீது முடி புதர்போல கிடக்கும். பாமரேனியன்போல உடல். டொரொண்டோவில் சேரன் வீட்டில் ஒரு லாசா நாய் இருந்தது. திபெத்திய மடாலயங்களில் காவலுக்கு வளர்க்கப்படும் அந்த நாய் மிகமிக ஆபத்தான காவல்நாய். ஆனால் மிகச்சிறியது.

ஆஸ்திரேலியாவில் நாய் வளர்ப்பது பொதுவாக சிரமம். மிகவும் செலவாகும். பெரிய வீடும் வளைப்பும் தேவை. நாய் குரைத்து பக்கத்துவீட்டில் கேட்டால் அவர்கள் புகார் செய்துவிடுவார்கள். அபராதம் கட்டநேரிடும். நாய் உணவும் செலவேறியது. ஆனாலும் நாய்களை ஆசைக்காக வளர்க்கிறார்கள். வெளியே கிராமத்துப் பண்ணைகளில் பெரிய நாய்களைப் பார்த்தேன். அதிகமும் ஜெர்மன் ஷெப்பர்ட் வகை நாய்கள். புதர்த்தீ கிராமம் மேரிவில்லெயில் ஒரு நாயைப் பார்த்தேன். கிரேட் டேன் போன்ற மிகப்பெரிய நாய். ஆனால் புல்டாக் போன்று சதைமடிப்புகள் கொண்ட முகம். அதன்பெயர் லியோபால்ட் மஸ்டிஃப். நண்பர் வற்கீசின் வீட்டில் அப்படி ஒருநாய் இந்திய வெயிலை சகித்து வாழ்கிறது.

எதிரே ஒரு வெள்ளைக்காரப்பெண் வந்தாள். பெரிய ஸ்வெட்டர் போட்டிருந்தாள். வயது முப்பது இருக்கும். தள்ளுவண்டியில் அவள் குழந்தை ரோஜாநிற ஸ்வெட்டர் போட்டு வெளிர்சிவப்பு தாமரை மொட்டு போல அமர்ந்திருந்தது. ஆறுமாதம் இருக்கும். முழுக்கையையும் வாய்க்குள் செலுத்தியிருந்தது. தாய் வெள்ளை இனம். குழந்தை சீன இனம். மூக்கே இல்லை. கண்கள் இரு சிறு வைரத்துண்டுகள். அவள் எங்களுக்கு வாழ்த்துசொல்லிக் கடந்துசென்றாள்.

கூட்டம் ஆரம்பிக்கவிருக்கும்போது திரும்பி வந்தோம். மெல்பேர்னில் நிகழும் ஆகப்பெரிய இலக்கியவிழா என்ற அளவில் பார்த்தால் மிகக் குறைவான கூட்டம்தான். இத்தனைக்கும் கூட்டத்தை பரவலாக அனைவரும் பங்குபெறும்விதமாக பொதுத்தலைப்புகள் சார்ந்துதான் ஒழுங்கமைத்திருந்தார் முருகபூபதி. காலையில் மாணவர்கள் பங்குகொள்ளும் கருத்தரங்கு. பெண்களின் பிரச்சினைகளைப் பேசும் ஓர் அரங்கு. மாணவர்களில் ஒருவர் அவர் ஆஸ்திரேலியாவில் கள ஆய்வு செய்தபோது அங்குள்ள தமிழ் முதியவர்களின் நிலைமை பற்றி கவனித்ததை கட்டுரையாக எழுதியிருந்தார். கவனத்துக்குரிய கட்டுரையாக இருந்தது அது.

பொதுவாக புலம்பெயர்தல் முதியவர்களுக்குக் கஷ்டமானது. முதியவர்கள் புதிய சூழலுக்கு தங்களை மாற்றுவது கஷ்டம். புதிய மொழிகள் புதிய பழக்க வழக்கங்களை அவர்கள் கற்றுக்கொள்ள முடியாது. தட்பவெப்பநிலை மாறுவது அவர்களுக்கு கடுமையாக இருக்கிறது – குறிப்பாக வெப்பநிலத்து தமிழர்கள் குளிரை பொறுத்துக்கொள்ள முடியாது. மேலும் அவர்களின் வாழ்க்கை என்பது நினைவுகளில், கடந்த காலத்தில், இருக்கிறது. அவர்களுக்கு நிகழ்காலம் முக்கியமில்லை, எதிர்காலம் இல்லை. அந்த நினைவுகள் கைவிட்டு வந்த மண்ணில் இருக்கின்றன. ஆகவே அவர்களுக்கு வாழ்க்கை நரகமாகவே இருக்கிறது. ஒரு கார் இல்லாதவருடைய வாழ்க்கை கிட்டத்தட்ட சிறைதான் அங்கு.

அவர்கள் தங்கள் அடுத்த தலைமுறையினரை நம்பி வாழவேண்டியிருக்கிறது. ஆனால் அடுத்த தலைமுறை தங்களை நிலைநாட்டிக்கொள்ளும்பொருட்டு கடுமையாக உழைக்கிறது. எதையும் கவனிக்க அவர்களுக்கு நேரமில்லை.

அந்த கைவிடப்பட்ட நிலையை இளைஞரின் கட்டுரை அழகாகவே சொன்னது. ஒரே உணவை தானே எடுத்து சூடு பண்ணி சூடுபண்ணி சாப்பிடும் நிலைமை பற்றி ஒரு பெண்மணி புலம்பியிருந்தாள். மருமகனின் கடுமையான சொற்களைப்பற்றி இன்னொருத்தி வருந்தினாள். புதுவகை உறவுகளையும் மரபு மீறலையும் புரிந்துகொள்ள சிரமப்படுகிறார்கள் – ஆனால் அது ஒரு புதிய நிலத்தின் நெறி.

ஆஸ்திரேலிய பள்ளிகளில் தாய்மொழிக்கல்விக்கு ஓர் இடம் அளிக்கிறார்கள். அந்த மதிப்பெண்கள் கல்லூரி நுழைவுக்கு உதவுகின்றன. அவ்வாறு தாய்மொழிக்கல்வி பெறுபவர்களில் தமிழில் மட்டும் முழு மதிப்பெண் வழங்கப்படுவதில்லை, இலக்கணப்பிழை எழுத்துப்பிழை என்று பார்த்து மதிப்பெண்களைக் குறைத்துவிடுகிறார்கள். ஆனால் சிங்களம், இந்தி போன்ற மொழிகளில் முழு மதிப்பெண் போடுகிறார்கள் என்று ஒரு மாணவியின் கட்டுரை சொல்ல அதை ஒட்டி ஒரு விவாதம் நிகழ்ந்தது. தமிழில் தேர்ச்சி பெறுவதன் அளவுகோலை எப்படி நிலைநிறுத்துவது என்பதில் பல்வேறு கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அது இந்தியாவிலும் உள்ள சிக்கல்தான். பல பொதுத்தேர்வுகளில் தமிழில் எழுதி வெல்வது மிகக் கடினம். தமிழாசிரியர்கள் ஒற்று புள்ளி பார்த்தே சுழித்துவிடுவார்கள்.

டென்மார்க் எழுத்தாளர் ஜீவகுமாரன் எழுதிய ‘மக்கள் மக்களால் மக்களுக்காக’ என்ற நாவல் வெளியிடப்பட்டது. ஜீவகுமாரன் டென்மார்க்கில் இருந்து வருகை தந்திருந்தார். புலம்பெயர்ந்த ஈழமக்களின் நிலைநிற்பதற்கான போராட்டத்தின் சிக்கல்களைக் கூறும் நாவல் அது. அதன் மீதான கருத்துரையை டாக்டர் நடேசன் முன்வைத்தார். ஜீவகுமாரன் இணையத்தமிழ் குறித்து ஒரு கட்டுரை வாசித்தார். லண்டன்வாழ்தமிழரான முல்லை அமுதன் ஈழ இலக்கியவாதிகளைப் பற்றிய குறிப்புகளை இலக்கியப்பூக்கள் என்ற பேரில் தொகுத்து வரிசையாக வெளியிட்டுவருகிறார். 44 படைப்பாளிகளைப்பற்றிய தொகை நூல் வெளியிடப்பட்டது. பாடும்மீன் ஸ்ரீகந்தராஜா அதைப்பற்றிப் பேசினார்.

இரண்டு இதழ்களின் மலர்கள் வெளியிடப்பட்டு அவற்றின் மீதான கருத்துரைகள் முன்வைக்கப்பட்டன. டொமினிக் ஜீவா யாழ்ப்பாணத்தில்

இருந்து வெளியிடும் ‘மல்லிகை’ கிட்டத்தட்ட ஐம்பது வருடங்களாக வந்துகொண்டிருக்கும் ஒரு சிற்றிதழ். பிரம்மாண்டமான வரலாற்றுக் கொந்தளிப்பின் நம்பமுடியாத இன்னல்களுக்கு நடுவிலும் கடும் முயற்சியில் ஜீவா விடாது வெளியிட்டுவரும் அந்த இதழ் ஈழ இலக்கியத்தின் முக்கியமான குரலாக ஒலிக்கிறது. அதன் 44 ஆவது ஆண்டுமலரின் வெளியீட்டுவிழா நடந்தது. கொழும்பிலிருந்து வெளியிடப்படும் ‘ஞானம்’ நூறாவது இதழை மலராக வெளியிட்டிருக்கிறது. எல்லாவகை வாசகர்களுக்கும் உரிய இதழாக அது வெளிவந்துகொண்டிருக்கிறது.

தெளிவத்தை அவர்களின் பேச்சு அன்று குறிப்பிடும்படியாக இருந்தது. மலையகத்தமிழர்கள் எப்படி இந்தியாவில் இருந்து கூலித்தொழிலாளர்களாக கப்பலில் ஏற்றப்பட்டு கொழும்புவுக்கும் அங்கிருந்து மாத்தளைக்கும் அங்கிருந்து பல்வேறு தோட்டங்களுக்கும் கொண்டுசெல்லப்பட்டார்கள் என்பதை மிக விரிவாக விளக்கினார். தமிழகத்தில் சென்ற நூற்றாண்டில் ஏற்பட்ட பஞ்சம்தான் அவர்களை கண்காணா நாட்டுக்குச் செல்லவைத்தது. மிகப்பெரும்பாலானவர்கள் படிப்பறிவில்லாதவர்கள். கணிசமானவர்கள் தலித்துக்கள். சென்ற இடங்களில் அவர்கள் கடுமையாகச் சுரண்டப்பட்டார்கள். லைன்கள் என்று சொல்லப்படும் தகரப்பெட்டி வீடுகளில் பட்டிமிருகங்கள் போல தங்கவைக்கப்பட்டு வாழ்ந்தார்கள்.

இந்தியாவில் தான் நடத்திய இதழுக்காக நிதிவசூலிக்க கொழும்புவந்த நடேசய்யர் என்ற தொழிற்சங்கவாதி தோட்டத்தொழிலாளர்களைப்பற்றிக் கேள்விப்பட்டு அங்கே ரகசியமாகச் சென்று அவர்களின் வாழ்க்கையை நேரில் கண்டார். அவர்களுக்காக தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். அவர்களுக்குத் தொழிற்சங்கம் உருவாக்கி அவர்களை ஒருங்கிணைத்தார். அவர்தான் மலையகத்தின் முதல் இலக்கியகர்த்தா. அவர் எழுதிய ‘ராமசாமி சேர்வையின் சரிதம்’ என்ற கதையே முதல் மலையகக் கதை என்றார் தெளிவத்தை.

அதன்பின் ராமையா அவர்களின் ‘ஒருகூடைக் கொழுந்து’ வந்தது. இலக்கணப்படியும் அழகியல்சார்ந்தும் முக்கியமான கதை இது. வழக்கம்போல அம்மக்களின் வறுமையைச் சொல்லும் கதை அல்ல அது. தேயிலைபறிக்கும்

ஒரு பெண்ணின் தன்மானத்தையும் தோற்றுக்கொடுக்க மறுக்கும் தலைநிமிர்வையும் சித்தரிக்கும் அழகிய கதை. அத்துடன் மலையக இலக்கியம் வலிமையுடன் பிறந்தது. ஆனால் அதை யாழ்ப்பாணத்தமிழர் அங்கீகரிக்க மேலும் பலகாலம் செல்லவேண்டியிருந்தது என்றார் தெளிவத்தை.

கூட்டம் முடிய மாலைநேரம் ஆகியது. தெளிவத்தை ஜோசபுக்கு நான் ஒரு நினைவுப்பரிசு வழங்கச் சொன்னார்கள். அருண்மொழி எடுத்த ஒரு படம்கூட சரியாக விழவில்லை. ஆகவே அன்றைய நாள் விழாவின் பதிவுகள் என ஏதுமில்லை. அங்கே பல நண்பர்களைச் சந்தித்தேன். உற்சாகமான உரையாடல்கள் நிகழ்ந்தன.

ஆனால் பொதுவாக எனக்குப்பட்ட குறை என்பது தமிழகத்தில் வழக்கமாக நிகழும் சம்பிரதாயமான புகழ்ச்சிகள், சம்பிரதாயமான வரவேற்புகள் அர்த்தமில்லாத மேடைப்பேச்சுகள் முதலியவை. ஒரு அரங்குக்கு வரும் வருகையாளன் அவனுக்கு உதவக்கூடிய ஏதாவது அங்கே கிடைக்குமா என்று அறியத்தான் வருகிறான். ஆகவே ஒருமேடையில் அங்கிருக்கும் வருகையாளருக்கு ஆர்வமூட்டாத, உதவாத எதையுமே பேசலாகாது என்பது ஒரு நாகரிகம். மேடையில் இருக்கும் ஒருவரை இன்னொருவர் பதினைந்து நிமிடம் புகழ்ந்து பேசுவதனால் அவருக்கும் புகழப்படுபவருக்கும் லாபம் இருக்கலாம், கேட்பவர்களுக்கு என்ன லாபம்? சில கல்லூரிகளுக்குச் சென்றால் அதே கல்லூரி முதல்வரை அதே கல்லூரி துறைத்தலைவர் அதே கல்லூரி மாணவர்கள் முன்னால் வைத்து அரைமணிநேரம் புகழ்ந்து பேசுகிறார். வரிசையாக மரியாதைப்பேச்சுகள் நிகழ்ந்தால் ஒருவர் எத்தனை நேரம்தான் அதைக் கேட்டிருக்க முடியும்?

தமிழகத்தில் இந்த வகையான போலிப்பேச்சுகள் மற்றும் மரியாதைகளை மேடைகளில் இருந்து அகற்றியபின்னர்தான் இப்போது இலக்கியக் கூட்டங்களுக்கு ஓரளவுக்கு மக்கள் வருகிறார்கள். அதேபோல எந்த ஒரு கூட்டத்தையும் அதிகபட்சம் மூன்று மணி நேரத்தில் முடிக்க வேண்டும். அதை ஒட்டியே நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்ய வேண்டும். முழுநாள் நிகழ்ச்சி என்றால் அதில் கலைநிகழ்ச்சிகள் இருக்க வேண்டும். தமிழர்கள் இந்த வழக்கங்களை கைவிடாதவரை உருப்படியான கூட்டங்களை நடத்த முடியாது.

முருகபூபதி மிகவும் உற்சாகமாக இருந்தார். இருநாட்களாகவே அவரிடம் இருந்த பதற்றம் மெல்லமெல்ல விலகி சிரித்துக்கொண்டே இருந்தார். அந்நிகழ்ச்சி ஒரு வெற்றி என்றே சொல்லவேண்டும். என் வரையில் தெளிவத்தை அவர்களின் சிறப்பான பேச்சு ஒரு முக்கியமான அனுபவமாக அமைந்தது. என்னளவில் அந்நிகழ்ச்சி புலம்பெயர் வாழ்வில் தமிழ் மெல்ல மெல்ல மறைவதன் சித்திரமாகவே இருந்தது. வந்திருந்தவர்கள் அனேகமாக அனைவருமே வயதானவர்கள். சிலர் நடுத்தர வயதினர். நாலைந்து மாணவர்கள் அந்தக் கருத்தரங்குக்காக ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டவர்கள். அவர்களில் ஒருவர் மட்டுமே அங்கே பிறந்து படித்தவர். பிறர் இலங்கைநாட்டில் இருந்து வந்தவர்கள்.

இந்திய மளிகைப்பொருட்கள் விற்கும் இடத்துக்கு வரும்கூட்டம்கூட அந்த நிகழ்ச்சிக்கு இல்லை. சம்பலில் உள்ள ஆர்வம்கூட இலக்கியத்தில் இல்லை. அதுவே இயல்பானது, சாதாரணமானது. இந்த விழா போன்றவை முருகபூபதி போன்றவர்களின் ஆற்றாமையும் கடைசிவரை போராடிப்பார்க்கும் முயற்சியும் காரணமாக உருவாக்கப்படுபவை.

5. தங்கவேட்டை

ஆஸ்திரேலியா செல்வ வளம் மிக்க நாடுகளில் ஒன்று. அந்நாட்டின் செல்வத்துக்கு ஊற்று என்ன? பொதுவாக இந்தியர்களாகிய நமக்கு ஒரு பார்வை உண்டு, எந்த நிலம் வளமாக இருக்கிறதோ அந்த ஊர் செல்வம் மிக்கது என்போம். இந்தியாவைப்பொறுத்தவரை அது ஓரளவுக்கு உண்மை. அது பழைய வேளாண்மையுகம் சார்ந்த பார்வை. ஆனால் நவீனத்தொழில்யுகத்தில் அதற்கு பெரிய மதிப்பு ஏதும் இல்லை என்பதே உண்மை. இன்று ஒரு நிலப்பகுதியின் பொருளியல்வளர்ச்சியைத் தீர்மானிக்கும் முக்கியமான கூறுகளில் நிலவளம் ஒரு முக்கியமான அம்சம் இல்லை. ஏனென்றால் வேளாண்மை இன்று ஒரு லாபம்தரும் தொழில் அல்ல.

ஒரு நிலப்பகுதியின் சமூக, அரசியல் நிலைதான் பொருளியல் வளர்ச்சியை முக்கியமாகத் தீர்மானிக்கும் சக்தி. சீரான நிர்வாகமும் வன்முறையில்லாத சூழலும். சூழல் சரியாக இருந்தால் பொருளுற்பத்திக்கும் வினியோகத்துக்கும் அவசியமான சமூக ஒழுங்குகளும்,கல்வி முதலிய திறமைகளும் உருவாகிவரும். இரண்டாவதாக முதலீடு. ஏற்கனவே வரலாற்றுக் காரணங்களால் முதலீட்டு வலிமை கொண்ட நாடுகள் பொருளியல் சக்திகளாக ஆகின்றன. மூன்றாவதாக கனிம வளம். இன்று பட்டினியில் வாடும் பல ஆப்ரிக்க நாடுகள் இயற்கைவளம் செறிந்தவை. மேலும் பல நாடுகள் கனிமவளம் கொழிப்பவை. அவற்றை பயன்படுத்தும் சமூக, அரசியல் சூழல் அங்கே இல்லை. பொதுவாக இனப்பகையும் மோதலும் உள்ள நாட்டில் எது இருந்தாலும் இல்லாததற்குச் சமம்தான். அந்த வளங்களை உண்ண நினைக்கும் சக்திகளால் மோதல்கள் போற்றி வளர்க்கப்படும். கடைசியான உதாரணம் காங்கோ.

ஆஸ்திரேலியா விவசாய நாடு அல்ல. அங்கே முக்கியமான தொழில் என்பது மேய்ச்சல்தான். புல்வெளிகளில் ஆடுகளும் மாடுகளும் ‘விளைந்து’ கொண்டே இருக்கின்றன. 1998 சர்வேயின்படி இரண்டரைகோடி மாடுகள் அங்கே இருக்கின்றன. அவற்றில் முப்பது லட்சம் மாடுகள் கறவைப்பசுக்கள். மிச்ச மாடுகள் இறைச்சிக்காக வளர்க்கப்படுபவை. குயீன்ஸ்லாந்துக்கு அடுத்தபடியாக மெல்பேர்ன் நகர் இருக்கும் விக்டோரியா பகுதிதான் அதிகமாக மாடுகள் கொண்டிருக்கிறது.

ஆனால் ஆஸ்திரேலியா தோல் பதனிடும் தொழிலை முழுமையாகவே கைவிட்டுவிட்டிருக்கிறது – சூழல் மாறுபாடு காரணமாக. கம்பளிரோமம் ஒருகாலத்தில் நல்ல ஏற்றுமதியாக இருந்திருக்கிறது. ஆஸ்திரேலியாதான் உலகின் மிகப்பெரிய கம்பளி ஏற்றுமதியாளர். 10 கோடிக்குமேல் செம்மறியாடுகள் அங்கே உள்ளன என்று கணக்கு. சோவியத் ருஷ்யாவின் வீழ்ச்சிக்குப் பின் ஆஸ்திரேலியக் கம்பளி தன் முதன்மை நுகர்வோரை இழந்து அவ்வணிகம் அழிந்தபடி இருக்கிறது. உள்நாட்டு உற்பத்திபோக ஆஸ்திரேலியா இறைச்சியை ஏற்றுமதி செய்கிறது. அதிலும் அவ்வப்போது ‘பசுப்பித்து’ போன்ற நோய்கள் சர்வதேச அளவில் பீதியைக் கிளப்பி பெரும் அடி விழுகிறது.

ஆஸ்திரேலியாவின் முக்கியமான வேளாண்மை என்றால் பழங்கள்தான். ஆஸ்திரேலியா முழுக்க திராட்சைப் பண்ணைகள் உள்ளன. ஒயின் உற்பத்தியும் நடக்கிறது. ஆஸ்திரேலிய ஆப்பிள் புகழ்பெற்றது. டாஸ்மேனியாவை ஆஸ்திரேலிய வரைபடத்தில் ஆப்பிள் போலவே வரைந்திருக்கிறார்கள். ஆனால் இவற்றையெல்லாம் கொண்டு தன் செல்வ வளத்தை ஒரு நாடு உருவாக்கிக் கொள்ள முடியாது.

ஆஸ்திரேலியாவின் செல்வம் அதன் கனிம வளத்தில்தான் உள்ளது. 1788ல் ஆஸ்திரேலியாவில் பிரிட்டிஷ் காலனியர்கள் குடியேறிய பத்து வருடங்களுக்குள்ளேயே ஆஸ்திரேலிய கனிமங்கள் அகழ்ந்து ஏற்றுமதிசெய்யப்பட்டன. உண்மையில் பிரிட்டிஷ் தொழிற்புரட்சியின் விளைவாக உருவான கனிமப்பற்றாக்குறையே காலனியம் என்னும் அரசியலாதிக்கமுறைமையை உருவாக்கியது என்றால் மிகையல்ல. நியூ

சவுத்வேல்ஸ் பகுதியில் நியூகேசில் அருகே நிலக்கரி முதலில் தோண்டி எடுக்கப்பட்டது. க்ளென் ஆஸ்மாண்ட் அருகே அகழ்ந்தெடுக்கப்பட்ட ஈயம்தான் முதல் உலோகம். அதன்பின் செம்பும் இரும்பும்.

பதினெட்டாம் நூற்றாண்டில் ஆஸ்திரேலியா உலகின் மிகப்பெரிய டின் ஏற்றுமதியாளராக இருந்தது. செம்பும் பெருமளவுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டது. பின்னர் மெல்ல மெல்ல உலோக அகழ்வில் பெரும் பின்னடைவு ஏற்பட்டது. மரபான உலோக அகழ்வு பெரும் செலவேறியதாக ஆகியது. 1960களுக்குப் பின்னர் நவீன அறிவியல் முறைகளைக் கொண்டு விரிவான நிலவியல் ஆய்வுகள் செய்யப்பட்டு மீண்டும் கனிம அகழ்வுகள் ஆரம்பித்தன. இன்று உலகின் மிகப்பெரிய இரும்பு உற்பத்தியாளர் ஆஸ்திரேலியாதான். நிலக்கரியும் செம்பும் ஈயமும் அங்கிருந்து உலகமெங்கும் செல்கின்றன. இன்றைய ஆஸ்திரேலியா உலகின் மிகப்பெரிய கச்சாப்பொருள் ஏற்றுமதியாளர். அதன்செல்வ வளம் முழுக்க கனிமங்களினால்தான்.

ஆனால் நடுவே ஐம்பது வருடம் நீடித்த தங்க அலைதான் ஆஸ்திரேலியாவை இன்றைய நிலைக்குக் கொண்டுவந்தது என்று சொல்லலாம். ‘மாபெரும் தங்கவேட்டை’ என்று இன்று சொல்லப்படும் அந்த அலை 1823ல் நியூ சவுத் வேல்சில் பதூரஸ்ட் என்னும் இடத்தில் ஒரு பொது ஊழியரான ஜேம்ஸ் மெக்ப்ரியன் என்பவர் தங்கத்தைத் தோண்டி எடுத்ததுடன் ஆரம்பிக்கிறது. அவர் சாலை போடுவதற்கான சர்வே வேலையில் ஈடுபட்டிருந்தார். அவரது தங்கக்கண்டுபிடிப்பு அவ்வளவாக மக்களை சென்றடையவில்லை. ஆனால் தொடர்ந்து ஆஸ்திரேலியாவில் தங்கம் கண்டடையப்பட்டது. புகழ்பெற்ற தங்கவேட்டைக்காரரான எட்வர்ட் ஹாம்மோண்ட் ஹார்க்ரேவ்ஸ் கலிஃபோர்னியாவில் தன்னுடைய தங்கவேட்டையை நிறுத்திவிட்டு விக்டோரியாவுக்கு வந்தார். அத்துடன் உலகம் முழுக்க இருந்து தங்கவேட்டைக்காரர்கள் ஆஸ்திரேலியாவுக்குப் படையெடுத்து வர ஆரம்பித்தார்கள்.

1850 முதல் அரை நூற்றாண்டுக்காலம் உலகம் முழுக்க இருந்து தங்கம் தேடி வந்துகொண்டே இருந்தார்கள். அவர்களால்தான் ஆஸ்திரேலியாவின் மக்கள்தொகை அதிகரித்தது. அந்த மக்கள்தொகைதான் ஆஸ்திரேலியாவின்

தொழில்களும் விவசாயமும் வளர வழியமைத்தது. விக்டோரியா மாகாணம் முக்கியமான தங்க உற்பத்தி மையமாகியது. 1850ல் ஆஸ்திரேலியா உலகின் மிகப்பெரிய தங்க உற்பத்தியாளராக ஆகியது.

தங்கம் மற்ற உலோகங்களைப்போன்றது அல்ல. அதாவது அது ஒரு நாணயம். அதிலும் பதினெட்டாம் நூற்றாண்டில் இப்பூமியின் முதல் உலகமயமாதல் ஆரம்பித்தபோது தங்கத்தின் மதிப்பு மேலும் அழுத்தம் பெற்றது. பிரிட்டன் உலகின் பெரும்பகுதியைக் கைப்பற்றி ஆள ஆரம்பித்தது. காலனிநாடுகள் தங்களுக்குள் சர்வதேச வணிகம் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டது. அதுவரை சர்வதேச வணிகம் பண்டமாற்று அடிப்படையில் நிகழ்ந்தது. ஒரு தேசத்தின் நாணயத்தின் உண்மையான மதிப்பை எப்படி தீர்மானிப்பதென்ற கேள்வி எழுந்தது. அவ்வாறு நிலையான ஓர் உலகநாணயத்துக்கான தேவை எழுந்ததும் தங்கம் அந்த இடத்தை வகிக்க ஆரம்பித்தது. எந்த ஒருநாடும் தன் மொத்த நாணயத்தின் தொகைக்குச் சமானமான தங்கத்தை ரிசர்வ் வங்கியில் கைவசம் வைத்திருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு உருவாக்கப்பட்டது. அதாவது தங்கம்தான் உண்மையான நாணயம். தாள் ரூபாய் என்பது அந்தத் தங்கத்தை ஈடாக அளிக்கத்தயார் என்ற வாக்குறுதிப்பத்திரம் மட்டுமே.

இவ்வாறு தங்கம் முக்கியமான சர்வதேச நாணயமாக ஆனபோது தங்கம் ஒரு பொருள் என்பதற்கு மேலாக நேரடியாகவே நாணயமாக ஆகியது. உலகின் மிகப்பெரிய தங்கக் கையிருப்பை பிரிட்டன் வைத்திருந்தது. தங்கத்தின் மதிப்பு இவ்வாறு ஏறியபோதுதான் உலகமெங்கும் தங்கவேட்டைக்காரர்கள் கிளம்பினார்கள். ‘மெக்கென்னாஸ் கோல்ட்’ முதலிய சாகஸப்படங்களும் சாப்ளினின் ‘கோல்ட் ரஷ்’ முதலிய கேலிப்படங்களும் அந்த தங்கவேட்டைக் காலகட்டத்தின் சித்திரங்கள்.

உலகின் மிகப்பெரிய தங்கச்சேகரிப்பு இருந்த நாடுகளில் ஒன்று இந்தியா. அந்தத் தங்கம் அப்படியே இருந்திருந்தால் இந்தியா இன்று உலகின் மிகப்பெரிய முதலீடுள்ள நாடுகளில் ஒன்றாக இருந்திருக்கும். ஆனால் கிட்டத்தட்ட இருநூறு வருடம் பிரிட்டிஷ் காலனி அரசு இந்தியாவின் தங்கத்தை உறிஞ்சி எடுத்துக்கொண்டே இருந்தது. இந்திய மன்னர்கள் தங்கத்தில்

வரிகட்ட கட்டாயப்படுத்தப்பட்டார்கள். ஆகவே இந்திய ஆலயங்களிலும் மன்னர்களின் கஜானாக்களிலும் இருந்த தங்கம் முழுக்க பிரிட்டிஷ் கஜானாவுக்குச் சென்றுசேர்ந்தது. திருவிதாங்கூர் மன்னர்கள் கோயில்நகைகளைக்கூட உருக்கி கப்பம் கட்டியிருக்கிறார்கள். அத்துடன் கோலார் முதலிய தங்கச்சுரங்கங்களின் தங்கமும் நேரடியாக பிரிட்டனுக்குக் கொண்டுசெல்லப்பட்டது. இந்தக்கதிதான் பெரும் தங்கச்சுரங்கங்கள் கொண்ட தென்னாப்ரிக்கா முதலிய ஆப்ரிக்க நாடுகளுக்கும்.

பிரிட்டிஷார் விட்டுச் செல்லும்காலத்திலேயே கோலார் தங்கம் வற்ற ஆரம்பித்திருந்தது. ஆனால் ஆஸ்திரேலியத்தங்கம் அது காலனியாதிக்கத்தைவிட்டு விலகிய பின்னரும் தொடர்ந்து கிடைத்தது. தங்கம் அதன் செல்வத்தை தீர்மானித்தது. ஆரம்பகட்ட முதலீடுகள் முழுக்க அதன்மூலம் நிகழ்ந்தன. அந்த முதலீடு இல்லாமலிருந்திருந்தால் அறுபதுகளின் கனிம அகழ்வுகளுக்கான முதலீடுக்காக ஆஸ்திரேலியாவும் மேலைநாட்டு கம்பெனிகளுக்கு கையேந்தியிருக்கும். அவை இன்று அரேபியப் பெட்ரோலியத்தை உறிஞ்சுவதுபோல ஆஸ்திரேலியாவை உறிஞ்சியிருக்கும்.

ஏப்ரல் பன்னிரண்டாம் தேதி கிருஷ்ணமூர்த்தி அவரது குடும்பத்துடன் வந்து எங்களை பலாரட் என்னும் ஊருக்குக் கூட்டி செல்வதற்காக வந்தார். பலாரட் மெல்பேர்னில் இருந்து கிட்டத்தட்ட அறுபது கி.மீ தூரத்தில் உள்ளது. ஒரு மலைச்சரிவில் உள்ள இந்த ஊர் 1837ல் கடுமையான தண்ணீர்ப் பஞ்ச காலத்தில் தாமஸ் லெர்மோந்த் என்னும் பயணிகள்குழு தலைவரால் கண்டடையப்பட்டது. அவர் புனின்யாங் மலை ஏறி இந்த இடத்தை கண்டடைந்தார். 1838ல் யூல்லி மற்றும் ஆண்டர்சன் என்னும் இரு பயணிகள் தங்கள் குழுவுடன் அங்கே குடியேறினார்கள்.

கிட்டத்தட்ட 13 வருடங்களுக்கு இந்த இடம் ஒரு சிறிய மேய்ச்சல்கிராமமாகவும் அலைந்து திரியும் மேய்ச்சல்காரர்கள் வந்து தங்கிச்செல்லும் சிற்றூராகவுமே இருந்திருக்கிறது. 1851 ஆகஸ்டில் இங்கே தங்கம் கண்டுபிடிக்கப்பட்டது. அதைத்தொடர்ந்து மிகவும் பரபரப்பான ஊராக இது மாறியது. நியூபலாரட் என்னும் ஒரு நகரம் மெல்ல உருவாகிவந்தது. 1851 செப்டம்பரிலேயே ஆயிரம் அகழ்வாளர்கள் வந்து தங்கத்துக்காக

தோண்ட ஆரம்பித்துவிட்டிருந்தார்கள். 1853ல் கிட்டத்தட்ட 20000 அகழ்வாளர்கள் வந்து ஆங்காங்கே தோண்டிக்கொண்டிருந்தார்கள்.

அந்த வருடம் மட்டும் பத்து டன் அளவுக்கு தங்கம் அதிகாரபூர்வமாக மெல்பேர்ன் நகரத்து கருவூலத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அதைவிட பலமடங்கு அதிகமான தங்கம் கள்ளச்சந்தையில் விற்கப்பட்டிருக்கலாம் என்கிறார்கள். அடுத்த நான்குவருடங்களில் 77 டன் தங்கம் மெல்பேர்ன் கருவூலத்தை வந்தடைந்தது. 1858ல் வெல்கம் தங்கத்தாது என்ற பெயர் சூட்டப்பட்ட கட்டி கண்டெடுக்கப்பட்டது. அது 68 கிலோ எடை கொண்டது. 180 அடி ஆழமுள்ள சுரங்கத்தின் மேல்கூரை மண்ணில் இது கிடைத்தது. அடுத்தவருடம் லண்டலில் இது உருக்கப்பட்டது.

ஆரம்பத்தில் சிறுசிறு நண்பர்குழுக்கள்தான் தங்கம் தோண்டிக் கொண்டிருந்தன. தங்கம் தோண்டுவதில் மிக காட்டுத்தனமான முறையே கடைப்பிடிக்கப்பட்டது. அந்த வகையான சுரங்கமாதிரிகள் இன்றும் பலாரட்டில் உள்ளன. மேலே கூரைபோடப்பட்ட ஒரு கிணறு. அதனுள் மர ஏணிகள் இறங்கிச்செல்கின்றன. ஆழத்துக்குச் சென்றபின் மண்ணின் இயல்பை அவதானித்து பக்கவாட்டில் மண்ணை துளைத்துச் செல்வார்கள். மேல்மண் சரியாமலிருக்க மண்கூரையை மரத்தூண்கள் கொடுத்து தாங்கி நிறுத்துவார்கள். வெட்டி எடுக்கும் மண்ணை வாளிகளில் அள்ள மேலே நிற்பவர்கள் சகடத்தில் கட்டப்பட்ட கயிறு வழியாக தூக்கி மேலே கொட்டுவார்கள்.

பின்னர் இயந்திரங்கள் பயன்பாட்டுக்கு வந்தன. நீராவி இயந்திரங்கள். பெரிய இரும்பு உருளைகளில் நீர் நிலக்கரி மூலம் சூடுபடுத்தப்படுகிறது. அந்த நீராவியின் அழுத்தம் சில துடுப்புகளைத் தள்ள அந்த ஆற்றல் மூலம் பற்சக்கரங்கள் ஓடி அந்த விசை ஆழத்தில் இருந்து மண்ணை மேலே தூக்கிக் கொட்ட பயன்படுத்தப்பட்டது. இப்போது இன்னும் ஆழமாக போக முடிந்தது. ஆழத்துக்கு செல்லச் செல்ல சீனக்காரம் (ஆலம்) கொண்ட படிவுகளும் பிற பளிங்குப்படிவுகளும் வர ஆரம்பித்தன. அவற்றை கையால் வெட்டமுடியாது. ஆகவே நீராவி யந்திரத்தின் விசையை உள்ளே கொண்டுசென்று வெட்ட வேண்டியிருந்தது. அதற்குரிய பெரிய இயந்திரங்களை

நிறுவனங்கள் மட்டுமே அமைக்க முடியும். ஆகவே தங்க அகழ்வு நிறுவனங்கள் உருவாயின. 1868ல் பல்லாரட்டில் 300 நிறுவனங்கள் தங்கம் தோண்டுவதில் ஈடுபட்டிருந்தன. கிட்டத்தட்ட 65000 பேர் அங்கே வாழ்ந்தார்கள்.

தங்கச்சுரங்க வாழ்க்கை என்பது சாதாரணமானதல்ல. சுரங்கத்தொழிலாளர்களில் மூன்றில் ஒருபங்கினர் விபத்தில் சாகும் அபாயம் இருந்தது. மோசமான குளிரில் முழங்காலளவு நீரில் நின்று வேலைசெய்யவேண்டியிருந்தது. திமிர்வாதமும் நுரையீரல்நோயும் அவர்களைக் கொன்றன. அவர்களின் குடும்பங்கள் கூடாரங்களில் வாழ்ந்தார்கள். ஒழுங்கான சட்டமும் நீதியும் இல்லை. கிட்டத்தட்ட ஒரு கௌபாய் வாழ்க்கை. துப்பாக்கியே பெரும்பாலும் நீதியை தீர்மானித்தது. திருட்டுகள் அன்றாட நிகழ்வாக ஆயின. அத்துடன் சமவெளியில் தங்கம் விற்கச் செல்பவர்களைக் கொள்ளையடிக்கும் கொள்ளையர் கூட்டங்கள் ஏராளமாக முளைத்தன. இக்கூட்டங்கள் பதினெட்டாம்நூற்றாண்டு ஐரோப்பிய சாகச நாவல்களில் வரும் கொள்ளையர்களின் பெயர்களை தங்களுக்குச் சூட்டிக்கொண்டார்கள்.

அத்துடன் இனவாதமும் ஓங்கியிருந்தது. தங்கம் கிடைத்த செய்தியறிந்து ஏராளமான சீனர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வந்தார்கள். அவர்கள் தங்கள் நாட்டில் சுரங்கத்தொழில்செய்து பழகியவர்கள். ஆதலினால் வெள்ளையரை விட வெற்றிகரமான சுரங்கத்தொழிலாளர்களாக இருந்தார்கள். ஆனால் அவர்கள் தாங்கள் சேமித்த செல்வத்தைக் கொண்டு நிறுவனங்களை அமைக்கவில்லை. அவற்றை அவர்கள் சீனாவுக்கு அனுப்பிக்கொண்டிருந்தார்கள். சீன அரசாங்கம் இந்தத் தங்கத்தில் ஆர்வம் காட்டவில்லை. ஆகவே அவர்களுக்கு அரச உதவி கிடைக்கவில்லை. வெள்ளைய அரசாங்கம் பல சட்டங்கள் மூலம் சீனர்களின் வருகையை படிப்படியாக அறவே நிறுத்தியது. எழுபதுகள் வரைக்கும்கூட வேற்று இனத்தவர் ஆஸ்திரேலியாவில் நுழைவதற்குத் தடை இருந்தது.

சீனர்களுக்கு உலகைக் கைப்பற்றுதலில் இருந்த அக்கறையின்மை உலகின் வரைபடத்தையே மாற்றியமைத்தது என்பார்கள். சீனாவில் பதினேழாம் நூற்றாண்டு முதல் சக்ரவர்த்திகள் பெய்ஜிங்கின் 'தடைசெய்யப்பட்ட நகர' த்துக்குள் தங்களை கட்டுப்படுத்திக் கொண்டு உலகைப்பற்றிய கவனம்

இல்லாமல் ஆண்டார்கள். சீனாவின் மாபெரும் கடற்படையின் சிறுபகுதி இந்தியப்பெருங்கடலில் நின்றிருந்தால் பிரிட்டிஷார் இந்தியாவையோ கிழக்குநாடுகளையோ வென்றிருக்க முடியாது. கீழைத்தீவுகளின் கனிவளத்தை அவர்கள் மதிப்பிட்டிருந்தால் உலகமே சீனாவால் ஆளப்பட்டிருக்கும். ஆனால் வரலாற்றில் 'இருந்தால்' களுக்கு இடமே இல்லை.

மெல்லமெல்ல பலாரட்டில் தங்கம் குறைந்தது. 1870களில் ஏராளமானபேர் அங்கே தங்கம் தோண்ட ஆரம்பிக்கவே லாபம் குறைந்தது. சர்வதேச நிதிநெருக்கடியும் பாதிப்புகளை உருவாக்கியது. 1918 வரை அங்கே தங்கம் எடுத்துக்கொண்டிருந்தார்கள். அது மீண்டும் கைவிடப்பட்டது.

இன்று பலாரட்டை ஒரு சுற்றுலாத்தலமாக ஆக்கி 1800களில் இருந்தது போலவே மீண்டும் உருவாக்கியிருக்கிறார்கள். அச்சுஅசலாக அதே தெருக்கள், கட்டடங்கள், அதே தங்கச்சுரங்கங்கள். பிரம்மாண்டமான ஒரு சினிமா செட்டுக்குள் நுழைந்த அனுபவம் ஏற்பட்டது. அங்கே பணியாற்றுபவர்களும் அதேபோல அக்காலத்து உடைகள்தான் அணிந்திருந்தார்கள். கடவுச்சீட்டு எடுத்துக்கொண்டு உள்ளே சென்றதுமே ஜார்ஜ் எலியட், தாக்கரே நாவல்களில் வரக்கூடிய பிரிட்டிஷ் நடுத்தர நகரம் ஒன்றுக்குள் நுழைந்த அனுபவம் ஏற்பட்டது. ஒரு நாவலுக்குள் உடலுடன் நுழைவது போல என்று எண்ணிக்கொண்டேன்.

அந்த இடத்தை 'தெரிந்து' கொள்ள முயலக்கூடாது என்று எண்ணிக்கொண்டேன். அம்மாதிரி தெரிந்துகொள்ளுதல் நினைவில் நிற்பதும் இல்லை. மானசீகமாக அந்த இடத்தில் 'வாழ்வது' தான் சிறந்தது. எங்கு பயணம் சென்றாலும் அதுதான் சிறந்த வழி. கண்களைத் திறந்து கவனமாக ஒவ்வொரு இடமாகப் பார்த்துக்கொண்டே இருத்தல். அது ஒரு விழிப்புநிலைக் கனவுபோல. அந்நிலையில் நமக்குள் இறங்கிச்செல்பவை நம்மை எப்போதும் தொடர்ந்து வரக்கூடியவை.

பலாரட் தெருக்கள் புழுதியாலானவை. ஆற்றங்கரை ஊர்களில் –குறிப்பாக கங்கைக்கரை ஊர்களில் – தான் அம்மாதிரி சாம்பல்நிறமான புழுதியைக் காணலாம். அது வண்டல் உலர்ந்து உருவாவது. இது நெடுங்கால அகழ்வு மூலம் வெளியே வந்த அடிமண்ணின் புழுதி. ஏழெட்டுத் தெருக்கள்தான்.

மையத்தெருவில் தபால்நிலையம், ஒரு நாடக அரங்கு, மதுக்கடைகள், துணிக்கடை, கருவிகள் விற்கும் ஒரு கடை, மது உற்பத்தியாளரின் கடை போன்றவை இருந்தன. அதை ஒட்டியே அன்றைய பொதுப்போக்குவரத்துக்கான குதிரைகளை நிறுத்தியிருந்த லாயம். லாயத்தில் பல குதிரைகள் இருந்தன. அன்றையபாணி குதிரைவண்டிகளை இப்போதும் உள்ளே ஓட்டுகிறார்கள். பயணிகள் ஏறி சுற்றி வரலாம். கிருஷ்ணமூர்த்தியின் பிள்ளைகள் ஏறி சுற்றிவந்தார்கள்.

அக்காலத்து போலீஸ் உடையணிந்த காவலர் பழைய பாணி துப்பாக்கிகளுடன் கடந்துசென்றார். குடைபோல விரிந்த கவுன்போட்டு தலையில் தலைக்குட்டை கட்டிய பெண்கள். உயரமான தொப்பி வைத்த ஆண்கள். கடைகளில் அக்காலத்து அறிவிப்புகள் ஒட்டப்பட்டிருந்தன. அசல் ஸ்காட்ச் விஸ்கி கப்பலில் வந்திறங்கி வந்துசேர்ந்திருப்பதை ஒரு அறிவிப்பு சொன்னது. பலாரட்டில் அக்கால மக்களுக்கு குடிதான் முக்கியமான பொழுதுபோக்காக இருந்திருக்கிறது. ஏராளமான மது விளம்பரங்கள். உடைகளுக்கு சிறந்த முறையில் பழுது நீக்கித்தரப்படும் என்று இன்னொரு அறிவிப்பு. நடுவே ஒரு சிறிய காவலர் அணிவகுப்பு. சிவப்பு சீருடை அணிந்து கொம்புகளையும் முழவுகளையும் ஊதியபடி. எல்லாமே பிரிட்டனின் நகல்தான்.

பழைய மதுரை தங்கம் திரையரங்கை நினைவுறுத்தும் நாடகசாலை. ஆனால் அதைவிட நாலில் ஒருபகுதிதான் இருக்கும். பால்கனி உண்டு. உள்ளே மர இருக்கைகள். மேடையில் சிறிய நாடகம் ஒன்று நடந்தது. அக்காலத்து நாடகம். கேலிக்கூத்து வகையைச் சார்ந்தது. பிறகு நாலுபேர் கித்தாருடன் அமர்ந்து அக்கால இசையைப் பாடினார்கள். லண்டனில் இருந்து புதிய இசைத்தட்டுகள் வந்திருப்பதாகவும் அவற்றை அங்கே வந்து அமர்ந்து கேட்கலாமென்றும் ஓர் அறிவிப்பு. லண்டன் பாடகர்களின் படங்கள். அந்த இசைக்கூடத்தின் வரவேற்பறையே லண்டனை நினைத்து ஏங்கிக்கொண்டிருந்தது.

கவுன்கள் தைத்து கொடுக்கப்படும் கடையின் வாசல்முன் அமர்ந்து கருவாட்டுச்சம்பல் சேர்த்த ரொட்டியைச் சாப்பிட்டோம். நாற்றமடிக்குமே என்று அருண்மொழி கவலைப்பட்டாள். இது பல பண்பாடுகள் கலந்த சமூகம், இங்கே

பிறரது எந்த வழக்கத்தையும் தவறாக எண்ணமாட்டார்கள் என்றார் கிருஷ்ணமூர்த்தி. கருவாடும், பன்றிக்கறி துருவலும் இல்லாத சீன உணவே குறைவு என்றார்.

ரெட்ஹில் தங்கச்சுரங்கம் என்ற நிறுவனத்தின் மாதிரிக்குள் இறங்கிச்செல்லும் பொருட்டு காத்து நின்றோம். அதில்தான் வெல்கம் தாது கிடைத்தது. வரிசையில் சற்று தூரத்தில் நின்ற மாநிறப்பெண்ணின் முடியைப்பார்த்து மலையாளியா என்று எண்ணினேன். மலையாளிதான். அதை அருண்மொழியிடம் சொல்லி முறைக்கப்பட்டேன். ஏராளமான சீனர்கள். சீனர்கள் எதுபேசினாலும் 'ஹா' 'ஹா' 'வா' 'வா' என்று சொற்றொடர்கள் முடிகின்றனவா என்று தோன்றியது. நாம் பேசும்போது சீனர்களுக்கு எந்த ஒலி அதிகம் கேட்கிறது தெரியவில்லை.

அந்தத் தங்கச்சுரங்கம் மண்ணுக்குள் ஒரு பெரிய முயல்வளை. அதன் மண்ணை அள்ளுவதற்கு நீராவிக்கருவி. அங்கே தொழிலாளி வேடமிட்டு இருந்த இளைஞன் அது எப்படி வேலைசெய்கிறது என்று காட்டினான். பதினெட்டு பேராக உள்ளே அனுப்பினார்கள். போகும்வழியில் விளக்குகளை அணைத்து அன்று அது எப்படி இருந்திருக்கும் என்று காட்டுகிறார்கள். மின்சார சாதனங்கள் மூலம் அங்கே எழும் ஒலிகளை உருவாக்கியிருந்தார்கள். நீர் ஓடும் ஒலி. இயந்திர ஒலி. பல்வேறு பேச்சுக்குரல்கள். பல இடங்களில் நீர் ஊறிச்சொட்டுவதுபோல அமைத்திருந்தார்கள். நீர் வழியாக பாய்ந்து சென்றோம்.

உள்ளே உருவெளிக்காட்சியாக வெல்கம் தங்கத்தாது வெட்டி எடுக்கப்படும் நிகழ்வை காட்டினார்கள். அதை எடுத்த அந்த சுரங்கத்தொழிலாளி கைக்கடப்பாரையால் வெட்டுகிறார். பாறை கணீர் கணீரென ஒலிக்கிறது. சோர்ந்து அமர்கிறார். தூசு மூச்சை அடைக்க இருமுகிறார். யாருடனோ பேசுகிறார். மீண்டும் தோண்டுகிறார். சட்டென்று உற்சாகம் கொள்கிறார். ஆவேசமாக தண்ணீரை அள்ளி அந்த தோண்டிய பகுதி மீது வீசுகிறார். ஆ என்ற அலறல். இன்னொருவர் ஓடிவருகிறார். இருவரும் கட்டிப்பிடித்து கண்ணீர் மல்க கூவுகிறார்கள். துள்ளுகிறார்கள்.

வெளியே வந்தோம். கண்ணாடிக்கு அப்பால் ஒரு இரும்புக்கதவு திறந்து அந்தத் தங்கத்தாதுவின் பிரதிவடிவம் கிர்ர் என்று முன்னால் வந்து நின்றது. பளபளவென்று மின்னும் தூய தங்கம். மஞ்சள்நிற தங்கம் கொஞ்சம் மண்ணுடன் கலந்து உருவில்லாத மண்கட்டி போல் இருந்தது. பிரம்மாண்டமான ஒரு வெங்காய வடை மாதிரி. தங்கம் நம்மை பிரமிக்கச் செய்கிறது. சட்டென்று 'மெக்கன்னாஸ் கோல்ட்' திரைப்படத்தின் அந்த முகப்புப்பாடல் நினைவுக்கு வந்தது. ஜோஸ் ஃபெலிசியானோ பாடிய பாடல். ' ஓல்ட் டர்க்கி பஸ்ஸர்ட்..' அதில் உள்ள 'தங்கம்! தங்கம்!' என்னும் உச்சக்கூக்குரல். தங்கவெறியை வேடிக்கை பார்த்தபடி வானில் உலவும் அந்த செங்கழுகு. அதன் நிழல் அலையும் அந்த பாறை வெளி.

வெளியே வந்து அந்த போலிநகரத்தில் அலைந்தோம். உற்சாகமான குழந்தைகள். அங்கே குழந்தைகளுக்கு கட்டுப்பாடுகளே இல்லை. அவர்கள் எதுவேண்டுமானாலும் செய்யலாம். தண்டனைகள் இல்லை – தண்டித்தால் போலீஸ் தேடிவரும். (டொரொண்டோவில் கேட்ட கதை. ஒரு ஈழத்தமிழ் அப்பா எட்டுவயது மகனை இரண்டு தட்டு தட்டினார். மகன் போலீஸுக்கு ஃபோன்செய்ய அவர்கள் வந்து அவரை எச்சரித்துவிட்டுச் சென்றார்கள். அவர் அவனை கூப்பிட்டுக்கொண்டு இந்தியாவுக்குச் சுற்றுலா வந்தார். சென்னை மீனம்பாக்கத்தில் இறங்கியதுமே பையனை அடிபின்னிவிட்டார்.) கிரீச்சிட்டு கூவியபடி உற்சாகமாக ஓடின குழந்தைகள்.

வெள்ளைக் குழந்தைகளைப் பார்த்ததுமே இவைதான் உலகிலேயே அழகானவை என்று தோன்றுகின்றது. அடுத்து ஒரு சீனக்குழந்தையைப் பார்க்கும்போது அடாடா சீனக்குழந்தைக்கு ஈடு இணை உண்டா என்ற எண்ணம். அடுத்து கறுப்புக் குழந்தையைப் பார்க்கும்போது இது அல்லவா குழந்தை என்று. வெள்ளைக்குழந்தைக்கு நீலக்கண்கள், சீனக்குழந்தைக்கு கண் இடுங்கும் சிரிப்பு, கறுப்புக் குழந்தைக்கு தடித்த பெரிய உதடுகள் அழகு என்று சுருக்க முனைந்தேன்.

மேலே ஏறிச்சென்றோம். அங்கே தொழிற்சாலைகள் இருந்தன. அக்காலத்துத் தொழிற்சாலைகள். ஒரு ஆலையில் ஆவி இயந்திரத்தை பயன்படுத்தி மரத்தடிகளை செதுக்கிக் குடைந்து சாரட் வண்டியின் சக்கரங்களைச்

செய்துகொண்டிருந்தார்கள். ஓர் ஆலையில் அக்கால உடையணிந்த தொழிலாளர் ஒருவர் ஆவி இயந்திரத்தின் உதவியால் தகரத்தகடுகளை சட்டிகளாக ஆக்கிக் கொண்டிருந்தார்.

அச்சட்டிகளை விலைக்கு வாங்கலாம். அக்காலத்தில் பலாரட்டின் நீராதாரமாக விளங்கிய ஓடை அங்கே செல்கிறது. அதில் இறங்கி சட்டியில் மண்ணை அள்ளி தங்கம் தேடிக்கொண்டிருந்தார்கள். பெரியவர்கள் சிரித்துக்கொண்டே விளையாட சிறுவர்கள் மிகவும் தீவிரமாக தங்கம் தேடினார்கள். அங்கே சிறு தங்கத்துண்டுகளை அவ்வப்போது போட்டு கண்டெடுப்பவர்களுக்கு பரிசுகள் வழங்குவார்களாம். அந்த முகங்களில் தெரிந்த உற்சாகத்தை தங்கத்தை பறிகொடுத்த புராதன நாட்டவனாக நின்று வேடிக்கை பார்த்தேன்.

பலாரட்டில் ஒரு அருங்காட்சியகம் இருந்தது. அதில் பழைய தங்கவேட்டைக்காலத்தின் பொருட்களையும் அன்றைய வாழ்க்கையின் சாட்சியங்களான பொருட்களையும் வைத்திருந்தார்கள். பல்வேறு தங்கத்தாதுக்களின் வடிவங்கள் காட்சிக்கு வைக்கப்பட்டிருந்தன. உலகமெங்கிலும் இருந்து கொண்டு வரப்பட்ட தங்க நகைகளின் பிரதிகள். தங்கத்தின் விதவிதமான முகங்கள். தங்கத்தைக் கண்டு கண்களுக்கு மஞ்சள் காமாலை வந்தது போல் இருந்தது.

பலாரட்டிலேயே இரவு தங்க விடுதிகள் உண்டு. அவர்கள் அங்கே இரவையும் காலையையும் அந்த மனநிலையில் கழிக்கலாம். ஆனால் செலவேறிய பொழுதுபோக்கு அது. பிறருக்கு மாலை ஐந்து மணிதான் கணக்கு. கிருஷ்ணமூர்த்தி கொண்டுவந்திருந்த கொக்கோ கலந்த சாக்லேட் கேக் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதன்பின் எல்லா இடத்திலும் அந்த கேக்கை கேட்டுப்பார்த்தேன், கிடைக்கவேயில்லை.நாங்கள் ஐந்தரைக்கு பலாரட்டை விட்டு கிளம்பினோம்.

தங்கவேட்டை ஒரு குறியீடு. பதினேழாம் நூற்றாண்டு முதல் ஐரோப்பா கொண்ட பொருள்வெறியின், அதற்காக அவர்கள் செய்துகொண்ட சாகசங்களின், அவர்கள் அதன்மூலம் உலகையே வென்றதன் குறியீடு. அந்த வெல்கம் தங்கத்தாதுவை கொஞ்சம் உருக்கி உருமாற்றினால் இந்தியாவின் வடிவத்தை அடையக்கூடும்.

6. வீடு, சாலை, வெளி

மு ம்பையில் கொஞ்சநாள் நான் இருந்திருக்கிறேன் — தாராவியில். கிட்டத்தட்ட நான்குமாதம். ஒற்றை அறை கொண்ட குடியிருப்பில் ஒரு கணவனும் மனைவியும் இரு குழந்தைகளும் மூன்று விருந்தினர்களுக்கும் தூங்க வாடகைக்கு இடம் கொடுத்திருந்தார்கள். அந்த ஒற்றை அறையில்தான் கணவனும் மனைவியும் குடும்பம் நடத்தினர். மனைவி சமைத்தாள். துணிதுவைப்பதும் குளிப்பதுமெல்லாம் அந்த ஒற்றை அறைக்குள் உள்ள சிறிய சதுரவடிவமான சிமிண்ட்டாலான வடிகால்வட்டத்தில்தான். குடியிருப்பவர்கள் வெளியே சென்று பொதுக்குளியலறையில் வரிசையில் நின்று வாடகைகொடுத்து குளிக்கவேண்டும். ரயில்தண்டவாளத்தின் ஓரமாக விடிகாலையிலோ இரவிலோ சென்று மலம்கழிக்கவேண்டும். மழைக்காலத்தில் நடந்துநடந்து வீடே ஈரமாகிவிடும். அந்த ஈரத்தின் மேலேயே படுக்க வேண்டும். பொந்துக்குள் உயிர்வாழும் எலிகளைப்போல. அதைவிட மோசமான ஆண்கள் குடியிருப்புக்குப் பின்னர்சென்றேன். ஓடிவந்துவிட்டேன்.

ஆனால் அப்படி ஒரு கூரையைத் தேடிக்கொள்பவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். மும்பையில் கடும்குளிரில், பருவமழையின் உக்கிரமான அருவிக்குக் கீழே திறந்த வெளியில் வாழவிதிக்கப்பட்டவர்களே அதிகம். அவர்களைப் பொருத்தவரை முப்பதாயிரம் வருடங்களாக மானுடகுலம் அடைந்த பண்பாட்டு முன்னேற்றம் எதுவும் நிகழவேயில்லை. குகையைக் கண்டுபிடித்து தீமூட்டக் கற்றுக்கொள்ளாத நியண்டர்தால் மனிதர்கள் அவர்கள். சென்னையில் தெருவில் தங்கும் மனிதர்கள் ஆணும்பெண்ணும் நள்ளிரவில் பழைய லாரித்தார்ப்பாயின் துண்டுகளை போர்த்திக்கொண்டு முயங்குவதைக் கண்டிருக்கிறேன். ஒருமுறை சென்னையில்

தரையடிச்சாலையில் மழைக்கு ஒதுங்கியிருந்த மனிதர்கள் நடுவே ஓடும் நீருக்குள் பாலிதீன் கவர்கள் சுவரோரமாகச் சாத்தி வைக்கப்பட்டிருந்தன, உள்ளே கைக்குழந்தைகள் தூங்கிக் கொண்டிருந்தன.

வீடு மனித நாகரிகத்தை உருவாக்குகிறது. வீட்டின் அறைகளே தனிமனித அந்தரங்கத்தை உருவாக்குகின்றன. அந்த வீடுகளுக்குள் வாழும் மனிதர்கள் நடுவே உள்ள உறவைக்கூட வீடுதான் தீர்மானிக்கிறது. வேண்டாவெறுப்பாக நள்ளிரவில் திரும்பிவரக்கூடிய ஒன்றாக வீடு இருக்கும்வரை எவருக்கும் குடும்பத்தின் மீது பாசம் இருக்க வாய்ப்பில்லை. ஒருவர் மூச்சுக்காற்றை ஒருவர் சுவாசித்து வாழும் வரைக்கும் குடும்ப உறுப்பினர் நடுவே உரசல்களும் கசப்புகளும் மட்டுமே இருக்கும். வீடு மாறும்தோறும் மனிதமனம் அதற்கேற்ப மாறுபடுகிறது. சிறிய இடுங்கிய வீடுகள் நம் மனதையும் இடுங்கலாக்குகின்றன. ஆடம்பரமான வீட்டை நான் சொல்லவில்லை. சிறிய எளிய வீடுகள் உண்டு. ஆனால் அங்கே வாழும் மனிதர்கள் மனக்குறுகல் இல்லாமல் புழங்கும் அளவுக்கு அந்த வீடு இருந்தாகவேண்டும்.

ஆனால் நம்மிடையே வீடு ஒன்று ஆடம்பரப்பொருளாக இருக்கிறது. அல்லது அடையமுடியாத ஒரு கனவாக இருக்கிறது. மனதுக்கு உகந்த வீடு அமைபவர்கள் சிலரே. காரணம் அதற்கான முயற்சியே நம்மிடம் இருப்பதில்லை. நான் எப்போதுமே சற்று வசதியான வீடுகளை தேர்வுசெய்பவன். ஏனென்றால் நான் வீட்டுக்குள் இருக்கும் நேரம் அதிகம். அதற்காக வாடகைக்கு இருந்த நாட்களில் புறநகர்களிலேயே வீடுதேடுவேன். நல்ல வேளையாக நான் பெருநகர்களில் வாழ நேரவில்லை. பணம் இருந்தும்கூட சிக்கனத்தால், சேமிப்பு வெறியால் மிகச்சிறிய வீடுகளில் வாழும் மனிதர்கள் நிறையபேரைக் கண்டிருக்கிறேன். என்னிடமே என் வீட்டை கொஞ்சம் மாற்றிக்கட்டி பாதியை வாடகைக்கு விடும்படி சொல்பவர்கள் இருக்கிறார்கள்.

முதன்முறையாக நான் டொரொண்டோ சென்றபோது அங்கே என்னை மிகவும் கவர்ந்தவை வீடுகளே. தனியார் கட்டிய இல்லங்களும் சரி, அரசு அளிக்கும் அடுக்குமாடிப் பகுதிவீடுகளும் சரி வசதியானவை. பின்னர் சிங்கப்பூர் சென்று அங்கே உள்ள அடுக்குமாடிப் பகுதிவீடுகளைப் பார்த்தபோதும் அதையே

உணர்ந்தேன். இந்தியாவில் அத்தகைய வீடுகளில் தங்க மிகச்சிலருக்கே வாய்க்கிறது. அதற்கு ஒன்று, சின்னஞ்சிறு ஊரில் இருக்க வேண்டும். அல்லது பெரும்பணக்காரராக இருக்க வேண்டும். இடவசதி குறைவு ஒருபக்கம் இருக்க நம்முடைய வீடுகளின் வடிவமைப்பும் முட்டாள்தனமானது. நம்முடைய பெரும்பாலான வீடுகளில் நடமாட்டவழியே அதிக இடத்தை அடைத்துக்கொள்கிறது. நம்முடைய வீடுகளில் அரசுக் குடியிருப்புகள் தவிர பிற எதுவுமே ஒரு கட்டட வடிவமைப்பாளரின் பங்களிப்பு கொண்டவை அல்ல. கொத்தனார்கள் தங்களுக்குத் தெரிந்தவரையில் கட்டியவை. நான் குடியிருக்கும் வீடும் அப்படித்தான், நிறைய இடமுள்ள, ஆனால் கணிசமான இடம் வீணடிக்கப்பட்ட வீடு அது.

ஆஸ்திரேலிய வீடுகள் என்னை மிகமிகக் கவர்ந்தன. முருகபூபதியின் வீட்டுக்குச் சென்றபோதே அந்த வீட்டின் அகலமும் அமைப்பும் எனக்குப் பிடித்திருந்தது. முருகபூபதி அங்கே நடுத்தர வருமானம் உடையவர், அவர் வாழ்வது போன்ற வீட்டில் இந்தியாவில் குட்டித்தொழிலதிபர்களே வாழமுடியும். நான்கு படுக்கையறைகள் கொண்டது அவ்வீடு. படுக்கையறைகள் வீட்டின் பக்கவாட்டில் இருபக்கமும் அமைந்திருக்க நடுவில்தான் உள்ளே நுழைவதற்கான மைய வாசலும் வரவேற்பறையும். அதை ஒட்டி உணவறை, உணவறையின் ஒருபகுதியாக சமையலறை. ஆஸ்திரேலியச் சமையலறைகள் நம் சமையலறைகளைப்போல தனி அறைகள் அல்ல. அவை உணவுக்கூடத்தை ஒட்டி ஒரு மதுக்கடை விற்பனைப்பகுதி போன்ற அமைப்பு கொண்டவை.

பெரும்பாலான வளர்ந்த நாடுகளில் இருப்பதுபோல ஆஸ்திரேலியாவிலும் பெரிய கட்டுமான நிறுவனங்கள்தான் வீடுகளைக் கட்டுகின்றன. ஒரு பெரிய நிலப்பகுதியை வாங்கி ஒட்டுமொத்தமாக வீடுகளைக் கட்டி ஒரு நகரப்பகுதியை உருவாக்கி விற்கின்றன. ஆகவே நகரம் மிகவும் சீராக திட்டமிட்ட முறையில் அமைந்திருக்கிறது. பெரிய இரட்டைச் சாலைகள். அவற்றுக்கு இருபக்கமும் சைக்கிள் பாதைகள். அதன்பின் நடைபாதைகள். அதன்பின் புல்மேடு. அதை ஒட்டி வரிசையாக வீடுகள். வீடுகள் அனேகமாக ஒரேவகையான அமைப்பு கொண்டவை. மரத்தாலான வேலியால்

பிரிக்கப்பட்டவை. உயரத்தில் இருந்து பார்த்தால் மிகச்சீராக அடுக்கப்பட்ட பெட்டிகள் போல இருக்கின்றன குடியிருப்புகள்.

ஆஸ்திரேலிய குடியிருப்பு வீடுகள் பெரும்பாலும் வளைவான ஓடுகள் வேய்ந்தவை. அங்கே பெரும்பாலான வீடுகள் மாடி இல்லாத ஓட்டு வீடுகள்தான். நகர்மத்தியிலேயே மாடிவீடுகள் காணப்படுகின்றன. காரணம் அங்கே இடத்துக்குப் பஞ்சமே இல்லை. வீட்டுக்கூரைகள் சாய்வான ஓட்டுக்கூரைகள். நம்முடைய வளைவான கூரை ஓடுகளைப்போன்றவைதான். சிவப்பு அல்லது சாம்பல் நிறம். ஓடு என்றால் களிமண் ஓடு அல்ல. சிமிண்ட் கலந்த களிமண்ணால் செய்யப்பட்ட கனமான ஓடுகள். சில இடங்களில் அஸ்பெஸ்டாஸ் கூரைபோடப்பட்ட வீடுகளையும் கண்டேன். மரக்கூரை போடப்பட்ட புராதனமான வீடுகளை பலாரட் செல்லும் வழியில் பார்த்தேன்.

கட்டப்பட்டு வரும் வீடுகளை பல இடங்களில் பார்த்தேன். முதலில் கனமில்லாத மரச்சட்டங்களால் வீடுகளின் எலும்புச்சட்டகம் அமைக்கப்படுகிறது. இது திட்டவட்டமாக வடிவமைக்கப்பட்டு தொழிற்சாலைகளில் செய்யப்பட்டு தனித்தனியான சட்டங்களாகக் கொண்டுவரப்படுகிறது. இரண்டு தச்சர்கள் இரண்டே நாளில் ஆணித்துப்பாக்கி மூலம் ஆணியறைந்து அச்சட்டத்தை உருவாக்கிவிடுவார்கள். சட்டத்தின் கனத்தாலும் பலத்தாலும் வீட்டின் கட்டமைப்பு உறுதியாக நிற்பதில்லை, மாறாக குறுக்கும் நெடுக்குமாகச் செல்லும் சட்டங்களின் பின்னலால்தான் அந்த உறுதி ஏற்படுகிறது. சுவர்களும் மரம்தான். கூரைமேல் ஓடு வேயப்படுகிறது. மரச்சுவருக்கு வெளியே அதன்பிறகு செங்கல்சுவர் கட்டப்படுகிறது. சுட்ட செங்கல் அல்ல, அதி உயர் அழுத்தத்தில் களிமண்கலவையை அழுத்திச் செய்யப்படும் செங்கல். செங்கல் அலங்காரத்துக்காகத்தான், அதன்மேல் கூரை நிற்பதில்லை. செங்கல் மேல் எந்தப்பூச்சும் கொடுக்கப்படுவதில்லை.

சன்னல்களும் கதவுகளும் சட்டங்கள் இல்லாமல் நேராகவே செங்கல் மேல் பதிக்கப்படுகின்றன. சன்னல்கள் பெரும்பாலும் கம்பிகள் இல்லாதவை. குளிர்நாடு ஆகையால் வெளிச்சத்துக்காக ஏராளமான கண்ணாடிக்கதவுகள். எந்த ஒரு ஆஸ்திரேலிய வீட்டுக்குள்ளும் வெறும் ஒரு கருங்கல்லின்

உதவியுடன் நுழைந்துவிடமுடியும். அங்கேஅந்தபயம் அனேகமாக இல்லை. நாம் நம் வீடுகளை திருடர்களை மனதில்கொண்டே கட்டியிருக்கிறோம். என் வீட்டின் எல்லா சன்னல்களுக்கும் அரை இஞ்ச் கனமுள்ள இரும்புப் பட்டைகளையும் ஒரு இஞ்ச் கனமுள்ள கம்பிகளையும் பொருத்தியிருக்கிறேன். இருபக்கமும் வெளிக்கதவுகளுக்கு கனமான மரக்கதவுகளுக்கு வெளியே கனமான இரும்பு அழிக்கதவுகள் உள்ளன. சுவர்கள் இரண்டடி கனமாக செங்கல்லாலும் சிமிண்டாலும் கட்டப்பட்டவை. நாம் பாதுகாப்பையே முக்கியமாகக் கருதுகிறோம் – வசதியை விட.

ஆஸ்திரேலியாவில் மர—செங்கல் சுவர்களுக்கு இடையே மென்மையான பஞ்சுப்பொருள் வைத்து குளிர் தடுப்பு செய்கிறார்கள். உள் சுவர்களில் சிமிண்ட் பூசுவதற்குப் பதிலாக பிளாஸ்டிக் பரப்புகளை ஒட்டி அதன்மேல் பெயிண்ட் பூசிவிடுகிறார்கள். தரைக்கு பெரும்பாலும் மரத்தையே தளமாகப்போடுகிறார்கள். ஒரு வீடு அனேகமாக நான்குபேரால் பதினைந்துநாளில் கட்டி முடிக்கப்பட்டுவிடும். ஏராளமான வீடுகளை வேகமாகக் கட்டி எழுப்புவதற்கு இந்த முறை உதவியாக இருக்கிறது. நான் என் வீட்டுக்குமேலே நாநூறு சதுர அடியில் மூன்று அறைகள் கட்டுவதற்கு ஒருவருடம் ஆகியது. கையால் சிமிண்ட் குழைத்து கட்டி பூசி செதுக்கி செய்துகொண்டே இருக்கவேண்டும். அதில் ஆயிரம் சிக்கல்கள். ஒட்டுமொத்தமாக தொழிற்சாலைகளில் செய்து வீடுகளை நிறுவும் ஒரு அமைப்பு இந்தியாவில் உருவானால் வீடுகளின் விலைகள் பெருமளவுக்குக் குறைய வாய்ப்பிருக்கிறது. குடியிருப்புப் பஞ்சம் மிக்க இந்தியாவில் இது மிகமிக இன்றியமையாதது.

பதிமூன்றாம் தேதி காலை ஏழுமணிக்கு ஆழியாள் (மதுபாஷிணி)யும் அவர் கணவர் ரகுபதியும் குழந்தை துகிதையும் காரில் வந்தார்கள். அவர்களுடன் நானும் அருண்மொழியும் கன்பரா செல்வதாக ஏற்பாடு. ஓரளவு குளிர் இருந்தது. ஏழரைக்கு அவர்கள் வந்தார்கள். கிட்டத்தட்ட எண்ணூறு கிலோமீட்டர். எட்டுமணி நேரம் காரிலேயே பயணம்செய்து சென்றுசேர வேண்டும். ஆஸ்திரேலியாவைப் பார்க்கும் ஒரு பயணம் அது என எண்ணிக் கொண்டேன். துகிதையை கார் நடுவே சின்ன இருக்கை ஒன்றை அமைத்து பெல்ட் போட்டுக் கட்டி வைத்தார்கள். அவள் ஒரு சிறிய எலக்ட்ரானிக்

திரையில் கார்ட்டூன் பார்த்து மெய்மறந்து அமர்ந்திருந்தாள். எனக்கு ஆஸ்திரேலியாவில் மிகப்பெரிய சிக்கலே காரில் ஏறியதும் சீட்பெல்ட்டை போடுவதுதான். இந்தியாவில் அவ்வழக்கமே இல்லை. ஆகவே அது நினைவுக்கே வருவதில்லை. பிறர் சர் சர் என இழுத்து சீட்பெல்ட் போடும் ஒலி கேட்கும்போதுகூட என்ன புறாச்சத்தம் கேட்கிறதே என்று எண்ணிக்கொள்வேன். ஒருமுறை செம்பில் பால்கறக்கும் ஒலிமாதிரி கேட்டது.

ஆஸ்திரேலியாவில் காரோட்டுவதென்பது மிக எளிது. இந்தியாவில் குறிப்பாக சென்னையில் இசைவிமரிசகர் ஷாஜி ஓட்டும் காரில் இருந்தால் அவர் ஒரு ஆவேசமான செஸ் ஆட்டத்தில் ஈடுபட்டிருப்பதாகவே தோன்றும். அங்கே எங்குமே இரட்டைச் சாலைகள். பெரும்பாலான இடங்களில் நான்குவழிச்சாலைகள். சிலசமயம் ஆறுவழிச்சாலைகள். துல்லியமான அறிவிப்புகள். சுழற்றியை கையில் பிடித்துக்கொண்டு ஓய்வாக அமர்ந்து சாலையைப் பார்த்துக்கொண்டே பேசிக்கொண்டும் பாட்டு கேட்டுக்கொண்டும் ஓட்டலாம். ஆனால் தூக்கம் வந்துவிடும் அபாயம் உண்டு. சாலை முழுக்க தூக்கத்துக்கு எதிரான அறிவிப்புகள்தான். ‘தூக்கம் வந்தால் அதை என்ன செய்தாலும் தவிர்க்க முடியாது, பத்து நிமிடம் தூங்கிவிட்டு ஓட்டுங்கள்’ போன்ற அறிவிப்புப் பலகைகள் வந்தபடியே இருக்கின்றன.

வாஜ்பாயின் கனவுத்திட்டமான தங்கநாற்கரச்சாலைகள் இந்தியாவின் பலபகுதிகளில் இப்போதுதான் முடிவுக்கு வந்துகொண்டிருக்கின்றன. சந்திரபாபு நாயுடு ஆந்திராவில் பல இடங்களில் அதை முன்னரே முடித்துவிட்டிருந்தார். குறுக்குவெட்டுகள் இல்லாத அகலமான நான்குவழிச்சாலைகள் இந்தியாவின் முகத்தையே மாற்றிக்கொண்டிருக்கின்றன. அச்சாலைகள் உருவாக்கிய பொருளியல் வளர்ச்சியால் ஆந்திரா ஒரு மாபெரும் ராட்சதன் மாதிரி தூங்கி எழுந்துவிட்டிருக்கிறது. சென்னைமுதல் நாகர்கோயில் வரையிலான சாலையில் சில இடங்களே மீதி. இச்சாலைகள் வந்தபின் இங்கே விபத்துக்கள் அதிகரித்திருக்கின்றன. ஆஸ்திரேலியாவில் ஆறுபட்டைச் சாலையில்கூட அதிகபட்ச வேகமென்பது நூறு கிலோமீட்டர்தான். ஆனால் நானும் நண்பர் சண்முகமும் மாருதி வாகனார் காரில் விசாக பட்டினம் சாலையில் நூற்றி இருபது கிலோமீட்டர் வேகத்தில் சென்றிருக்கிறோம். குண்டும்குழியுமான சாலையில் ஓட்டிய நம் ஓட்டுநர்களுக்கு நல்ல சாலை போதையை

அளித்துவிடுகிறது. அத்துடன் ஆக்ரமிப்புகள், சாலையோர வணிகர்கள், ஊடே பாயும் கிராமவாசிகள், மிருகங்கள், வைக்கோலும் தானியங்களும் உலரப்போடுவது... இந்தியாவில் தங்கநாற்கரச்சாலைகளின் ஓரங்களை காபந்து செய்யாவிட்டால் அவை சீக்கிரத்திலேயே கொலைக்களங்களாக ஆகிவிடும்.

சாலையோரங்களில் கங்காரு படம் போட்ட எச்சரிக்கைப் பலகைகளைக் கண்டோம். கங்காருகள் குறுக்கே பாயும் என்றார் ரகுபதி. கங்காருகளை வந்தது முதலே தேடி காணாமல் ஏமாந்து இருந்தோம். பக்கவாட்டு புல்வெளிகளைப் பார்த்துக்கொண்டே வந்தோம். சட்டென்று சாலையில் கார்களால் அடிபட்டு செத்துக்கிடந்த கங்காருவைப் பார்த்தோம், கிட்டத்தட்ட துவையல். மீண்டும் இன்னொன்று. சற்று தள்ளி இன்னொன்று. சாம்பல்நிறமான கங்காருகள். இந்தியாவில் ஒரு மான் காரில் அடிபட்டால் அந்த வழக்கில் இருந்து வெளிவர பத்து வருடங்கள் அல்லது பத்துலட்சம் ரூபாய் ஆகும். ஆனால் அங்கே கங்காருகளின் எண்ணிக்கை மனிதர்களை விட பெருத்துவிட்டதனால் அவற்றைக் கொல்வது குற்றம் அல்ல. ஆகவே கொஞ்சம்கூட பொருட்படுத்தாமல் காரை ஏற்றிக்கொண்டு செல்கிறார்கள். முதன்முதலில் பார்த்த கங்காருகள் எல்லாம் சடலங்கள் என்பதில் அருண்மொழி மிகவும் வருத்தப்பட்டாள்.

பொருளாதார மந்தம் ஏற்படும்போது பெரிய கட்டுமானத்திட்டங்களைத் தொடங்குவது நவீன முதலாளித்துவ கோட்பாடு. இது கீய்ன்ஸ் கோட்பாடு எனப்படுகிறது. ஜான் மெய்னார்ட் கீய்ன்ஸ் (John Maynard Keynes) என்ற பிரிட்டிஷ் பொருளியலாளர் உருவாக்கியது. இதன்மூலம் அரசாங்கத்தின் இருப்புநிதி மக்களிடையே பரவுகிறது, வேலைவாய்ப்புகளை உருவாக்குகிறது. கட்டுமானத்திட்டங்கள் மூலம் வளர்ச்சி ஏற்பட்டும் நிதிவளர்ச்சி உருவாகிறது. ஆஸ்திரேலியா அரசு இன்றைய பொருளாதார மந்தத்தை எதிர்கொள்ள மாபெரும் சாலைத்திட்டங்களை தொடங்கியிருக்கிறது. போகும் வழியெங்கும் ராட்சத மண்ணள்ளி இயந்திரங்கள் வேலைசெய்துகொண்டிருந்தன. கீய்ன்ஸின் கோட்பாடு பல காலமாகவே இந்தியாவில் இருந்திருக்கிறது.வரிவசூலில் மூன்றில் ஒரு பங்கை மன்னர் கோயில்களிலும் கோட்டைகளிலும் உள்ள களஞ்சியங்களில் சேமித்து வைத்திருக்க வேண்டும் என்ற விதி இருந்திருக்கிறது. பஞ்சகாலத்தில் ஏரிகள் வெட்ட ஆரம்பிப்பார்கள்,

கோயில்களைக் கட்டுவார்கள். ஏரிவெட்டி கோயில்கட்டியதனால்தான் பஞ்சம் போயிற்று என்ற நம்பிக்கையை நம் ஊர்களில் காணலாம்.

சாலைகளில் ஆங்காங்கே கார்களை நிறுத்தி ஓய்வெடுக்க வசதியாக பெஞ்சுகளும் டெஸ்குகளும் போடப்பட்டிருந்தன. ராணி மங்கம்மாள் மதுரை — குமரி சாலையில் இம்மாதிரி நூற்றெட்டு சத்திரங்களை கட்டி அங்கே மாடுகளுக்கு தண்ணிகாட்டவும் மனிதர்கள் தாகம் தீர்க்கவும் ஏற்பாடு செய்திருந்தாள். பல மண்டபங்கள் இப்போதும் சாலையோரம் உள்ளன. ஒரு நலம்நாடும் அரசின் கண்கள் எங்கெல்லாம் செல்ல முடியும் என்பதற்கான தடையங்கள் இவை.

போகும் வழியில் ஒரு மெக்டொனால்ட்ஸ் கடையில் நிறுத்தி உள்ளே போய் பர்கர் சாப்பிட்டோம். பர்கரைச் சாப்பிட ஏற்ற வாயுள்ளவர்கள் ஆப்ரிக்கர்கள்தான். நான் முடிந்தவரை முதலைமாதிரி வாயைத்திறந்து கடித்து சாப்பிட்டேன். அருண்மொழி பர்கரை தனித்தனி அலகுகளாகப் பிரித்து சாப்பிட்டாள்.' பொம்புளை சிரிச்சா போச்சு பர்கரைப் பிரிச்சாப்போச்சுன்னு ஒரு பழமொழி உண்டு அருணா' என்று சொன்னதை அவள் அவ்வளவாக ரசிக்கவில்லை.மதியம் சாப்பிட்ட அந்த பர்கரை நான் செரித்துக்கொள்ள மறுநாள் ஆகியது. 'அத மட்டும் என்னால ஜீரணிச்சுக்கவே முடியலை' என்ற வழக்கமான சீரியல் வசனம் எனக்கு அப்போதுதான் புரிந்தது.

மாலையில் ஒரு சிற்றூரை அடைந்தோம். அங்கே சாலையோரமாக ஒரு நீர்மூழ்கிக் கப்பல் நின்றிருந்தது. பாதி மண்ணில் மூழ்கி. அது முதலாம் உலகப்போரில் பங்குபெற்ற நீர்மூழ்கி. அந்த நீர்மூழ்கியின் காப்டனாக இருந்தவர் பிறந்த கிராமம் அது. அதன்மேல் ஏறி விளையாடின குழந்தைகள். இனிமையான ஒரு கிராமத்து மாலை நேரம். பையன்கள் சிலர் கிரிக்கெட் விளையாடிக்கொண்டிருந்தார்கள். நிறைய தாத்தாக்கள் பாட்டிகளுடன் வந்து ஓய்வாக அமர்ந்திருந்தார்கள். கடையில் ஒரு கா·பி சாப்பிட்டோம். ஆஸ்திரேலியா கா·பி திருவல்லிக்கேணி டிகிரிகா·பிக்கு பாட்டி. ஆகவே நான் சாக்லேட் பானம் அருந்தினேன்.

அந்த நீர்மூழ்கியின் உட்பகுதியை அங்கே மாதிரி அமைத்து வைத்திருந்தார்கள். மிகச்சிறிய விமானம் ஒன்றுக்குள் நுழைந்தது போல. சிறிய

விமானத்துக்குள் நுழைந்தால் நான் பற்பசைக் குழாய்க்குள் நுழைந்த உணர்வை அடைவதுண்டு. இப்போது ஒரு ஷூவுக்குள் நுழைந்தது போல உணர்ந்தேன். வீரர்கள் படுக்கும் சிறிய படுக்கைகள். மிகச்சிறிய தங்குமறைகள். மிகச்சிறிய காப்டன் அறை. ஆறடிக்கு இரண்டடி அறையில் அவரது படுக்கை, இருக்கை,மேஜை, வைப்பறை ஒலிபெருக்கிக் கருவிகள் எல்லாமே இருந்தன. இடத்தை மிகச்சிக்கனமாக, மிகக்கச்சிதமாக எப்படி பயன்படுத்திக்கொள்ளலாமென்பதன் சாட்சி. அதை உருவாக்க எத்தனை நிபுணர்களின் ஆராய்ச்சி தேவைப்பட்டிருக்கும். அவர்கள் ஒரு கருவறையை பார்த்தாலே போதும், அதனளவுக்கு இடத்தைப் பயன்படுத்தும் நுட்பத்தை எங்குமே பார்க்க முடியாது.

அந்த சிறிய ஷூ கடலுக்கு அடியில் செல்லும்போது எப்படி இருக்கும்? முப்பதாயிரம் அடி உயரத்தில் வானில் இருளில் பறக்கும்போது எப்படி இருக்குமோ அப்படித்தான். அது மேலே, இது கீழே. அவ்வளவுதான். பீட்டர் பெஞ்ச்லியின் பிரபல நாவலான ‘எக்ஸார்சிஸ்ட்’ தொடங்கும்போது கதாநாயகன் எண்ணிக்கொள்கிறான். உலகின் மீது வானத்தில் ஒரு குறிப்பிட்ட கணத்தில் எப்படியும் ஒருலட்சம்பேர் விமானங்களில் பயணம் செய்துகொண்டிருக்கிறார்கள். பைபிளில் சொல்லப்பட்டிருப்பதுபோல சட்டென்று பூமி அழிய நேரிட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்? அதைத்தான் நானும் நினைத்தேன், நீர்மூழ்கியில் செல்பவர்கள் மேலே வந்து பார்த்தால் ஆர்ட்டிக்கில் எரிமலை வெடித்து பூமியே மூழ்கிப்போயிருந்தால் எங்கே கரையேறுவார்கள்? ஹாலிவுட்டுக்கு ஒரு நல்ல திரைக்கதை அமைக்கலாம்.

அங்கே ஒரு பெரிஸ்கோப் இருந்தது. அதன் வழியாக உற்றுப்பார்த்தேன். வெளியே பிள்ளைகள் விளையாடுவதும் பெண்கள் நடமாடுவதும் தெரிந்தது. அங்கே யாரும் ரகசியமாக ஏதும் செய்யமுடியாது. இப்படி ஒரு சாவித்துளை இங்கே இருக்கிறது. அங்கிருந்து கிளம்பியபோது மாலை நன்றாகச் சிவந்துகொண்டிருந்தது. புல்வெளிகளைப் பார்த்துக்கொண்டே சென்றோம். மழைபெய்திருந்தமையால் புல்வெளி பச்சைக்கம்பள விரிப்பாக கண்களை நிறைத்துப் பரவிக்கிடந்தது. இம்மாதிரிக் காட்சிகளை சினிமாவில் காட்டும்போது அகலஆடியைப் போட்டு எடுப்பார்கள். காட்சியின் தொடுவான்கோடு வளைந்து தெரியும். நேரில் பார்க்கும்போதுகூட ஒரு வளைவு தெரிகிறதோ என்ற

பிரமையை உருவாக்கியது நீண்டகால சினிமாப்பழக்கம். நேரில் ஒரு காட்சியை நாம் பார்க்கும்போது உண்மையில் நாம் சினிமா காமிராவின் ஆடி பார்ப்பதுபோல பார்ப்பதில்லை. நம் விழி ஓடிக்கொண்டே இருக்கிறது. ஆகவே மிகநுட்பமாக ஒன்றுடன் ஒன்று இணைந்த பலநூறு காட்சியசைவுகளை – ஷாட்களை – நாம் ஒன்றுடன் ஒன்று இணைத்துப் பார்க்கிறோம். அதனால்தான் பெரும் விரிவுகள் நம்மைச் சூழ்ந்துகொள்ளும் உணர்வு ஏற்படுகிறது.

தூரத்தில் பச்சைவெளியை சாம்பல்நிறமான வானம் சந்தித்தது. அந்த விளிம்பில் புல்நுனிகள் கூட துல்லியமாகத்தெரிந்தன. குதிரைகள் சில வால்சுழற்றி மேய்ந்தன. நாலைந்து குதிரைகள் சரிவான தரையில் தலையைக் குனித்து ஏறிச்சென்றன. செம்மறியாடுகள் புல்தரையில் ஏதோ விதைகள் போல விரிந்து கிடந்தன. உடைந்த மரத்தடியில் குடும்பஸ்திரீகள் போன்ற பசுக்கள் கூட்டமாகப் படுத்து ஏதோ வம்பளந்துகொண்டிருந்தன. சில இடங்களில் சிறிய குளங்களில் கலங்கல் நீர். அவற்றை மாடுகள் குடித்துக்கொண்டிருந்தன. புல்வெளிநடுவே இரட்டைத்தழும்பாக கார்ச்சக்கரத்தின் தடம் தொடுவான் நோக்கிச் சென்றது. வானம் மெல்ல சுழன்று கொண்டிருந்தது. பெரியதோர் பச்சை நிற இசைத்தட்டு சுழல்கிறது. மிகமிக நிதானமாக ஓடிக்கொண்டிருந்தது காலம். காலம் வெளியுடன் இணைந்ததுதான்போல. பிரம்மாண்டமான வெளிகளில் காலம் நிதானமாக ஆகிவிடுகிறது. இடுங்கிய தெருக்களில் அது குமிழியிட்டு ஓடிச்சென்றுவிடுகிறது.

கான்பராவை மாலை வந்தடைந்தோம். கான்பரா ஆஸ்திரேலியாவின் தலைநகரம். ஆகவே அதை ஒரு மாநகரமாக எண்ணிக்கொண்டிருந்தேன். ஆனால் அது ஒரு சிறிய ஊர். நகரத்தின் மையச்சாலையிலேயே அடுக்குமாடிக் கட்டடங்கள் மிகக்குறைவு. பெரும்பாலும் தாழ்வான அழகான ஓட்டுக்கட்டடங்கள். சாலையில் புங்கமரங்கள் போன்ற மேப்பிள் மரங்கள் இலைபழுத்து விதவிதமான நிறங்களுடன் பூச்செண்டுகள்போல நின்றன. மஞ்சள்பச்சை, மஞ்சள்செம்மை,இளஞ்செம்மை நிறச்செண்டுகள். கன்பரா இருள ஆரம்பித்திருந்தது. நாங்கள் எட்டுமணிக்குத்தான் மதுபாஷினி வீட்டை சென்றடைந்தோம். வீடு இளவெம்மையுடன் கண்ணாடிகள் கண்கள் போல இருளில் ஒளிர காத்து நின்றுகொண்டிருந்தது. விடுவதல்ல வீடு, விட்டுவிட்டு திரும்பும் இடம் அது.

7. கான்பரா

இ ந்தியாவின் மிகப்பழைய நகரங்களின் பெயர்களைச் சொல்லச்சொன்னால் பெரும்பாலானவர்கள் பாடலிபுத்திரம் என்று சொல்வார்கள். பிகாரின் தலைநகரமான இன்றைய பாட்னாதான் பழைய பாடலிபுத்திரம் – கொஞ்சம் இடம்மாறிவிட்டிருக்கிறது. அதைவிடபழைய நகரம் என்றால் பிகாரில் வங்காளத்தின் ஓரமாக இப்போது காட்டுக்குள் இடிபாடுகளாக மாறிக்கிடக்கும் ராஜகிருஹத்தைச் சிலர் சொல்லக்கூடும். எவருமே டெல்லியைச் சொல்ல மாட்டார்கள். ஆனால் டெல்லி இவற்றைவிடவும் பழைய நகரம். பாண்டவர்களின் தலைநகரமான இந்திரப்பிரஸ்தம்தான் அது. பாண்டவர்களுக்காக மயன் நிர்மாணித்த நகரம் அது என்பது மகாபாரதம் கூறும் ஐதீகம். ஆனால் ஒருநகரமாக நமக்கு எப்போது வரலாறு கிடைக்கிறதோ அப்போதே அது உருவாகிவிட்டிருக்கிறது.

கிட்டத்தட்ட மதுரையும் அதே அளவுக்கு தொன்மை கொண்ட நகரம். உலகின் பலநாடுகளில் மிகத்தொன்மையான நகரங்கள் இன்றுமுள்ளன. ஆனால் அவற்றில் சிலதான் இன்றும் பெருமைகுறையாமல் இருக்கின்றன – ரோம் மாதிரி. டெல்லி பலமுறை அழிந்து பலமுறை கைவிடப்பட்டு மீண்டும் மீண்டும் கட்டி எழுப்பப்பட்டது. அதற்குக் காரணம் அதன் அதீகத்தொன்மைதான். அதை ஆள்பவர் இந்தியாவை ஆள்கிறார் என்ற நம்பிக்கை அளிக்கும் அதிகாரம்தான். ஐதீகத்தொன்மை கொண்ட ஒரு நகரம் இன்றும் ஒரு நாட்டின் தலைநகரமாக இருப்பது ஆச்சரியமானது. ஆனால் உலகின் பலநாடுகளில் தலைநகரங்கள் மிகவும் சமீபகாலத்தில் திட்டமிடப்பட்டு உருவாக்கப்பட்டவை. அவ்வாறு உருவாக்கப்பட்ட ஒரு நகரம் கான்பரா.

ஏப்ரல் பதிநான்காம் தேதி காலை நான் மதுபாஷினி வீட்டில் தூங்கி எழுந்தேன். காலையில் அதற்கு முன்னரே எழுந்திருந்த அருண்மொழி பெரிய சன்னலை திறந்திருந்தமையால் கண்ணாடி வழியாக வெளியே விரிந்த காலையை படுத்துக்கொண்டே பார்க்க முடிந்தது. எங்கே படுத்திருந்தாலும் நாம் கண்விழிக்கும்போது ஒரு சில கணங்களுக்கு நம் ஊரில் நம் படுக்கையில்தான் இருக்கிறோம். இந்த இடம் எது என்ற பிரமிப்புடன் ஊர் நினைவுக்கு வந்தது. வெளிநாட்டில் இருக்கும்போது அவ்வப்போது அது ஓர் நம்பவேமுடியாத அனுபவமாக மனதுக்குத் தோன்றும். இந்திய மண்ணில் இருந்து பல்லாயிரம் கிலோமீட்டர் தள்ளி இருக்கிறோம் என்ற நினைவே எழுவதில்லை. மனம் இந்தியாவில் எங்கோ இருப்பதாகவே மீண்டும் மீண்டும் புனைந்துகொள்கிறது. என் வளர்ப்பு நாய் ஹீரோவை ஆஸ்திரேலியாவுக்கு விமானத்தில் கொண்டுவந்து விட்டால் அங்கே இங்கே முகர்ந்துவிட்டு அந்த இடத்தை அப்படியே நாகர்கோயிலின் நீட்சியாகவே உள்வாங்கிக்கொள்ளும். மனிதனின் அகமும் விலங்குடையதுதான்.

எழுந்து சென்று மதுபாஷினிக்கும் ரகுபதிக்கும் தமிழ்ப்புத்தாண்டு வாழ்த்துக்களைச் சொன்னேன். ஊரில் இருந்திருந்தால் பலர் கூப்பிட்டிருப்பார்கள். பலரை நானும் கூப்பிட்டிருப்பேன். காபி சாப்பிட்டபின் கூடத்தில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தேன். ரகுபதி வாசித்துக்கொண்டிருந்த வுடி ஆலனின் கட்டுரை—கதைகளின் முழுத்தொகுப்பை வாசித்துக்கொண்டிருந்தேன். எனக்கு ஒரு காலத்தில் வுடி ஆலன் பிடித்தமான எழுத்தாளர். ஆங்காங்கே மேற்கோள்கூட காட்டியிருப்பேன். ஆனால் அப்போது அவரது எழுத்துக்களை வாசித்தபோது மிகமிக ஏமாற்றமாக இருந்தது. அபத்தமான, வலிந்த நகைச்சுவை என்று தோன்றியது.

எட்டு மணிக்கு நானும் அருண்மொழியும் ரகுபதியும் கான்பரா நகரைப் பார்க்கக் கிளம்பினோம். கான்பரா ஆஸ்திரேலியக் கூட்டரசின் தலைநகரம். ஆஸ்திரேலியாவில் மக்கள் கிட்டத்தட்ட எழுபதாயிரம் வருடங்களுக்கு முன்னரே வாழ்ந்துவருகிறார்கள் என்பது ஆய்வாளர்களின் நம்பிக்கை. ஆஸ்திரேலியாவின் வடக்குப்பாலைவனப்பகுதிகளில் தொல்மனிதனின் எச்சங்கள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. முங்கோ மனிதன் என்று சொல்லப்படும் புராதன மூதாதைமனிதனின் எச்சங்கள் இன்னும்

ஆய்வாளர்களின் ஆய்வுக்கு உட்பட்டிருக்கின்றன.பனியுகத்தின்போது பூமியின் கடல்கள் பெரும் பனிப்பாளங்களால் மூடியிருந்தபோது ஆப்ரிக்க மையநிலத்தில் இருந்து அவர்கள் மெல்லமெல்ல நடந்தே வந்திருக்கலாம் என்பது ஓர் ஊகம்.

1788ல் வெள்ளையர் வந்து ஆஸ்திரேலியா கடற்கரையில் இறங்கியபோது அங்கே கிட்டத்தட்ட எட்டுலட்சம் பழங்குடிமக்கள் வாழ்ந்திருக்கக் கூடும் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். இவர்கள் கிட்டத்தட்ட 250 தனி தேசியக் கட்டமைப்புகளாக சிதறி வாழ்ந்தார்கள். பல நாடுகள் ஒன்றுடன் ஒன்று கூட்டு கொண்டிருந்தன. ஒரு தேசமென்பது பல இனக்குழுக்கள் கூடி அமைந்த ஒன்று. இனக்குழுக்கள் என்பவை கிட்டத்தட்ட சாதிகள். இந்நாடுகள் நடுவே தொடர்ந்த போர்களும் நிகழ்ந்தன. கிடைக்கும் தகவல்களை வைத்துப் பார்த்தால் கிட்டத்தட்ட இது சங்ககாலப் பாடல்கள் குறிப்பிடும் தமிழ்நிலம்போல இருந்திருக்கலாம். அப்போது தமிழ்நிலத்தில் மூவேந்தர்கள் தவிர நூற்றுக்கும் அதிகமான மன்னர்கள் தனியதிகாரத்துடன் இருந்தார்கள். அம்மன்னர்களை வென்றோ தன்னுடன் இணைத்துக்கொண்டோ மூவேந்தர்கள் அதிகாரத்தைக் கைப்பற்றும் சித்திரத்தையே நாம் புறநானூற்றுப்பாடல்களில் காண்கிறோம். அன்றைய தமிழ்நிலத்தில் வளராத பல சிறுமொழிகளும் இருந்திருக்கலாம் என்றாலும் தமிழே மையமாக விளங்கியது. ஆனால் ஆஸ்திரேலியா நிலத்தில் 250 தனி மொழிகள் இருந்திருக்கின்றன.

மக்கள் மிகப்பரவலாக வாழ்ந்திருக்கிறார்கள். மக்கள் நெருக்கம் மிகமிகக் குறைவு. முர்ரே ஆற்றுப்படுகையில்தான் ஓரளவு மக்கள் வாழ்ந்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியா பழங்குடிகளின் பண்பாடு குறித்து இப்போது தரவுகள் வந்துகொண்டே இருக்கின்றன. அவர்கள் ஒரு காட்டுமிராண்டி மக்கள்தொகை அல்ல என்பதை இப்போது எல்லாருமே ஒத்துக்கொண்டிருக்கிறார்கள். வீடுகள், படகுகள், தேர்கள் செய்வதில் அவர்களுக்கு தேர்ச்சி இருந்திருக்கிறது. மிகச்சிறந்த சமூகக் கட்டமைப்பும், உறவுநெறிகளும், ஆசாரமரியாதைகளும் இருந்திருக்கின்றன. குலமூத்தார் அதிகாரத்தை வழிநடத்துபவர்களாக இருந்திருக்கிறார்கள். தமிழ்நாட்டின் பண்டைய சான்றோர் அவைகளைப்போல. மிகப்பண்பட்ட இறையியல்தத்துவமும் விரிவான ஒரு குறியீட்டமைப்பும் அவர்களுக்கு இருந்திருக்கிறது.

இப்பழங்குடிகளின் வேட்டைச்சட்டங்களைப்பற்றி நிறையவே இப்போது பேசப்படுகிறது. கிட்டத்தட்ட அரைப்பாலைவனமாகிய ஆஸ்திரேலியாவில் வேட்டைமிருகங்கள் கண்டபடி கொல்லப்பட்டால் அது இயற்கைச்சமநிலையை அழிக்கும் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். ஆகவே மிருகங்களின் எண்ணிக்கை மற்றும் பருவநிலை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு குலத்தலைவர்கள் கூடித்திட்டமிட்டு வேட்டைநியதிகளை உருவாக்கி எல்லா குலக்குழுக்களும் அதை கடைப்பிடித்து வந்திருந்தார்கள். ஐரோப்பியரின் வருகைக்குப் பின்னர்தான் ஆஸ்திரேலியாவின் இயற்கைச் சமநிலை சீரழிந்தது என்பது வரலாறு.

ஆஸ்திரேலியாவைக் 'கண்டுபிடித்தது' யார் என்ற கேள்விக்கு கேப்டன் குக் என்று பதிலெழுதி எட்டாம் வகுப்பில் மதிப்பெண் பெற்றிருப்போம். வாஸ்கோ ட காமா இந்தியாவைக் கண்டுபிடித்தார் என்பது போன்ற ஒரு கூற்றுதான் அது. ஆஸ்திரேலியாவின் வாழ்க்கையும் பண்பாடும் மிகத்தொன்மையானவை. அவர்களுக்கு அருகாமையில் இருந்த சிறு தீவுகளுடன் வணிகத்தொடர்பு இருந்திருக்கிறது. மாபெரும் கடலோடிகளான சீனர்கள் மெக்சிகோ வரை சென்று வணிகம்செய்த வரலாறு கொண்டவர்கள். அவர்கள் ஆஸ்திரேலியக் கண்டத்தைப்பற்றி அறிந்திருந்தார்கள் என்று இப்போது விரிவான ஆதாரங்களுடன் நிறுவப்பட்டிருக்கிறது. தொல்தமிழர்களுக்குக் கூட ஆஸ்திரேலியநிலம் குறித்த அறிதல் இருந்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. பிரபல நிலவியலாளரான சு.கி.ஜெயகரன் தமிழுக்கும் ஆஸ்திரேலிய பழங்குடி மொழிகளுக்கும் இடையேயான பொதுச்சொற்களைப்பற்றி எழுதியிருக்கிறார்.

1788ல் ஜனவரி 26 அன்று நியூ சவுத் வேல்ஸ் பகுதியில் இன்றைய சிட்னி அருகே பிரிட்டிஷார் அவர்களின் முதல் காலனியை நிறுவினார்கள். இன்று இந்த தினம்தான் ஆஸ்திரேலியாவின் தேசியதினமாக கொண்டாடப்படுகிறது. 1829ல் இப்பகுதிகள் நேரடியாகவே பிரிட்டிஷ் அரசின் நிலப்பகுதியாக அறிவிக்கப்பட்டன. 1835ல் அதிகாரபூர்வமான ஆஸ்திரேலியா காலனி அரசு உருவாக்கப்பட்டது. ஆஸ்திரேலியாவில் குடியேறிய வெள்ளையர் அங்கே வாழ்ந்த மக்களின் அரசுகளுடன் அவ்வப்போது செய்துகொண்ட எல்லா ஒப்பந்தங்களும் ரத்து செய்யப்பட்டன. அந்த நிலம் முழுக்க பிரிட்டிஷ்

அரசிக்குச் சொந்தமானதாக அறிவிக்கப்பட்டது. அந்நிலத்துக்குரிய பழங்குடிகள் மீது அதிகாரபூர்வமான நிரந்தரப்போர் தொடங்கியது. அந்நாட்டில் பிரிட்டிஷ் அரசின் அனுமதி இல்லாமல் நுழைவது குற்றமாக அறிவிக்கப்பட்டது.

ஆஸ்திரேலியா ஒற்றைக் காலனி நாடாக இருக்கவில்லை. நியூசவுத்வேல்ஸில் இருந்து பல சிறு காலனி மாகாணங்கள் பிரிக்கப்பட்டு கிட்டத்தட்ட தனிநாடுகள்போலவே நிர்வாகம் செய்யப்பட்டன. மெல்பேர்ன் அமைந்திருக்கும் விக்டோரியா 1851ல்தான் அமைந்தது. இப்பகுதிகளில் நிலத்தை ஆக்ரமித்துக்கொண்ட வெள்ளையர்களுக்கு கூலிவேலைக்குக் கடுமையான பஞ்சம் நிலவியது. பழங்குடிகளை ‘பழக்கி’ வேலைக்கு வைத்துக்கொள்வது நடக்கவில்லை. சீனர்களுக்கு அவர்கள் அஞ்சினார்கள். ஆகவே பிரிட்டனில் இருந்து குற்றவாளிகளை நாடுகடத்தி ஆஸ்திரேலியாவுக்குக் கொண்டுவந்தார்கள். அவ்வாறாக ஆஸ்திரேலியா ஒரு குற்றவாளிகளின் நிலமாக உருமாற ஆரம்பித்தது. கிட்டத்தட்ட இதே காரியம் தென்னமெரிக்க நாடுகளில் ஸ்பெயின் பிரான்ஸ் போன்ற நாடுகளால் நிகழ்த்தப்பட்டது.

இந்தக் குற்றவாளிகளால் உருவாக்கப்பட்ட தேசம் ஆஸ்திரேலியா. அவர்கள் ஆஸ்திரேலியா நிலத்தை வேளாண் நிலமாகவும் மேய்ச்சல்நிலமாகவும் மாற்றினார்கள். அந்நாட்டின் ஆதிகுடிமக்களை கொன்றே ஒழித்தார்கள். மூன்றுவகையில் இனச்சுத்திகரிப்பு நிகழ்ந்தது. ஒன்று, நேரடியான போர். 1788 முதல் 1930 வரை இந்தப்போர் தொடர்ந்து நடந்தது. இனப்படுகொலை என்ற சொல்லுக்குச் சரியான உதாரணம் அதுதான். ஓர் ஆஸ்திரேலிய பழங்குடியினரை கண்டதுமே சுடுவதற்கு பல மாகாணங்களில் அனுமதி இருந்திருக்கிறது. கிட்டத்தட்ட அரைலட்சம்பேர் கொன்றொழிக்கப்பட்டிருக்கலாம் என்கிறார்கள். இரண்டு, கடுமையான செயற்கைப் பஞ்சங்கள். விளைநிலங்களில் இருந்தும் நீராதாரங்களில் இருந்தும் துரத்தப்பட்ட பழங்குடிகள் பெரும் பஞ்சங்களில் செத்தார்கள். மூன்று, நோய்கள். ஆஸ்திரேலியா தனித்தீவாக இருந்த நிலமாகையால் அங்குள்ள மக்களுக்கு பல நோய்களுக்கு எதிர்ப்புசக்தியே இருக்கவில்லை. வெள்ளையர் கொண்டுவந்த நோய்கள் அவர்களை கூட்டம் கூட்டமாகக் கொன்றொழித்தன. பலசமயம் நோய்கள் திட்டமிட்டுப் பரப்பப்பட்டன.

நான்காவது ஒருவகை இன ஒழிப்பும் நடந்தது. ஏராளமான பழங்குடியினர் சிறைபிடிக்கப்பட்டு பாதிரிமார்களின் கண்காணிப்பில் கிறித்தவ மதத்துக்கு மாற்றப்பட்டு ‘சீர்திருத்த’த்துக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அவர்கள் கூட்டம் கூட்டமாக இடப்பெயர்வுக்கு ஆளாக்கப்பட்டு மடிந்தார்கள். அவர்களின் குழந்தைகள் வலுக்கட்டாயமாக பறிக்கப்பட்டு கண்காணா முகாம்களுக்கு அனுப்பப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு ‘மாற்றியமைக்கப்பட்டார்கள்’. அவர்களை இன்று திருடப்பட்ட தலைமுறை என்கிறார்கள். சமீபத்தில் வெளியான ஆஸ்திரேலிய திரைப்படமான ‘ராபிட் புரூ.ஃப் .ஃபென்ஸ்’ (முயல்வேலி) அவ்வாறு முகாம்களில் அடைக்கப்பட்ட இரு பெண்குழந்தைகள் தப்பித்து தங்கள் பெற்றோரைத்தேடி ஆயிரத்தி ஐநூறு கிலோமீட்டர் தனியாக பாலைவனத்தில் பயணம்செய்வதை காட்டுகிறது. ‘ராபிட்—ப்ரூ.ஃப் .ஃபென்ஸ்’ டோரிஸ் பில்கிங்டன் கரிமாரா என்னும் ஆஸ்திரேலிய பழங்குடியின எழுத்தாளரால் எழுதப்பட்ட நாவலை ஒட்டி எடுக்கப்பட்ட படம் இது. இது அவரது முத்தொடர் நாவலில் இரண்டாவது. இது அவரது சொந்த அன்னையின் கதை.

1855ல் நியூசவுத் வேல்ஸ் மாகாணத்தில் முறையான அரசாங்கம் அமைந்தது. விக்டோரியா, டாஸ்மேனியா, தென் ஆஸ்திரேலியா, குயீன்ஸ்லாந்து, மேற்குஆஸ்திரேலியா போன்ற மாகாணங்களில் பின்னர் அரச அமைப்புகள் உருவாயின. ஆஸ்திரேலிய மாகாணங்கள் தனித்தனியாக நேரடியான பிரிட்டிஷ் அரசாட்சியில் இருந்து விடுதலைபெற்றன. பேச்சுவார்த்தைகள் ஒப்பந்தங்கள் மூலம் மெல்லமெல்ல அவை பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் டொமினிகன் அந்தஸ்துபெற்ற ஒரே நாடாக இணைந்தன. ஆஸ்திரேலியா கூட்டமைப்பின் தலைநகரமாக சிட்னி முதலில் இருந்தது. மெல்பேர்ன் 1901 முதல் 1927 வரை கூட்டமைப்பின் தலைநகரமாக இருந்தது. பின்னர் கான்பரா ஆஸ்திரேலிய கூட்டரசின் தலைநகரமாக அங்கீகாரம் பெற்றது.

பல்லாயிரம் வருடங்களாக ங்குன்னவால் மக்கள் கான்பரா பகுதியை தங்கள் பொதுவான கூடுமிடமாக வைத்திருந்திருக்கிறார்கள். 1824ல்தான் இங்கே வெள்ளையர் வந்து குடியேறினார்கள். ஜோஷிவா மூர் என்பவர் அருகே உள்ள பிளாக் மௌண்டேன் என்னும் இடத்தில் நிலம் வாங்கி ஒரு மேய்ச்சல் மந்தையை ஆரம்பித்தார். அந்த மந்தையைச் சுற்றி ஒரு ஊர் மெல்ல

உருவாகிவந்தது. 1901ல் ஆஸ்திரேலிய மாகாணங்கள் ஒன்றுகூடி ஒரு கூட்டமைப்பாக ஆனது முதலே ஒரு தலைநகரத்தை உருவாக்குவதற்கான முயற்சிகள் ஆரம்பித்தன. சிட்னியும் மெல்பேர்னும் அந்த தலைநகர் பதவிக்காகப் போட்டியிட்டன. அவை இரு பகைமாகாணங்களின் தலைநகர்கள். 1908ல் கான்பராவை தலைநகரமாக ஆக்கலாமென்ற எண்ணம் எழுந்தது. பழங்குடிகளின் சந்திப்பிடமாக இது இருந்தமையால் கூடுமிடம் என்னும் பொருளில் கான்பரா என்னும் பெயர் சூட்டப்பட்டது. இந்த நகரம் சிட்னிக்கும் மெல்பேர்னுக்கும் நடுவே இருப்பது முக்கியமான வசதியாக அமைந்தது.

நகர வடிவமைப்புக்காக ஒரு சர்வதேசப்போட்டி அறிவிக்கப்பட்டது. அமெரிக்க நகரசிற்பி வால்ட்ர் பர்லி கிரிஃபின் அதில் வென்றார். 1927ல் கான்பரா தலைநகரமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் மெல்லமெல்லத்தான் கான்பரா முழுமையான நகரமாக உருவாகியது. 1957ல் அப்போதிருந்த அரசு நகரத்தை முழுமையாக உருவாக்குவதற்கான முயற்சிகளை முடுக்கி விட்டது. பெரும் செலவில் நாணய அச்சகம், தேசிய நூலகம், வனப்பூங்கா போன்றவை உருவாக்கப்பட்டன. நகரின் தாழ்வான பகுதியில் ஒரு ஏரி கற்பனைசெய்யப்பட்டு பாலங்களும் விளிம்புகளும் கட்டப்பட்டபின் அந்த ஏரியில் தண்ணீர் நிறைக்கப்பட்டது. கான்பரா வணிகமோ தொழிலோ உள்ள ஒரு நகரமல்ல. அது முழுக்கமுழுக்க தலைநகர நிர்வாகத்தைச் சார்ந்த அலுவல்களுக்கான நகரம்.

சாலைவழியாகச் சென்றுகொண்டிருந்தபோது அந்நகரம் நான் பார்த்தவற்றிலேயே மனதுக்குப் பிடித்த நகரமாக இருப்பதை உணர்ந்தேன். அதற்கு முக்கியமான காரணம் அதன் ‘கைக்கடக்கமான’ தன்மைதான். சிறிய கட்டடங்கள். ஏராளமான புல்வெளிகள் நடுவே அவை பணிவுடன் நின்றன. பெரிய சாலைகளில் மேப்பிள்கள் காலை ஒளியில் குலுங்க அவசரமில்லாத கார்கள் பளபளத்து நகர்ந்தன. அவசரமில்லாத பெண்கள் புன்னகையுடன் கைகாட்டி சாலையைக் கடந்தார்கள். ஓர் இளம்பெண் அந்நேரத்தில் டிராக் சூட்டுடன் சாலையைக் கடப்பதற்காக காத்து நின்றாள். வட்டமான முகம் கொண்ட சீனப்பெண்கள் நீலச்சீருடை அணிந்து சிரித்துப்பேசியபடி சென்றார்கள். சாலையோரக் கட்டடம் ஒன்றைக் காட்டி இதுதான் பணம் அச்சிடும் இடம் என்றார் ரகுபதி. எனக்கு இருபது வருடங்களுக்கு முன்னர்

நான் பார்த்த சண்டிகர் ஓரளவுக்கு கான்பராவுடன் ஒப்பிடத்தக்க நகரம் என்ற எண்ணம் ஏற்பட்டது. அப்போது அது சீரான புதிய நகரமாக இருந்தது. ஆனால் இப்போது கண்டபடி கட்டி கட்டடக்குவியலாக, வாகனக்குப்பைக்கிடங்காக ஆக்கியிருப்பார்கள். இந்திய நகரங்கள் மக்கள்தொகைப்பெருக்கத்தால் திணறிக்கொண்டிருக்கின்றன.

முதலில் போர்நினைவிடத்தைப் பார்க்கச்சென்றோம். ஆஸ்திரேலியா ஒரு பிரிட்டிஷ் காலனிநாடாக இரு உலகப்போர்களிலும் பங்கெடுத்துக்கொள்ளும்படி செய்யப்பட்டிருக்கிறது. அப்போர்களில் பல்லாயிரம் ஆஸ்திரேலிய வீரர்கள் உயிர்துறந்திருக்கிறார்கள். அவர்களின் நினைவுக்காக உருவாக்கப்பட்ட நினைவிடம் இது. ப வடிவிலான ஆங்கிலோ சாக்ஸன் பாணி கற்கட்டடம். அந்தக்காலையில் சில்லென்று குளிர்ந்து ஓங்கி நின்றது. அங்கே வருகை தந்தவர்கள்கூட ஆழமானதோர் மௌனத்துடன் வந்தது போல் இருந்தது. உள்ளே சென்றோம். என் பதின்வயதுகளில் நான் பள்ளியில் உலகப்போர் குறித்த ஒரு பெரிய நூலை வாசித்தேன். ஏராளமான புகைப்படங்கள் கொண்ட அந்த நூல்தான் எனக்கு உலகப்போர்களின் புனைவுலகுக்குள் செல்வதற்கான பெரிய வாசலாக இருந்தது. அதன் பின் நெடுநாட்கள் போர்நாவல்களாக வாசித்துத் தள்ளிக்கொண்டிருந்தேன். லென் டைட்டனின் ஒரு சிறு நாவல்தான் நான் அவ்வகையில் வாசித்த முதல் படைப்பு. ‘ஆர்டர் ஆஃப் வார்’ என்று எண்ணுகிறேன். நான் வாசித்த நாவலாசிரியர்களில் (பிரிகேடியர்) கார்னீலியஸ் ரயன்தான் மிகச்சிறந்த போர்நாவலாசிரியர். அவரது ‘த பிரிட்ஜ் டூ ஃபார்’ என்ற நாவலை வாசித்து நானே ஒரு போர் நிபுணன் ஆனதுபோல கற்பனையில் திளைத்திருக்கிறேன். அந்த அளவுக்கு மிக விரிவான தகவல்களால் ஆன நாவல் அது. பாரச்சூட் வழியாக ஒரு ராணுவத்தைக் கொண்டு சென்று கொட்டி ஒரு பாலத்தை கைப்பற்றுவதைப்பற்றிய நாவல். உண்மைச்சம்பவத்தை ஒட்டியது என்று எண்ணுகிறேன்.

அந்தப் பெரிய கூடத்தில் நடக்கும்போது வாசித்த போர்நாவல்கள் எல்லாம் நினைவில் முட்டி மோதின. பலவகையான துப்பாக்கிகள். உபஇயந்திரத்துப்பாக்கிகள். தோள்பீரங்கிகள். மென் இயந்திரத்துப்பாக்கிகள். அவை ஒரு காலத்தில் நெருப்பைக் கக்கி மனித உயிர்களை அழித்திருக்கும். அவற்றை இயக்கியவர்களும் செத்துப்போயிருக்கக் கூடும். அவை மட்டும்

அந்த மரண தினங்களின் நிரந்தர நினைவுகளாக கரிய உலோகப் பளபளப்புடன் கண்ணாடியறைக்குள் அமர்ந்திருந்தன. இந்தியர்களாகிய நாம் ஒரு போரை ஊகிக்கவே முடியாது. நாம் உண்மையில் வன்முறை என்றால் என்னவென்றே அறியாதவர்கள். சென்ற இரு நூற்றாண்டுகளை உலுக்கிய அழிவுகளில் நம்முடைய நேரடிப்பங்களிப்பு என ஏதுமில்லை. ஆகவே நாம் இன்னும் போர் குறித்தும் வீரம் குறித்தும் அபத்தமான மிகைக்கற்பனைகளை வளர்த்துக்கொண்டிருக்கிறோம். நம்முடைய அரைவேக்காட்டு அரசியல்வாதிகள் கட்டைமீசையுடன் மேடைகளில் ரத்த ஆறு ஓடும் என்றெல்லாம் பேசக்கேட்டு முட்டாள்தனமாக கைதட்டிக்கொண்டிருக்கிறோம். அந்தத் துப்பாக்கிகள் வழியாகச் சென்றபோது கூண்டுக்குள் புலியைப்பார்ப்பது போல என்று எண்ணிக்கொண்டேன். கூண்டுக்குள் நாம் பார்க்கும் புலி புலியே அல்ல என்று எப்போதாவது காட்டில் புலியைப் பார்த்தால்தான் உணர முடியும். காட்டுப்புலியின் நிமிர்வும் கம்பீரமும் நம் முதுகெலும்பில் அச்சத்தை செலுத்தும்போதே நம் மொத்தப்பிரக்ஞையையும் அதன் மீது நிறுத்தி வைத்திருக்கும். கூண்டுப்புலி கொஞ்சம் பெரிய பூனைதான். இந்தத் துப்பாக்கிகளும் கொஞ்சம் பெரிய பொம்மைகள்.

கலிபோலி போர் குறித்த ஒரு தனிப்பகுதியே அங்கே உருவாக்கப்பட்டிருந்தது. ஆஸ்திரேலிய வரலாற்றில் அழியா இடம்பெற்ற போர் அது. கலிபோலி என்பது துருக்கியில் உள்ள ஓர் ஊர். முதல் உலகப்போரில் 1915 ஏப்ரல் முதல் 1916 ஜனவரி வரை அங்கே பிரிட்டன் தலைமையிலான நேசநாட்டுப்படைகளுக்கும் துருக்கி தலைமை வகித்த அச்சுநாட்டுப் படைகளுக்கும் இடையே பெரும்போர் மூண்டது. அந்தப்போர் நேசநாட்டுப்படைகளுக்கு பெரிய அடியாக அமைந்தது. இஸ்தான்புல் என்றும் கான்ஸ்டாண்டிநோபில் என்றும் அழைக்கப்பட்ட துருக்கியின் தலைநகரத்தைக் கைப்பற்றினால் கடல் வழியாகக் கொண்டுவரப்படும் பெரும் ராணுவத்தை அதனூடாக ருஷ்யாவுக்குள் அனுப்பிவிடமுடியும் என்பது நேசநாடுகளின் திட்டமாக இருந்தது. அந்த முயற்சி தோல்வியடைந்தது மட்டுமல்ல பல்லாயிரக்கணக்கான நேசநாட்டுப்படையினர் மரணமடையவும் காரணமாக அமைந்தது. அதில் ஏராளமானவர்கள் ஆஸ்திரேலியர்கள்.

துருக்கியர்களால் இந்தப்போர் ஒரு தேசிய வெற்றியாகக் கொண்டாடப்படுகிறது. துருக்கி பின்னர் போரில் தோற்று அதன் பெருமையை இழந்தது என்றாலும்கூட அந்தவெற்றி அதன் தேசியபெருமிதத்தைக் காத்தது. அந்தப்போரில் ஒரு படைத்தலைவராக இருந்த முஸ்தபா கமால் பாஷா பெரும்புகழ்பெற்று பின்னர் துருக்கியின் சர்வாதிகாரியாகவும் நவீன துருக்கியை உருவாக்கிய சீர்திருத்தவாதியாகவும் ஆனார். ஆனால் ஆஸ்திரேலியாவைப்பொறுத்தவரை அது பேரிழப்பின் நாள். ஆஸ்திரேலிய—நியுசிலாந்து படைகள் இணைந்து உருவான அமைப்பான (ANZAC) மெல்லமெல்ல ஆஸ்திரேலிய தேசியக்கூட்டமைப்பு உருவாவதற்கான மனநிலையை உருவாக்கியது. ஏப்ரல் 25 ஆம்தேதி, ஏராளமான ஆஸ்திரேலியர்கள் கொல்லப்பட்ட நாள் இது, ஆன்சாக் நாள் என்று இன்றும் கொண்டாடப்படுகிறது. முன்னாள் போர்வீரர்கள் அந்த நாளில் கௌரவிக்கப்படுகிறார்கள்.

கலிபோலி போர்க்களக் காட்சிகளை மிக விரிவான தத்ரூபச்சிலைகளாக உருவாக்கி வைத்திருக்கிறார்கள். மேலே அகன்ற வானத்தையும் கீழே சேற்றுநிலத்தில் போராடும் வீரர்களையும் வானிலும் மண்ணிலும் வெடிக்கும் குண்டுகளையும் கண்ணாடிப்பேழைக்கு மிக அருகே நின்று பார்க்கும்போது அந்தக் களத்துக்குள் சென்றுவிட்ட உணர்வு உருவானது.

8. கலிபோலி

நா ன் கல்லூரியில் படிக்கும்போது மதுரை அருகே உள்ள ஒரு சிற்றூருக்குச் சென்றிருந்தேன். என்னுடன் படித்த நண்பன் ஒருவனின் தாத்தாவின் ஊர் அது. ஊரின் பெயரெல்லாம் நினைவில் இல்லை. அவனது தாத்தாவுக்கு அப்போது நூறு வயதாகிவிட்டிருந்தது. தாத்தா நன்றாகத்தான் இருந்தார். ஒருகாலத்தில் நல்ல உயரமும் பருமனுமாக ராட்சதன் போல அவர் இருந்திருக்கக்கூடும். மூப்பினால் குறுகி வளைந்து மெலிந்து மிகச்சிறிய உருவமாக இருந்தார். தொங்கிய மூக்குடன் அவர் குனிந்து அமர்ந்திருப்பது இறக்கைகள் உதிர்ந்த ஒரு வயோதிகக் கழுகு அமர்ந்திருப்பது போல் இருக்கும்.

தாத்தாவுக்குப் பற்கள் இல்லை. கண்கள் பழுத்து சருகு நிறம் கொண்டிருந்தன. குரலும் அதிகம் வெளியே வருவதில்லை. காது அனேகமாகக் கேட்காது. ஆனால் நடமாட்டம் நன்றாகவே இருந்தது. கோல் ஏதும் இல்லாமல் குனிந்து நடந்து தனியாக தோட்டத்துக் கிணற்றுக்குச் சென்று குளித்து வருவார். குலதெய்வம் கோயிலுக்குச் செல்வார். அந்த வயதில் அவருக்கு வாய்ருசிதான் உலகம் மீதான பற்றாக இருந்தது. குறிப்பாக ஆட்டுக்கறி. அவருக்காக கால்கிலோ இறைச்சி வாங்கி வேகவைத்து இரண்டுநாள் வைத்திருந்து கொடுப்பார்கள். வலுவான ஈறுகளால் மென்று மென்று மென்று தின்றுவிடுவார்.

அவரது நூறுவயதுக் கொண்டாட்டத்தை ஒட்டி அவர்களின் குலதெய்வம் அய்யனார் சாமிக்கு கடாவெட்டு ஏற்பாடாகியிருந்தது. அதற்காகவே நானும் சென்றிருந்தேன். ஒரு டெம்போ லாரியில் குடும்பமே ஏறி வெகுதூரம் வெற்றுப்பொட்டல் வழியாகச் சென்று ஒரு செம்மண் நிலத்தில் ஒரு கல்மண்டபம் போல விழுது பரப்பி நின்ற பெரிய ஆலமரத்தடியில் கையில்

அரிவாள் ஏந்தி உருட்டிவிழித்து அமர்ந்திருந்த பலவண்ண சிமிண்ட் அய்யனாரின் திறந்தவெளிக் கோயிலை அடைந்தோம். பெரிய குதிரைகள். ஏராளமான சூலாயுதங்கள். கையோடு கொண்டுசென்றிருந்த கடாவை அங்கேயே வெட்டி கட்டித்தொங்கப்போட்டு சட்டையைக் கழட்டி வெட்டி சோறுடன் சேர்த்து பொங்கி சாப்பிட்டோம். அந்த இடத்தில் வீசிய மண்வெந்த மணம் கொண்ட காற்றும் அந்த சோற்றின் வினோதமான ருசியும் அப்பெண்களின் கூந்தலின் எண்ணெய் வாசனையும் குழந்தைகளின் உற்சாகமும் ஆண்களின் சிவந்த கண்களும் சாராயவாசனையும் அவர்கள் அனைவரும் என்னிடம் காட்டிய பேரன்பும் இன்றும் என் நினைவில் நீடிக்கின்றன.

தாத்தாவுக்கு தன் பிறந்தநாள் பற்றிய பிரக்ஞையே இல்லை. கறியே குறியாக அவர் கடாவெட்டும் இடத்திலும் சமைக்கும் இடத்திலும் அமர்ந்திருந்தார். இரவில் பேசிக்கொண்டிருக்கும்போது நான் தாத்தாவுக்கு வயது நூறு ஆகிவிட்டது என்பதற்கான ஆதாரம் ஏதாவது இருக்கிறதா என்று கேட்டேன். என் நண்பனின் தாய்மாமா ஒரு புராதனமான சான்றிதழைக் காட்டினார். அதில் அவரது பெயரும் வயதும் இருந்தது. அதுதான் ஆதாரம். அந்த ஆவணம் தாத்தா பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர்ந்து இருபது வருடம் சேவையாற்றி, முதல் உலகப்போரில் கலந்துகொண்டு எகிப்திலும் துருக்கியிலும் போர்புரிந்து நாயக் ஆக பதவி உயர்வுபெற்று, ஓய்வுபெற்றதைக் குறிப்பிட்டது. அவருக்கு பென்ஷன் ஏதும் கிடைக்கவில்லை. ஆனால் தாத்தா அக்காலத்தில் பட்டாளத்துக்குப் போனதனால்தான் சில்லறைத்திருட்டையே நம்பி வாழ்ந்த அவரது பெரிய குடும்பம் வறுமையில் இருந்து மீண்டது. பிள்ளைகள் படித்து ஆசிரியர்களாகவும் காவல் அதிகாரிகளாகவும் மாறி நடுத்தர வர்க்க வாழ்க்கைக்கு வந்தார்கள்.

தாத்தாவிடம் நான் பலத்த குரலில் அவரது போர் அனுபவங்களைக் கேட்டேன். தாத்தாவால் எதையுமே நினைவுகூர முடியவில்லை. அவரை சிரமப்படுத்தும் தோறும் தலை பலமாக ஆட ஆரம்பித்தது. நான் அவரை விட்டு விலகியபோது தாத்தா மிகுந்த சிரமத்துடன் ‘கெய்ரோ’ என்று சொன்னார். முகம் மலர்ந்திருந்தது. என்னை அருகே வா என்று அழைத்து இன்னொரு சொல்லைச் சொன்னார். பலமுறை சொன்னார். எனக்கு எதுவுமே

புரியவில்லை. சில வருடங்கள் கழித்துத்தான் அது கலிபோலி என்று தெரிந்துகொண்டேன். தாத்தா அங்கே நடந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க கடுமையான போரிலும் கலந்துகொண்டிருந்திருக்கிறார்.

கலிபோலி போர் இன்றும் பல்வேறு காரணங்களுக்காக உலக அரங்கிலே பேசப்படுகிறது. உண்மையில் உலகவரலாற்றையே இன்னொரு திசை நோக்கிக் கொண்டுசென்றிருக்கும் வாய்ப்புள்ள ஒரு போர் அது. முதல் உலகப்போர் தொடங்கியபின்னர் நேசநாடுகளுக்குக் கிடைத்த மிகப்பெரிய தோல்வி அது. அவர்களின் படைபலத்தை அது குறைத்தது. ஊக்கத்தை அழித்தது. அதையெல்லாம் மீறி நேசநாடுகள் இறுதி வெற்றி பெற்றமைக்குக் காரணம் ஒன்றுதான், நேசநாடுகளின் படைகளை நடத்தியவர்களின் ஊக்கம்.

கலிபோலி போரின் கதையைப்பற்றிய பொதுவான சித்திரம் இது. ருஷ்யாவுக்கு ஐரோப்பிய முனைவழியாக போர்முனைக்குத்தேவையான தளவாடங்களைக் கொண்டுசெல்வதில் கடுமையான சிரமம் இருந்தது. ஐரோப்பாவிலிருந்து ருஷ்யாவுக்குள் நுழையும் வணிகச்சாலைகளை முழுக்க ஜெர்மனியின் ராணுவக்கூட்டமைப்பு முழுமையாகவே அடைத்துவிட்டிருந்தது. ஆகவே துருக்கியைத்தாக்கி அவ்வழியாக ருஷ்யாவுக்குள் நுழைந்தால் எளிதில் தளவாடங்களைக் கொண்டுசெல்லலாம் என நிபுணர்கள் எண்ணினார்கள். துருக்கி அச்சுநாடுகளின் முக்கியமான ஒரு கூட்டாளிநாடாக இருந்தது. அது ஒரு பேரரசு. ஆனால் நவீன காலகட்டத்துக்குள் அதன் ராணுவம் வரவில்லை. ஆகவே கடுமையான நவீன ஆயுதங்கள் கொண்ட படை எளிதில் துருக்கியை வென்றுவிட முடியும் என்று நேசநாடுகள் எண்ணின. இந்தத் திட்டத்தின் உருவாக்கத்தில் பிரிட்டனின் கடற்படைப்பொறுப்பில் இருந்த வின்ஸ்டன் சர்ச்சிலுக்கு முக்கியபங்கு இருந்தது.

1914 பிப்ரவரி 19ல் டார்டனெல்ஸ் என்னும் இடத்தில் பிரஞ்சுப்படைகளும் ஆங்கிலேயப்படைகளும் இணைந்து துருக்கியப்படைகளை தாக்கின. இதில் எச் எம் எஸ் குயீன் எலிசபெத் என்ற கப்பலும் பங்கெடுத்துக்கொண்டது. தாக்குதல் வெற்றிகரமாக நடந்தது. திட்டம் நிறைவேறிவிடும் என்ற எண்ணம் வலுவாக ஏற்பட்டது. அட்மிரல் கார்டன் லண்டனில் இருந்த சர்ச்சிலுக்கு பதினைந்து நாளில் துருக்கியத்தலைநகரமான கான்ஸ்டாண்டிநோபிளை

கைப்பற்றிவிடலாமென தகவல் அனுப்பினார். ஜெர்மனியர்களின் செய்தி ஒன்றை மறித்துக் கேட்ட ஒற்றர்கள் துருக்கியர்களுக்கு மிகக்குறைவான வெடிபொருட்களே இருப்பதாகச் சொன்னார்கள். ஆகவே மார்ச் 17 அன்று ஒரு பெருந்தாக்குதலுக்குத் திட்டமிடப்பட்டது. அட்மிரல் டெ ரோபோக் தலைமைப்பொறுப்புக்குக் கொண்டுவரப்பட்டார்.

மார்ச் பதினெட்டாம் தேதி முக்கியமான தாக்குதல் ஆரம்பித்தது. பதினெட்டு போர்க்கப்பல்கள் டார்டெனல்ஸ் துறைமுகத்தைத் தாக்கின. ஆனால் நினைத்தது போல போர் அமையவில்லை. பிரெஞ்சு கப்பல் ஒன்று அதிலிருந்த அனைத்து மாலுமிகளுடன் நீர்க்கண்ணிவெடியில் சிக்கி மூழ்கியது. பிரிட்டிஷ் கப்பல்கள் கடுமையான சேதத்துக்கு உள்ளாகின. கப்பல்கள் பெரும் சேதத்துடன் பின்வாங்க நேரிட்டது. துருக்கியர் நேசநாட்டுப் படைகளிடம் கிடைக்கச்செய்த அந்தச் செய்தி வேண்டுமென்றே திசை திருப்பும் நோக்கம் கொண்ட ஒன்றாக இருந்தது. அவர்கள் கடல்முழுக்க கண்ணி வெடிகளை வைத்திருந்தார்கள். ஆனால் போர் நடந்துகொண்டிருந்தபோது சேதங்களைப்பொருட்படுத்தாமல் கப்பல்கள் முன்னோக்கிச் செல்ல சர்ச்சில் ஆணையிட்டதாகச் சொல்லப்படுகிறது. அப்படிச் சென்றிருந்தால் வெற்றி கிடைத்திருக்கும், காரணம் துருக்கிய துறைமுகங்களில் போதிய படைகள் உண்மையில் இருக்கவில்லை.

இந்தத் தோல்விக்குப் பின்னர்தான் ஒரு மாபெரும் தரைப்படைத்தாக்குதல் திட்டமிடப்பட்டது. பிரிட்டனின் போர்த்துறைச் செயலர் கிட்செனர் பிரபு தலைமைத்தளபதி இயான் ஹாமில்டனை மத்தியதரைக்கடல்பகுதியின் அத்தாக்குதலுக்கு பொதுத்தலைவராக நியமனம் செய்தார். இந்தத்தாக்குதலுக்காக பிரிட்டிஷ் பேரரசின் எல்லா காலனி நாடுகளில் இருந்தும் படைகள் திரட்டப்பட்டன. ஆஸ்திரேலிய— நியூசிலாந்து படைகள் (ANZAC) ஏற்கனவே எகிப்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு அங்கே போரில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன. பிரிட்டிஷ் 29 ஆவது டிவிஷன் படையும் இதில் ஈடுபடுத்தப்பட்டது. பிரெஞ்சு ராணுவப்பிரிவும் இருந்தது. முன்னரே எகிப்தில் போரில் இறக்கப்பட்டிருந்த பிரிட்டிஷ் இந்தியப் படைகளும் இங்கே கொண்டுவரப்பட்டன. அதிகமும் சீக்கியர்களும் கூர்க்காக்களும் அடங்கிய அப்போரில் கொஞ்சம் தமிழர்களும் இருந்தார்கள். செனகலைச் சேர்ந்த

ஆப்ரிக்கர்களும் இருந்ததாகத் தெரிகிறது. மறுபக்கம் துருக்கியின் சக்திவாய்ந்த ராணுவத்தளபதியான முஸ்தபா கமால் பாஷா தலைமையிலான படைகள் கலிபோலி பகுதியைக் காத்து நின்றன.

தாக்குதல் ஏப்ரல் 25 அன்று ஆரம்பித்தது. பிரிட்டிஷ் படைகள் ஹெல்லெஸ் என்னும் இடத்தில் பாலைவனத்தில் இறங்கி கிலிட்பகிர் என்னுமிடத்தில் இருந்த கோட்டைகளை நோக்கிச் செல்ல ஆரம்பித்தன. ஆஸ்திரேலிய நியூசிலாந்து படைகள் காபா டேப் என்னும் இடத்தில் இறங்கி கிலிட்பகிரில் இருந்து பின்வாங்கும் துருக்கியப் படைகளை பின்பக்கம் மறித்துத் தாக்கும்படி அனுப்பப்பட்டார்கள். அவர்கள் இறங்கிய அந்தச் சிறிய குடா இன்று ஆன்சாக் குடா என்று அழைக்கப்படுகிறது.

ஆரம்பத்தில் பெரும்பாலும் கைவிடப்பட்டுக் கிடந்த நிலம் வழியாக ஓரளவு முன்னேறுவதற்கு நேசநாட்டுப் படைகளால் முடிந்தது. ஆனால் சீக்கிரமே நிலைமை மாறியது. மழை பெய்ய ஆரம்பித்தது. அப்பகுதியின் மண் கரிய சேறாக ஆகியது. கடற்கரைகளில் படகுகளில் வந்திறங்கி வழுக்கும் சேற்றில் தள்ளாடி நடந்த நேசநாட்டுப்படைகளை அருகே இருந்த குன்றின்மீது வசதியாக இயந்திரத்துப்பாக்கிகளை அமைத்துக்கொண்டு காத்திருந்த துருக்கியர்கள் சரமாரியாகச் சுட்டுத் தள்ளினார்கள். ஆரம்பத்தில் கரையிறங்கிய வீரர்களில் நூற்றுக்கு ஒருவர் கூட மிஞ்சவில்லை. பின்னர் கடுமையான பீரங்கித்தாக்குதல்களின் நிழலில் மேலும் தீவிரமாக துருப்புகளை இறக்கி துருக்கியரைப்பின்னுக்குத் தள்ளிவிட்டு அந்தக் குன்றுகளைக் கைப்பற்றும் கடும் முயற்சியில் ஈடுபட்டது நேசநாட்டுப்படை.

ஆன்சாக் படைப்பிரிவுகள் இந்தப்போரில் மிக மோசமான அழிவைச்சந்தித்தன. முஸ்தபா கமால் பாஷாவின் திறமையான போர் உத்திகள் ஆஸ்திரேலியப்படைகளை திறந்த வெளியில் அலைக்கழித்தன. ஆஸ்திரேலியப்படைகள் பதுங்கு குழிகளை அமைத்துக்கொண்டு தாக்குதலை எதிர்த்து நின்றாலும் கூட துருக்கியர்களின் தீவிரமான எதிர்ப்பை சமாளிக்க அவர்களால் முடியவில்லை. மேமாதம் இரண்டாம் தேதி ஆன்சாக் படைகளின் தலைமைத்தளபதியான ரல் காட்லே ஆன்சாக் படைகளை ரஸ்ஸல்ஸ் டாப் என்னும் குன்றைக் கைப்பற்றும்படி அனுப்பினார். ஆனால் ஆயிரம் பேரின்

உயிரிழப்புக்குக் காரணமான அந்தத் தாக்குதல் தோல்வியில் முடிந்தது. ஆன்சாக் படைகளின் முதல் பேரிழப்பு அது.

துருக்கியர் மேமாதம் 19 ஆம் தேதி மிகப்பெரிய தாக்குதலை ஆரம்பித்தார்கள். கிட்டத்தட்ட 42000 துருக்கிய சிப்பாய்கள் பதினேழாயிரம் பேர்கொண்ட ஆன்சாக் படைகளை சூழ்ந்து தாக்கினார்கள். ஆனால் அந்தப்போரில் துருக்கியர்களுக்கே இழப்பு ஏற்பட்டது. ஆன்சாக் படைகளின் வெடிபொருள் வல்லமை அதிகமாக இருந்தது. துருக்கியர் தரப்பில் பத்தாயிரம்பேர் காயமடைந்து மூவாயிரம் பேர் இறக்க நேரிட்டது. ஆன்சாக் தரப்பில் 400 பேருக்குக் காயமும் 130 பேரின் உயிரிழப்புமே ஏற்பட்டது. துருக்கியருக்கு இது பெரும் பின்னடைவாக இருந்தது. இறந்தவர்களை புதைக்கும்பொருட்டு ஒரு தற்காலிகப் போர்நிறுத்தம்கூட ஏற்பட்டது.

மேமாதம் கடலில் நின்ற பிரிட்டிஷ் கப்பல்களை துருக்கிய நீர்க்கண்ணிவெடிகளும் ஜெர்மனியின் நீர்மூழ்கிகளும் தாக்கி பல கப்பல்களைச் செயலிழக்கச் செய்தன. பல கப்பல்கள் மூழ்கின. ஆகவே கப்பல்படை மெல்ல பின்வாங்க நேர்ந்தது. ஆகவே கரையிறங்கிய படைகளுக்கு உணவும் தளவாடங்களும் தொடர்ச்சியாக கிடைக்காத நிலை ஏற்பட்டது. துருக்கியர் தரப்பிலும் ஆயுதப்பற்றாக்குறை கடுமையாக நிலவியது. ஆனாலும் துருக்கியர் நேசநாட்டு பதுங்குகுழிகளைத் தாக்கினார்கள். கடுமையான உயிர்ச்சேதம் ஏற்பட்டது. இருதரப்பிலும் கால்பங்கு வீரர்கள் இறந்தார்கள். துருக்கியர்கள் தொடர்ச்சியாக தாக்குதல்களை தொடுத்துக்கொண்டே இருந்தார்கள். மெல்லமெல்ல மேலே செல்வது சிரமம் என்னும் உணர்வை அடைந்து நேசநாட்டுப்படைகள் பின்வாங்கின. 1915 டிசம்பருக்குள் மொத்தப் படைகளும் கலிபோலியில் இருந்து வெளியேற்றப்பட்டன.

கலிபோலி போரில் கிட்டத்தட்ட மூன்று லட்சம் துருக்கியர் கொல்லப்பட்டிருக்கலாமென்று பிரிட்டிஷ் வரலாற்றாசிரியர்கள் சொல்கிறார்கள். துருக்கியர் கணக்கின்படி அது எண்பத்தாறாயிரம்தான். பிரிட்டிஷ் படைகளில் கிட்டத்தட்ட இரண்டரை லட்சம் பேர் இறந்தோ காணாமலாகியோ போயிருக்கிறார்கள். ஏறத்தாழ முப்பதாயிரம் ஆஸ்திரேலியர்கள்

இறந்திருக்கிறார்கள். ஆஸ்திரேலிய மக்கள்தொகைக்கு அது மிக அதிகமான எண்ணிக்கைதான்.

ஆஸ்திரேலியாவில் கலிபோலி போர் ஒரு தொன்ம வடிவத்தை அடைந்திருக்கிறது. கலிபோலி என்பது ஆஸ்திரேலியர்கள் அதிகமாக இறந்த ஒரு போர் என்ற எண்ணம் அங்கே இருக்கிறது. ஆனால் துருக்கியரும் பிரிட்டிஷ் படையினரும் பிரெஞ்சுப் படையினருமே அதிகமாக இறந்திருக்கிறார்கள். உண்மையில் பிரிட்டிஷ் படைகளில் அதிகமாக இறந்தது இந்தியர்கள்தான். பிரெஞ்சுப் படைகளில் அதிகமாக இறந்தது செனகல் போன்ற நாடுகளைச் சேர்ந்தவர்கள். அதாவது ஆஸ்திரேலியர்களை விட அதிகமான இந்தியர்கள் கலிபோலி போரில் இறந்தார்கள்.

ஸ்டார்டிவி அதிபரான ரூபர்ட் முர்டோக் 1981ல் எடுத்த கலிபோலி ஒரு செவ்வியல் போர்ப்படமாக கருதப்படுகிறது. பீட்டர் வெர் இயக்கிய அப்படத்தில் நடித்த மெல்கிப்ஸன் பெரும் புகழ்பெற்றார். அந்தப்படம் ஆஸ்திரேலியர்களின் வீரத்தையும் அந்த வீரம் எப்படி அரைகுறை ஞானமும் அகங்காரமும் கொண்ட பிரிட்டிஷ் ஜெனரல்களால் வீணடிக்கப்பட்டது என்பதையும் காட்டியது. அது பெரும் விவாதங்களை உருவாக்கியது. ஆனால் உண்மையில் இந்தக் கட்டுரைக்காக நான் இணையத்தில் வாசிக்க நேர்ந்த எல்லா கட்டுரைகளிலும் துருக்கியின் வெற்றியை குறைத்து மதிப்பிடும் முயற்சியே உள்ளது. துருக்கி மிகப்பழமையான ஆயுதங்களுடன் மிகக்குறைவான வெடிபொருட்களுடன் இருந்தது. அதையும் மீறி அது அடைந்த வெற்றி என்பது பாராட்டுக்குரிய ஒன்றுதான். ஆனால் அந்த அங்கீகாரத்தை ஒரு நூற்றாண்டு தாண்டியும்கூட மேலைநாட்டு ஊடகங்கள் துருக்கிக்கு அளிக்க தயாராக இல்லை.

கான்பரா போர் நினைவகத்தில் கலிபோலி போர்க்களக்காட்சிகளைக் காண்பது ஓர் அரிய அனுபவமாகவே இருந்தது. வழுக்கும் சேற்றில் செல்லும் ஆன்சாக் வீரர்கள். தரையில் பூபோல விரியும் குண்டுகள். வானில் வெடிக்கும் விமானங்கள். புகை எழுந்த வானம். எங்கும் சடலங்கள். கலிபோலியைச் சித்தரிக்கும் செவ்வியல்பாணி ஓவியங்களும் மனதுக்குள் பெரும் கனவை நிறைப்பனவாக இருந்தன. பதுங்கு குழிகளுக்குள் செறிந்திருக்கும் வீரர்களின் முகங்களில் உள்ள அச்சமும் கிளர்ச்சியும் உக்கிரமாக வரையப்பட்டிருந்தன.

போர் என்பது மனிதன் உள்ளூர விரும்பும் ஒரு விளையாட்டு. ஏனென்றால் அங்கே மனிதன் பண்பாடு தொடங்கிய காலம் முதல் அடக்கி அடக்கி வைத்திருந்த ஒரு விஷயம் அனுமதிக்கப்பட்டுவிட்டது. கொலை. மரணமுனையில் நிற்கும் மனிதன் அவனது மனித நிலையை இழந்து தூய விலங்குநிலையை அடைகிறான். வேட்டைமிருகமாக, வேட்டையாடப்படும் மிருகமாக ஆகிறான். மனிதனின் உலகியல் இன்பங்கள் எல்லாமே தூயமிருகநிலை சார்ந்தவை.

போர்நினைவிடத்தின் உள்ளே பெரிய கூடங்களில் அக்காலத்து போர் விமானங்களை நிறுத்தி வைத்திருக்கிறார்கள். மெல்லிய பளபளப்புடன் அரையிருளில் நின்றன அலுமினியப்பருந்துகள். ஆட்கள் சேர்ந்ததும் விளக்குகளை அணைத்துவிட்டு அவ்விமானங்கள் பறக்கும் கறுப்புவெள்ளை காட்சிகளை பெரிய திரையில் ஓடவிட்டுக் காட்டினார்கள். அதிரும் இயந்திரச் சத்தம். குண்டுகளின் வெடிப்பொலி. ஒரு முழு விமானச்சண்டையையே அரைவட்ட வடிவமாக நாலைந்து அகலத்திரைகளுக்குச் சமானமான அளவில் இருந்த திரையில் போட்டுக்காட்டினார்கள். தலைக்குமேல் ஒரு விமானச்சண்டையைப் பார்த்த அனுபவம் ஏற்பட்டது.

போர்நினைவகத்துக்கு வெளியே சுற்றுச்சுவர்களில் ஆன்சாக் போரில் இறந்தவர்களின் பெயர்கள் அனைத்துமே அகரவரிசைப்படி எழுதப்பட்டிருந்தன. சிலபெயர்களின் மீது சிறிய ரோஜாமலர்களை செல்லோடேப் வைத்து ஒட்டியிருந்தார்கள். அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம். இன்னமும் அவர்களின் மரணத்தில் துயரம் கொள்ளும் நெஞ்சங்கள் இருக்கலாம். போர் எந்த வளர்ச்சியையும் அளிப்பதில்லை. நாகரிகத்துக்கு எந்தப்பங்களிப்பையும் அளிப்பதில்லை. எந்தப்போரும். வெறும் துயர் நினைவுகளை மட்டுமே அது விட்டுச்செல்கிறது. அன்றைய கோபங்களுக்கும் பேராசைகளுக்கும் அதிகாரவெறிக்கும் இன்று என்ன மதிப்பு? இன்று ஆஸ்திரேலியாவின் குடிமகனாக ஆகி ராணுவத்திலும் இருக்கும் ஓர் துருக்கியனுக்கு ஆன்சாக் நினைவு என்ன பொருளை அளிக்கும்? வரலாறு தொடர்ந்து மனிதனுக்கு பாடம் கற்பிக்கிறது. கற்காதவர்களை நோக்கி ஏளனம் செய்கிறது. ஆனால் மனிதர்கள் எதையும் கற்பதில்லை.

ஆனால் போரின் மரணத்தில்கூட எத்தனை பெரிய வேறுபாடு. ஆன்சாக் படைகளில் இறந்த அனைவர் பெயரும் வரலாற்றில் இருக்கிறது. அவர்கள் கல்லில் பதிந்திருக்கிறார்கள். ஆனால் அந்தப்போரில் இறந்த பல்லாயிரம் இந்தியர்களின் பெயர்கள் எங்குமே இல்லை. அன்றைய பிரிட்டிஷ் ராணுவம் அதில் இறந்த பிரிட்டிஷ் அதிகாரிகளின் பெயர்களை மட்டுமே முறையாகப் பதிவுசெய்துள்ளது. மற்றவர்களின் பெயர்கள் அன்று வீசிய காற்றில்தான் பொறிக்கப்பட்டிருக்கும்.

கலிபோலி பகுதியில் ஆன்சாக் குடாவில் புதைக்கப்பட்ட ஆன்சாக் வீரர்களுக்காக அங்கே ஒரு நினைவகம் உள்ளது. அவர்களைத் தோற்கடித்த துருக்கியின் ஆட்டா துர்க் முஸ்தபா கமால் பாஷா அங்கே ஆற்றிய ஓர் உரையின் சிலவரிகள் அங்கே பொறிக்கப்பட்டிருக்கின்றன.

‘இந்த மண்ணில் தங்கள் ரத்தத்தைச் சிந்தி உயிர்துறந்த மாவீரர்களே நீங்கள் இன்று ஒரு நட்புநாட்டில் கிடக்கிறீர்கள். ஆகவே அமைதியாக உறங்குங்கள். நம்து நாட்டில் அருகருகே துயிலும் ஜானிகளுக்கும் மஹ்மூதுகளுக்கும் நடுவே எந்த பேதமும் இல்லை. தங்கள் மைந்தர்களை இந்த தொலைதூரத்து நாட்டில் போர்புரிய அனுப்பிய அன்னையரே, உங்கள் கண்ணீரைத் துடைத்துக் கொள்ளுங்கள். உங்கள் மைந்தர்கள் இப்போது பேரமைதியின் மார்பில் துயில்கொள்கிறார்கள். அவர்கள் எங்களுக்கும் மைந்தர்கள்தான்.’

9. கலைக்கூடம்

பா ர்வதிபுரத்தில் என் வீட்டில் இருந்து பாறையடி மலையடிவாரம் நோக்கிச் செல்லும் வழியில் கால்வாய் ஓரமாக ஒரு தர்ஹா உள்ளது. அங்கே நடந்த ஒரு போரில் தலைமையேற்று இறந்த ஒரு அரபு வீரரின் நினைவுக்காக உருவாக்கப்பட்ட தர்ஹா அது. அந்த தர்ஹாவுக்குச் செல்லும் வழியில் கால்வாய்க்கரையிலேயே இன்னொரு தர்ஹா உள்ளது. இதற்கு கூரையோ கட்டடமோ இல்லை. வெறும் ஒரு கல்லறை மட்டுமே. வருடத்தில் ஒருமுறை மட்டும் பட்டாணி முஸ்லீம்கள் வந்து அதன்மேல் பச்சைப்போர்வை விரித்து ஊதுபத்தி ஏற்றி வணங்குவார்கள். என் வீட்டருகே வசிக்கும் கேரள வரலாற்றாசிரியரான பேராசிரியர் திரிவிக்ரமன் தம்பி சொன்னார் அது போரில் இறந்துபோன ஒரு குதிரையின் கல்லறை என்று.

அது ஏனோ எனக்கு மிகவும் பிடித்திருந்தது. உலகில் போரில் கொன்ற உயிர்களில் மனிதர்களை விட்டால் அதிகமானது குதிரை உயிர்கள்தான். குதிரை பழக்கப்படுத்தப்பட்ட காலம் முதலே அது போருக்கான மிருகமாகத்தான் இருந்திருக்கிறது. எத்தனையோ படையெடுப்புகள். எத்தனையோ இடப்பெயர்வுகள். சாம்ராஜ்யங்கள் குதிரைகளால் உருவாகியிருக்கின்றன. அழிந்திருக்கின்றன. ஆனால் குதிரை எதையுமே அறியாது. அது அதிகாரத்தின் குறியீடு. இன்றும் பிரிட்டிஷ் ஆட்சியாளர் சிலைகள் குதிரைமேல்தான் ஆரோகணித்திருக்கின்றன. கால்தூக்கிய குதிரை போரில் இறந்த வீரனையும் கால்கள் ஊன்றி நிற்கும் குதிரை வாழும் வீரனையும் குறிக்கும். பல குதிரைகளின் வரலாறுகள் பதிவாகியிருக்கின்றன. ஆனாலும் மனிதர்கள் அந்த எளிய கம்பீரமான மிருகத்தை கொன்றுகுவித்தமைக்கு அது ஈடாகுமா?

யானைகள், காளைகள், கழுதைகள், நாய்கள் என போரில் கொல்லப்பட்ட மிருகங்கள் எத்தனையோ. பெரும் சாகசங்களைச் செய்த மிருகங்கள் உள்ளன. பெரும் தியாகங்களைச் செய்தவையும் உள்ளன. ஆனால் மிருகம் அந்த மானுட அலைகளுக்கு அப்பாற்பட்டதும்கூட. என் மகன் என் அப்பாவைப்போலவே மிருகங்கள் மேல் பெரும் பிரியம் கொண்டவன். திரைப்படங்களில் மனிதர்கள் சுட்டுத்தள்ளப்படும்போது சும்மா பார்த்திருப்பான். ஒரு குதிரை கொல்லப்படும் காட்சியைக் கண்டால் கண்கலங்கிவிடுவான். மிருகங்களின் முகங்களைப் பார்க்கும்போதெல்லாம் இனம்புரியாத ஓர் மனமலர்ச்சியை அடைபவன் நான்.

ஆகவே கான்பராவின் போர் நினைவகத்துக்கு வெளியே இருந்த ஒரு சிலை என்னை மிகவும் கவர்ந்தது. மான் வித் டாங்கி என்று அந்த சிலைக்குப் பெயர். முதல் உலகப்போரில் துருக்கியில் கலிபோலி பகுதியில் ஆன்சாக் படைகள் போர் புரிந்தபோது பல்லாயிரம் பேர் குண்டடிபட்டு வீழ்ந்த நாட்களில் அந்தக் கழுதையும் அதன் ஓட்டுநருமான ஜாக் சிம்ப்ஸனும் ஏராளமான பேரை காப்பாற்றியிருக்கிறார்கள். உண்மையில் போர்முனைகளுக்கு தண்ணீரும் உணவுப்பொருட்களும் கொண்டுசெல்வதுதான் அதன் அன்றாடச்செயல். ஆனால் போர் ஒரு கொலைவெறியாட்டமாக ஆனபோது காயம்பட்டவர்களைச் சுமந்து திரும்புதல் அதன் பணியாக ஆகியது.

ஜாக் சிம்ப்சன் இங்கிலாந்தில் வளர்ந்தவர். சிறு வயது முதலே அவருக்கு கழுதைகள் மீது பெரும் பிரியம் இருந்தது. அங்கே ஒரு பென்னி கூலிக்கு கழுதைகள் மேல் ஏறிச்செல்வது அவரது பொழுதுபோக்கு. 1915ல் கலிபோலி போர்முனைக்கு வந்தபோது அங்கே கிடைத்த கழுதை அவருடைய நண்பனும் போர்த்துணைவனுமாக ஆகியது. குண்டுமழைநடுவே ஜாக் கிட்டத்தட்ட 300 போர்வீரர்களை மரணத்தில் இருந்து காப்பாற்றினார். அந்தக்கழுதை இரண்டு போர்வீரர்களைச் சுமந்துகொண்டு கடுமையான போர்ச்சூழலில் வழுக்கும் நிலத்திலும் செங்குத்தான சரிவுகளிலும் நடந்து பணியாற்றியது. இந்தக்கதை பின்னர் ஒரு அழகிய நூலாக எழுதப்பட்டது. The Donkey of Gallipoli: A True Story of Courage in World War I என்ற அந்நூல் பிரபலமானது.

அந்தக்கழுதைக்கும் ஜாக் சிம்ப்ஸனுக்கும் கான்பரா போர் நினைவக வாசலில் அழகான சிலை ஒன்று வைக்கப்பட்டிருக்கிறது. மிக நேர்த்தியான தத்ரூபச்சிலை. போர்ச்சீருடை ஆயுதங்கள் தோல்பட்டைகள் செருப்புகள் போன்றவற்றின் சொரசொரப்பும் வழவழப்பும் துல்லியமாக வடிக்கப்பட்டிருந்தன. கழுதையின் உடலின் எல்லா அம்சங்களும் சிறப்பாக இருந்தன. கழுதையின் உடலில் அந்த எடையின் அழுத்தமும் அந்த நடையில் உள்ள சிரமமும் தெரிந்தது. உடலில் காயம்பட்டு கட்டுபோட்ட ஜாக் சிரமப்பட்டு மலையேறுகிறார். பலமுறை சுற்றி வந்து நான் ரசித்த சிற்பங்களில் அதுவும் ஒன்று. மகாராஷ்டிராவில் சிவாஜியின் கோட்டையான ராய்கரில் சிவாஜி சிலைக்கு முன்னால் சிவாஜியின் நாய்க்கு ஒரு சிலை உள்ளது. சரியான இந்திய நாய். அச்சிலையின் முகத்தில் உள்ள அதிதீவிரமான பிரியத்தை அப்போது நினைவுகூர்ந்தேன். நமக்கு வாழ்வளிக்கும் மிருகங்களுக்கு நாம் எவ்வகையிலாவது நன்றியுடன் இருக்கிறோமா என்ன?

போர் நினைவகத்தில் இருந்து கலைக்கூடத்துக்குச் சென்றோம். மெல்பேர்ன் கலைக்கூடம் என்பது புதிதாக உருவாக்கப்பட்ட ஒன்று. அவர்களுக்கு நெடுங்காலப்பண்பாடு இல்லை. ஆகவே அவர்கள் பெரும் பணம் கொடுத்து பிறநாட்டுக் கலைச்செல்வங்களை வாங்கி அங்கே சேமித்திருக்கிறார்கள். வாசலிலேயே புகழ்பெற்ற சிற்பி ரோடின் வடித்த நான்கு ஞானிகளின் பெரிய சிற்பம் இருந்தது. ரோடின் வடித்த மூன்று சிற்பங்கள் அங்கே இருந்தன. ரோடின் சிலைகளில் தசைநார்களும் உடைகளும் கொள்ளும் வளைவுகளில்தான் அவரது மாபெரும் கலைத்திறன் உள்ளது. உள்ளே விதவிதமான சிற்பங்கள் ஓவியங்கள். ஒரு கலைக்கூடத்தின் சிற்பங்களைப் பற்றிப் பேசுவதென்பது உண்மையில் அந்நாட்டின் பண்பாட்டைப்பற்றியே பேசுவதாகும். கான்பரா கலைக்கூடம் என்பது உலகக் கலைகளின் ஒரு துளி.

நுழைவாசலிலேயே குளோட் மோனே வரைந்த நீர்க்குவளை மலர்கள் (வாட்டர் லில்லீஸ்) ஓவியம் மாட்டப்பட்டிருந்தது. பித்தளைச் சட்டமிட்ட மிகப்பெரிய ஓவியம். வில்லியம் எம்ஸன் என்னும் இலக்கிய விமரிசகர் இலக்கியத்தில் குறிப்பாக கவிதையில் பொருள்மயக்கம் (Ambiguity) என்பது எப்படி சிறப்பான கலையனுபவத்தை அளிப்பதாக ஆகிறது என்று விளக்கியவர். அதேபோல கண்மயக்கம் எப்படி பெரும் கலையாக ஆகிறது என்பதை விளக்குபவை

மனப்பதிவிய (Impressionism) ஓவியங்கள். அருகே செல்லும்தோறும் வெறும் வண்ணத்தீற்றல்களாக இருப்பவை விலக விலக செவ்வியல் ஓவியங்களின் துல்லியம் கொள்ளும் அற்புதம்.

பாப்லோ பிக்காஸோவின் பத்து அசல் ஓவியங்கள் இங்கே உள்ளன. பலவகையான நவீன ஓவியங்கள் வழியாக கலையனுபவத்தின் பலதளங்களில் சென்று மீண்டு கடந்துசெல்வது ஓர் அபாரமான அனுபவம். சென்றமுறை இந்தியப்பயணம் செய்யும்போது நான் நண்பர்களிடம் சொன்னேன், இந்தியாவின் ஒவ்வொரு வரலாற்றுத்தலத்திலும் குறைந்தது ஒருவாரம் தங்கினால்தான் அதை காணமுடியும். ஆனால் ஒரேவாரத்தில் இந்தியாவழியாகச் செல்பவன் இந்தியா என்னும் அனுபவத்தை அடையமுடியும் என, இந்த ஒவ்வொரு ஓவியத்தையும் தனித்தனியாக பலமணிநேரம் செலவழித்துத்தான் பார்க்கவேண்டும். ஆனால் ஒட்டுமொத்தமாக அத்தனை ஓவியங்களையும் பார்த்துக்கொண்டே கடந்துசெல்வது ஒரு கனவுநிகர்த்த அனுபவம்.

பல்வேறு கோணங்களில் கலைமனங்கள் ஓவியங்களுக்கும் சிற்பங்களுக்கும் முயன்றிருக்கின்றன. பல நவீன முயற்சிகளை ஒரே சொல்லில் கேனத்தனமானவை என்று சொல்லிவிடலாம். விபரீதமான காட்சி இணைப்புகள். சம்பந்தமில்லா பொருட்களை இணைத்து உருவாக்கிய அதிர்ச்சிதரும் பொருட்கள். ஆனால் கலை என்பது மனிதமனம் என்னும் அருவமான ஒன்றுக்கும் வெளியே பரந்து கிடக்கும் பருப்பொருள் என்ற உருவ வெளிக்கும் இடையேயான ஓர் ஊடாட்டம் என்பதை நாம் புரிந்துகொள்ளவேண்டும். நாம் மனம் என உணர்வது வெளியே உள்ள பருப்பொருட்கள் நம் அகமாக ஆகியிருப்பதைத்தான். நம் மனம் என்பது பருப்பொருட்களின் பிம்பங்கள் பலவகைகளில் முயங்கி உருவான ஒரு ஆழத்து வெளி. ஆகவே வெளியே உள்ள பருப்பொருட்களை விதவிதமாக உருமாற்றுவதன்மூலம் ஒருவன் செய்வது தன் அகத்தை உருமாற்றுவதைத்தான். அகத்தை அறிவதற்கான முயற்சியிலேயே புறத்தே உள்ள பொருட்களை அறிய மனிதன் முயல்கிறான் — அதுவே கலை.

பிக்காஸோ காலியான வண்ணப்பெட்டி, தாள், பழைய குப்பைப்பொருட்கள் போன்றவற்றை இணைத்து விசித்திரமான கலைப்பொருட்களை

உருவாக்கியிருந்தார். அதேபோல பிறரும் பல சிற்பங்களைச் செய்திருந்தார்கள். உலோகங்களில் செய்யப்பட்ட விதவிதமான கலைப்பொருட்கள். பழைய முயல்வேலியின் முட்கம்பிகளைச் சுருட்டிச் செய்யப்பட்ட சிற்பம். ஆணிகள், ஸ்குரூக்களால் ஆன சிற்பம். பளபளக்கும் கண்ணாடியில் சொரசொரக்கும் கல்லில் மரத்தின் இயல்பான முடிச்சில் உருவாக்கப்பட்ட சிற்பங்கள். மனித மனத்தின் விசித்திரக் கனவுகள் பொருட்கள் வழியாக ஓடிச்சென்றதன் தடையங்கள் அவை.

ஆஸ்திரேலிய ஓவியர்கள் வரைந்த ஓவியப்பகுதியில் நெடுநேரம் செலவிட்டேன். அவர்களில் அதிகமானபேரும் மனப்பதிவிய பாணியில் நிலக்காட்சிகளைத்தான் வரைந்திருக்கிறார்கள். ஆஸ்திரேலியாவின் விரிந்த புல்வெளிகள், தூரத்தில் தொலைந்துபோய் கிடக்கும் வீடுகள், காலியான தெருக்கள், எரிந்து அணையும் அந்தி என ஒருவகை 'ஆளில்லா நில'த்தின் எழில். நவீன ஆஸ்திரேலிய ஓவியர்களில் ஒருசாரார் அதிர்ச்சியளிக்கும் பின் நவீனத்துவ பாணி ஓவியங்களை அதிகமும் வரைந்திருப்பதாகத் தெரிகிறது.

கீழைநாட்டுக் கலைச்செல்வங்கள் இருக்கும் பகுதியில் இன்னும் நெருக்கமாக உணர்ந்தேன். ஆனால் விசித்திரமான ஒரு மனக்குழப்பம். இனிய மனக்குழப்பம் என்றும் சொல்ல வேண்டும். அதாவது சிலைகள் பெரும்பாலும் தெரிந்தவை, அவற்றின் முகபாவனைகளும் கைமுத்திரைகளும் மிக மிக அன்னியமானவை. தெரிந்த ஒருவர் தெரியாத மொழியில் பேசுவது போல ஒரு நிலை என அதைச் சொல்லலாம். பெரும்பாலான புத்தர் சிலைகள் பர்மா தாய்லாந்து போன்ற நாடுகளைச் சேர்ந்தவை. சீன முகம். அத்துடன் கைமுத்திரைகளில் பல விசித்திரமாக இருந்தன. இருகைகளையும் அருள்புரியும் விதத்தில் விரித்த புத்தரை நான் பார்த்ததே இல்லை. ஆங்கோர்வாட், பாலி பகுதிகளைச் சேர்ந்த விஷ்ணு, அனுமார் சிலைகளின் முகங்களும் சரி நகைகளும் சரி மிக வித்தியாசமானவை. பல சிலைகளில் இருக்கும் சங்கு சக்கரத்தை வைத்துத்தான் அவற்றை விஷ்ணு என்று சொல்ல முடிந்தது.

அங்கே கண்ட ஒரு சிலை என்னை அதிரச்செய்தது. சிங்கமுகம் கொண்ட தேவி. ஆம், பிரத்யங்காரா தேவிதான். சசிகலாவும் கனிமொழியும் தேர்தல் வெற்றிக்காக 'சத்ரு சம்ஹார பூஜை' செய்யும் தெய்வம். முதலாம்

அதிராஜேந்திரன் இந்த தெய்வத்தை வடநாட்டில் இருந்து கொண்டுவந்ததாக ஐதீகம். தமிழ்நாட்டிலேயே பிரத்யங்காரா தேவி மிகக் குறைவாகவே காணக்கிடைக்கிறது. அனேகமாக கோயில் சுவர்களில் புடைப்புச் சிற்பமாக. ஏனென்றால் இந்த தெய்வம் ஒரு நன்மையளிக்கும் மூர்த்தி அல்ல. போர் வெற்றி மற்றும் பில்லிசூனியங்களுக்கான தெய்வம். சிலையின் கீழ் எழுதியிருந்ததைப் பார்த்தேன். ‘ பிரத்யங்காரா தேவி. இது இந்துக்களின் ஒரு சிறு தெய்வம். லௌகீக வெற்றிக்காக மட்டுமே வணங்கப்பட்டு வருவது. போர் தெய்வமும் கூட’ சரியாகத்தான் சொல்லியிருந்தார்கள். பன்னிரண்டாம் நூற்றாண்டு தென்னிந்தியா, சோழர்காலம் என்ற குறிப்பும் இருந்தது.

அந்த அரங்கின் எல்லையில் கிட்டத்தட்ட நடுநாயகமாக ஐந்தடி உயரமான ஐம்பொன் நடராஜர் சிலை இருந்தது. அற்புதமான ஒளியமைப்பு. தகதகவென செம்பொன்மேனி. எடுத்த பொற்பாதத்தின் நிழல் எதிர்ச்சுவரில் விழுந்திருந்தது. அங்கிருந்த எல்லா தெய்வங்களையும் ஆட்டுவிக்கும் இசையின் மூர்த்தி போல. அதன் கீழே என்ன எழுதியிருக்கிறது என்று பார்த்தேன். பொதுவாக வெளிநாட்டு கலைக்கூடங்களில் இந்து தெய்வங்களைச் சிறுமைப்படுத்தி எழுதப்பட்டிருப்பதை பார்த்திருக்கிறேன். இந்து தெய்வச்சிலைகளில் உள்ள தத்துவசாரம் அவர்களை தொல்லைப்படுத்துகிறது. இந்துக்கள் கல்லையும் மண்ணையும் வணங்கும் காட்டுமிராண்டிகள் என்ற அவர்களின் கோட்பாடும் நம்பிக்கையும் அச்சிலைகளால் அசைக்கப்படுகின்றன.

ஆகவே பொதுவாக சிலைகளை அவர்கள் ‘பொருள் வழிபாடு’ (Fetish) என்னும் எளிமையான வகைப்பாட்டுக்குள் நிறுத்திக்கொள்ளவே முயல்வார்கள். பொருள்வழிபாட்டுக்காகச் செய்யப்பட்ட ஒரு நுண்மையான பொருள் என்பதே அவர்களின் புரிதலாக இருக்கும். அதை கலை என்றோ ஞானம் என்றோ ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதன் பிரபஞ்சவியல் அர்த்தத்தை பொருட்படுத்தவே மாட்டார்கள். சமீபகாலமாக சில அற்பர்கள் சமூகவியல், மானுடவியல் என்னும் பெயர்களில் கீழை தெய்வங்களை சிறுமைசெய்வதை ஆராய்ச்சி என்னும் பேரில் செய்து வருகிறார்கள். லண்டன் கலைக்கூடத்தில் பிள்ளையாரை வைத்து அதன் கீழே அது ஒரு காமம்சார்ந்த சிற்பம் என்றும் அவரது துதிக்கை ஆண்குறியின் வடிவம் என்றும் அது மோதகத்தை நாடுவது

பெண்குறியை தேடுவதைக் காட்டுகிறது என்றும் எழுதப்பட்டிருந்ததாக அறிந்தேன்.

கான்பரா நடராஜர் சிலையின் கீழே எழுதப்பட்டிருந்த வரிகள் என்னைக் கவர்ந்தன. ‘பிரபஞ்சத்தை ஒரு நடனமாகவே இந்துக்களில் ஒரு பிரிவினரான சைவர்கள் நினைக்கிறார்கள். அந்த நடனத்தையே இந்த இறைவடிவமாக செதுக்கியிருக்கிறார்கள். பிரபஞ்சத்தை ஆக்கி காத்து அழிக்கும் கடவுளாகிய சிவபெருமானின் நடனம் இது. இந்தச்சிலையைச் சுற்றியிருக்கும் தழல்வடிவம் பிரபஞ்சத்தின் ஒளிவடிவத்தைச் சுட்டுகிறது. கையில் உள்ள உடுக்கு பிரபஞ்ச சுழற்சியின் தாளத்தையும் இன்னொரு கையில் உள்ள தழல் ஆற்றல். அவர் மிதித்து நிற்கும் முயலகன் இருளின் குறியீடு...,’ என கச்சிதமான சொற்களில் அழகிய குறிப்பு. ஆச்சரியமாக இருந்தது. தென்னிந்தியா, பத்தாம் நூற்றாண்டு என்ற காலக்குறிப்பும் சோழர்காலத்தையது என்ற விவரிப்பும் இருந்தது.

அந்தக் கலைக்கூடத்தில் வெளியேறும் வழியில் தியானத்தில் அமர்ந்த புத்தரின் சிலையை கண்டேன். பெரிய சிலை. தாய்லாந்தைச் சேர்ந்தது.சற்றே சேதமடைந்திருந்தது. நடராஜர் சிலைக்கு இன்னொரு பக்கம். அது நடனம், இது தியானம்.

வெளியே வந்தோம். குளிர் ஆரம்பித்திருந்தது. அங்கே வானத்தில் ஒரு கோளம் நிற்பது போல ஒரு சிற்பம் இருந்தது. அது ஒரு வெறும் வேடிக்கை என்றுதான் எனக்குப் பட்டது. அந்தக் கலைக்கூடத்தின் வடிவமைப்பை ஏதோ ஒரு பின் நவீனத்துவச் சிற்பி செய்திருந்தார். அபத்தமான ஒரு பெரிய நீட்சி. அலுமினியத்தில் செய்யப்பட்ட ஒரு கூரை நீண்டு வளைந்து முன்னால் வந்து நின்றது. கவனத்தைக் கவரவேண்டும் என்பதல்லாமல் வேறு நோக்கமே இல்லாத மடத்தனமான அமைப்பு.

மழை சற்றே தூற ஆரம்பித்திருந்தது. அந்தக் கட்டடத்தின் முன்னால் பலவகையான வேடிக்கையான கலைப்பொருட்கள் இருந்தன. நம்மை உருளையாகவும் கூர்மையாகவும் பிரதிபலிக்கும் எவர்சில்வர் பொருட்கள். அவற்றின் அருகே நின்று புகைப்படம் எடுத்துக்கொண்டார்கள் பயணிகள். தரையில் செய்யப்பட்ட ஒரு அலங்கார வளைப்பில் ஆஸ்திரேலியாவில் உள்ள எல்லா மொழிகளிலும் வீடு என எழுதியிருந்தது, தமிழிலும். வெளியே வரும்

வழியில் ஓர் அலங்காரக்குளத்தில் ஏராளமான தலைகள் மிதப்பது போன்ற ஒரு சிற்பம் இருந்தது. விசித்திரமான மனக்கலைவை உருவாக்கியது அந்தச் சிற்பம்.

செவ்வியல்கலை நம் மனதைக் குவியச்செய்கிறது. நவீனக்கலை மனதைக் கலைக்கிறது. நம்மை சிதைத்து விடுகிறது. அதற்கான காரணங்கள் பல இருக்கலாம். அதன் மூலம் அடையும் பண்பாட்டு நகர்வு முக்கியமானதென்றே நான் எண்ணுகிறேன். ஆனால் நான் செவ்வியல் கலைகளிலேயே என்னை வெல்லும் மேன்மையைக் கண்டடைகிறேன். எல்லா நவீனக்கலைஞர்களையும் நான் என்னைவிட சாதாரணமானவர்களாக, நான் குனிந்து பார்க்கவேண்டியவர்களாகவே காண்கிறேன். ஏனென்றால் ஒரு மாபெரும் செவ்வியல்நிலத்தில் முளைத்தவன் நான்.

10. கங்காரு

ஊட்டியில் ஒருமுறை நான் தனியாக காலைநடைசென்றுகொண்டிருந்தேன். நீலகிரி மலையணிலுக்காக அண்ணாந்து பார்த்துக்கொண்டே செல்வது என் வழக்கம். மிக அழகான பிராணி அது. பூனை அளவுக்கு பெரியது. மாந்தளிரின் நிறம். அதன் சிறப்பே அதன் வால்தான். யானைப்புல்லின் கதிர் போல செந்தவிட்டு நிறத்தில் பிசிறுகள் பொலிந்து மிக அழகாக இருக்கும். காட்டில் அப்படி எதையாவது தேடிக்கொண்டே சென்றால் ஒருகட்டத்தில் காடு மறைந்து அந்த இல்லாத மிருகம் மட்டுமே நம் மனதில் இருக்கும். அப்போது அனேகமாக அம்மிருகத்தை தவற விடமாட்டோம்.

மலையணில் சட்டென்று சாலைக்குக் குறுக்காகப் பாய்ந்து கடந்தது. அதன் வால் சொடுக்கி நிமிர்ந்து காற்றில் துழாவிச்சென்றது. கிளை குலுங்கி அதை வாங்கிக்கொண்டது. கனத்த மரத்தடியில் தொற்றி மேலேறிச்சென்றது. அந்தக்கணம் அப்படியே என் நெஞ்சில் உறைந்து நின்றது. அதிலேயே வாழ்ந்துகொண்டு நடந்துகொண்டிருந்தேன். அந்த வால். அதன் சுழலல். அணில் பறக்கும்போது வால் சட்டென்று சிறகாக ஆகிவிட்டது போலிருந்தது.

வால் என்னும் சொல்லின் பொருத்தமின்மை அப்போதுதான் என் நெஞ்சை அறைந்தது. வால் என்னும் ஒரு சொல்லில் எத்தனையோ விதமான உறுப்புகளை அடக்கிவிடுகிறோம். நாக்கு என்னும்போது தீயின் நாக்கையும் பாம்பின் நாக்கையும் எல்லாம் சொல்வது போல. மனிதமொழி என்பது அவனுடைய பழங்குடிவாழ்க்கையில் இருந்து முளைத்தது. ஆகவே தெரிந்ததில் இருந்து தெரியாததை உருவகித்துப்பெயரிட்டுக்கொண்டே செல்கிறது அது. பாம்புக்கும் வால் இருக்கிறது. காக்கைக்கும் வால் இருக்கிறது. குதிரைக்கும் வால் இருக்கிறது. மீனுக்கும் வால் இருக்கிறது.

அதன் பின் அந்த காட்டுநடையில் நான் கண்டவை எல்லாமே வால்கள்தான். குரங்கின் வால் என்பது ஒரு உபரியான கை தான். பன்றியின் வால் ஒரு விரல். அதன் வழியாக அது விதவிதமான சைகைகளைக் காட்டிக்கொண்டே இருக்கிறது. நாயின் வால் என்பது நம்மிடம் பேசிக்கொண்டே இருக்கும் ஒரு நாக்கு. காகத்தின் வால் ஒரு சிறகு. ரெட்டைவால்குருவியின் வால் என்பது ஒரு சமச்சீர் எடை. அப்படியானால் பாம்பு என்பது ஒரு வால்மட்டும்தான்.

கான்பரா அருகே உள்ள ஒரு காட்டுக்கு ஏப்ரல் 16 ஆம் தேதி நானும் மதுபாஷினியும் ரகுபதியும் அருண்மொழியும் சென்றபோதுதான் முதல்முறையாக உயிருள்ள கங்காருகளைப் பார்த்தோம். பார்த்ததுமே முதலில் தோன்றியது இதுதான் — கங்காருவின் வால் என்பது ஒரு கால்.

காலையில் எழுந்து துகிதையை அவளுடைய பள்ளிக்குக் கொண்டுசென்று விட்டோம். அதை அங்கே பிரி ஸ்கூல் என்கிறார்கள். காலை ஏழு முதல் மாலை ஏழுவரை அங்கே அவளை கவனித்துக்கொள்வார்கள். இரண்டுவேளை உணவும் தின்பண்டங்களும் கொடுப்பார்கள். துகிதை தோற்றத்தால் மட்டுமே தமிழ்ப்பெண். அவள் பிரிஸ்கூலில் இருக்கும் நேரம்தான் அதிகம். ஆகவே அவளுடைய மொழி என்பது சுத்தமான வெள்ளைக்கார உச்சரிப்பு கொண்ட ஆங்கிலம்தான். பள்ளி பல்லினக் கலவைக் குழந்தைகளின் மையம். அவளை கொண்டுவிடச்சென்றபோதே பல இனக்குழந்தைகள் வந்துகொண்டிருந்தன. அவர்கள் அனைவருமே பேசும் ஆங்கில உச்சரிப்பு ஒன்றுதான்.

பொதுவாக அங்கே பள்ளிகளில் ஆசிரியைகள் நன்றாகவே கவனித்துக்கொள்கிறார்கள் என்றார் மதுபாஷினி. அதற்குக் காரணம் ஆசிரியை வேலையை விரும்பிச் செய்பவர்கள் மட்டுமே அங்கே வருகிறார்கள். அது வேறுவழியில்லாமல் வந்துசேரும் வேலை அல்ல. இந்தியாவில் ஆரம்பக்கல்வி இன்று சந்திக்கும் மிகப்பெரிய சவாலே குழந்தைகள் மேல் ஆர்வமே இல்லாமல், சம்பளம் ஒன்றுக்காக மட்டும், பெரும் பணம் லஞ்சமாகக் கொடுத்து வந்துசேரும் ஆசிரியர்கள்தான். ஆசிரியர்களில் குழந்தைமேல் அன்பு இல்லாவிட்டால் அவர்களால் குழந்தைகளுக்குக் கற்றுக்கொடுக்க முடியாது. குழந்தைகள் அன்பின் வழியாகவே கற்றுக்கொள்கின்றன.

காரில் கான்பராவை விட்டு விலகிச் சென்றோம். மையச்சாலைகளைக் கடந்து கிராமங்களின் ஊடாகச் சென்றோம். ஆஸ்திரேலியாவில் நான் கண்ட ஒரு சிறப்பம்சம் என்னவென்றால் நம் ஊரில் பொழுது மாறும் வெளிச்ச வேறுபாடுகளை அங்கே அதிகமாகக் காணமுடிவதில்லை என்பதே. இந்தியாவில் நாள் என்பது செம்மையாக விடிந்து மஞ்சள் ஒளி கொண்டு தெளிந்த வெள்ளிநிறமாகி வெண்தீயாக எரிய ஆரம்பித்து மெல்ல அணைந்து சட்டென்று மஞ்சளாகி வெகுநேரம் தீயாகி பின் அணைந்து இருள்கிறது. ஆஸ்திரேலியாவில் ஒன்பதுமணிக்கும் இங்குள்ள ஆறுமணிக்குரிய அரை இருட்டும் மூடலும்தான். அது அப்படியே சிலசமயம் மாலைவரை நீள்கிறது. இது என் மனப்பிரமையாக இருக்கலாம். என்னால் அங்கே பொழுதை ஊகிக்கவே முடியவில்லை.

அதேபோல நிலம் மாறுபடும்போது செடிகள் மாறுபடுவதை இந்தியாவில் கவனித்துக்கொண்டே செல்வது என் வழக்கம். பள்ளமான பகுதிகளில் இஞ்சிப்புல் போன்ற கனத்த இலையுள்ள புல்கள் இருக்கும். மேட்டில் பாறைகள் நடுவே எருக்கு முதலிய செடிகள். வறண்ட நிலங்களில் புளியமரங்கள் நீருள்ள இடங்களில் மருதமரங்களும் கொன்றை மரங்களும். ஆனால் ஆஸ்திரேலியாவில் நிலம் எங்கும் ஒரே முகபாவனையுடன் எல்லையில்லாது விரிந்து கிடந்தது.

மூடிய வானத்தின் கீழே சென்றுகொண்டே இருந்தோம். ஆறு ஒன்று எதிர்ப்பட்டது. ஓரளவு நீர் ஓடும் நடுத்தர ஆறு. கான்பரா நகருக்கான குடிநீர் அங்கிருந்துதான் வருகிறது என்றார் ரகுபதி. கங்காருகளைக் காணவில்லையே என்றாள் அருண்மொழி. ‘ஏனெண்டு தெரியல்லை. நிறைய நிக்கும்கள்’ என்றார் மதுபாஷினி. சாலையோரத்தைப் பார்த்துக்கொண்டு சென்று சற்று கடந்தபின்னர்தான் நான் கங்காருகள் நிற்பதைக் கவனித்தேன். புதர்களின் நடுவே சாம்பல் நிற உடலுடன் மூன்று கங்காருகள் நின்றன. காரை நிறுத்தி மெல்ல இறங்கினோம். அவை கவனம் கொண்டு எழுந்து நின்று காதுகளை செங்குத்தாக பிடித்து மெல்ல மெல்ல திருப்பியபடி எங்கள் மேல் கண்களை ஊன்றி கூர்ந்து நின்றன.

என் காலடி ஓசையில் அவற்றின் உடல்சருமம் விதிர்விதிர்ப்பதைக் கண்டேன். இருந்தாலும் மெல்ல மெல்ல நடந்து முன்னால் சென்றேன். அவை என்னையே பார்த்துக்கொண்டு நின்றன. சட்டென்று ஒன்று துள்ளி தாவி ஓடியது. உடனே பிற இரண்டும் துள்ளி விலகின. அதற்குள் அருண்மொழி நாலைந்து புகைப்படங்களை எடுத்துவிட்டாள். அவை துள்ளிச்செல்ல ஆரம்பித்தபோதுதான் கவனித்தேன், அங்கே நிறைய கங்காருகள் இருந்தன. அவை அனைத்துமே துள்ளி துள்ளி விலகின.

கங்காரு ஒரு மான் என்ற பிரமைதான் எனக்கு ஏற்பட்டிருந்தது அதுவரை. அதே முகம். அதே பாவனைகள். மிளா போல. கொம்பு இல்லை, அவ்வளவுதான். ஆனால் அவை ஓட ஆரம்பித்தபோது ஏற்பட்ட வியப்பு கொஞ்சமல்ல. அவை எப்படி ஓடும் என்பதை ஏற்கனவே படித்திருந்தேன். ஆனால் அவை ஓடக்கண்டபோது அந்த அனுபவம் புதுமையாக இருந்தது. மான் ஒன்று தவளை போல துள்ளிச்செல்வது போல ஒரு விபரீதம். சின்னக்குழந்தைகள் சாக்குக்குள் கால்விட்டு தவ்வி ஓட்டப்பந்தயம் போடுவதுபோல. எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

கங்காருகள் கொஞ்ச தூரம் தள்ளிச் சென்று வால்கள் மேல் அமர்ந்துகொண்டன. எங்களூரில் வயல்களுக்குச் செல்லும் பிள்ளைமார் சிலர் கையோடு கனமில்லாத ஸ்டூல் எடுத்துச் செல்வார்கள். அதேபோல ஒரு இருக்கையை நிரந்தரமாக பின்பக்கம் வைத்திருப்பதுபோல. எங்கே வேண்டுமானாலும் வசதியாக அமர்ந்து கொள்ளலாம். என்ன வலுவான வால். கால்களின் அளவுக்கே திடமானது. ஒரு கால்தான். சிவபெருமானின் மூன்றாவது கண் மாதிரி மூன்றாவது கால்.

கங்காருகளில் 63 வகை உண்டு என்று சொல்கிறார்கள். செந்நிறமான கங்காரு, இரலைக் கங்காரு போன்றவை பெரியவை. சிறிய குரங்கு அளவிலான கங்காருகளும் உண்டு. ஆஸ்திரேலியாவுக்கே உரியது இந்த மிருகம். சில சிறிய வகைகள் பப்புவா நியூ கினியாவிலும் உண்டு என்கிறார்கள். ஆஸ்திரேலியாவில் வெளியாட்கள் வந்தபின் பல உயிரினங்கள் அழிவின் விளிம்பில் இருக்கின்றன. பல உயிரினங்கள் அழிந்தே போய்விட்டன. ஆனால் கங்காருகள் பலவகையிலும் இங்கே செழித்து இப்போது இங்குள்ள

மக்களைவிட அதிகமாக பெருகியிருக்கின்றன. உணவுக்காகவும், பயிர்களைப் பாதுகாக்கவும் கங்காருகள் தொடர்ந்து வேட்டையாடப்படுகின்றன என்றாலும் அவை எண்ணிக்கையில் பெருகியே வருகின்றன.

கங்காரு என்ற பெயர் ஆஸ்திரேலிய பழங்குடி மொழியில் உள்ள கங்கூர்ரு என்னும் சொல்லில் இருந்து வந்தது. அது சாம்பல்நிற கங்காருவையே குறிக்கிறது. ஆஸ்திரேலியாவில் இறங்கிய காப்டன் ஜேம்ஸ் கூக் எண்டெவர் நதிக்கரையில் இன்று கூக்டவுன் ஆக மாறியுள்ள இடத்தில் படகு பழுதாகி நின்றிருந்தபோது தன் குறிப்பேட்டில் கங்காரு என்ற பெயரை முதன்முதலாகக் குறித்தார் என்கிறார்கள். நீண்டகாலம் ஒரு ஐதீகக்கதை இருந்தது. அதாவது காப்டன் கூக் அந்த வினோத மிருகத்தைக் கண்டதும் அங்கே நின்றிருந்த பழங்குடியினரிடம் அது என்ன என்று கேட்டார். அவர்கள் தங்கள் மொழியில் ‘நீ பேசுவது புரியவில்லை’ என்னும் அர்த்தத்தில் கங்காரூ என்றார்கள். அதையே அம்மிருகத்தின் பெயராகக் குறித்துக்கொண்டார். உண்மையில் அது கூகு யிமிதீர் என்னும் ஆஸ்திரேலிய தொல்மொழியில் கங்காருவைக் குறிக்கும் சொல்தான் என்பதை 1970ல்தான் மொழியியலாளரான ஜான் பி ஹாவிலேண்ட் என்பவர் நிறுவினாராம்.

வால்தவிர கங்காருவின் சிறப்பம்சம் அதன் பைதான். நெடுங்காலம் அந்தப்பையின் பயன்பாடு பற்றியெல்லாம் நிறைய ஐயங்கள் இருந்தன. அங்கே கங்காருவின் குட்டி அமர்ந்திருப்பதைக் கண்டு அது கங்காருவின் கருப்பை என்று எண்ணியவர்கள் உண்டு. அது குட்டிபோடுவதை எவருமே கண்டதும் இல்லை. பின்னர் கங்காரு முட்டைதான் போடுகிறது, முட்டைகள் விரிந்து குஞ்சுகள் பைக்குள் ஏறிக்கொள்கின்றன என்ற நம்பிக்கை பரவியது. கங்காருபோடும் குட்டிகள் மிகமிகச் சிறியதாக இருக்கும். கிட்டத்தட்ட கொஞ்சம்பெரிய புழுக்கள் போல. அவை ஊர்ந்து அந்தப்பைக்குள் ஏறிக்கொள்கின்றன. அங்கே அவற்றுக்கு பால்சுரப்பிகள் உண்டு. பாலைக்குடித்து தாயின் உடல்வெப்பத்தில் ஊறி அங்கேயே வளர்ந்து பெரிய குட்டிகளாக ஆகி அவை வெளியே வருகின்றன. அப்போதுகூட அபாயங்களில் தாவி உள்ளே போய் ஒளிந்துகொள்கின்றன.

கங்காருகள்தான் தாவிச்செல்லும் உயிர்களிலேயே மிகப்பெரியவை. மணிக்கு 25 கி.மீ. வேகத்தில் அவை ஓடும். ஆனால் மெல்லச்செல்லும்போது முழுக்க முழுக்க வாலையே பயன்படுத்தி தத்திச்செல்லும். அவற்றின் வால் மிக ஆபத்தான ஆயுதம், முதலை வாலைப்போல. அதேபோல முன்னங்கால்களால் எதிரியைத் தாக்கி கிழிக்கும் வழக்கமும் அதற்கு உண்டு. ஆஸ்திரேலியாவில் அவ்வப்போது பலர் அதனால் கொல்லப்படுகிறார்கள். கங்காரு சராசரியாக ஐந்து வருடங்கள் வாழும். கங்காருவின் செரிமானமுறையில் நிறைய பாக்டீரியாக்கள் இடம்பெறுகின்றன. ஆகவே அதன் சாணி மிகச்சிறந்த உரம். அந்த பாக்டீரியாவை மாடுகளுக்குள் செலுத்த முடிந்தால் மாட்டுச்சாணி நான்குமடங்கு அதிகமாக மீத்தேன் எரிவாயு உற்பத்திசெய்யும் திறனுடன் இருக்கும் என்கிறார்கள்.

மீண்டும் காரில் ஏறி கங்காருகளுக்காகத் தேடியபடியே சென்றோம். அந்த நிலத்தின்வழியாகச் செல்லும்போது அந்த வினோதமான சூழலில் பலநூறு வருடம் முன்பு வந்த வெள்ளையருக்கு ஏற்பட்ட ஆச்சரியத்தை ஊகிக்க முடிந்தது. சட்டென்று ஒரு புத்தம் புதிய விசித்திரமிருகம் கண்ணெதிரே வந்து நின்றால் எப்படி இருக்கும் என்று கற்பனைசெய்துகொண்டேன். ஆனால் ஒரு கங்காரு ஏன் நமக்கு ஆச்சரியத்தை அளிக்கிறது? ஏன் நம்மை சிருஷ்டி விசித்திரத்தை நோக்கி சிந்தனையைச் செலுத்தச் செய்கிறது? ஏனென்றால் நாம் நம்மைச்சுற்றி உள்ள மிருகங்களுக்கு பழகிவிட்டிருக்கிறோம். நம்முடைய மான் நமக்கு சாதாரணமாக தோன்றுகிறது. அது கொஞ்சம் வால்கனத்து தாவிச்சென்றால் நாம் ஆச்சரியப்படுகிறோம். அதனருகே நின்று புகைப்படம் எடுக்கிறோம். முடிந்தால் ஆட்டோகிரா.ஃப் கூட வாங்குவோம்.

நித்யா சைதன்ய யதியைப்பற்றிய ஒரு கதை உண்டு. சத்ய சாயிபாபாவைப் பார்த்துவிட்டு வந்த ஒருவர் நித்யாவிடம் பாபாவைப் புகழ்ந்து தள்ளிக்கொண்டே இருந்தாராம். ‘என்ன அற்புதம் குரு, வெறும் கையில் மோதிரம் எடுக்கிறார். லட்டு எடுக்கிறார். நீங்களும் அதேபோல ஏதாவது அற்புதத்தைக் காட்டவேண்டும் குரு.’ நித்யா சிரித்தபடி ‘அற்புதம்தானே? வா காட்டுகிறேன்’ என்று கூட்டிச்சென்றார். வெளியே நின்ற தென்னை மரத்தைச் சுட்டிக்காட்டி சொன்னார் ‘பார் எவ்வளவு பெரிய அற்புதம்!’

அவர் வாயைப்பிளந்து நிற்க குரு சிரித்தாராம். ‘தினமும் பதினைந்து லிட்டர் தண்ணீரை ஒரு தென்னைமரம் தன் உச்சிக்குக் கொண்டுசெல்கிறது தெரியுமா? ஒரு தென்னையில் கிட்டத்தட்ட நூறு லிட்டர் தண்ணீர் எப்போதும் இருந்துகொண்டிருக்கின்றன தெரியுமா ? எந்த மோட்டாரும் இல்லாமல் இந்த தண்ணீர் எப்படி மேலே செல்கிறது என்று சிந்தித்துப் பார்! எத்தனை அற்புதம்!’

நம்மைச்சுற்றி அற்புதங்கள் கொட்டிக்கிடக்கின்றன. அவற்றைப்பற்றி சிந்திக்க பல்லாயிரம் கிலோமீட்டர் பறந்து வந்து இங்கே நிற்க வேண்டியிருக்கிறது என நினைத்துக்கொண்டேன்.

11. காடும் வீடும்

ம லையாள எழுத்தாளர் பி.கேசவதேவின் கதையில் இப்படி வருகிறது ‘காலையில் எழுந்ததும் மப்ளரைக் கட்டிக்கொண்டு கம்பளியை நன்றாகப் போர்த்திக்கொண்டு கிளம்பி கரிமலை ஏறி இறங்கி நீலிமலையைச் சுற்றிக்கொண்டு பாறைக்கடவு தாண்டி சின்னாற்றில் இறங்கி மறுபக்கம் ஏறினால் வரும் மண்சாலையோரமாக இருக்கும் கேசு அம்மாவனின் சாயாக்கடைக்குப் போய் சுடச்சுட பெட்காபி குடிப்பேன்.’ கிட்டத்தட்ட அதேமாதிரியான சூழலில் அமைந்த ஏராளமான ‘ஓணம் கேறா மூலைகள்’ முன்பெல்லாம் மலைநாடான எங்கள் ஊர்ப்பக்கம் இருந்திருக்கின்றன. பக்கத்து வீடு என்பது குடையும் கம்பும் கைவிளக்குமாக ஒருமணி நேரம் நடந்தால் வரக்கூடியதாகத்தான் இருக்கும்.

அதற்குக் காரணம் கேரளத்தில் உள்ள ஊர்களில் பெரும்பாலானவை காட்டுக்குள் மக்கள் குடியேறி மெல்ல மெல்ல உருவாக்கிக் கொண்டவை என்பதே. பெரும்பாலான ஊர்களின் பெயர்கள் மரத்தடியாக (மஞ்சாலுமூடு) தோப்பாக (ஆலஞ்சோலை) ஆற்றிலிறங்கும் இடமாக (தூணக்கடவு) இருக்கும். இங்கே ஒருசிலர் காட்டுக்குள் ஒரு நீருள்ள நிலப்பகுதியை வளைத்து குடில் அமைத்துக் கொள்கிறார்கள். அந்தப்பகுதியில் கடுமையாக உழைத்து விளைநிலத்தை உருவாக்குகிறார்கள். அதற்கு அடுத்த வளைப்பு இன்னொரு ஓடைக்குள் வெகுவாகத் தள்ளி இருக்கும். காட்டுமிருகங்களைத்தவிர அஞ்சக்கூடியதாக ஏதும் அங்கே இல்லை.

பின்னர் ஊர் பெரியதாகும்போதுகூட ஒவ்வொருவரும் அவரவர் தோட்டத்துக்குள் வீடு கட்டி வாழும் முறையே நீடித்தது. இன்றும் கேரள கிராமங்களில் பெரும்பாலானவை அப்படித்தான் உள்ளன. பக்கத்து வீடு என்பது பக்கத்துத்

தோப்புக்குள் இருப்பதுதான். என் இளமைப்பருவத்து வீடு இரண்டேக்கர் தோட்டம் நடுவே இருந்தது. பக்கத்து வீடு கூப்பிட்டால் – கொஞ்சம் உரக்கவே கூப்பிட வேண்டும் – கேட்கும் தூரத்தில். ஊரில் நெருக்கமாக மக்கள் வாழ்வது சமூகத்தின் கீழ் படிநிலைகளில் வாழ்பவர்களின் இடத்தில்தான். அவற்றை குடி என்று சொல்வார்கள். சேரி என்ற சொல்லுக்கு சமானமான சொல் அது. நிலம் வாங்கி வீடுகட்டும் வசதி இல்லாதவர்கள் வாழுமிடம் அது. நான் நாகர்கோயிலுக்கு முதன்முறையாக வந்தபோது அதிர்ந்து போய் மீண்டு ஊருக்குத்திரும்பி அம்மாவிடம் சொன்னேன், நாகர்கோயில் ஊரே இல்லை பெரிய குடி என்று. சென்னையை இன்றுகூட மாபெரும் குடி என்றே என் ஆழ்மனம் எண்ணுகிறது.

நாகர்கோயிலில் நான் கொஞ்சம் நிலம் வாங்கி வீடுகட்டினேன். பக்கத்து வீடு தொட்டுவிடும் தூரத்தில்தான். ஆனால் ஒவ்வொரு வீடும் தனியாக காம்பவுண்டுக்குள் இருக்கும். தமிழ்நாட்டிலேயே வாழ்ந்து பழகிய என் அக்கா வந்தால் 'என்னடா வீடு இப்டி தனியா இருக்கு? பயமா இருக்கே' என்பார். திருவரம்பில் நான் வாழ்ந்த வீட்டில் தென்னைகளில் காற்று ஓடும் ஒலி மட்டுமே கேட்கும். நாங்கள் சத்தமாகப்பேசுவதில்லை. பொதுவாக எங்களூரில் வீட்டுக்குள் சத்தமாகப் பேசுவதை தவிர்ப்பார்கள். ஆகவே எப்போதும் தீவிரமான அமைதி நிலவும். இப்போது நான் வாழும் பார்வதிபுரம் அத்துடன் ஒப்பிடும்போது சத்தமான பகுதி. ஆனால் மதுரையில் இருந்து நண்பர் சண்முக சுந்தரம் வீட்டுக்கு வரும்போதெல்லாம் பிலாக்காணம் வைப்பார் 'என்ன சார் வீடு ஒன்னு கெடக்கு... ஊரே கம்முன்னு இருக்கு.' மதுரைத்தெருக்களை உணர்ந்தவர்களுக்கு தெரியும் அவருக்கு எப்படி மூச்சுத்திணறும் என்று.

தமிழர்கள் கூடிவாழ்பவர்கள். நீர் வசதி இல்லாத தமிழ் மண்ணில் எங்கே ஊற்றுள்ள கிணறு இருக்கிறதோ அதைச்சுற்றி நெருக்கமாக வீடுகளை அமைத்துக்கொண்டார்கள். அருகே கோயில். சுற்றிலும் தெருக்கள். சுற்றி காவல்மதில் இதுவே ஒரு தமிழ் கிராமம். ஆகவே மனிதர்கள் செறிந்து வாழ்வது அவர்களின் பண்பாடு. மேலும் தமிழ்நாட்டில் எப்போதுமே கள்ளர் பயம் மிக அதிகம். பெரும்பாலான தமிழ் வீடுகளும் ஊர்களும் திருடனை மனதில்கொண்டே உருவானவை. மதுரை அந்த நெரிசலின் உச்சம்.

எந்நேரமும் ஒரு திருவிழா நெரிசல். எந்நேரமும் பாட்டுச்சத்தம். தூசி. உக்கிரமான வெயில்.

பாட்டுமேல் மதுரைக்காரர்களுக்கு இருக்கும் மோகத்தை எங்குமே பார்க்க முடியாது. எல்லா டீக்கடைகளிலும் பாட்டுகள் அலறிக்கொண்டிருக்கும். மொத்த மதுரையே மம்மத ராசா என்று ஓலமிடும். ஜம்முவில் இருந்து மதுரை வரும் ஜம்முதாவி எக்ஸ்பிரஸில் ஏறினால் உடனே பெட்டிக்குள் குட்டி ஸ்பீக்கர்களைக் கட்டி பாட்டு போட ஆரம்பித்துவிடுவார்கள் மதுரை திரும்பும் மக்கள். பெட்டி ஒரு கிராமம் ஆக மாறிவிடும். என் பிரச்சினை என்னவென்றால் நான் அமைதியான வீட்டை விரும்புகிறவன். ஆனால் இம்மாதிரி மக்கள் நெரிசலில் உள்ள உயிர்த்துடிப்பு மேல் பெரும் மோகமும் உண்டு. அந்தக்கூட்டத்தில் இயல்பாகக் கரைந்து விடுவேன்.

கான்பரா அருகே அந்த பிக்னிக் இடத்திற்குச் சென்றிறங்கி அவசரமாக சிறுநீர் கழிக்கச்சென்றபோது அருகே ஒரு பலகை இருந்தது. கிளிண்டின் வீடு இருந்த இடம். (Clints Homestead) ஆச்சரியத்துடன் அந்த வீட்டைத் தேடினேன். வீடு எதுவும் கண்ணுக்கு தெரியவில்லை. மீண்டும் வந்து பலகையை கூர்ந்து படித்தேன். அந்த இடத்தில் 1892ல் கிளிண்ட் என்பவரின் அப்பா ஒரு சிறிய மரவீட்டைக் கட்டி அந்த நிலத்தில் திராட்சை பயிரிட ஆரம்பித்தார். அப்பகுதியில் சற்று அப்பால் நின்ற சிறிய மண்குன்றில் இருந்து நீர் ஊறி வருகிறது. மழையும் கொஞ்சம் பெய்யும். திராட்சையை தானே பிழிந்து ஒயின் தயாரித்து அதை கொண்டுசென்று விற்பது அவர்களின் வாழ்க்கை. அதன்பின் கிளிண்ட் தன் மனைவியுடனும் இரு மகள்களுடனும் ஒரு பையனுடனும் அங்கே வாழ்ந்தார். கிளிண்ட் இறந்தபின் மகன் சிட்னிக்கு வேலைக்குச் சென்றான். கிளிண்டின் இரு மகள்களும் மனைவியும் அங்கேயே வாழ்ந்தார்கள். இரு மகள்களும் மணமாகிச்சென்ற பின் கிளிண்டின் மனைவி அங்கே வாழ்ந்தாள். அவள் இறந்தபின் அங்கே எவரும் வாழவில்லை.

என்ன முக்கியம் என்றால் கிளிண்டின் பக்கத்துவீடு முப்பது கிலோமீட்டருக்கு அப்பால் இருந்தது என்பதே. குதிரைமேல் பயணம்செய்தால் முழுப்பகலும் சென்றபின்னர்தான் பக்கத்துவீட்டை அடையமுடியும். மாதம்தோறும் சந்தைக்குச் செல்வார்கள். சந்தைக்குச் சென்று திரும்ப நான்கு நாட்கள்

ஆகும். மூன்று வெவ்வேறு இடங்களில் இரவு தங்க வேண்டியிருக்கும். உப்பு, தீப்பெட்டி, மருந்துகள் முதல் அனைத்து பொருட்களையும் முன்னரே யோசித்து வாங்கி வைக்க வேண்டும். ஆனால் வாழ்க்கை பெரிய சிக்கல் ஏதுமில்லாமல் சென்றிருக்கிறது. அதை மலையாளிகளால் புரிந்துகொள்ள முடியும். மதுரைக்காரர்கள் வந்தால்தான் திக்பிரமைபிடித்து நின்றிருப்பார்கள். அந்தப்பலகையில் கிளிண்டின் பழைய வீடு மற்றும் குதிரையின் படம் இருந்தது. அந்தக்குதிரைமேல் கிளிண்டின் மகள் சிரித்துக்கொண்டு ஒரு சீமாட்டி போல அமர்ந்திருக்கிறாள். அவள் சீமாட்டிதானே, அந்த நிலப்பகுதியே அவளுக்குக் கட்டுப்பட்டது – கிட்டத்தட்ட குமரிமாவட்டம் அளவுக்கு நிலம். பழங்காலத்தில் குமரிமாவட்டத்தில் இந்த அளவு இடத்துக்குள் எட்டு தனி ஆட்சியாளர்கள் ஆண்டிருக்கிறார்கள்!

அந்த இடத்துக்கு திரும்பும் வழியில் ஈமு பறவைகளைப் பார்த்தேன். மறுபடியும் ஒரு சொற்குழப்பம். பறவை, ஆனால் ஈமு பறக்காது. பறக்காத ஒன்றுக்கு ஏன் பறவை என்று பெயர். சிறகிருப்பதனாலா? பேசாமல் சிறகை என்று பெயரிட்டிருக்கலாம். சாலையோரமாக சாலைக்கு வரமுடியாமல் ஒரு கம்பிவலை போட்டிருந்த வேலிக்கு அப்பால் ஒரு சிறிய சேற்றுக்குட்டை ஓரமாக சோம்பலாக நின்றிருந்தன. ஒன்று மெல்ல குனிந்து ஒரு ஹோஸ் பைப்பை குளத்தில் போட்டது போல தலையைப் போட்டு நீரை உறிஞ்சி குடித்தது. இன்னொரு ஆஸ்திரேலிய விசித்திரம் இந்தப்பறவை.

ஆஸ்திரேலியக் கண்டத்திலேயே பெரிய பறவையான இது நெருப்புக்கோழிக்கு அடுத்தபடியாக உலகின் பெரிய பறவை. ஒருவகை நெருப்புக்கோழி என்றுதான் தோன்றிக்கொண்டே இருந்தது. கிட்டத்தட்ட ஆறரை அடி உயரமானது. ஒரு வைக்கோல்சுருளை குச்சிகளில் வைத்து நடமாட விட்டது போன்ற அமைப்புள்ளது. கழுத்து ஒட்டகம்போல நீளமானது, காரணம் கால்கள் நீளமாக இருப்பதுதான். சிறப்பாக ஓடக்கூடியது. புல்வெளி மற்றும் அரைப்பாலைவனங்களில் அதிகமாக வாழ்கிறது. சிறகடித்து ஓடக்கூடியதென்பதனால் மணிக்கு ஐம்பது கிலோமீட்டர் தூரம் வரை செல்லக்கூடியது என்கிறார்கள். கிட்டத்தட்ட கோழிதான். புழுப்பூச்சிகள் கொட்டைகள் சின்னச் செடிகள் எல்லாவற்றையும் தின்னும்.

ஈமு ஆஸ்திரேலியாவுக்கு வெள்ளையர் வந்தபோது கடுமையாக வேட்டையாடப்பட்டு அழிய நேர்ந்தது. கிழக்கு ஆஸ்திரேலியாவில் ஈமு கிட்டத்தட்ட இல்லாமலே ஆனது. ஆனால் பாலைவனப்பகுதிகளில் நீர்ப்பாசனத்திட்டங்கள் மூலம் விவசாயம் செய்ய ஆரம்பித்தபோது அங்கே ஈமு பல்கிப்பெருகியது. இன்று அது ஒரு வணிக வளர்ப்பு. இறைச்சிக்காகவும் முட்டைக்காகவும் அது வளர்க்கப்படுகிறது. இந்தியாவில் குஜராத்திலும் ராஜஸ்தானிலும் ஈமு வளர்க்கும் பண்ணைகளை ஆரம்பித்தார்கள். அவை வெற்றிகரமாக நடக்கின்றனவா தெரியவில்லை.

ஈமுவின் கால்தான் நம்மைப்போன்ற அந்நியரின் பார்வைக்கு மிகமிக ஆச்சரியமளிப்பது. மட்கிய இரு மரக்கிளைகள் போன்ற கால்கள். தோல்கூட இல்லாத வலுவான இரு எலும்புகள் என்று தோன்றும். ஈமு பயங்கரமாக சிறகடித்து கூவும் என்றார்கள். காரில் இருந்து இறங்கி கொஞ்சநேரம் அதைப்பார்த்து நின்றோம். அவை எங்களை சக உயிர்களாக எண்ணியதாகவே தெரியவில்லை. ஈமுக்கள் பொதுவாக இலட்சியக் காதலர்கள். சண்டை வந்தால் முரட்டுக்கால்களால் அடித்துக்கொள்ளும் என்றாலும் பொதுவாக சேர்ந்தேதான் இருக்குமாம். பொதுவாக சாந்தமான ஜீவன். யாரையும் அது தாக்கியதாக செய்திகள் இல்லை, நல்ல காதல் வாழ்க்கை இருப்பதனால் வந்த சாந்தமாக இருக்கலாம்.

ஆஸ்திரேலியா ஈமுவுக்கு தபால்தலை வெளியிட்டிருக்கிறது. ஆஸ்திரேலியாவின் தேசியப்பறவை இது. கங்காருபோல இதுவும் ஆஸ்திரேலியத் தனித்தன்மைக்கான அடையாளம். ஆஸ்திரேலியாவில் கிட்டத்தட்ட 600 இடங்கள் ஈமுவின் பெயரில் இருந்து உருவாகி வந்திருக்கின்றன என்கிறார்கள்.

அந்த இடத்துக்கு வந்ததே ஆஸ்திரேலியாவின் இன்னொரு தேசிய விசித்திரமான குவாலா கரடிகளைப் பார்ப்பதற்குத்தான். அப்பகுதி முழுக்க ஏராளமான யூகலிப்டஸ் மரங்கள். திறந்த புல்வெளிகளில் குடும்பங்கள் பிக்னிக்கைக் கொண்டாடிக்கொண்டிருந்தன. சராசரி ஆஸ்திரேலியக் குடும்பத்தின் ஒரு மகிழ்ச்சியான தருணம் என்ன என்பதைக் காணமுடிந்தது. ஒரு நல்ல கார். அப்பா அம்மா குழந்தைகள், பெட்டிகளில் பானங்கள்,

இறைச்சி அடைக்கப்பட்ட சுருள்ரொட்டிகள், ஒரு நாய். ஒரு இளவெயில்நேரம், புல்வெளி. ஒரு சில புத்தகங்கள். இசைக்கருவிகள். அப்பாவும் அம்மாவும் அமர்ந்திருக்க குழந்தைகளும் நாயும் புல்வெளியில் பந்து விளையாடின.

நாங்கள் வழிகாட்டிப்பலகையைக் கூர்ந்து நோக்கினோம். அதில் ஒரு முப்பது கிலோமீட்டர் புதர் நடை (Bushwalk) பற்றி போட்டிருந்தார்கள். ஆஸ்திரேலியாவில் புதர்நடை என்று ஒரு முக்கிய பொழுதுபோக்கு உள்ளது. உணவு நீர் தூங்கும் வசதி ஆகியவற்றுடன் ஓரிரு நாட்கள் விரிந்த நிலவெளியில் நடக்கச்செல்கிறார்கள். அதற்கான குழுக்கள் உள்ளன. கட்டணம் கொடுத்து அவற்றில் உறுப்பினராக ஆகிக்கொள்ளலாம். அப்படிப்பட்ட குழுக்கள் இல்லாமல், வழிகாட்டி வசதிகள் இல்லாமல் பயணம்செய்வது மிகமிக ஆபத்தானது. வழிதவறினால் கண்டுபிடிப்பதற்குள் நூறு கிலோமீட்டர் நடக்க வேண்டியிருக்கும். வழிகேட்க மானுட ஜென்மங்கள் கண்ணிலே படாத தேசம்.

குவாலா கரடியைப் பார்ப்பதற்காக யூகலிப்டஸ் காட்டுக்குள் அலைந்தோம். இந்த மிருகத்தின் அபூர்வ குணங்களில் முக்கியமானது இது யூகலிப்டஸ் மரத்தின் தைலம் மிகுந்த இலையைத் தின்னும் என்பதே. ஜலதோஷமே பிடிக்காது போல. பெரும்பாலும் எந்த உயிருமே யூகலிப்டஸ் இலையைத் தின்பதில்லை. அந்த மரத்தின் பட்டைகளிலும் இலைகளிலும் புழுப்பூச்சிகள் அனேகமாக இருப்பதில்லை. அதன் சருகுகள் விழுந்து மூடிய தரையிலும் உயிர் நடமாட்டம் குறைவு. ஆகவே யூகலிப்டஸ் காட்டில் பறவைகள் அரிதாகவே காணப்படும். காடே மௌனமாக இருக்கும். ஊட்டியில் யூகலிப்டஸ் காடும் சோலைக்காடும் மாறி மாறிக் காணப்படும். நீர் ஓட்டமும் ஆழமான மேல்மண்ணும் உள்ள பள்ளங்களில் சோலைகள். ஆழமில்லாத மேல்மண் கொண்ட இடங்களில் யூகலிப்டஸ். 1910 வாக்கில் விறகுக்காக ஆஸ்திரேலியாவில் இருந்து பிரிட்டிஷ் ஆட்சியாளர்கள் கொண்டுவந்து ஊட்டியில் நட்ட மரம் யூகலிப்டஸ். பின்னர் முதல் உலகப்போரில் எரிபொருள் தேவை அதிகமாக எழுந்தபோது மானாவாரியாக நட்டு நிறைத்தார்கள். அக்காலத்தில் நிலக்கரிப் பஞ்சம் ஏற்பட்டமையால் ரயில்கள் யூகலிப்டஸ் விறகில் ஓடின. ஊரெங்கும் தைலமணம் வீசுமாம்.

யூகலிப்டஸ் காடு வழியாகச் செல்லும்போது ஒரு பெரிய சினிமாக்காட்சியில் மரங்களைக் காண்பது போன்ற பிரமையே எழுந்தது. சத்தமே இல்லாத ஓங்கிய மரங்கள். பிரமை பிடித்து வரிசையாக நின்றன அவை. நன்றாக போர்த்தப்பட்டது என்னும் பொருள்வரும் கிரேக்க சொல்லில் இருந்து உருவானது யூகலிப்டஸ் என்ற வார்த்தை. ஆனால் யூகலிப்டஸ் பட்டைகளை உரித்து உரித்து எப்போதும் விறகுக்குச் சமானமான ஒரு தோற்றத்தில்தான் இருக்கிறது. ஏறத்தாழ 700 வகை யூகலிப்டஸ் மரங்கள் உண்டாம். பெரும்பாலும் எல்லாமே ஆஸ்திரேலியாவைச் சேர்ந்தவை. மேல்மண்ணில் உள்ள நீரை உறிஞ்சியழிக்கும் தன்மை கொண்டது இந்தமரம் என்று இதற்கு எதிராக தமிழ்நாட்டு இயற்கையியலாளர்கள் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். இப்போது வனத்துறையும் யூகலிப்டஸ் நடுவதை கைவிட்டுவிட்டிருக்கிறது.

கோலா கரடி என்பது சும்மா ஒரு பேச்சுக்குத்தான் கரடி. அது கரடியே அல்ல. நம்மூர் பழ உண்ணி அல்லது மரநாய் மாதிரியான ஒரு சிறிய மிருகம். யூகலிப்டஸ் மரத்தின் உச்சிக்கிளைகளில் இலைகளைத்தின்றுவிட்டு பெரும்பாலான நேரங்களில் தூங்கிக்கொண்டிருக்கும். ‘தண்ணீர் குடிக்காதது’ என்ற பொருளில் உருவான சொல் இது என்று சில இடங்களில் படித்தேன். ஆஸ்திரேலிய பழங்குடி மொழியில் கூலா என்று இது சொல்லப்படுகிறது. ஆஸ்திரேலியாவில் இதை கரடி என்று சொல்லக்கூடாது என்று குழந்தைகளுக்குக் கற்பிக்கிறார்கள். ஆஸ்திரேலியாவிலும் சுற்றுமுள்ள தீவுகளிலும் குவாலாக்கள் உள்ளன. அடர்த்தியான சாம்பல்நிற முடி கொண்டது. குவாலாக்கள் மரக்கிளைகள் வழியாக மரநாய் போல பயணம் செய்யும். மிக மெதுவான இயக்கம் கொண்ட மிருகம் இது.

நெடுநாட்கள் இந்த மிருகம் தொடர்ச்சியாக வேட்டையாடப்பட்டு வந்தது. இதன் தோல் ஆடைகளுக்காக பயன்பட்டது. ஆனால் அதைக்காட்டிலும் இதை வேட்டையாடிக் கொல்வதென்பது சுடும் திறமையைக் காட்டுவதாக அமைந்திருந்தது. ஆகவே ஏராளமான குவாலாக்கள் கொல்லப்பட்டன. வம்ச அழிவின் விளிம்புக்குச் சென்ற இம்மிருகங்கள் சமீபகாலமாக ஆஸ்திரேலிய அரசால் பாதுகாக்கப்படுகின்றன. அதைக் கொல்வதும் வீடுகளில் வளர்ப்பதும் தடைசெய்யப்பட்டிருக்கிறது. அறிவில்லாத மனிதர்களை கழுதை என்று திட்டும் வழக்கம் நமக்குண்டு, ஆனல் கழுதை புத்திசாலியான மிருகம்.

வேண்டுமென்றால் குவாலா என்று திட்டலாம். பூமியில் வாழ்பவற்றிலேயே ஒப்புநோக்க மிகச்சிறிய மூளை கொண்ட உயிரினம் இதுவே.

குவாலாவின் மூளை சிறியதாக ஆனமைக்கு என்ன காரணம்? முதல் விஷயம் அது உணவைத்தேடிச்செல்லவேண்டியதே இல்லை. அதற்கான உணவு அதைச்சுற்றித்தான் இருக்கிறது. ஆகவே அது உணவு உண்ணும் நேரம் மட்டும் விழித்திருந்தால் போதும். மிஞ்சிய நேரம் ஆனந்தமாக தூங்கலாம். இரண்டாவதாக அதற்கு அது வாழும் அந்த உயரத்தில் இயற்கை எதிரியே இல்லை. ஆகவே எதைப்பற்றியும் கவலை தேவையில்லை. மிருகங்களில் அது ஒரு சுகவாசி. கடவுள் செல்லம் கொடுத்து சீரழித்த குழந்தை. இயற்கையின் சவால்களே இல்லாததனால் அதன் மூளை பரிணாம வளர்ச்சியே கொள்ளவில்லை. அதன் மூளையின் இரு பருப்புகள் நடுவே இணைப்பே பரிணாமத்தில் உருவாகி வரவில்லை என்று சொல்கிறார்கள். குவாலாவின் உடலியக்கம் மிகமிகக் குறைவு. ஆகவே அதற்கு அதிக புரோட்டின் தேவையில்லை. அதனால் அது யூகலிப்டஸ் இலைகளை மட்டும் உண்டே வாழமுடிகிறது. இந்தியாவில் தேவாங்கு இதைப்போன்ற ஒரு சோம்பேறி மிருகம்.

நன்றாகத்தேடியும் குவாலாவை காணவே முடியவில்லை. அதைக் காண்பது அனேகமாக சாத்தியமே இல்லை என்றார் ரகுபதி. ஆகவே திரும்பிவிடலாமென்று தீர்மானித்தோம். காரில் ஏறி கான்பராவை நோக்கிச் சென்றோம். செல்லும் தோறும் இருட்ட ஆரம்பித்தது. முந்தைய நாள் கான்பராவைச்சேர்ந்த என் வாசகியான சித்ரா என்னைச் சந்திக்கவேண்டுமென சொல்லியிருந்தார். அவர் திருச்சியைச் சேர்ந்தவர். அவரது கணவர் தேவ் கணிப்பொறி வல்லுநர். அவர்கள் வீட்டுக்கே சென்று மாலையுணவு சாப்பிடலாமென எண்ணி கிளம்பினோம். யோகன் என்ற நண்பரும் முந்தைய நாள் சந்திக்க வேண்டுமென சொல்லியிருந்தார். அவரை அங்கேயே வரச்சொல்லியிருந்தோம்.

சித்ரா அனேகமாக தினமும் என் இணைய தளத்தை வாசிப்பதாகச் சொன்னார். பலவகையிலும் அது ஒரு உரையாடல், அவர் எனக்கு எதுவுமே எழுதியதில்லை என்றாலும் கூட. தினமும் நான் அவரிடம் பேசிக்கொண்டே

இருந்திருக்கிறேன். அந்த மாலை ஓர் இனிய சந்திப்பாக இருந்தது. தேவ் அதற்கு முன்னர் அவர்கள் நியூசிலாந்தில் வேலை பார்த்ததாகச் சொன்னார். ‘இந்த மாதிரி ஊர் இல்லை சார் அது. எங்கே பாத்தாலும் பச்சைப்பசேல்னு இருக்கும். டிராப்பிக்கல் வெதர்...’

ஆஸ்திரேலியாவில் சர்வதேசப் பொருளாதார மந்தநிலை பாதிக்குமா என்று கேட்டேன். ‘இப்ப வரை பாதிக்கலை. அதுக்கான சான்ஸ் ரொம்பவே இருக்கு. அதைப்பத்தித்தான் பேசிட்டே இருக்காங்க. இந்த நாட்டோட பொருளாதாரம்கிறதே கனிமங்களை நம்பித்தான் இருக்கு. முக்கியமா இரும்பும் நிலக்கரியும். இவங்க அதிகமா இதை ஏற்றுமதி செய்றது சீனாவுக்கு. சீனா இப்ப பொருளாதார ரீதியா வளர்ந்துட்டே இருக்கிற நாடுங்கிறதனாலே இதெல்லாம் அவங்களுக்கு அளவில்லாம தேவைப்படுது. ஆனா சீனாவோட மொத்த பொருளாதாரமும் அமெரிக்காவை நம்பி இருக்கு. அமெரிக்கா விழுந்துட்டப்போ சீனாவுக்கு பெரிய அடிவிழுந்திருக்கு. அந்த பாதிப்பு கண்டிப்பா ஆஸ்திரேலியாவுக்கும் வரும்’ என்றார் தேவ்.

‘அவ்வளவு பெரிய பொருளாதார நெருக்கடி வருமா?’ என்றேன். ‘இப்ப முதலாளித்துவத்துக்கு விழுந்திருக்கிற அடி முன்னாடி கம்யூனிசத்துக்கு விழுந்திருக்கிற அடிக்குச் சமானமானதுன்னு சொல்லிக்கிறாங்க. ஆனா அதைப்பத்தி அதிகமா பேசாம தவிர்க்கிறாங்க. சீனா இப்ப உள்ள நெருக்கடியைச் சமாளிக்க பெரிய அளவிலே கட்டுமானத்திட்டங்களை அறிவிச்சிருக்கு. ஆனா அதுக்கு ஒரு லிமிட் இருக்கு. அதுக்குமேலே அது இறக்குமதியை குறைக்க ஆரம்பிக்கும். அப்ப ஆஸ்திரேலியாவுக்கு பெரிய பாதிப்பு வரும்’ என்றார் தேவ்.

சித்ராவும் அருண்மொழியும் திருச்சியில் ஒரே பள்ளியில் சாவித்ரி வித்யாலயாவில் படித்திருக்கிறார்கள். சித்ரா கொஞ்சநாள் முன்னால் படித்திருக்கிறார். ‘நான் பாத்ததில்லை’ என்றாள் அருண்மொழி. பார்த்திருந்தால் கூட கண்டுபிடிக்கவா முடியும்? யோகன் என்னிடம் என்னுடைய நாவல்களைப் பற்றி கேட்டார். அவர்கள் இட்லி சாம்பார் எல்லாம் சாப்பிட்டார்கள். நான் வழக்கம்போல இரு ஆப்பிள்களும் ஒரு வாழைப்பழமும் சாப்பிட்டேன். நானே

ஒரு குவாலாவாக ஆகிக்கொண்டிருப்பதாக எண்ணிக்கொண்டேன். உச்சியிலமர்ந்து கொண்டு இலைதழைகள் சாப்பிடுகிறேன்.

ஆனால் மனித உடல் மிகமிகக் குறைவான உணவுக்காக படைக்கப்பட்ட ஒன்று. நம்பமுடியாத அளவுக்கு குறைவான உணவில் மனிதன் வாழ முடியும். சொல்லப்போனால் உணவின் அளவு குறையும்போதுதான் மனிதனுக்குச் சுறுசுறுப்பும் திறனும் நோயின்மையும் உருவாகின்றன. மனிதனுக்கு கொழுப்பு அறவே தேவையில்லை, அதை மனித உடலே உருவாக்கிக் கொள்ளும். வளர்ந்தபின் புரோட்டீன் குறைவாகவே தேவை. மாவுச்சத்து ஒரு டம்ளருக்குமேல் தேவையில்லை. ஏனென்றால் இயற்கை மனிதன் உணவைத்தேடி அலைந்து கொஞ்சமாக உண்ணவேண்டுமென விதித்திருக்கிறது. அதை விட்டுவிட்டு கோலா போல சுகவாசியாக ஆகும்போதுதான் மூளை குறுக ஆரம்பிக்கிறது.

12. பிலம்

கே ரளத்தில் திரிச்சூர் அருகே திருவில்வமலை என்ற ஊரில் ஒரு பெரிய குன்றின்மீது ஒரு குகை உள்ளது. அந்தக்குகைக்கு புனர்ஜனி என்று பெயர், அதாவது மறுபிறப்புக்குகை. இயற்கையாக உருவான குகை அது. நெடுநாட்களாக மழைநீர் ஓடி அங்கிருந்த கனிமங்களைக் கரைத்து உருவான வெற்றிடம் குகையாக ஆகியிருக்கிறது. குகைக்குள் நுழையும் இடம் கொஞ்சம் பெரிதாக இருக்கும். ஆனால் போகப்போக மிகச்சிறிதாக ஆகிவிடும். முற்றிலும் இருட்டு. பெரும்பாலான தூரத்தை தவழ்ந்தே கடக்க முடியும். குகை நம் உடலளவுக்கே இருப்பதனால் ஒருபோதும் பின்னால் திரும்பி வர முடியாது. சில இடங்களில் மேலேறும், சில இடங்களில் கீழிறங்கும். கடைசியில் கிட்டத்தட்ட தலைகீழாக ஒரு சிறிய வெடிப்புவழியாக வெளிவருவோம், குழந்தை கருவிலிருந்து வெளிவருவதுபோல.

புனர்ஜனி நுழைந்து வருவதென்பது மறுபிறப்பு. பாவங்களை எல்லாம் உதறிவிட்டு முற்றிலும் புதிதாகப்பிறப்பது அது. ஆனால் ஒல்லியானவர்கள் மட்டுமே அப்படிச்செய்ய முடியும். உள்ளே மாட்டிக்கொண்டால் மரணம்தான். சமீபகாலமாக புனர்ஜனி பிரபலமாகி வணிக நோக்குடன் குகையைப் பெரிதாக்கியிருப்பதாகத் தகவல். தமிழகத்திலும் சில கோயில்களின் உட்பக்க சுற்றுப்பிராகாரம் இதேபோல இடுங்கலாக அமைக்கப்பட்டிருக்கும், புனர்ஜனி என்று பெயரும் இருக்கும். சிறிய துளை வழியாக மட்டுமே வெளியே வரமுடியும். காஞ்சிபுரம் கோயில் ஒன்றில் அப்படி நுழைந்த நினைவு இருக்கிறது.கர்நாடக சமணக்கோயில்கள் சிலவற்றில் இந்த அமைப்பு உண்டு.

இத்தகைய குகைகளை பிலங்கள் என்கிறார்கள். மலைகளில் உருவாகும் குகைகளுக்கும் பிலங்களுக்கும் உள்ள வேறுபாடு பிலங்கள் என்பவை ஒரு

வகையான பாதைகள் என்பதுதான். மண்ணுக்குள் பலவகையான பிலங்கள் இருக்கலாம். பழங்காலப் புராணங்கள் அனைத்திலும் காவேரி தஞ்சை அருகே ஒரு பிலத்துக்குள் நுழைந்து மறைந்து விட்டதாகவும் சோழன் தவம்செய்து அதை மீட்டதாகவும் சொல்லப்பட்டிருக்கிறது. பெரும் நதிகள் பாயும் சுண்ணாம்பு நிலமான ஆந்திராவில் ஏராளமான புகழ்பெற்ற பிலங்கள் உள்ளன. பல பிலங்கள் நெடுங்காலமாகவே வழிபாட்டிடங்களாக உள்ளன.

ஆந்திரத்தில் பேலம் மாவட்டத்தில் உள்ள பேலம் பிலம் (Belum Caves) இந்தியாவில் உள்ள இயற்கைப்பிலங்களில் இரண்டாவது பெரியது. (முதல்பெரிய பிலம் மேகாலயாவில் உள்ளது). கோஸ்தனி ஆற்றின் கரையில் உள்ளது இந்த பேலம் பிலம். போரா குகைகள் விசாகப்பட்டினம் அருகே உள்ளன. உண்டவல்லி குகைகள் (Undavalli) கிருஷ்ணா ஆற்றின் கரையில் உள்ளது. இது ஒரு வைணவத்தலம். யுகாந்தி (Yaganti) குகைகள் என்பவை ஏராளமான சிறு குகைகளின் தொகுப்பு. நரசாப்பேட் அருகே உள்ள குத்திகொண்டா (Guthikonda) குகைகளும் புகழ்பெற்றவை. இவற்றுக்கு பொதுவாக அதிக சுற்றுலாப்பயணிகள் செல்வதில்லை. இவற்றில் சில பிலங்கள் பெரும்சாலைகள் அளவுக்கு அகலமானவை, பற்பல கிளைகள் கொண்டவை.

கான்பரா பகுதிக்கு ஒரு சிறப்பு உண்டு. மெல்பேர்னில் இருந்து கான்பரா வரும்போது அதை உணரலாம். விரிந்த சமவெளி வழியாக வரும் நாம் சட்டென்று ஒரு பெரிய பள்ளத்துக்குள் இறங்க ஆரம்பிக்கிறோம். பின்னர் நம்மைச்சுற்றி உயரமில்லாத ஒரு மலைத்தொடர் வட்டமாகச் சூழ்ந்திருப்பதை உணர்கிறோம். உண்மையில் அது மலை அல்ல. கான்பரா பகுதி ஆழமான ஒரு பள்ளம். சூழ்ந்திருக்கும் மேட்டு நிலத்தின் விளிம்புதான் பள்ளமாக தெரிகிறது. இப்பகுதி பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு கடலாக இருந்தது. கடல் பின்வாங்கி உருவான நிலம் இது.

இந்தப்பகுதி கடலாக இருந்தபோது இந்த நிலத்தில் நீர் உப்புப்படுகைகளைக் கரைத்து உருவாக்கிய பிலங்கள் பல இருந்தன. அவற்றில் ஒன்றுதான் கேரி பிலம் என்று சொல்லப்படும் குகைகள். கான்பராவில் இருந்து வீ ஜாஸ்பர் கிராமத்துக்குச் சென்று ஆறு கி.மீ. வெளியே சென்றால் கேரி பிலத்தைச்

சென்றடையலாம். வீ ஜாஸ்பர் என்ற ஊர் ஆளரவமில்லாத ஒரு பெரும் சமவெளியில் உள்ளது . அந்தக் கிராமத்தில் நூறு வீடுகள் இருக்கின்றன. ஏப்ரல் பதினேழாம் தேதி காலையில் நானும் அருண்மொழியும் மதுபாஷினியும் ரகுபதியின் காரில் கிளம்பி பத்து மணிக்கு அங்கே சென்றுசேர்ந்தோம்.

அந்தச் சமவெளியைப் பார்க்கவே ஆச்சரியமாக இருந்தது. உண்மையிலேயே ஒரு கடலின் அடிப்பகுதியைப்போல. எங்கு நோக்கினாலும் சுண்ணாம்புப்பாறைகள். சுதைப்பூச்சு மழையில் கருகி வரும் சாம்பல்நிறம் கொண்ட பாறைகளின் மீது நீர் ஓடி ஓடி உருவான வகைவகையான வடிவங்கள். கோடுகள், புரிகள், மடிப்புகள், அலைகள். அதுவரை சாலையில் ஒரு இதமான இளவெயிலும் வெம்மையும் இருந்தது. சமவெளிக்குள் வந்ததுமே காற்று கடுமையாக அடிப்பது தெரிந்தது. குளிரும் இருந்தது.

நாங்கள் வீ ஜாஸ்பர் வந்தோம். மிகச்சின்ன ஒரு கிராமம். கண்ணில் பட்ட ஒருவரிடம் விசாரித்து சற்று தள்ளி இருந்த குகைகளைப் பார்க்கச் சென்றோம். அங்கே ஒரு கொட்டகை. அதன் முன்னால் சில சிறிய கொட்டகைகள், கழிப்பறை. ஏற்கனவே இரண்டு கார்கள் வந்திருந்தன. அவ்வளவுதான். குகைக்குள் கூட்டிச்செல்வதற்காக ஒரு தடித்த வெள்ளையர் இருந்தார், அவர்தான் காவலர் வழிகாட்டி ஆராய்ச்சியாளர் எல்லாமே. குகைகள் கிட்டத்தட்ட அவரது சொந்தவீடு மாதிரி. அந்த அத்துவானக்காட்டில் அந்த இடம் மீது அபாரமான பிரேமை இல்லாமல் அந்த வேலையைச் செய்ய முடியாது. நரைத்த தாடி, நல்ல தொப்பை, நல்ல உயரம். கிட்டத்தட்ட ‘பைவ் மேன் ஆர்மி’ படத்தில் தண்டவாளத்தை பெயர்த்து வைக்கும் குண்டர் போல இருந்தார்.

அருண்மொழி அவரது படத்தை எடுக்க மறந்து விட்டாள். திரும்பும் வழியில் சொல்லிக்கொண்டே இருந்தாள். அவரது ஆர்வக்கோளாறு மொழிதெரியாதவர்களுக்கு கொஞ்சம் சித்திரவதை என்றாலும் அவரது அர்ப்பணிப்பு மிக வியப்பூட்டுவது. இணையத்தில் தேடியபோது கொஞ்சம் சின்ன வயதில் அவர் மாணவர்களுக்கு வீ ஜாஸ்பர் குகைகளை விளக்கிக் கொண்டிருக்கும் புகைப்படம் கிடைத்தது. சந்தோஷமாக இருந்தது அது.

ஆசாமி சரசரவென பேசிக்கொண்டே இருந்தார். ஆஸ்திரேலிய ஆங்கிலத்தில். தொண்ணூறு விழுக்காடு புரியவில்லை. ஆனால் பிற வெள்ளையர் குலுங்கிச் சிரிப்பதைக் கேட்டபோது மிக வேடிக்கையாக ஏதோ சொல்கிறார் என்று தெரிந்தது. அருண்மொழி குளிர்கிறது என்று சாக்ஸைப்போட்டுக்கொண்டாள். ‘ஆ, இவர் ஒரு கல்வியாளர்? என்றார். கல்வியாளர்கள்தான் செருப்புக்கு சாக்ஸ்போடுவார்களாம். இவர்கள் இந்தியாவில் இருந்து வந்திருக்கிறார்கள் என்றார் மதுபாஷினி. நான் இந்தியா பற்றிய டிஸ்கவரி சேனல் நிகழ்ச்சியை இப்போது பார்க்கிறேன் மிக நன்றாக இருக்கிறது என்றார். இந்தியர்கள் ‘பிரெய்னி பீப்பிள்’ என்று தோளைத் தூக்கினார்.

அவரே எங்களை கூட்டிச்சென்றார். குகைக்குள் இறங்கிச்சென்றோம். முதலில் சற்று கண்கள் தடுமாறின, பின்னர் உள்ளே உள்ள வெளிச்சத்துக்கு கண்பழகிவிட்டது. கிட்டத்தட்ட ஒரு குட்டிக் கலையரங்கம் அளவுக்கு உள்ளே இடமிருந்தது. விசித்திரமான கலைக்கூடம். அந்தக்குகையின் மேல்கூரை சுண்ணாம்புக்கல்லால் ஆனது. சுண்ணாம்பிலிருந்து நீர் ஊறியூறி மெல்லிய சொட்டுகளாக விழுந்துகொண்டே இருக்கிறது. இவ்வாறு வருடக்கணக்காக விழும் சொட்டுகள் அவற்றில் உள்ள உப்பையும் பிற கனிமங்களையும் அப்படியே படிகமாக ஆக்கி தங்க வைக்கின்றன. ஆகவே அவை நீளமான கூம்புகளாகவும் விழுதுகளாகவும் கூரையில் இருந்து தொங்கிக்கிடக்கின்றன. மலேசியாவில் குவாலாலம்பூர் அருகே உள்ள ‘பத்து’ குகைகளில் இதேபோல மாபெரும் கூம்புகளைக் காணலாம். பிரம்மாண்டமான வெண்பன்றி ஒன்றின் அடியில் அதன் ஏராளமான முலைகளுக்குக் கீழே நிற்பதைப்போல் இருந்தது. பலமுலைக்காம்புகளில் பால் சொட்டி நின்றது. பனித்துளி போல ஒளிவிடும் தூய நீர்.

வழிகாட்டி பேசிக்கொண்டே இருந்தார். 1875ல் ஜான் கேரி (John Carey) இந்தக் குகைகளைக் கண்டுபிடித்தார். அன்றுமுதல் ஆய்வாளர்களின் தொடர்ச்சியான கவனத்துக்குரிய ஒன்றாக இந்த இடம் இருந்து வருகிறது. இதில் ஏழு தனி அறைகள் அல்லது கிளைக்குகைகள் உள்ளன. மேலே இருந்து கூம்புகள் தொங்க கீழே பலவகையான கூம்புகள் நிற்க சட்டென்று ஒரு பெரும் சுறாவின் வாய்க்குள் அதன் வெண்பற்கள் நடுவே உலவுவது போன்ற பிரமை எழுந்தது. லட்சக்கணக்கான ஆண்டுகளுக்கு முன் இப்பகுதி

கடலின் அடிநிலமாக இருந்தபோது நீரில் அரித்து உருவான இந்தக் குகைக்குள் பலவகையான அடிக்கடல் உயிர்கள் வாழ்ந்திருந்தன. அவற்றின் சிப்பிகளினால் ஆன சுண்ணாம்புப்படுகை இது. இவற்றில் பலவகையான கனிமங்கள் கலந்து பல வண்ண வடிவங்களை உருவாக்கியிருக்கின்றன.

மிகச்சிறப்பாக, நுண்ணிய கற்பனையுடன் ஒளியமைப்பு செய்யப்பட்டிருந்தன அக்குகைகள். நேரடியாக விளக்குகளைப்போடாமல் சுண்ணாம்புப்படிவப் பாறைகளின் உள்ளே பல ரகசிய மடிப்புகளுக்குள் விளக்குகள் எரிந்தன. சில பாறைகள் தீக்கனல்கள் போல் எரிந்தன. சில தங்கம் உருகி நிற்பதுபோல தகதகத்தன. சில இளநீல நிறத்தில் சுடர்விட்டன. வழிகாட்டி எங்களை ஒரு கூம்பை சுட்டிக்காட்டி அது படிகமா என்றார். இல்லை என்றார் ஒரு பெண். ஏன் என்றார். படிகம் என்றால் ஒளிவிடும் என்றார் அவர். அவர் ஏற்கனவே வெட்டி வைத்திருந்த ஒரு சிறிய கூம்புக்குள் சுட்டிக்காட்டினார். மேலே சுண்ணத் துகள்கள் திரண்டிருந்தது போல காணப்பட்ட அந்தக் கூம்புக்குள் உள்ள வெட்டுப்பகுதி கண்ணாடி உடைந்தது போல பளபளத்தது. ‘மேல் தோற்றத்தை நம்பக்கூடாது. ஒளி உள்ளே இருக்கும்…’ என்று ஒரு தத்துவத்தைச் சொன்னார்.

இன்னொரு அறைக்குள் கொண்டு சென்று அங்கிருந்த நாற்காலிகளில் அமரச்செய்தார். அந்தக் கூடத்தின் நடுவே ஒரு விழுது விளக்கொளியில் ஒரு தங்கத்தூணாக ஜொலித்தது. அதன் கீழே ஒரு உருளைப்பாறை சுடர்விட்டது. இந்தியாவென்றால் அந்த பாறை ஒரு புகழ்பெற்ற லிங்கமாக ஆகியிருக்கும். இயற்கை தானாகவே உருவாக்கும் மிகப்பரவலான வடிவம் என்றால் அது லிங்கம்தான். அந்த வடிவம் அவ்வாறுதான் இயற்கையில் இருந்து எடுக்கப்பட்டது. கா என்றழைக்கும் பறவைக்குக் காக்கா என்று பெயரிடுவது போல ஆதிமனித மனம் இயற்கையின் உள்ளே உறைந்துகொண்டு ஓயாது லிங்கங்களை உருவாக்கும் அந்த ஆற்றலுக்கு அந்த லிங்க வடிவத்தையே அளித்தது போலும்!

வழிகாட்டி எல்லா விளக்குகளையும் அணைத்தார். பின்னர் மெல்ல மெல்ல ஒவ்வொரு விளக்காக போட்டார். விளக்குகள் மாறும் தோறும் அந்த இடம் மாறி மாறி தோற்றம் காட்டியது. பாறைகளின் வடிவங்களும் நிறங்களும்

மாறுபட்டன. ஒளி வழியாக அந்த இடமே பயணம் செய்துகொண்டிருப்பதுபோல. அஜந்தா குகைகளுக்குள் உள்ள புத்தரின் சிலை மேல் வலதுபக்கமிருந்து ஒளியை அடித்து காட்டுவார்கள். புத்தர் புன்னகைசெய்வது போலிருக்கும். இடப்பக்கமாக அதே ஒளியை அடித்துக்காட்டும்போது அதே சிலை வருத்தம் கொண்டது போல் இருக்கும். பாறைகள் ஆழ்ந்த துயரத்தில் மூழ்கின, சட்டென்று புன்னகையில் முகம் மலர்ந்தன. மீண்டும் கனவில் ஆழ்ந்தன.

1957ல் காரியின் குகையில் இப்போது இனமழிந்துபோன நீர்வாழ் உயிரினம் ஒன்றின் முதுகெலும்பு கண்டெடுக்கப்பட்டது. அதற்குப்பின் பாறைப்படிவங்களுக்கான விரிவான ஆய்வுகள் இந்தக்குகையில் செய்யப்படுகின்றன. அந்தச்செய்தியைக் கேள்விப்பட்டபின் எல்லா இடங்களிலும் ஏதோ ஓர் உயிரினத்தின் உடல் பாறையாக மாறிவிட்டிருப்பது போன்ற ஒரு பிரமை உருவானது. அதற்கேற்ப வழிகாட்டி பல இடங்களைக் கண்டுபிடித்து அவற்றுக்கு தனி விளக்குகள் போட்டு காட்டியிருந்தார். வெள்ளைக்காரர்களின் பிரபலமான சைகையான மலக்குழிக்குள் விரலிடும் ஒருவிரல் முத்திரை போல ஒரு இடத்தை விளக்கமைத்து ஆர்வமாகக் காட்டினார்.

குகைக்குள் பல ஒதுக்குபுறமான இடங்களில் பென்சிலாலும் கரியாலும் பெயர்கள் எழுதப்பட்டிருந்தன. ஹாரி டேவிட்சன் லிஸ் பெர்த்தை காதலிக்கும் தகவல் தெரியவந்தது. தமிழ்பெயர்கள் இருக்க வாய்ப்புண்டு என்ற ஆர்வம் ஏற்பட்டது, வரலாற்றுச்சின்னங்களில் பெயர் பொறிக்கும் வேட்கை தமிழர்களிடம் அதிகம். சேரன் செங்குட்டுவனே அதைச் செய்ததாக பிரபல வதந்தி பாடப்புத்தகங்களில் உண்டு. ஆனால் இத்தனை அக்கறையான வழிகாட்டி இருக்கையில் எப்படி அதை எழுதினார்கள். அருண்மொழி ‘ஜெயன் டேட்டைப்பார்’ என்றாள். தேதியைப்பார்த்தேன். ஆச்சரியம், 1892 நவம்பரில் எழுதப்பட்டது அது. பெரும்பாலான பெயர்கள் நூறு வருடம் பழக்கம் உள்ளவை. ஹாரி டேவிட்சனின் மகனுக்கே எண்பது வயதாகியிருக்கும்!

மீண்டும் குகைமத்திக்குக் கூட்டி வந்து அமரச்செய்து விதவிதமான பாறைகளைக் காட்டினார் வழிகாட்டி. ஒவ்வொரு பாறையும் ஒவ்வொரு கனம். சில பாறைகள் கரிய படிக வடிவம் கொண்டவை. சில பாறைகள் வண்டலே

பாறையாக ஆனவை. அவர் சொல்லிக்கொண்டே இருந்த நிலவியல் தகவல்கள் எதுவுமே என் மனதுக்குள் ஏறவில்லை. ஆனால் இதைப்போலவே இயற்கை அற்புதங்களான ஆந்திரமாநிலத்து குகைகள் முற்றிலும் கவனிப்பில்லாமல் கைவிடப்பட்டு கிடக்கும் விதம் மனதை எரியச்செய்தது.

வெளியே வந்தபோது வெளிச்சம் வந்து கண்களில் கொட்டியது. வெளியே நாங்கள் வரவும் ஒரு கடுமையான தூசிப்புயல் அடித்து கடந்து சென்றது. வீ ஜாஸ்பர் தாழ்வான பகுதி என்பதனால் மேலே இருந்து மண்கொட்டும் காற்று அடிக்கடி அடிக்குமாம். மண்புயல் வந்தது போலவே சென்றது. வெயில் உடனே மீண்டு குளிரும் விலகியது. அந்தக்குகைக்குள் அத்தனை நேரம் இருந்திருக்கிறோம் என்பதே ஆச்சரியமாக இருந்தது. அந்த குகை மீன்களின் புனர்ஜனியாக இருக்கலாம் என வேடிக்கையாக எண்ணிக்கொண்டேன்.

13. வேட்டையும் இரையும்

மெல்பேர்ன் நகரில் இப்போது இந்திய மாணவர்கள் ஆயிரக்கணக்கில் திரண்டு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகிறார்கள். மாணவர்கள் மேல் நடக்கும் இன ரீதியான தாக்குதல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்தப்போராட்டங்கள் நடைபெறுகின்றன. சென்ற சிலநாட்களாக இந்திய மாணவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஆந்திராவைச் சேர்ந்த ஒருவர் கத்தியால் குத்தப்பட்டிருக்கிறார். பஞ்சாபைச்சேர்ந்த ஒருவர் மேல் பெட்ரோல் குண்டு வீசப்பட்டிருக்கிறது. அவற்றை இனம் தெரியாத இளம்வயது குற்றவாளிகள் செய்திருக்கிறார்கள்.

அவை இனக் காழ்ப்பின் வெளிப்பாடுகள் என இந்திய மாணவர்கள் சொல்கிறார்கள். பேட்டிகளில் மாணவர்கள் சிலர் தனிப்பட்ட முறையில் பல்கலை வட்டாரங்களில் இன ஒடுக்குமுறை காணப்படுவதாகவும் அவையே இவ்வாறு வன்முறையாக வெடிக்கின்றன என்றும் சொன்னார்கள். ஆஸ்திரேலிய அரசு அத்தாக்குதல்கள் இனக்காழ்ப்பு கொண்டவை அல்ல என்றும் அவை திருட்டு நோக்கம் கொண்ட குற்றங்களே என்றும், அவற்றைச் செய்தவர்கள் பொதுவாக பலவீனமான சிறுபான்மையினர் என்பதனால்தான் இந்தியர்களை தேர்வுசெய்திருப்பதாகவும் சொல்கிறது.

இவை எந்த அளவில் உண்மை என்று இப்போது சொல்ல முடியாது. பயணிக்கு ஒரு நாட்டை புதிய கண்களுடன் பார்ப்பதனால் சில நுண்மனப்பதிவுகள் கிடைக்கின்றன. அதேசமயம் உள்ளே உள்ள பல விஷயங்கள் கண்ணுக்குப் படாமலும் போகின்றன. ஆனால் நான் ஆஸ்திரேலியாவில் இருந்தபோது பேராசிரியர் ஆசி. கந்தராஜா மற்றும் அவரது

மகன் ஐங்கரன் இருவருடனும் உரையாடிய விஷயங்களை இவற்றுடன் தொடர்புபடுத்திக் கொள்ளும்போது எனக்குச் சில புரிதல்கள் உருவாகின்றன.

பொதுவாக வளங்கள் பங்கிடப்படும்போதுதான் இனக்காழ்ப்புகள் உருவாகின்றன, அல்லது உருவாக்கப்படுகின்றன. ஆஸ்திரேலியாவில் இனங்கள் நடுவே ஒற்றுமை இருப்பதற்கு அங்குள்ள ஏராளமான நிலவளம் முக்கியமான காரணம். இந்தியச்சூழலில் பொதுவாக அடிப்படை உழைப்புத்தளங்களில்தான் இனவாதம் முதலில் வெளிப்படும். ஆனால் ஆஸ்திரேலியாவில் நான் விசாரித்தவரை அப்படி அத்தளங்களில் இல்லை என்றே அனைவரும் சொன்னார்கள்.

அப்படியானால் கல்வியில் குறிப்பாக உயர்கல்வித்துறையில் இப்பிரச்சினை எழுவதற்கான காரணம் என்ன? மூன்று அமைப்புகளில் அங்கே கடைப்பிடிக்கப்படும் கொள்கைக்கு இப்போது உருவாகியிருக்கும் நிலைமையுடன் தொடர்புண்டு. ஒன்று , ஆரம்பக்கல்வி. இங்குள்ளது போன்ற கடுமையான பயிற்சிமுறைகள் அங்கே இல்லை. குழந்தைகள் உற்சாகமாகக் கற்கும்பொருட்டு எளிமையான கல்வியே உள்ளது. கிட்டத்தட்ட பழங்கால ஆயுதப்பயிற்சி களரிகளில் உள்ளது போன்ற மிகக்கடுமையான பயிற்சிகள் வழியாக கடந்துவந்த இந்திய, ஜப்பானிய மாணவர்கள் கடுமையாக உழைக்கவும் கவனத்தை ஒருங்கிணைக்கவும் பழகியிருக்கிறார்கள். ஆகவே மிக இயல்பாக அவர்கள் கல்வியில் மேலாதிக்கம் பெறுகிறார்கள்.

இரண்டு, குடும்பம். இந்தியக்குடும்பம் ஓர் இளைஞனை அவன் விரும்பிய உயர்கல்வி பெற்று வெளியே வந்து வாழ்க்கையை அமைத்துக்கொள்வதுவரை தாங்கி நிற்கிறது. பொருளாதார ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும். ஆனால் ஆஸ்திரேலியாவில் ஐரோப்பாவில் உள்ளதுபோல குடும்பம் இளைஞனை பதினெட்டுவயதுக்குமேல் புரப்பதில்லை. அவன் வெளியேற நேர்கிறது. ஆகவே உயர்கல்வியை அவன் தானே உழைத்து பொருள்சேர்த்து பெற வேண்டியிருக்கிறது. அத்துடன் குடும்பம் இல்லாத நிலையில் அவன் அடையும் உணர்ச்சி அலைக்கழிப்புகள் மற்றும் வழிதவறல்கள் அவனை கல்வியிலிருந்து விலக்குகின்றன.

மூன்றாவதாக, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் உள்ள உயர்கல்விக் கொள்கை. உயர்கல்வியை ஒரு வணிகமாகவே ஆக்கியுள்ளன அங்குள்ள பல்கலைகள். அரசு நிதி அனேகமாக இல்லை. ஆகவே கல்விக்கட்டணம் மிக அதிகம். கல்வியை முக்கியமான ஒரு ஏற்றுமதியாக கொண்டிருக்கிறது ஆஸ்திரேலியா. உயர்கல்விக்கான இடங்கள் வெளிநாட்டு மாணவர்களுக்கு விற்கப்படுகின்றன. கிட்டத்தட்ட அறுபதாயிரம் இந்திய மாணவர்கள் பயில்கிறார்கள்.

இந்த நிலையில் அங்குள்ள ஆஸ்திரேலிய மாணவர்கள் இந்திய மாணவர்கள் மீது காழ்ப்பும் கசப்பும் கொண்டிருப்பதை புரிந்துகொள்ள முடிகிறது. அக்கசப்பு இவ்வாறு இன மதக் காழ்ப்பாகவே வெளிவரும். கிட்டத்தட்ட இதேநிலை ஜவகர்லால் நேரு பல்கலை போன்ற வட இந்தியப் பல்கலைகளில் உள்ளது. தென்னிந்திய மாணவர்களுடன் சாதாரணமாக பிகாரிகள், உத்தரபிரதேசக்காரர்கள் போட்டி போட முடிவதில்லை. ஆகவே 'மதராசி' என்றும் 'சாம்பார்' என்றும் கிண்டல்செய்வதும் தாக்குவதும் வழக்கமாக நடைபெறுகிறது. தென்னிந்திய மாணவர்கள் அதற்காக குழுக்களாகவே இருக்கிறார்கள். ஆனால் தென்னிந்திய தலித்துக்கள் தனிக்குழுக்களாக இருக்கிறார்கள்.

இன்று ஆஸ்திரேலியாவில் நிகழும் இந்த வன்முறை இந்தியப் பல்கலைகளில் நிகழாத நாளே இல்லை. ஆனால் நாம் இம்மாதிரி விஷயங்களில் அதீதமாக உணர்ச்சி வசப்படுகிறோம். அதற்கான அருகதை நமக்கு பெரும்பாலும் இல்லை என்பதே உண்மை. முன்பு ஒருமுறை பிரிட்டிஷ் டிவி நிகழ்ச்சி ஒன்றில் ஒரு நடிகை இந்திய நடிகை ஒருவரை இனக்காழ்ப்புடன் வசைபாடினார். அதற்கு எதிராக கிளர்ந்தெழுந்தது பிரிட்டிஷ் குடிமக்கள்தான். ஆனால் இந்திய ஊடகங்கள், தமிழ் இதழ்கள் அதை பெரிதுபடுத்தின. அதே நாளில் இங்கே பல தலைமுறைகளாக வாழும் வட இந்தியர்களை துரத்த வேண்டும் என ஓர் அரசியல்கட்சி வெளிப்படையாக அறைகூவல் விடுத்து தொலைக்காட்சியில் நிகழ்ச்சிகள் நடத்திக்கொண்டிருந்தது. இன,மொழிக் காழ்ப்புகளை வெல்வதற்கான ஒரேவழி நாம் அவற்றை தாண்டிச்செல்வதே.

நியூசிலாந்தில் இந்தியர்கள் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே பிரிட்டிஷாரால் அடிமைகளாகக் குடியேற்றப்பட்டார்கள். இவர்களில் ஒருசாரார் பின்னர் ஆன்ஸாக் படைகளில் சேர்க்கப்பட்டு கலிபோலி போரிலும் பங்கெடுக்கச் செய்யப்பட்டார்கள். ஆனால் இவர்களுக்கு ஆஸ்திரேலியக் குடியுரிமை வழங்குவதை நெடுங்காலம் இன அடிப்படையில் ஆஸ்திரேலியா தடுத்து வைத்திருந்தது. இவர்களில் சீக்கியர்கள் அதிகம். இத்தகவல்களை இப்போது ஆஸ்திரேலியாவின் அதிகாரபூர்வ வரலாறுகளில் காணமுடிகிறது. இப்போது சீக்கியர்கள் ஆஸ்திரேலியாவில் ஏராளமாக வசிக்கிறார்கள். வாழைப்பழ வேளாண்மை கிட்டத்தட்ட அவர்கள் கையிலேயே இருக்கிறது.

ஆம் தேதி மாலையில் கான்பரா நகரில் நானும் அருண்மொழியும் ரகுபதியும் மதுபாஷினியும் அவர்கள் மகள் துகிதையுடன் நகர் நடுவே உள்ள ஏரிக்கரைக்குச் சென்றோம். இந்திய மாலைக்குப் பழகிய எனக்கு குளிர் சற்று அதிகமாக தெரிந்தது என்றாலும் மிக இனிமையான ஒரு அந்தி அது. ஏரி மாலையொளியில் சிவந்து கங்காகி அணைந்துகொண்டிருந்தது. வேறு ஒரு நிலத்தில் வேறு ஒரு அந்தி. ஒருவேளை மீண்டும் திரும்பிவரவே முடியாத நிலம் என எண்ணிக்கொண்டபோது எழுந்த மனஎழுச்சி அபூர்வமாக இருந்தது.

துகிதையை தூக்கிப்போட்டு விளையாட்டுக் காட்டினேன். அருண்மொழி அங்கே வந்த ஒரு பறவையை புகைப்படமெடுப்பதில் ஆர்வமாக இருந்தாள். நீரில் நீந்தும் புறா என்று அதை புரிந்துகொள்ளலாம். ஆஸ்திரேலியாவின் உள்ளூர் பறவைகளில் ஒன்று. புகைப்படம் எடுக்கப்பட்டு சலித்துப்போயிருக்கும்போல. பெரிதாகப் பொருட்படுத்தவில்லை. குற்றாலத்தில் குரங்குகள் என்றால் ‘போஸ்’கூட கொடுக்கும்.

ஆஸ்திரேலியாவின் மையப்பிரச்சினையே அங்கே ‘குடியேறும்’ உயிரினங்களுக்கும் அங்கேயே உள்ள உயிரினங்களுக்கும் இடையேயான ஒத்திசைவுதான். பொதுவாக அங்கே குடியேறும் உயிரினங்கள் அவற்றின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருந்த எதிர் உயிரியல் காரணி இல்லாததனால் கட்டற்று பெருகி கண்டத்தையே விழுங்க முற்படுகின்றன.

உதாரணமாக முயல்கள். ஆஸ்திரேலியாவுக்கு முயல்கள் பிரிட்டிஷாரால் கொண்டுவரப்பட்டன. முயல்கள் கப்பல்களில் உணவுக்காக வளர்க்கப்பட்ட

உயிரினங்கள். எளிதில் செழித்து பெருகும். குறைவான உணவு போதும். 1788ல் முயல்கள் ஆஸ்திரேலியாவுக்குள் நுழைந்தன என்று சொல்லப்படுகிறது. அங்கே அவை பெருகினால் உணவுக்கு உதவும் என்றே கொண்டு விடப்பட்டன. முப்பது வருடங்களுக்குள் அவை பெருகி ஆஸ்திரேலியாவின் பிரம்மாண்டமான நிலப்பரப்பிலேயே நெரிசலை உருவாக்க ஆரம்பித்தன. 1827ல் டாஸ்மேனியாவில் அவை பயிர்களை அழிக்கும் பெரிய நாசகார சக்தியாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றன.

கோடைகாலம் மிகுந்த நாடுகளில் முயல்கள் குளிர்காலத்தில் மட்டுமே இனப்பெருக்கம் செய்யும். ஆஸ்திரேலியாவில் குளிர்காலமே அதிகமென்பதனால் அவற்றின் காதல்திறன் வளர்ந்தது. புல்வெளிகள் அளவில்லாத உணவு வழங்கின. அவற்றைக் கொன்று தின்னும் மிருகங்கள் அனேகமாக இல்லை. ஆகவே அவற்றின் வளர்ச்சி தடையில்லாததாக இருந்தது.

1859 வாக்கில் வருடத்துக்கு இருபது லட்சம் முயல்கள் பிடித்து தின்னப்பட்டன. ஆனாலும் முயல்களின் எண்ணிக்கையில் குறைவே ஏற்படவில்லை. ஆஸ்திரேலியப்பண்ணைகள் முயல்களால் அழிக்கப்பட்டன. 1901ல் முயல்களின் தொல்லையை களைவதற்கென்றே ஒரு ஆய்வுக்குழு அமைக்கப்பட்டது. முயல்கள் முழுமூச்சாக வேட்டையாடி அழிக்கப்பட்டன. கான்பரா நகரின் அருங்காட்சியகத்தில் அன்றைய முயல்வேட்டையின் அரிய புகைப்படங்கள் உள்ளன. முள்ளங்கியை லாரி லாரியாகக் கொண்டுசெல்வதுபோல செத்த முயல்களைக் கொண்டுசெல்கிறார்கள். முயல்தோலால் ஆன கோட்டுகள், காலுறைகள், போர்வைகள், கூடாரக்கூரைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. கையுறைகளுக்காக முயலின் தோல் ஏற்றுமதியும் செய்யப்பட்டது.

முயல் ‘தொல்லை’ இருபதாம் நூற்றாண்டின் ரசாயனப்போர் மூலமே கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது என்கிறார்கள். ஆனால் முதல் உலகப்போரை ஒட்டி உருவான பொருளியல் நெருக்கடியை எளிய மக்கள் முயலிறைச்சியை வைத்தே சமாளித்தார்கள் என்று சொல்பவர்கள் இருக்கிறார்கள்.

முயலைப்போல ஆஸ்திரேலியாவுக்கு வந்து பெருகிய இன்னொரு உயிரினம் டிங்கோ என்னும் நாய். இதை ஃபெரல் மிருகம் என்கிறார்கள். பழகிய மிருகம் காட்டுச்சூழலில் மீண்டும் காட்டுமிருகமாக ஆவதை அப்படிச் சொல்கிறார்கள். அதாவது மீள்கானுயிர். டிங்கோவை நேரில் பார்க்கவேண்டுமென்றால் மத்திய ஆஸ்திரேலியாவின் காடுகளுக்குள்தான் செல்லவேண்டும். அது எங்களுக்குச் சாத்தியப்படவில்லை. அதன் பதப்படுத்தப்பட்ட உடலைத்தான் அருங்காட்சியகத்தில் பார்த்தேன். கிட்டத்தட்ட நம்மூர் செந்நாய், அல்லது தெருநாய். பெரிய காதுகள். சூம்பிய கூர்முகம். பெரிய கரிய நாசி. அதிக உயரமில்லை.

டிங்கோ என்ற பெயர் வளர்ப்புநாயைக் குறிக்கும் ஆஸ்திரேலியப் பழங்குடிகளின் வார்த்தையில் இருந்து வந்தது. டிங்கோக்கள் ஆஸ்திரேலியாவுக்கு வெளிமனிதர்கள் கொண்டுவந்து வளர்த்த முகாம் நாய்கள் காட்டுக்குள் சென்று குடியேறி மெல்ல மெல்ல காட்டுக்குணங்களை வளர்த்துக்கொண்டு உருவானவை என்பது அவற்றின் வேட்டை இயல்புகளைப் பற்றி படிக்கும்போது பெரிதும் வியப்பளிக்கிறது.

டிங்கோ பொதுவாக தனியாகத்திரியும் நாய். ஆனான் தேவையென்றால் அவை மிகச்சிறப்பாக ஒரு குழுவாக இயங்கும். டிங்கோக்களின் வேட்டை உணவு எலிகள் சிறிய பூச்சிகள் முதல் பிரம்மாண்டமான எருமைகள் வரை பரந்திருக்கிறது. கங்காருகளை அதிகம் வேட்டையாடும் மிருகம் டிங்கோக்களே. தனிக்கங்காருவை துரத்தி தன் குழுவை நோக்கிக் கொண்டுசென்று குழுவாகச் சூழ்ந்துகொண்டு வேட்டையாடும். கங்காருகளை ஓடிக்களைக்கவைத்துக் கொல்லும் வழக்கம் உண்டு. பெரிய கங்காருகளை துரத்திக்கொண்டுசென்று முள்கம்பிவேலியில் மாட்டவைத்துக் கொல்வதும் உண்டு என்று வாசித்தேன்.

கான்பரா அருங்காட்சியகத்தில் டிங்கோவை மீண்டும் நினைவுற்றது நெட் கெல்லியைப்பற்றிய தகவல்களை அருங்காட்சியகத்தில் பார்த்தபோதுதான். அந்த ஊர் செம்புலிங்கம் அல்லது வீரப்பன். அவரது அப்பா ரெட் கெல்லி அயர்லாந்து நாட்டைச்சேர்ந்த குற்றவாளி. ஆஸ்திரேலியாவுக்கு நாடுகடத்தப்பட்டு வந்தார். நெட்கெல்லி மெல்பேர்னில் 1855ல் பிறந்தார்.

சிறுவனாக இருந்தபோது நெட் கெல்லி ஒரு சிறுவன் நதியில் மூழ்காமல் காப்பாற்றினார். அதற்காக அச்சிறுவனின் குடும்பத்தார் அளித்த அடையாளத்தை கடைசிநாள் வரை அணிந்திருந்தார் என்கிறார்கள்.

சிறுவயதிலேயே திருட்டு அவருடைய விருப்பத்திற்குரிய வேலையாக இருந்திருக்கிறது. கன்றுகாலிகளை திருடிவந்தவர் பக்கத்துவீட்டுக்காரரின் மாட்டை கொன்று தோல் உரிக்கும்போது மாட்டிக்கொண்டார். கில்மோர் கோல் என்னும் இடத்தில் உள்ள சிறையில் ஆறுமாத காலம் தண்டனை அனுபவித்தார். அந்தச் சிறைவாசம் அவரை முழுமையான குற்றவாளியாக ஆக்கியது. அவருக்கு பதினொரு வயது இருக்கும்போது ரெட் கெல்லி மரணமடைந்தார்.

நெட் கெல்லியில் இனவாதம் எப்போதும் இருந்தது. பழங்குடியினரையும் சீனர்களையும் அவர் தாக்கிவந்தார். ஆ ஃபூக் என்னும் சீன பன்றி வளர்ப்பாளரை கொலைசெய்ய முயன்றதே அவரது முதல் பெரிய குற்றம். நெட் கெல்லி தன் பன்றிகளை திருடவந்ததாக ஆ சொன்னாலும்கூட நெட் கெல்லியின் தங்கையுடன் ஆ வுக்கு இருந்த தொடர்பே நெட் கெல்லியை கடுப்பேற்றியது என்கிறார்கள். அந்த குற்றத்தில் போலீஸ் நெட் கெல்லியிடம் கருணையுடன் நடந்துகொண்டது. அவரை அவர்கள் பத்துநாள் சிறைவாசத்துடன் விடுவித்தார்கள். காரணம் தாக்கப்பட்டது சீனர்.

நெட் கெல்லி தொடர்ந்து குற்றச்செயல்களில் ஈடுபட்டு வந்தார். 1870ல் ஜெர்மியா மெக் கோர்மெக் என்னும் வணிகரை தாக்கிக் கொள்ளையடித்தமைக்காக மீண்டும் கைதானார். அதற்காக மூன்றுமாத சிறைவாசம் கிடைத்தது. பின்னர் குதிரை திருட்டு சம்பந்தமான வழக்கில் மீண்டும் பதினெட்டு மாத சிறைவாசம்.

நெட் கெல்லியிடம் குற்றமனப்பான்மையுடன் இணைந்தே ஒருவகை நக்கலும் இருந்தது. அவரை பலர் ரசிக்க ஆரம்பித்தமைக்குக் காரணம் அதுவே. ஜெர்மியா மக் கோர்மெக் என்ற அந்த வணிகரின் குழந்தையில்லாத மனைவிக்கு ஆபாசமான ஒரு கடிதத்துடன் கன்று குட்டியின் விதைகளையும் வைத்து அனுப்பியதாகக் குற்றம் சாட்டப்பட்டார். குதிரை திருட்டுக்காக தன்னை பிடிக்கவந்த ஹால் என்ற போலிஸ் அதிகாரியை பிடித்து

குனியவைத்து அவர்மேலேயே குதிரை ஏறினார். இதெல்லாமே அவரது பதினாறு வயதுக்குள்.

1878ல் நெட் கெல்லி அவரது அம்மாவுடனும் தம்பியுடனும் திருட்டு மற்றும் காவலரை தாக்கிய வழக்குக்காக குற்றம் சாட்டப்பட்டார். கணவனை இழந்து மறுமணம் புரிந்து குழந்தையுடன் இருந்த அம்மா எல்லென் சிறைக்குச்செல்ல நேரிட்டது. நெட் கெல்லி பிடிபடவில்லை. நெட் கெல்லி சில வருடங்கள் கழிந்து பிடிபட்டு கொல்லப்படும் வரை எல்லென் சிறையில்தான் இருந்தார்.

நெட் கெல்லியும் அவரது தம்பியும் தலைமறைவாக இருந்தார்கள். அவர்களுடன் அவர்களின் நண்பர்கள் ஜோ பைர்னும் ஸ்டீவ் ஹார்ட்டும் சேர்ந்துகொண்டார்கள். அவர்களைப் பிடிக்க காவலர் படை தேடிவந்தது. அவர்கள் புல்வெளியில் முகாமிட்டு தேடினர். அப்போது அவர்கள் புறாக்களைச் சுட்ட ஒலியைக் கேட்டு உஷாரான நெட் கெல்லியும் தம்பியும் தேடிவந்து அவர்களைத் தாக்கினர். ஒரு காவலர் கொல்லப்பட்டார். இன்னொருவர் கடும் துப்பாக்கிச்சண்டையில் காயம்பட்டு தப்பினார். மூன்றாமவர் தப்பி ஓடிவிட்டார்.

போகும்போது ஒரு காவலரின் கைக்கடிகாரத்தை நெட் திருடிச்சென்றார். பின்பு விசாரணையில் ஏன் அப்படி செய்தார் என்று கேட்கப்பட்டபோது ‘செத்தவன் ஏன் நேரம் பார்க்கவேண்டும்?’ என்று நெட் கேட்டதாகச் சொல்லப்படுகிறது. இந்தக்கொலையைத் தொடர்ந்து இந்தக்குழுவை ஒரு குற்றவாளிக்குழுவாக அறிவித்த விக்டோரியா பாராளுமன்றம் அவர்களை கண்டதும் சுட உத்தரவிட்டது. அவர்களை பிடிப்பவர்களுக்கு 8000 பவுன் பரிசும் அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்து நெட் கெல்லி வங்கிகளைக் கொள்ளையடிக்க ஆரம்பித்தார். 1878ல் யூராவில் உள்ள தேசியவங்கியை இக்குழு கொள்ளையடித்தது. வங்கிக்குள் நுழைந்து அங்குள்ளவர்களைக் கட்டிப்போட்டு வன்முறையே இல்லாமல் அக்காலத்தில் பெருந்தொகையான இரண்டாயிரம் பவுண்டை கொள்ளையடித்துச் சென்றார்கள். நெட் ஒரு காவலரின் உடையில் இருந்தார். பொறுப்பான அதிகாரியை அறையில் அடைக்கும்போது கொள்ளையடித்தது யார் என்று அவர் மேலதிகாரியிடம் சொல்ல வேண்டுமென கேட்டபோதுதான் தான் நெட் கெல்லி என்று அவர் சொன்னாராம்.

நெட் கெல்லி அயர்லாந்தின் தேசிய உணர்வு கொண்டவராக தன்னைக் காட்டிக்கொள்ள ஆரம்பித்தார். ஐரிஷ் கத்தோலிக்கர்கள் பிரிட்டிஷ்காரர்களால் வேட்டையாடப்படுவதாகவும் தானும் குடும்பமும் அதனால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார். வங்கிகளைக் கொள்ளையடிக்கும்போது அங்கே இருக்கும் அடமானப் பத்திரங்களையும் அழிப்பது அவரது வழக்கம். மேலும் அயர்லாந்து கத்தோலிக்க மக்களுக்கு அவர் சில நிதியுதவிகளும் செய்தார்.

1978ல் நெட் கெல்லி ஒரு நீண்ட கடிதத்தை எழுதி அச்சுக்கு அனுப்பினார். அதில் தன்னை அயர்லாந்து தேசியவாதியாக அறிவித்தார். தன் அப்பாவையும் ஒரு அயர்லாந்து போராளியாக சொல்லிக்கொண்டார். அயர்லாந்து மக்கள் ஆஸ்திரேலியாவில் கொடுமைப்படுத்தப்படுவதற்கு எதிராக தான் போராடுவதாக அதில் வாதிட்டிருந்தார். ஜெரில்டெரீ என்னும் இடத்தில் இருந்தபோது அவர் அனுப்பிய இக்கடிதம் ஆஸ்திரேலிய இலக்கியத்தில் ஒரு அரிய ஆவணமாக கருதப்படுகிறது. நெட் கெல்லியின் ஆங்கில நடை படிமங்கள் நிறைந்ததாகவும் உணர்ச்சிகரமானதாகவும் மொழிவிளையாட்டுகள் கொண்டதாகவும் இருந்தது. அக்கடிதம் 1930ல் தான் பிரசுரிக்கப்பட்டது.

ஜோ பெய்ரினின் நண்பரான ஆரோன் ஷெர்மிட் என்பவர் போலீஸுக்கு உளவு சொல்லும் செய்தியை அறிந்த கும்பல் 1880ல் அவரை அவரது வீட்டில் வைத்து சுட்டுக் கொன்றது. அப்போது அந்த வீட்டில் தங்கியிருந்த நான்கு போலீஸ்காரர்கள் கட்டிலின் அடியில் ஒளிந்துகொண்டு தப்பினார்கள். அங்கிருந்து கிளம்பிய அக்கும்பல் அருகே இருந்த கிளென்ரோவென் என்னும் இடத்தில் ஒரு சத்திரத்தில் இருந்தவர்களை சிறைப்பிடித்துக்கொண்டது. அவர்களைப் பிடிக்கவந்த போலீஸ் ரயிலை கவிழ்க்க முயன்றது. ஆனால் அம்முயற்சி நிறைவேறவில்லை.

அப்போது அக்கும்பல் தங்களுக்கான கவச உடைகளை உருவாக்கிக்கொண்டிருந்தார்கள். பல்வேறு இரும்புப்பொருட்களால் உருவாக்கப்பட்ட 50 கிலோ எடையுள்ள இரும்புக்கவசத்தை அவர்கள் அணிந்திருந்தார்கள். ஆனால் அது ஒரு முதிரா முயற்சி. அதை நம்பி அவர்கள் சண்டையில் இறங்கியபோது சுடப்பட்டார்கள். நெட் கெல்லியின் கால்கள்

திறந்திருந்தன. போலீஸ் அவரது கால்களை நோக்கியே சுட்டு அவரை வீழ்த்தியது. ஒருவர் குண்டுபட்டு ரத்த இழப்பால் இறந்தார். பிறர் தற்கொலைசெய்துகொண்டார்கள். போரில் போலீஸ் அதிகாரி ஹேர் என்பவருக்கு கையில் காயம்பட்டு அவர் களத்திலிருந்து தப்பி ஓடினார். பின்னர் அவர் போலீஸில் இருந்து விலக்கப்பட்டார்.

நெட் கெல்லி கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டார். அவருக்கு மரண தண்டனை விதித்தவர் அயர்லாந்துக்காரரான நீதிபதி சர்.ரெட்மண்ட் பாரி என்பவர். நீதிமன்றத்தில் நீதிபதிக்கும் நெட் கெல்லிக்குமான வாக்குவாதங்கள் அக்காலத்தில் பரவலான கவனத்தைக் கவர்ந்திருக்கின்றன. 'உன் ஆத்மாவை கடவுள் ஆசீர்வதிக்கட்டும்' என்று நீதிபதி சொன்னபோது 'நான் அங்கேபோய் உங்களுக்காக காத்திருக்கிறேன்' என்று நெட் சொன்னதாகச் சொல்லப்படுகிறது.

நெட் கெல்லி 1880 நவம்பர் 11 ஆம் தேதி தூக்கிலிடப்பட்டார். அவருக்குக் கருணை காட்டவேண்டுமென 30000 அயர்லாந்துக்காரர்கள் கையெழுத்திட மனு அளிக்கப்பட்டது. அது நிராகரிக்கப்பட்டது. தூக்குமேடையில் ஏறும் முன் 'இதுதான் வாழ்க்கை!' என்று அவர் சொன்னதாக 'தி ஏஜ்', 'தி ஹெரால்ட்' ஆகிய நாளிதழ்கள் எழுதின. ஆனால் அவர் ஏதோ அர்த்தமில்லாமல் முனகியதாகவே அவரது சிறைக்காவலரின் டைரி சொல்கிறது. நீதிபதி பாரி 12 நாள் கழித்து உயிர்துறந்ததும் ஒரு ஆச்சரியமாகச் சொல்லப்படுகிறது.

சென்ற மார்ச் 2008 ல் பழைய சிறை வளாகத்தில் நெட் கெல்லியின் கல்லறையை ஆய்வாளர்கள் தோண்டி எடுத்தார்கள். அது ஒரு கூட்டக்கல்லறை. அதில் இருந்த 44 பேரின் எலும்புகளில் இருந்து நெட் கெல்லியின் எலும்புகள் எடுக்கப்பட்டு அவரது வாரிசான எல்லென் ஹாலோ என்பவரின் மரபணுக்களுடன் ஒப்பிடப்பட்டு அது சரிபார்க்கப்பட்டது.

கான்பரா அருங்காட்சியகத்தில் நெட் கெல்லியின் கவசம் வைக்கப்பட்டிருக்கிறது. அவரது சில ஆயுதங்களும் அக்காலத்து இதழ்குறிப்புகள் சிலவும் இருக்கின்றன. ஆனால் சிட்னி நோலான் என்பவரின் ஓவியங்கள்தான் நெட் கெல்லியைப்பற்றிய பலவகையான கற்பனைகளை எழுப்புவனவாக இருக்கின்றன. அவற்றில் நெட் தன் கவச உடையுடன் பல

கோணங்களில் தோற்றமளிக்கிறார். அந்தக் கவச உடையை ஒரு குறியீடாக மாற்ற சிட்னி நோலான் முயல்வதாகப் பட்டது.

நெட் கெல்லி ஒரு ஆஸ்திரேலிய கதாநாயகனாக வாய்மொழிக் கதைகளில் சித்தரிக்கப்பட்டார். பின்னர் அவரைப்பற்றிய புனைகதைகள் பல எழுதப்பட்டன. அவை திரைப்படங்களாக வந்திருக்கின்றன. Bertram Chandler என்பவர் 1983ல் எழுதிய Kelly Country என்னும் நாவலில் ஒரு மாற்றுச் சாத்தியத்தை எழுதிப்பார்த்திருக்கிறார். அதில் நெட் கெல்லி ஒரு தேசியத்தலைவராக வளர்ந்து வலுவான ஆஸ்திரேலிய தேசியத்தை உருவாக்கி ஆஸ்திரேலியாவை உலகின் வல்லரசாக ஆக்குகிறார். 2000த்தில் Peter Carey என்பவர் எழுதிய True History of the Kelly Gang வெளிவந்து மறுவருடம் புக்கர் பரிசு பெற்றது.

நெட் கெல்லியின் வரலாற்றைப் பார்க்கும்போது பொதுவாக இத்தகைய 'கதாநாயகர்களின்' இயல்புகள் பல பொருந்திப்போவதைக் காணமுடிகிறது. ஒன்று இவர்கள் பிறவிக்குற்றவாளிகள். தங்கள் இயல்பான குற்றமனத்தால், சுயநலத்தால் குற்றங்களைச் செய்கிறார்கள். வெறும் குற்றவாளிகளாகவே இவர்கள் நெடுநாட்களாக அறியப்படுகிறார்கள். அவர்களின் சாகஸத்தன்மை மெல்லமெல்ல புகழ்பெறும்போது எளிய மனிதர்கள் நடுவே அவர்களுக்கு ஒரு ஆராதனை உருவாகிறது.

இப்புகழ் வந்தபின்னர் இவர்களின் மனநிலை மாறுபடுகிறது. அதன்பின் பெரும்பாலான விஷயங்களை அவர்கள் புகழுக்காகச் செய்ய ஆரம்பிக்கிறார்கள். தங்களுக்கு ஒரு 'மக்கள் சார்பை' 'கொள்கையை' கற்பனைசெய்துகொள்கிறார்கள். அனேகமாக அது அவர்களின் எளிய குற்றமனத்துக்குப் புரியும் வகையில் இனவாதமாகவோ, சாதிவாதமாகவோ, மதவாதமாகவோதான் இருக்கும். அதாவது காழ்ப்பை முன்வைத்து தங்கள் குற்றங்களை நியாயப்படுத்தும் முயற்சி. தாங்களாகவோ அல்லது பிறர் உதவியுடனோ அவர்கள் தங்கள் 'கொள்கைகளை' பிரகடனம் செய்கிறார்கள்.

இந்தப்புகழே இவர்களின் அழிவை துரிதப்படுத்துகிறது என்றால் மிகையல்ல. அவர்கள் தங்கள் உண்மையான அளவை விடமேலான பிம்பத்தைச் சுமக்கிறார்கள். ஆகவே அவர்களால் செய்யமுடிவதை விட பெரிய

குற்றங்களை அல்லது சாகஸங்களைச் செய்ய ஆரம்பிக்கிறார்கள். அரசு இயந்திரத்திடம் பிடிபட்டு கொல்லப்படுகிறார்கள்.

இவ்வாறு இவர்கள் கொல்லப்படும்போது ஊடகங்களும் வெகுஜன மனநிலையும் இணைந்து இவர்களைப்பற்றிய கட்டுக்கதைகளை உருவாக்குகின்றன. இவர்கள் தியாகத் திருவுருவங்களாக ஆக்கப்படுகிறார்கள். பொன்மொழிகளைச் சொல்கிறார்கள். இவற்றில் பெரும்பாலானவை பொய்கள் அல்லது மிகைப்படுத்தப்பட்ட உதிரி நிகழ்ச்சிகள். நம்முடைய 'ராபின் ஷுட்'கள் உண்மையில் எத்தனை எளிய மக்களுக்கு உண்மையில் உதவியிருக்கிறார்கள் என்று பார்த்தால் ஆச்சரியமாக இருக்கும். அனேகமாக மிகச்சிலருக்கு சில சில்லறைகள். அவ்வளவுதான்.

ஆனால் அவர்களால் எளிய மக்கள் பலவகையான சிக்கல்களுக்கு ஆளாகியிருப்பார்கள். ஏராளமான அப்பாவிகள் சந்தேகத்துக்கு ஆளாகி கொன்று தள்ளப்பட்டிருப்பார்கள். பலர் பிடிக்காத விஷயங்களைச் செய்ய கட்டாயப்படுத்தப்பட்டிருப்பார்கள். அந்த ராபின் ஷுட் கொல்லப்படும்போது எளிய மக்களே நிம்மதிப்பெருமூச்சு விடுவார்கள். ஆனால் நடுத்தர வர்க மனநிலையும் ஊடகங்களும் சேர்ந்து அவர்களை ஏழைக்காவலராக சித்தரிக்க ஆரம்பிக்கும்போது அவர்களே அதை நம்பவும் ஆரம்பிப்பார்கள். இதை நான் தர்மபுரியில் வாழ்ந்த காலத்தில் வீரப்பன் விஷயத்தில் நேரடியாகக் கண்டிருக்கிறேன்.

மேலும் அருங்கொலை செய்யப்பட்டவர்களை கடவுளாக்கும் மனநிலை உலகமெங்கும் உள்ளது. எப்படிக் கொலைசெய்யப்பட்டிருந்தாலும்! தென் மாவட்டங்களில் உள்ள கணிசமான மாடன், சங்கிலி, கருப்பன் சாமிகள் கொடும் குற்றங்களை இழைத்து மக்களாலேயே கழுவேற்றியோ பிற கொடூரமான வகையிலோ கொல்லப்பட்டவர்கள். மக்களின் குற்றவுணர்வு அவர்களை கடவுளாக்குகிறது.

உதாரணமாக குமரிமாவட்டத்தில் உள்ள மதுசூதனப்பெருமாள்மாடன் என்னும் சாமி. கொலையும் கொள்ளையும் கற்பழிப்பும் செய்துவந்த திருடர் அவர். ஒருமுறை மக்களிடம் மாட்டிக்கொண்டபோது ஓடிப்போய் முத்தாரம்மன் கோயிலுக்குள் நுழைந்து கதவைச் சாத்திக்கொண்டார். கோயிலோடு அவரைக்

கொளுத்திவிட்டார்கள். செத்தவர் கனவுகளில் வந்து படையல் கேட்க ஆரம்பித்தார். படையல் போட ஆரம்பித்தவர்கள் அரைநூற்றாண்டுக்குள் அவரை கடவுளாக ஆக்கினார்கள்! நெட்கெல்லி ஒரு ஆஸ்திரேலிய மாடன், அவ்வளவுதான்.

ஏப்ரல் பதினேழு அன்று மாலை கான்பராவின் உயரமான இடமான டெல்ஸ்டிரா டவர் என்னும் கோபுரத்தைப் பார்க்கச்சென்றோம். தொலைத்தொடர்புக்காக உருவாக்கப்பட்ட கோபுரத்தை ஒரு சுற்றுலாத்தலமாக ஆக்கியிருக்கிறார்கள். கோபுரத்தின் மேலே இருந்து கான்பராவைப் பார்க்கையில் அதன் அமைப்பு அழகாக தெரிந்தது. சூழவும் அடர்ந்த நீலப்பச்சை காடுகள். நடுவே ஏரி. ஏரியைச்சுற்றி உயரமில்லாத வீடுகளால் ஆன அழகான சிறிய நகரம். கான்பராவின் அழகே அந்த ஏரியில்தான் இருக்கிறது என்று பட்டது. அத்தனை உயரத்தில் இருந்து அதை ஒரு மரகதப்பதக்கம் போல பார்க்கையில் மனம் நிறைந்து ததும்பியது.

அங்கே பலவகையான மக்கள். பலவகையான இனங்கள் மொழிகள். இன்று அதை நினைத்துக்கொள்ளும்போது ஓர் எண்ணம் வந்தது நெட் கெல்லி ஒரு டிங்கோ என்று. தன் வேட்டைக்குணங்களை மீட்டெடுத்த ஓநாய். இந்தியர்களும் இலங்கையரும் முயல்கள்.

14. அறைகூவலும் ஆட்டமும்

எண்பதுகளில் நான் ஊர் ஊராக அலைவதைப்பற்றி சுந்தர ராமசாமியிடம் சொன்னபோது 'சும்மா இடங்களையும் முகங்களையும் பாத்துண்டே போறதினாலே என்ன கிடைக்கும்?' என்று கேட்டார். என்னால் பதில் சொல்ல முடியவில்லை. குத்து மதிப்பாக 'மனசுக்கு உற்சாகமா இருக்கும் சார். நெறைய கற்பனைகள் வரும்...' என்று சொன்னேன். 'அந்த எடத்தைப்பத்தியோ ஜனங்களைப் பத்தியோ உங்களுக்கு ஒண்ணுமே தெரியாதே... அதனால என்ன பிரயோசனம்?' என்றார் சுந்தர ராமசாமி.

பயணங்களில் நம் முன் நிகழும் நிலக்காட்சிகளும் முகங்களும் நமக்களிக்கும் அனுபவ வெளி சாதாரணமானதல்ல. நாம் அறிந்த இடங்களும் முகங்களும் அளிக்கும் அனுபவத்தைவிடவும் அறிதலைவிடவும் அவை அளவில் அதிகம். அதை நான் இப்படி இப்போது விளங்கிக்கொள்கிறேன். இடத்தையும் மனிதர்களையும் நாம் அறியும்போது அந்த அறிதல் சார்ந்து அவை குறுகிவிடுகின்றன. தினம் அலுவலகம்செல்லும் வழி அலுவலகம்செல்லும் வழி மட்டும்தான். அவ்வழியில் உள்ள எந்தக்காட்சியும் அதற்கு அப்பால் நமக்கு பொருள்படுவதில்லை. வழியில் எதிர்ப்படும் மளிகைக்கடைக்காரர் மளிகைக்கடைக்காரர் மட்டுமே. அவரை மனிதராக, தந்தையாக, மகனாக பார்க்க நாம் தயாராவதில்லை.

நம் அறிதல் நிகழும் இந்த முறையை பௌத்தம் விரிவாக விளக்கியிருக்கிறது. புதிதாக நாம் ஒன்றை காணும்போது நம் அகம் சலனமுறுகிறது. அதை அந்தக்கரணவிருத்தி என்று பௌத்தம் சொல்கிறது. அகநுழைவு நிகழ்வு. பின்னர் நாம் அந்தப்பொருளை அடையாளம் காண ஆரம்பிக்கிறோம். அதற்குப் பெயரிடுகிறோம். அடையாளப்படுத்துகிறோம். அவ்வாறாக அதை ஓர் அறிவாக

ஆக்குகிறோம். அதை பௌத்தம் சப்தாகரண விருத்தி என்கிறது. ஒலியேற்ற நிகழ்வு. பின்னர் அந்த அடையாளங்களால் அதை புரிந்துகொள்கிறோம். அது ததாககரண விருத்தி. அதுவாதல் நிகழ்வு.

நாம் அன்றாடம் காணும் ஒவ்வொன்றையும் அதுவாதல் நிகழ்வின் தளத்தில் நின்றுகொண்டு மட்டுமே பார்க்கிறோம். அதற்கு மேல் சென்று நம்மால் அதை அணுக முடிவதில்லை. மிக அபூர்வமாக ஒரு நிலவுவேளையில் அல்லது அதிகாலையில் பழகிய இடத்தைப் பார்க்கும்போது புதிதாகக் கண்டு நம் அகம் அதிர்கிறது. அது ஒரு புது அனுபவமாக அமைகிறது. ஒரு மனிதரை முற்றிலும் புதிய ஒரு சந்தர்ப்பத்தில் பார்க்கும்போதும் அதேபோன்ற அனுபவத்திறப்பு சாத்தியமாகிறது. ஆனால் இது மிக அபூர்வமாக நிகழக்கூடிய ஒன்று.

பயணத்தில் நாம் அதுவாதல் நிகழ்வுக்கே இடமில்லாத நிலையில் இருக்கிறோம். ஒவ்வொரு காட்சியும் முகமும் புதியது. ஒவ்வொன்றும் நமக்கு அக அதிர்வை அளித்து நம் ஆழத்தை சென்றடைகிறது. முதன் முதலாக ஒரு விஷயத்தைப் பார்க்கும் கிளர்ச்சியும் ஆழ்ந்த கவனமும் ஒவ்வொரு கணமும் நீடிக்கிறது. பயணத்தில் நாம் காணும் மனித முகங்கள் நம் அன்றாட முகங்கள் நமக்குச் சொல்வதைவிட அதிகமாகவே சொல்கின்றன. பயணத்தில் நாம் காணும் இடங்கள் நாம் அன்றாடம் அறியும் விஷயங்களைவிட அதிகமாக தெரிவிக்கின்றன.

ஆகவே ‘சும்மா’ வேடிக்கை பார்த்துக்கொண்டே செல்வதை நான் எப்போதுமே மிகவும் விரும்புவேன். என்னுடைய கணிசமான பயணங்கள் அத்தகையவையே. 19 ஆம் தேதி கான்பராவில் இருந்து சிட்னிக்கு பேருந்தில் கிளம்பியபோது முழுமையாகவே அந்த மனநிலையில் இருந்தேன். ரகுபதி எங்களைக் கொண்டுவந்து பஸ் ஏற்றிவிட்டார். மிகநீளமான பஸ். அகலச்சாலைகளுக்கே உரியது. வசதியான இருக்கை. வெளியே பார்ப்பதற்கு ஏற்ற மிகப்பெரிய கண்ணாடி.

பஸ்ஸில் பலவகையான கூட்டம். என் முன் ஓர் அகலமான பெண்மணி நின்றாள். அகலமென்றால் இந்தியக் கணக்கில் அல்ல. ஆஸ்திரேலியாகணக்கில் அது இந்திய உச்சபட்ச எடைக்கு இரண்டு மடங்கு.

அவளுடைய புஜங்கள் என்னைவிட பெரியவை. உடல் அவ்வளவு பெரிதாக ஆனமையால் தலை மிகச்சிறிதாக தெரிந்தது. உள்ளங்கைகளும் பாதங்களும் சிறிதாக இருந்தன. காலின் அமைப்பையே இழந்து ஒரு பெரிய சிலிண்டர்களாக ஆகிவிட்டிருந்த அவளுடைய கால்கள் மிகச்சிறிய பாதங்களில் முடிந்தன. எடை தாங்காமல் அவை ஒருவகையாக கோணலாக பின்னிக்கொண்டிருந்தன. அவள் தன் சீட்டைக் காட்டி முன்னால் நகர்ந்தபோது கவனித்தேன். அவள் ஒரு சிறுமி. அதிகபட்சம் பதினாறு வயது இருக்கும்!

பொதுவாக ஆஸ்திரேலியர்கள் அதிக எடை கொண்டவர்கள். உலகின் மிகப்பெரிய 'ஒபெஸிட்டி' தேசம் அதுதான் என்கிறார்கள். சமீபத்தில் பேக்கர் இதய ஆராய்ச்சி நிறுவனம் வெளியிட்டிருக்கும் அறிக்கையின்படி ஏறத்தாழ ஒருகோடி ஆஸ்திரேலியர்கள் அதிக எடையால் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அதாவது மொத்த மக்களில் கிட்டத்தட்ட பாதிப்பேர். அதிக எடை உருவாக்கும் உடல்நலப்பிரச்சினைகளுக்கு அளவே இல்லை. இதயம் கல்லீரல் நுரையீரல் எல்லாமே அதிக வேலைசெய்கின்றன. மூன்று நான்குபேருக்குத் தேவையான வேலையை அவைசெய்வதுபோலத்தான். அடுத்த பத்தாண்டுகளில் கிட்டத்தட்ட ஒருலட்சம்பேர் அங்கே இதயநோயால் இறக்கக்கூடும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆஸ்திரேலியாவே ஒரு 'கொழுப்பு வெடிகுண்டு' மீதுதான் அமர்ந்திருக்கிறது.

ஆஸ்திரேலியாவில் அதிக எடை பிரச்சினையாக இருப்பதற்கான காரணம் உணவே. அங்கே தானிய உணவே குறைவு. தொட்டுக்கொள்ள கொஞ்சம் ரொட்டி. மிச்சமெல்லாம் இறைச்சிதான். மாட்டிறைச்சி. அதை அதிக அளவில் உண்பதற்கு உகந்த முறையில் சமைக்கிறார்கள். அரைத்து கட்டிகளாக ஆக்கி ரொட்டிக்குள் வைத்து வேகவைக்கிறார்கள். துருவல்களாகவும் கொத்துகளாகவும் உண்கிறார்கள். அத்துடன் பால் மற்றும் பாலாடைக்கட்டி. அங்கே அனேகமாக எல்லா உணவிலும் பாலாடைக்கட்டி இருக்கிறது. எனக்கெல்லாம் ஒரு பர்கர் என்பது ஒரு முழுநாள் உணவாக ஆகிவிடும். ஆனால் அதை 'இளம்கடி'யாக தின்றுகொண்டே இருக்கிறார்கள்.

ஆஸ்திரேலிய காப்பியும் ஒரு கொழுப்புசேர்ப்பு உணவு. காப்பிக்கொட்டை அதிகளவு கொழுப்பு உள்ளது. அங்கே உள்ள காப்பி என்பது

கொழகொழவென கரிய தார்போல ஒரு குழம்பு. சிலர் அதில் கெட்டிப்பாலைச் சேர்க்கிறார்கள். சிலர் கிரீம் – கொழுப்பையே — சேர்த்துக்கொள்கிறார்கள். ஒரு காப்பியின் அளவு நாம் குடிக்கும் மூன்று காப்பி. அதை எங்கும் எப்போதும் கையில் கொண்டுசென்று குடித்துக்கொண்டே இருக்கிறார்கள்.

இளைஞர்கள் நடுவே சாக்லேட் ஒரு பெரிய கவர்ச்சியாக இருக்கிறது.சாக்லேட் குழம்பை பெரும்பாலான உணவின் மீது கொழகொழவென ஊற்றி உண்கிறார்கள். சாக்லேட் கட்டிகளையும் குச்சிகளையும் மெல்கிறார்கள். சாக்லேட் பிஸ்கட்டுகளை சாப்பிடுகிறார்கள். சாக்லேட் அளவுக்குக் கொழுப்பேற்றும் உணவு அனேகமாகக் கிடையாது.

பஸ்ஸில் ஏறி அமர்ந்ததுமே அந்தச்சிறுமி களைப்புடன் மூச்சுவாங்கியபடி தன் பையைத் திறந்து ஒரு பர்கரை எடுத்துச் சாப்பிட ஆரம்பித்தாள். அதன்பின் ஒரு சாக்லேட். நான் பார்க்கும்போதெல்லாம் அவள் தின்றுகொண்டே இருந்தாள். என் வலப்பக்கம் ஒரு சீன இளைஞன். கூடவே அவன் காதலி. சீனப்பெண்கள் பெரும்பாலும் என் தோளுக்கும் கீழேதான் உயரம். சிறுமிகளைப்போல. அவன் அப்பெண்ணை அடிக்கடி முத்தமிட்டுக்கொண்டிருந்தான். அவள் பேருந்தில் ஏறியதுமே ஒரு சிறு பெட்டியைத் திறந்து தன் முகத்தை புதிதாக வரைந்து உருவாக்கிக் கொண்டாள். ஓவியர்களின் கவனம்! அவன் முத்தமிட்டதுமே அவள் லிப்ஸ்டிக் சரிசெய்ய பெட்டியைத் திறப்பாள்.

பெரும்பாலான வெள்ளையர்கள் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக்கொண்டிருந்தார்கள். சிலர் தூங்கினார்கள். அவர்களுக்கு அந்தப் பாதை சலிப்பூட்டும் காட்சியாக இருக்கலாம். ஆனால் சீனப்பையன்கள் பெரும்பாலானவர்கள் கையடக்க எலக்டிரானிக் விளையாட்டுப் பொருட்களில் ஆழமாக மூழ்கியிருந்தார்கள் என்பதைக் கவனித்தேன். சீனர்களில் எவரேனும் ரயிலில், பேருந்தில், காத்திருப்பு அறையில் எதையேனும் படித்து என் கண்ணில் படவேயில்லை. பெரும்பாலும் அமைதியாக அமர்ந்திருப்பார்கள். அல்லது விளையாடுவார்கள்.

சீனாவில் வாசிப்பே இல்லை என்றார் சீனாவை அறிந்த நண்பர். சீனர்களின் கடந்த முக்கால் நூற்றாண்டுக்கால வரலாறுதான் காரணம். வாசிப்பு என்பது தேவையில்லாத ஒன்றாக ஆகிவிட்டிருக்கிறது. ஏன் என்றால் முக்கால்

நூற்றாண்டுக்காலமாக சீனாவில் மக்களுக்கு அரசியல் நடவடிக்கை அனுமதிக்கப்படவில்லை. அரசியல் நடவடிக்கையே புதிய சிந்தனைகள் மேல் ஆர்வத்தை உருவாக்குகிறது. விவாதங்களை உருவாக்குகிறது. அடுத்தகட்ட வாழ்க்கை குறித்த கனவுகளை விதைக்கிறது. அரசியல் நடவடிக்கை இல்லாத சமூகம் சிந்தனையை இழக்கும். உழைப்பு இயந்திரங்களாக மனிதர்களை மாற்றும். எளிய கேளிக்கைகள் அன்றி வேறு பண்பாட்டுச் செயல்பாடுகளே இல்லாமல் செய்யும்.

மேலும் சீனாவில் வாசிப்பும் சிந்தனையும் ஆபத்தானவையும் கூட. அவை ஒருவர் மீது ஐயத்தை உருவாக்கும். கருத்து விவாதம் அனுமதிக்கப்படாத சமூகத்தில் ஒற்றைப்படையான, சலிப்பூட்டும், ஆதிக்கக் கருத்துகளே வந்து கொண்டிருக்கும். அவை சிந்தனையில் சலிப்பையும் சோர்வையும் ஊட்டுகின்றன. ஆகவே இடதுசாரி நாடுகளில் வாசிப்பும் சிந்தனையும் முழுமையாகவே தேக்கம் கண்டுவிடுகின்றன. சீனர்களுக்கு கடந்த முக்கால் நூற்றாண்டாக நீளும் இந்த வரலாற்றுப்பின்புலம் மெல்ல ஒரு மரபுக்குணமாகவே மாறிவிட்டிருக்கிறது.

வெளியே புல்வெளிகள். மீண்டும் புல்வெளிகள். மீண்டும் மீண்டும் புல்வெளிகள். பச்சைநிறத்தின் நூற்றுக்கணக்கான அழுத்த வேறுபாடுகள். பச்சை நிறத்தின் வளைவுகள். பச்சை நிறத்தின் ஒளி, பச்சை நிறத்தின் இருட்டு. குனிந்து மேய்ந்தபடியே சென்றன தடித்த மாடுகள். ஒரு விசித்திரம்தான். உணவின் மேலேயே பிறந்து, உணவின்மேலேயே நடந்து, உணவின்மேலேயே கழிந்து, உணவின்மேலேயே உறங்கும் வாழ்க்கை. புழுக்களைப் பற்றிச் சொல்லும்போது புழு பிறப்பது என்பதில்லை நாம். புழுத்தல் என்கிறோம். அதாவது ஒரு பொருள் புழுவாக ஆகிவிடுகிறது. இப்புல்வெளிகளை பசுத்தல் என்று சொல்லலாம்.

விழித்திருக்கும் நேரமெல்லாம் உண்பது. பின்னர் தூக்கம். அவற்றின் வாழ்க்கை நிறைவுற்றதாக இருக்குமா? தெரியவில்லை. அவை அதற்காகவே படைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் அதுகூட உண்மை அல்ல. அவை எதிர்நிலைச் சூழல்களைச் சந்தித்து தாண்டிச்சென்று வாழ்வதற்காகவும்தான் படைக்கப்பட்டிருக்கின்றன. சவால்களைச் சந்திக்கும்போதுதான் அவற்றின்

இருப்பின் முழுச் சாத்தியங்களும் வெளிப்படுகின்றன. நாம் எப்போது மகிழ்ச்சியாக இருக்கிறோம்? நம்முடைய மிகச்சிறந்த சாத்தியங்கள் வெளிப்படும்போதுதான். ஒரு கவிதை எழுதும்போது, ஒரு மலையில் ஏறும்போது, ஓர் இக்கட்டைச் சமாளிக்கும்போது, ஒரு புதிரை விடுவிக்கும்போது... அந்த மகிழ்ச்சி இல்லாமல்தானே இந்த பசுக்கள் இருக்கும்? வாழ்க்கையின் நேர்நிலை சக்தியும் எதிர்நிலைச் சக்தியும் சரியானமுறையில் முரணியக்கம் கொள்ளும்போதுதான் இயல்பான இன்பம் சாத்தியம். ஆனால் அது பசுக்களுக்கும் பொருந்துமா?

மதியம் பன்னிரண்டு மணிக்கு சிட்னி பேருந்து நிறுத்துமிடத்துக்கு சென்றுசேர்ந்தோம். சிறிய பேருந்து நிலையம்தான். சாலையோரமாகவே பேருந்துகள் நின்றன. இறங்கி பெட்டியை உள்ளிருந்து மீட்டுக் கொண்டிருந்தபோது சாலைக்கு அப்பால் இருந்து ஒருவர் என்னை நோக்கி வந்தார். நான் எப்படியோ எஸ்.பொவின் சாயலைக் கண்டு பிடித்துவிட்டேன். பொன்.அநுர.

என் அருகே வந்து அநுர கைகுலுக்கினார். பெட்டியை சாலையோரமாக இழுத்துச்சென்று மறுபக்கம் அவரது கார் நின்ற இடத்தை அடைந்தோம். காரில் ஏறிக்கொண்டு கிளம்பினோம். ‘உங்களை இன்றைக்கு சாயங்காலம் ஆசி.கந்தராசா வீட்டிலே கொண்டுபோய் விடுவேன். அதுவரைக்கும் நீங்க என்கூட இருக்கலாம்...’ என்றார். மித்ர பதிப்பகத்தின் உரிமையாளரான அநுர ஒரு மருத்துவர். மருத்துவத்துறையின் பல தளங்களில் பணியாற்றிவிட்டு இப்போது மருத்துவ நிறுவனம் ஒன்றின் பொறுப்பாளராக இருக்கிறார். பொதுவாக இலக்கியவாதிகளின் பிள்ளைகள் அவரது இலக்கியச்செயல்பாடுகள் மீது மதிப்பே இல்லாமல் இருப்பதுதான் வழக்கம். சுந்தர ராமசாமிக்கு கண்ணனும் எஸ்பொவுக்கு அநுரவும் விதிவிலக்கான குழந்தைகள்.

அநுரவுடன் சிட்னி துறைமுக மேம்பாலம் அருகே அதைப் பார்த்தபடி அமைந்திருக்கும் சாலையோர உணவகங்களின் வரிசை ஒன்றில் உணவருந்தச் சென்றோம். சீன உணவு பிடிக்குமா என்றார். ஆம் என்றோம். அங்கே சாப்பாடு மிகவும் விலை அதிகம். காரணம் அந்த இடம்தான்.

ஆஸ்திரேலியாவின் முக அடையாளமே சிட்னி பாலமும் அருகே உள்ல ஓபரா ஹாலும்தான். இந்தியாவுக்கு டெல்லி கேட் போல. அந்த இடத்திலிருந்து அப்பகுதியை நன்றாகவே பார்க்க முடியும்.

உணவகத்தில் இருந்த சீனர் பணிவுடன் வந்து என்ன வேண்டும் என்று கேட்டார். அருண்மொழியும் அநுரவும் மெனு ஆராய்ச்சியில் இறங்கினார்கள். நான் எப்போதுமே மெனுவை ஆராய்வதில் நேரம்செலவிடுவதில்லை. ஒருவழியாக அவர்கள் உத்தரவு கொடுத்தார்கள். பீங்கான் கிண்ணத்தில் டீ போன்ற சூடான திரவம் ஒன்றை கொண்டுவந்து வைத்த சீனர் அது கைகழுவுவதற்கு என்று தனியாகச் சொன்னார். இறாலுக்கு சொல்லியிருந்தார்கள். இறால்களை உயிருடன் ஒரு பிளாஸ்டிக் பொட்டலத்துக்குள் உள்ள நீரில் நீந்தவிட்டு கொண்டுவந்து காட்டினார்.

பின்னர் அவற்றை அப்படியே நீராவியில் அவித்து கொண்டுவந்து மேஜைமுன் வைத்தார். அவற்றை நாமே ஒவ்வொன்றாக எடுத்து தோலை பொளித்து உள்ளே உள்ள ‘பருப்பை’ எடுத்து சாப்பிட வேண்டியதுதான். அந்த முறை ஊரில் நெத்திலி, இறால் போன்ற எல்லா மீன்களுக்கும் கொண்டுவரலாம் என அருண்மொழி சிந்தனை செய்திருப்பாள். ஊரில் மீன் சமையலின் சள்ளைபிடித்த வேலையே மீனை சுத்தம்செய்வதுதான். சீனர் நான்குவகையான கறிரசங்களை (சாஸ்) கொண்டுவந்து வைத்தார். அவற்றில் இறாலைத் தொட்டு உண்ண வேண்டும் என்று சொல்லிக்கொடுத்தார். ஒன்றில் நல்ல கருவாட்டு வாசனை. நன்றாகவே இருந்தது.

அதன்பின்னர் தக்காளிச்சாறு போட்டு சமைத்த கோழி. தகடுகளாகச் சீவிய ஆட்டுக்குட்டி இறைச்சி. மாமிசத்தாலேயே வயிறு நிறைய உண்பது இந்தியாவில் நினைத்துக்கூட பார்க்க முடியாது. நமக்கு மாமிசம் பக்கவாத்தியம் மட்டும்தானே. மேலும் சீன மாமிச உணவு எண்ணெயிலும் வெண்ணெயிலும் பொரித்தது அல்ல. பெரும்பாலான பொருட்களை நீராவியில் வேகவைத்துத்தான் சமைக்கிறார்கள். தாளிப்பதும் இல்லை. எண்ணெயே மிகக் குறைவாகத்தான் பயன்படுத்துகிறார்கள்.

சிட்னியின் பாலத்தை அங்கே கோட்ஹேங்கர் என்று சொல்கிறார்கள். அதன் அமைப்புதான் காரணம். இது சிட்னியின் மையநிலத்தை சிட்னியின்

கடல்பகுதியுடன் இணைக்கிறது. நடுவே உள்ள ஆழமான கடல் உள்நீட்சியின் மீது இது எழுப்பப் பட்டிருக்கிறது. சிட்னியின் ராக்ஸ் பகுதியில் உள்ள மில்லர்ஸ் பாயிண்ட் என்னும் இடத்தில் இருந்து வடக்கு கடற்கரையில் உள்ள மில்சன்ஸ் பாயிண்ட் என்னும் இடம் வரை இந்தப்பாலம் உள்ளது. ஆறு பட்டைச் சாலைகள், இரண்டு ரயில் சாலைகள், சைக்கிள் சாலைகள் மற்றும் நடைபாதைகள் உள்ளன. இப்பாலத்தின் மேலே உள்ள நெடுஞ்சாலை பிராட்பீல்ட் நெடுஞ்சாலை எனப்படுகிறது. இரண்டரை கிலோமீட்டர் நீளமுள்ளது இது.

1815 முதலே இப்படி ஒரு பெரிய பாலத்தைக் கட்டவேண்டுமென்ற திட்டம் இருந்திருக்கிறது. 1900த்தில்தான் முடிவு எடுக்கப்பட்டது. பாலத்தின் முன்வரைவுக்காக ஒரு போட்டி அறிவிக்கப்பட்டது. 1911ல் ஒரு முன்வரைவு அங்கீகரிக்கப்பட்டது. 1912ல் ஜான் பிராட்.ஃபீல்ட் பாலத்தைக் கட்டுவதற்கான முதன்மைப்பொறியாளராகவும் டேனியல் நியூலான் உதவிப் பொறியாளராகவும் நியமிக்கப்பட்டார்கள். உலகின் பல்வேறு பாலங்களை நேரில்சென்று பார்த்த பின்னர் ஜான் பிராட்.ஃபீல்ட் நியூயார்க் நகரின் ஹெல்கேட் பாலத்தை முன்னுதாரணமாகக் கொண்டு இதை வடிவமைத்தார். அதற்குள் முதல் உலகப்போர் வெடித்தமையால் திட்டம் 1922 வரை ஒத்திப்போனது.

1922 நவம்பரில் நியூசவுத் வேல்ஸ் பாராளுமன்றம் பாலம் கட்டும் பணியை துவக்க ஆணையிட்டது. உலகளாவிய டெண்டர் கோரப்பட்டது. ஜான் பிராட்.ஃபீல்ட் அதன் நிர்வாக பொறியாளராக இருந்தார். பிரிட்டிஷ் நிறுவனமான டோர்மன் லாங் ஆண்ட் கோ லிட் (மிடில்பரோ) சிஒப்பந்தத்தைப் பெற்றது. சர் .ரால்ப் ஃப்ரீமான் டோர்மன் லாங் நிறுவனத்தின் தலைமைப்பொறியாளர். கட்டட வரைவாளர்கள் பிரிட்டன் நிறுவனமான ஜான் பர்னெட் ஆண்ட் பார்ட்னர்ஸ் கிளாஸ்கோ.

இந்தப்பாலம் கட்டப்படும்போதுதான் சிட்டி சர்கிள் என இன்று அழைக்கப்படும் சிட்னி நிலத்தடி ரயில்பாதைகளும் அமைக்கப்பட்டன. பாலத்தின் அமைப்பும் அதனுடன் ஒத்துப்போகும்படியாக அமைக்கப்பட்டது. 1923ல் இதைக் கட்டும் பணி ஆரம்பமாகியது. ஜூலை 23, 1923ல் இதன் கால்கோள் விழா நடந்தது. அஸ்திவாரப்பணிகள் 1928ல்தான் முடிவடைந்தன. அதன்பின் 1929ல்

பாலத்தைக் கட்டும் பணி ஆரம்பமாகியது. இந்த பாலம் இரு கரைகளிலும் இரு பகுதிகளாக தனித்தனியாகக் கட்டப்பட்டது. தெற்கு பகுதியில் பாலம் ஒரு மாதம் முன்னதாகவே பணிகள் நடக்கும்படி கட்டப்பட்டது. அந்தக் கட்டுமானத்தில் ஏதேனும் பிழைகள் நேர்ந்தால் அது வடக்கில் நிகழாதபடி இந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சுமைதூக்கிகள் மற்றும் தாங்கு கம்பிகள் உதவியுடன் அந்தரத்தில் கட்டி எழுப்பப்பட்ட இந்தப்பாலத்தின் இரு பகுதிகளும் மெல்லமெல்ல இறக்கப்பட்டு ஒன்றாக்கப்பட்டு தாங்கு கம்பிகள் நீக்கம் செய்யப்பட்டன. 1929 ஆகஸ்ட் 19 ஆம்தேதி இப்பணி முடிவடைந்து பாலம் முழுமைபெற்றது. பாலம்மீது சாலை மற்றும் ரயில்பாதை போடும் பணி 1931ல்தான் முடிவுற்றது. 1932ல் முதல் நீராவி யந்திர ரயில் பாலத்தின் மீது ஓடியது. இப்பாலம் கட்டப்படும்போது பதினாறுபேர் இறந்திருக்கிறார்கள். மொத்தம் ஒருகோடி பவுன் செலவாகியிருக்கிறது. இது முதலில் திட்டமிட்டதைவிட இருமடங்காகும். 1932 மார்ச் மாதம் 19 ஆம் தேதி நியூசவுத்வேல்ஸ் கவர்னர் சர் பிலிப் கேம் முறைப்படி பாலத்தை திறந்துவைத்தார். அன்றுமுதல் இன்றுவரை சிட்னி பாலம் ஆஸ்திரேலியாவின் கம்பீரமான அடையாளமாக நிலைகொள்கிறது.

கடல்மேல் நிற்கும் அந்தப்பாலத்தை பார்த்துக்கொண்டிருப்பது வினோதமான மனக்கிளர்ச்சியை அளித்தது. அது கல்கத்தாவின் ஹௌரா பாலத்தை நினைவூட்டியது. காசியில் கங்கைமேல் உள்ள பெரும் பாலமும் சம்பந்தமில்லாமல் நினைவுக்கு வந்துசென்றது. பிரிட்டிஷ் கட்டடக்கலை இரும்பை உபயோகித்து பெரும் கட்டுமானங்களை அமைப்பதில் வெற்றி பெற்ற ஒன்று. இந்தியா முழுக்க அவர்கள் அமைத்த இரும்புக்கட்டுமானங்கள் பல உள்ளன. எங்களூரில் திருவட்டாறில்கூட ஆற்றுக்குக் குறுக்கே ஒரு இரும்புப்பாலம் எழுபதுகள் வரை பயன்பாட்டில் இருந்தது.

இரும்பு ஐரோப்பியத் தொழிற்புரட்சியின் அடையாளம். ஆலிவர் வெண்டல் ஹோம்ஸ் ஒருமுறை தொழில்புரட்சியை ‘மனித குலத்துக்கு மேல் கம்மியன் கொண்ட வெற்றி’ என்றார். நிலக்கரியும் இரும்பும் சந்தித்தபோது தொழில்புரட்சி பிறந்தது என்று சொல்லப்படுவதுண்டு. உலோகங்களை உருக்குவதில் பெற்ற வெற்றியே தொழில்புரட்சிக்கு அடிப்படை. அவ்வுலோகங்களின் அரசன்

இரும்புதான். அரசன் என்பது நிலப்பிரபுத்துவ பெயர். சர்வாதிகாரி என்று சொல்லவேண்டும்.

தொழிற்புரட்சியை நிகழ்த்திய சர்வாதிகாரிகள் இரும்புமனிதர்கள் என அழைக்கப்பட்டார்கள் – ஆட்டோவான் பிஸ்மார்க், அட்டாதுர்க் முஸ்தபா கமால் பாஷா. அந்த தொழிற்புரட்சியின் விளைவான மார்க்ஸியப்புரட்சியும் தன்னை இரும்புடன் அடையாளப்படுத்திக்கொண்டது. ஸ்டாலின் ஒரு இரும்பு மனிதர். ருஷ்யபுரட்சியைப் பற்றிய ஒரு நாவல் அதை ‘இரும்புவெள்ளம்’ என்று அடையாளப்படுத்திக் கொண்டது. இரும்புவெள்ளம் குறித்த ஒரு சித்தரிப்பு என்னுடைய ‘பின் தொடரும் நிழலின் குரல்’ நாவலில் உள்ளது.

பலவகையிலும் இரும்பு தொழிற்புரட்சியின் சின்னம். உறுதியால் மட்டுமல்ல. பல நுண்ணிய கூறுகள் கலந்து இணைந்து ஒற்றைப்பேருருப்பாக எழுந்து நிற்பதிலும்கூடத்தான். ஒரு பொதுக்கட்டமைப்பில் பலநூறு உட்கூறுகளை கச்சிதமாக இணைக்கும் முறையே தொழிற்புரட்சி உலகுக்கு அளித்த கொடை. ஒரு சாதாரண சைக்கிளில் எத்தனை வகையான திறமைகள் ஒருங்கிணைகின்றன. ஒரு தொழிற்சாலை எத்தனை வகையான நடவடிக்கைகளின் தொகை! அந்த அமைப்பு நுட்பமே நவீன ராணுவங்களில் கடைப்பிடிக்கப்பட்டது. நவீன அரசுகளாக ஆகியது.

அந்தப்பாலத்தைப் பார்ப்பதே பத்தொன்பதாம் நூற்றாண்டைப் பார்ப்பதுபோல் இருந்தது. இயற்கைக்கு எதிராக மானுட உழைப்பின் சவால் போன்றது அது. அதிகாரம், மிடுக்கு, கொஞ்சம் ஆணவம். அதன்மேல் மனிதர்கள் சின்னஞ்சிறிய உருவங்களாகச் சென்றுகொண்டிருப்பதைப் பார்க்கையில் மனிதர்கள் எத்தனை சிறியவர்கள் என்ற எண்ணமும் அதேசமயம் தன்னை மானுடம் என ஒன்றாகத் திரட்டி இணைத்துக்கொள்கையில் எத்தனை வலிமை வந்து சேர்கிறது என்ற எண்ணமும் ஏற்பட்டது.

சிட்னி பாலத்துக்கு அருகே இருக்கிறது சிட்னி ஓபரா ஹவுஸ். ஒருவகையில் சிட்னி பாலத்தின் இன்னொரு வடிவம் அது. நவீன தொழிற்புரட்சியின் தொழில்நுட்பத்தின் அடையாளம் அந்தப்பாலம். அந்தத் தொழில்நுட்பம் கலையாக ஆவதன் சித்திரமே சிட்னி ஓபரா ஹவுஸ். அதை உலோகத்தின் கலைவடிவம் என்று சொல்லலாம். மதுரை மீனாட்சியம்மன் கோயில் கருங்கல்,

தாஜ்மகால் வெண்கல். இது உலோகம். முற்றிலும் வேறு காலகட்டத்தின் கலை. சிட்னி பாலத்தின் அருகே துறைமுகம் நோக்கி நீளும் நிலத்துருத்தில் பென்னிலாங் பாயின் என்னும் இடத்தில் இருக்கிறது இது.

1950களில்தான் இந்த கட்டடத்தைக் கட்டும் எண்ணம் நியூ சவுத் வேல்ஸ் அரசுக்கு எழுந்தது. இதற்கென ஒரு நிதி அமைக்கப்பட்டது. சர்வதேசப் போட்டி ஒன்று நடத்தப்பட்டு அதில் டேனிஷ் கட்டட வரைவாளரான ஜோர்ன் உட்ஸொன் அவர்களின் மாதிரி வடிவம் தேர்வுசெய்யப்பட்டது. அந்தவடிவம் அக்காலத்தின் கட்டடக்கலையின் சாத்தியங்களுக்கு அப்பாற்பட்டதாக இருந்ததாகவும் உட்ஸொன் அதை தேவைக்கேற்ப மாற்றி 1961ல் முழுமைப்படுத்தி அளித்ததாகவும் சொல்லப்படுகிறது.

இந்தக்கட்டடம் மிகுந்த பொருட்செலவை இழுத்தது. ஆகவே 1966ல் இதைக் கட்டுவதையே அரசு நிறுத்தி வைத்தது. உட்ஸொன் மனம் உடைந்து ராஜினாமா செய்து சென்றார். பின்னர் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு சில சமரசங்களுடன் 1973ல் கை முடிக்கப்பட்டது. 1973 அக்டோபர் 20 அன்று பிரிட்டனின் எலிஸெபெத் மகாராணியால் இது திறந்து வைக்கப்பட்டது. இப்போது உலக கலைச்செல்வங்களில் ஒன்றாக யுனெஸ்கோவால் அறிவிக்கப் படிருக்கிறது.

இக்கட்டடத்தில் 2194 கான்கிரீட் தூண்கள் வார்த்து இணைக்கப்பட்டன. 350 கிலோமீட்டர் தூரமுள்ள இரும்புக்கம்பிகள் இழுத்துக்கட்ட பயன்படுத்தப்பட்டன. பத்துலட்சம் ஓடுகள் கூரைமேல் பதிக்கப்பட்டன. 6225 சதுர மீட்டர் கண்ணாடியும் 645 கிலோமீட்டர் மின்கம்பிகளும் பயன்படுத்தப்பட்டன. நவீனத்தொழில்நுட்பத்தின் வெற்றியை அறைகூவும் ஒரு ஆக்கம் இது.

ஓபரா ஹவுஸ் தொழிற்புரட்சிக்குப் பிந்தைய கட்டடக்கலையின் இரண்டாவது கட்டத்தைச் சேர்ந்தது. ஈஃபில் டவர் முதலியவை முதல் காலகட்டத்தின் வடிவங்கள். தொழிற்புரட்சி உலோகங்களை வென்றதும் கட்டுமானத்துக்கு உலோகம் பெருமளவில் பயன்படுத்தப்பட்டது. அதுவரை கட்டுமானத்தில் இருந்த பல எல்லைகளை அது உடனடியாகக் கடந்தது. நம்முடைய கருங்கல் கோயில்களைப் பார்த்தால் அதிகபட்சம் இருபத்தைந்தடி அளவுக்குத்தான் கருங்கல் தூணையும் சட்டங்களையும் பிளந்தெடுக்க முடியும்

என்னும் எல்லைக்குள் அவற்றின் அமைப்பு நிற்பதைக் காணலாம். அதே போல முகலாயக் கட்டடக்கலை தூண்களை தவிர்க்கும்போது செங்கல்லால் ஆன கும்மட்டங்களை நாடவேண்டியதாயிற்று.

இந்த எல்லைகளை புதிய கட்டடங்கள் சாதாரணமாக மீறின. தூண்கள் இல்லாத கூரைகள். பிடிப்பு இல்லாத எடுப்புகள். தாங்குகளும் வளைவுகளும் தேவையில்லாத அமைப்புகள் என பல சுதந்திரங்கள். ஆனால் காட்சி சார்ந்து அதற்கு முந்தைய காலகட்ட கட்டடங்களின் பாதிப்பே நீடித்தது. தொழிற்புரட்சி உருவாக்கிய கட்டடங்கள் அவற்றுக்கு முந்தைய காலகட்டத்தின் கட்டடங்களை இன்னும் பிரம்மாண்டமாக இன்னும் சிக்கலாக செய்து பார்ப்பதாகவே ஆரம்பத்தில் இருந்தன. அவையே கண்ணுக்கு அழகு என்று அப்போது தோன்றின.

ஒரு கட்டடமுறை தொழில்நுட்பம் சார்ந்து தேவையில்லாமல் ஆனால்கூட அழகுணர்வு சார்ந்து அப்படியே நீடிக்கிறது. நம்முடைய கல்கோயில்களைப் பார்த்தால் அவற்றில் கல்லிலேயே மரக்கூரையில் உள்ளதுபோன்ற உத்தரங்களும் பட்டியல்களும் செதுக்கப்பட்டிருப்பதைக் காணலாம். அவற்றுக்கான அமைப்புசார்ந்த தேவை இல்லைதான். ஆனால் அழகியல் ரீதியாக மனம் மரக்கட்டடங்களை விட்டு வெளிவரவில்லை என்பதே காரணம். அதேபோல இன்றும் இஸ்லாமிய, சீக்கிய கட்டடக்கலையில் கும்மட்டங்கள் உள்ளன. செங்கல்லால் உயரமான அமைப்புகளைக் கட்ட வளைவான கும்மட்டங்கள் தேவை. கான்கிரீட் வந்த பின்னர் கும்மட்டங்கள் தேவை இல்லைதான். ஆனால் அழகுணர்வு அங்கேயே நின்றுவிடுகிறது.

அடுத்த காலகட்டத்தில் அந்த முந்தையகால அழகுணர்வின் பிடியில் இருந்து கட்டடக்கலை விடுபட முயன்றது. அதில் பிக்காஸோ போன்றவர்களின் கியூபிஸத்துக்கு பெரும் பங்கு இருந்தது என்கிறார்கள். இயற்கையின் வடிவங்களை பலவாறாக கலந்தும் மாற்றியமைத்தும் புத்தம் புதிய கட்டட அமைப்புகள் கற்பனையில் உருவாக்கப்பட்டன. அப்படிப்பட்ட ஒரு முயற்சிதான் ஓபரா ஹால். இது முக்கால்வாசி மலர்ந்த ஒரு மலர் போல இருக்கிறது. அல்லது சிப்பியின் ஓடுகளை ஒன்றுடன் ஒன்று பொருத்தி வைத்து

உருவாக்கப்பட்டது போல் இருக்கிறது. பெரியதோர் கிளிஞ்சல் போலவும் தோற்றமளிக்கிறது.

அதன் பயன்பாட்டை விட ஒரு புதிய வகை அழகுக்காக செய்யப்பட்ட முயற்சியே முக்கியமானது. அதை ஒரு கட்டடம் என்று பார்க்கும்போது நமக்கு ஒரு துணுக்குறல் ஏற்படுகிறது. இதென்ன என்று. அதை கட்டடம் என ஏற்க நம்முடைய வழக்கமான வடிவபோதம் தடுக்கிறது. ஆனால் மெல்லமெல்ல கண்பழகும்போது அதை ரசிக்க முடிகிறது. குறிப்பாக சிட்னி பாலத்தைச் சுற்றியுள்ள பல பகுதிகளில் நின்றுகொண்டு பல கோணங்களில் அதை மீண்டும் மீண்டும் பார்க்கும்போது மெல்லமெல்ல அது நம்மை கவர ஆரம்பிக்கிறது.

இருட்ட ஆரம்பிக்கும் வரை அங்கேயே நின்றோம். பின்னர் அநுரவின் காரில் ஏறி ஆசி கந்தராஜா அவர்களின் வீட்டுக்குச் சென்றோம். சென்று சேர இருட்டிவிட்டது. சிட்னியின் நெடுஞ்சாலைகளில் கார்கள் பெருக்கெடுத்தோடிக்கொண்டிருந்தன. ‘ஓப்பரா ஹோலிலே நெல்ஸன் மண்டேலா வந்து பேசினார். 27 வருசம் சிறையிலே இருந்தபிறகு விடுதலை ஆகி அவர் வந்து பேசிய முதல் வெளிநாடு இதுதான்’ என்றார் அநுர. அப்போது மாணவனாக இருந்த அநுர அந்த உரையை பெரும் ஆர்வத்துடன் சென்று கேட்டிருக்கிறார். ‘அவரோட போராட்டங்களிலே ஆஸ்திரேலியா துணைநின்றது.’

‘விசித்திரமான கட்டடம் அது’ என்றாள் அருண்மொழி. நானும் அப்போது அதைத்தான் நினைத்தேன். அந்த கட்டட வடிவமைப்பில் ஒரு குழந்தைத்தனம் உள்ளது. ஒரு மாபெரும் நிபுணரின் குழந்தைத்தனம் அது. எல்லா பெரிய கலையிலும் குழந்தைத்தனம் ஒன்று இருக்கும். அதுவே அந்தக்கலையின் மையம். ஒரு மொழியில் முற்றிலும் புதிய சொல்லாட்சியை குழந்தை அல்லது குழந்தைமனம் கொண்ட கவிஞன் மட்டுமே உருவாக்க முடியும் என்று சொல்லப்படுவதுண்டு. எல்லா கலையிலும் அந்த அடுத்தகட்டப் பாய்ச்சல் அதுவரை கற்றதையெல்லாம் உதிர்த்துவிட்டு குழந்தையாக நிற்கும் மேதையால்தான் நிகழ்த்தப்படுகிறது. பிக்காஸோவின் பல படைப்புகளைப் பார்க்கையில் ஆசாமி விளையாடுகிறார் என்று தோன்றுவதுண்டு.

சிட்னி பாலத்தைக் கட்டியவன் இயற்கையை சவாலுக்கழைக்கிறான். ஓபரா ஹாலைக் கட்டியவன் இயற்கையுடன் விளையாடுகிறான். ஒரு மாபெரும் கிளிஞ்சலைச் செய்து கடற்கரையில் போட்டு வைத்துவிட்டு சிரிக்கிறான் என எண்ணிக்கொண்டேன்.

15. துறைமுகம்

தொன்மையான துறைமுகங்கள் அனேகமாக எதுவுமே இப்போது துறைமுகங்களாக இல்லை என்பதை சிலர் கவனித்திருப்பார்கள். தென்னிந்தியாவின் பெரும்புகழ்பெற்ற துறைமுகங்களில் பூம்புகார் இப்போது ஒரு சேற்றுமேடு. கொற்கை இன்றைய காயல்பட்டினம் அருகே ஒரு மணல்மேடு. கேரளத்தில் கொடுங்கல்லூர் என அழைக்கப்படும் சேரன் செங்குட்டுவனின் வஞ்சியில் இப்போது கடலே இல்லை.

பழங்காலத்துத் துறைமுகங்கள் எல்லாமே நதிகளின் அழிமுகங்களில் அமைந்தவை. பூம்புகார் காவேரி அழிமுகம். கொற்கை தாமிரவருணியின் அழிமுகம். வஞ்சி பேரியாற்றின் அழிமுகம். காரணம் அன்றைய துறைமுகங்களின் சரக்குச்சேமிப்புப் பகுதி உள்நிலத்தில் இருக்கும். கப்பல்கள் ஆழமான அழிமுகம் வழியாக ஆற்றுக்குள் நுழைந்து நிலத்தை ஒட்டி நகர்ந்துவரும். மேலும் கடல் ஓதங்களையும் கப்பல்கள் உள்ளே வர பயன்படுத்துவார்கள். நீர் மேலேறும்போது தானாகவே உள்ளே வரும் கப்பல்கள் நீர் இறங்கும்போது வெளியே சென்றுவிடும். கரையில் இருந்து மரப்பாலங்கள் வழியாக யானைகளின் உதவியுடன் சரக்குகள் உள்ளே கொண்டுசெல்லப்பட்டன.

மேலும் அக்காலத்தில் கனமான பொருட்களை கொண்டுசெல்வதற்குரிய வழி என்பது நீர் வழியே. இந்நதிகள் வழியாக உள்நாட்டில் இருந்து பொருட்கள் படகுகளில் துறைமுகத்துக்குக் கொண்டு வருவது மிக எளிதாக இருந்தது. கப்பலில் வந்துசேரும் பொருட்களை படகுகள் தெப்பங்கள் வழியாக ஆறுகளினூடாக உள்நாட்டுக்குக் கொண்டுசெல்லவும் முடிந்தது.

நாம் அறியும் இந்த ஆறுகள் ஆயிரம் வருடம் முன்பு பெரும் வெள்ளப்பெருக்குள்ளவையாக இருந்திருக்கக் கூடும். காடுகள் அழிய அழிய அவற்றின் வெள்ளப்பெருக்கு நிலைத்தது. நீரோட்டம் மெதுவாக ஆனபோது அழிமுகத்தில் வண்டல் படிந்து மேடாகின. கப்பல்கள் வரமுடியாத நிலை உருவாகியது. வண்டல் மண் படிவுகள் மேலெழுந்து அணைபோல ஆகி ஆற்றுநீரை மறித்தபோது ஆறுகள் அகலம் கொண்டன. அகலம் கொண்ட ஆறுகள் பலவாக பிரிந்தன. அவற்றின் நடுவே உள்ள நிலத்தில் மேலும் வண்டல் படிந்தது. வஞ்சியில் இவ்வாறு வண்டல்படிவுகள் வளர்ந்து நிலம் உருவாகி கடல் எட்டு கிலோமீட்டர் நகர்ந்து வேறு இடம் சென்றுவிட்டது.

நவீன துறைமுகங்கள் இயற்கையாகவே கடல் ஆழமாக நிலத்துக்குள் புகுந்த வளைவுகளில் உருவாகின. தூத்துக்குடி, விசாகப்பட்டினம், கண்ட்லா, மும்பை போன்றவை அப்படிப்பட்டவை. இத்துறைமுகங்களை நாம் கண்டடையவில்லை என்பதும் ஒரு வேடிக்கை. அழிமுகமே துறைமுகமாக இருந்த நாட்களில் நாம் மிகச்சிறந்த கடலோடிகளாக இருந்தோம். பின்னர் நம் கடல்திறன் அழிந்தது. பல இடங்களில் துறைமுகம் மேடானபோது அங்குள்ள கடலோடிகளின் சமூகம் கடல்வாழ்க்கையை இழந்தது. சிறந்த உதாரணம் தமிழகத்தில் உள்ள காயல்பட்டினம். மரக்கலக்காரர்கள் ஆன மரைக்காயர்கள் இன்று கடலோடிகள் அல்ல.

நம் கடல்திறன் செயலிழந்து போனது பதிமூன்றாம் நூற்றாண்டு வாக்கில் என்று சொல்லலாம். அதன்பின் சிதைந்து பின் மீண்ட தமிழகத்தை ஆண்ட நாயக்க மன்னர்களுக்கு துறைமுகத்திலும் கடல்வணிகத்திலும் ஆர்வமே இருக்கவில்லை. இக்காலத்தில் நம் மண்ணுக்கு வந்த ஐரோப்பியர்களே நம்முடைய இன்றைய முக்கியமான துறைமுகங்களைக் கண்டுபிடித்தார்கள். சென்னை, தூத்துக்குடி போன்ற தமிழகத் துறைமுகங்கள் ஐரோப்பியரின் கண்டுபிடிப்புகளே.

உண்மையில் பதினைந்தாம் நூற்றாண்டுமுதல் நம்முடைய முக்கியமான துறைமுகங்கள் அனைத்துமே ஐரோப்பியரின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. இந்தியா மெல்லமெல்ல ஐரோப்பியருக்கு அடிமையானமைக்கு துறைமுகங்கள் மேல் அவர்களுக்கு இருந்த ஆதிக்கம் முக்கியமான காரணம். ஒரு நிலத்தை

வெளியே இருந்து கட்டுப்படுத்துவதற்கான 'பிடி' துறைமுகங்கள் வழியாகக் கிடைக்கிறது.

மேலும் துறைமுகங்களை கைப்பற்றிக் கொள்வதும் எளிதல்ல. துறைமுகநிலத்தை கைப்பற்றிவைத்தால் மட்டும்போதாது அந்தக்கடல்வழியை கப்பல்கள் மூலம் கைப்பற்ற வேண்டும். நாயக்கர்கள் பலமுறை தூத்துக்குடியை தாக்கி கொள்ளையடித்தார்கள். ஆனால் கப்பல்களுடன் ஐரோப்பியர் கடலுக்குள் சென்றுவிடுவார்கள். நாயக்கர்களுக்கு கப்பல்கள் இல்லை. கொஞ்சநாள் கழித்து நாயக்கபடை விலகியதும் ஐரோப்பியர் மீண்டும் வந்துவிடுவார்கள். உண்மையில் தமிழக மன்னர்கள் போர்ச்சுகல்காரர்களையோ டச்சுக்காரர்களையோ பிரிட்டிஷ்காரர்களையோ ஒருமுறைகூட தோற்கடித்ததே இல்லை. இந்தியா எங்குமே இதுதான் நிலைமை.

ஒரு நாடு பட்டம் என்றால் அதில் நூல் கட்டும் மூலை என்று துறைமுகத்தைச் சொல்லலாம். பல்லாயிரம் கிலோமீட்டருக்கு அப்பாலிருந்து ஐரோப்பிய ஆட்சியாளர்கள் கீழை நாட்டு நிலங்களை அதன்வழியாக கட்டுப்படுத்தினார்கள். அவ்வாறு பிரிட்டன் ஆஸ்திரேலியாக் கண்டத்தை கட்டுப்படுத்தியது சில துறைமுகங்கள் வழியாகத்தான். அவற்றில் முக்கியமான துறைமுகம் சிட்னி. பிரிட்டிஷ் மாலுமிகள் முதன் முதலில் வந்திறங்கி ஆஸ்திரேலியாவைக் கண்டடைந்தது சிட்னியில்தான்.

பிரிட்டிஷார் உருவாக்கியெடுத்த துறைமுகங்களில் பலவற்றுக்கும் பொதுவாக உள்ள சில தனித்தன்மைகள் சிட்னிக்கு உண்டு. முக்கியமானது அது ஆழமான குடாப்பகுதியில் அமைந்திருப்பது, மும்பை போல. இரண்டாவதாக கடலுக்குள் பெரிய மலைநீட்சிகள் இருப்பது. ஆஸ்திரேலியாவின் ஆகப்பெரிய நகரம் சிட்னிதான். பலரைப்போலவே நானும் அந்நாட்டின் தலைநகரம் சிட்னி என்றுதான் எண்ணிக்கொண்டிருந்தேன். கிட்டத்தட்ட அரைக்கோடிப்பேர் வாழும் நகரம் இது. ஆஸ்திரேலியாவிலேயே சிட்னிதவிர எங்குமே மக்கள் நெரிசலைப் பார்க்க முடியவில்லை. ஆஸ்திரேலியாவின் நியூ சவுத் வேல்ஸ் மாகாணத்தின் தலைநகரம் இது. 1788ல் சிட்னி கோவ் என்னும் வளைகுடாப்பகுதியில்

பிரிட்டிஷ் கடற்படைத்தளபதி ஆர்தர் பிலிப் முதல் குடியேற்றத்தை நிகழ்த்தினார்.

ஏப்ரல் பத்தொன்பதாம் தேதி இரவு சற்றே பிந்திய பின்னர்தான் நாங்கள் பேரா.ஆசி.கந்தராஜா அவர்களின் வீட்டுக்குச் சென்றோம். சிட்னியின் நகரநெடுஞ்சாலையில் கார்களின் விளக்கொளிகள் பெருகிச்சென்றது ரிஷிகேஷில் கங்கையில் சிறிய இலைத்தொன்னைகளில் தீபம் கொளுத்தி விடும் காட்சியைப்போல் இருந்தது.

ஆசி.கந்தராஜாவின் வீட்டுக்கு பலமுறை வந்திருந்தும்கூட அநுர தடுமாறினார். அது புதிதாக முளைத்த குடியிருப்புப்பகுதி. அநுரவுக்கு சிட்னி அவரது சொந்த ஊர் போல. ‘இலங்கையை காட்டிலும் இங்கதான் நான் சுதந்திரமா இருக்கேன். இங்க நான் எந்த ஒரு இனப்பாகுபாட்டையும் பார்க்கலை’ என்றார்.

பேரா.ஆசி கந்தராஜா எங்களை வரவேற்றார். அவரது வீடு மிகுந்த கலையழகுடன் இருந்தது. உலகம் சுற்றும் வழக்கம் கொண்ட கந்தராஜா கொண்டுவந்த ஆப்ரிக்க, இந்திய, தென்கிழக்காசிய கலைச்சின்னங்கள் சரியாக திட்டமிட்டு அமைக்கப்பட்டிருந்தன. தோட்டக்கலை நிபுணர் ஆகையால் வீட்டுத்தோட்டத்தையும் மிகச் சிறப்பாக பேணியிருந்தார். ஆஸ்திரேலிய வீடுகளுக்கு பொதுவாக உள்ளவகையில் சமையல்பகுதியை ஒட்டியிருந்த சாப்பிடும் இடம் மனதுக்கு மிகவும் பிடித்ததாக இருந்தது. நான்கு பக்கமும் கண்ணாடிச் சுவர்கள். நடுவே பெரிய வட்டவடிவ உணவுமேஜை.

கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அநுர கிளம்பிச்சென்றார். எஸ்.பொவுக்கு மூன்று மகன்கள். அவர்களில் மூத்தவர் புலிகளில் இணைந்து போரில் உயிரிழந்தார். இன்னொருவர் மித்ர வேலைகளை கவனித்துக்கொள்கிறார். எஸ்.பொவின் ஆளுமை அதிரடியானது. நேராக நம் கண்களைப்பார்த்து மறுக்க முடியாத நிதானத்துடன் பேசுபவர். எப்போதும் நட்பார்ந்த நெருக்கத்துடன்தான் என்னிடம் நடந்துகொண்டிருக்கிறார். ஆனால் எல்லாரிடமும் அப்படி அல்ல என்கிறார்கள். சென்ற தலைமுறையின் ஆளுமை நிறைந்த ஆசிரியரைப்போன்றவர் எஸ்.பொ. அநுர அவருக்கு நேர் மாறு. மென்மையான பேச்சு, தன் கருத்தை தேவையான இடங்களில் மட்டும்

திடமாக முன்வைக்கும் விதம். ஒரு மருத்துவராக நாம் நம்பி நம் இதயத்தைக் கொடுக்கலாம்.

‘எஸ்போவிண்ட படைப்புகள் மேல சனத்துக்கு பலவிதமான கருத்துகள் இருக்கு. ஆனால் எல்லாருக்குமே பிடித்தமான படைப்பு அநுரதான்...’ என்று ஆசி.கந்தராஜா சொன்னார். திகசி பற்றி அப்படி ஒரு பேச்சு உண்டு, அவரது ஆகச்சிறந்த ஆக்கம் வண்ணதாசன்தான் என்று. அதற்கு சுந்தர ராமசாமியின் பதில் ‘அது கூட்டுமுயற்சில்ல?’

ஆசி.கந்தராஜா ஒரு நவீன யுகப்பேராசிரியருக்கான அனைத்து குணங்களும் கொண்டவர் என எனக்கு தோன்றியது. இதற்கு முன்னால் அ.முத்துலிங்கத்துடன் பேசும்போதெல்லாம் அந்த எண்ணம் வந்துகொண்டே இருந்தது. பிறவியிலேயே பேராசிரியரான மனிதர் சம்பந்தமில்லாமல் வேறு துறைகளில் போனது ஒரு பெரிய மானுட இழப்பு என்று.

இந்த யுகப்பேராசிரியர்களுக்கு இருக்கவேண்டிய அடிப்படைத்தகுதிகள் மூன்று. 1. தோற்றம். கவனத்தை ஈர்க்கும் திடமான உற்சாகமான தோற்றம் இளவயதில் நம்மை ஈர்க்கிறது என்பது ஓர் உண்மை. 2. எல்லாவற்றையுமே சுவாரசியமாகச் சொல்லும் தன்மை. கச்சிதமாகவும் புரியும்படியும் சொல்வது மட்டுமல்ல, அவற்றை நகைச்சுவையுணர்வுடனும், ஆர்வமூட்டும் விளக்கங்களுடனும், நினைவில் நிற்கும் மாறுபட்ட கோணங்களுடனும் முன் வைப்பது. 3. தளராத ஊக்கத்தின் ஊற்றாக அந்த ஆளுமை இருக்க வேண்டும். சலிப்பு சோர்வு அவநம்பிக்கை தயக்கம் போன்ற எதிர்மறைக்குணங்கள் இளம் வயதினரைக் கவர்வதே இல்லை.

அ.முத்துலிங்கம் போலவே ஆசி.கந்தராஜாவும் இந்த இயல்புகள் கொண்டவராக இருந்தார். எந்த ஒரு விஷயத்தையும் ஒரு கவன ஈர்ப்புச்சொற்றொடருடன் சிறந்த சிறுகதைக்குரிய திறப்புடன்தான் ஆரம்பிப்பார். சிறுகதையின் உச்சம்போலவே சொல்லவேண்டிய மையக்கருத்தை சட்டென்று முடிவில் வெடிக்க விடுவார். இன்றைய நவீனயுகக் கல்லூரிகள் இவ்வியல்புகளைக் கட்டாயமாக்குகின்றன போலும். ஆர்வமூட்டும்படி கற்பிக்காவிட்டால் மாணவர்கள் வேறு வேலை பார்க்க போய்விடுவார்கள்.

நல்லவேளையாக கந்தராஜா பேராசிரியராகவே இருக்கிறார். இளமையிலேயே அதி தீவிரமான படிப்பார்வம் கொண்டவராக இருந்திருக்கிறார். இலங்கையில் உயிரியலில் பட்டப்படிப்பு முடித்த கந்தராஜா ஜெர்மனியில் நுண் உயிரியலில் மேற்படிப்பு படிப்பதற்கான உதவித்தொகை பெற்று அங்கே சென்று படிப்பை முடித்தார். இப்போது ஆஸ்திரேலியாவில் A.S. Kantharajah பேராசிரியராக இருக்கிறார்.

ஆசி.கந்தராஜா சிறுகதைகள் எழுதியிருக்கிறார். மித்ர வெளியீடாக இவரது பாவனை பேசலின்றி, வெள்ளிக்கிழமை விரதம் போன்ற சிறுகதைத் தொகுதிகள் வெளிவந்திருக்கின்றன. அவரை யாரென்றே தெரியாமல் கதைகளைப்படித்து பிடித்திருந்தமையால் நான் 'சொல்புதிது' இதழில் அவரது நூலுக்கு மதிப்புரை எழுதியிருக்கிறேன். அதன்பின்னும் தொடர்பு ஏதும் ஏற்படவில்லை. மெல்பேர்ன் எழுத்தாளர் விழாவில்தான் நேரில் சந்தித்தேன். அவரது நூலுக்கு நான் மதிப்புரை எழுதியிருந்ததைச் சொன்னேன். அவருக்கு நினைவிருந்தது.

கந்தராஜாவின் கதைகள் தமிழ் மனம் பல்வேறு மாறுபட்ட பண்பாடுகளை எதிர்கொள்ளும்போது உருவாகும் கலாசார மறுபரிசீலனைகளை வேடிக்கை கலந்து சொல்பவை. இந்த நூற்றாண்டில் பெரிய புலம்பெயர்தல் நிகழ்ந்த பிறகு சாத்தியமாகக்கூடிய கதைகள். அ.முத்துலிங்கம், பொ.கருணாகரமூர்த்தி போன்றவர்களின் கதைகளுக்கும் இவற்றுக்கும் உள்ள பொது அம்சம் இந்த கலாசாரச் சந்திப்பு என்ற அம்சம்தான்.

தன் காதலன் தன்னை மணக்கவேண்டுமானால் தன் தந்தைக்கு அவன் அளிக்க வேண்டிய மகர் பணத்தை தான் விபச்சாரம் செய்து சம்பாதிக்கிறாள் எதியோப்பியப்பெண். அந்தக் கதைக்கு கணவனுக்காக பெண்கள் எடுக்கும் வெள்ளிக்கிழமை விரதம் என்னும் பெயரை சூட்டியிருக்கிறார். அதுவும் ஒரு நோன்புதானே என்ற சகஜமான தொனியே அவரது மனநிலையைக் காட்டுகிறது. இந்த மெல்லிய புன்னகை அவரது எல்லா கதைகளிலும் உள்ளது.

இரவு பன்னிரண்டு மணிவரை பேசிக்கொண்டிருந்துவிட்டு படுப்பதற்குச் சென்றோம். களைப்பினால் நான் உடனடியாக தூங்கிவிட்டேன். அருண்மொழி

உடலெங்கும் கிரீம் அப்பிவிட்டு வந்து படுத்துக்கொள்ளும் வாசனை கனவுக்குள் வந்தது. ஆஸ்திரேலியாவின் குளிருக்காக உடம்பெங்கும் கிரீம்பூசி எண்ணெய்ப்பசை சேர்க்க வேண்டும். இல்லையேல் எதற்கெடுத்தாலும் புல்லரிப்பு. டெல்லியில் குளிர்காலத்தில் இந்தப்பிரச்சினை உண்டு. வட இந்தியாவில் கடுகெண்ணெயை கொஞ்சம் சூடுபண்ணி தேய்த்துக்கொள்வார்கள். ஒருவகையில் ஒன்றுமே செய்யத்தேவையில்லாமல் காலநிலையைப்பற்றிய கவனமே இல்லாமல் வாழ உகந்த கேரள— குமரிமாவட்ட தட்பவெப்பநிலையே உகந்தது என்று பட்டது.

ஏப்ரல் இருபதாம் தேதி காலையில் ஆசி.கந்தராஜா எங்களை சிவசக்தி பத்மநாதன் வீட்டுக்குக் கொண்டுவந்து விட்டார். அங்கே தெளிவத்தை ஜோசப்பும், முருகபூபதியும், முருகபூபதியின் மனைவி மாலதியும் வந்திருந்தார்கள். நாங்கள் செல்லும்போது புட்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். எங்களை அங்கே விட்டுவிட்டுச் சென்றார். நாங்கள் அங்கிருந்து ரயிலில் மீண்டும் சிட்னி சென்றோம்.

ரயிலில் சிட்னியைப் பார்த்துக்கொண்டே சென்றோம். சிட்னிக்கும் பிற ஆஸ்திரேலிய நகரங்களுக்கும் உள்ள முக்கியமான வேற்றுமை என் கண்ணில் பட்டது அங்கே ஒரு கண்ணுக்குப் புலனாகாத வாழ்க்கை இருக்கிறது என்பதே. பெரிய நகரங்களில் இதை நாம் பார்க்கலாம். பிச்சைக்காரர்கள் குற்றவாளிகள் நாடோடிகள் போதையடிமைகள் ஆகியோர் அடங்கிய ஒரு ‘நிலத்தடி’ உலகம் அதற்கு மேலே உள்ளவர்களின் கண்ணில் படாமலேயே இயங்கிக்கொண்டிருக்கும். பகலில் அதன் சில சிறு தடையங்களை மட்டுமே எங்காவது பார்க்க முடியும். மூத்திரச்சந்தில் இருக்கும் ஒரு பெட்டி, ரயில்பாலத்துக்கு அடியில் இருக்கும் மனிதர்கள்... இவ்வாறு. மும்பையின் கண்ணுக்குத்தெரியாத உலகம் மிகமிகப்பெரியது.

சிட்னி ரயில்நிலையத்தை ஒட்டிய சந்துகளில் அப்படி பல தடையங்களைக் கண்டேன். முக்கியமான வெளிப்படையான அடையாளம் சுவர் எழுத்துக்கள். எல்லா இடங்களிலும் ‘சுவரெழுத்து தடைசெய்யப்பட்டிருக்கிறது’ ‘ரகசிய காமிரா உங்களைப் பார்த்துக்கொண்டிருக்கிறது’ என்ற விளம்பரங்கள். ஆனால் முக்கியமான சுவர்களில் கூட சுவரெழுத்துக்களும் படங்களும்

கிறுக்கப்பட்டிருக்கின்றன. சில கிறுக்கல்கள் முழு ஓவியத்துக்குரிய நிறப்பின்னல்களுடன் இருந்தன.

சந்துக்குள் நான்குபேர் கிழிசல் உடையுடன் ஒரு மரப்பெட்டி மீது அமர்ந்து புகைத்தபடி பேசிக்கொண்டிருப்பதைக் கண்டேன். அவர்கள் ஏழாம் உலகத்து மனிதர்கள் என்பதில் எந்த ஐயமும் இல்லை. சிட்னி ரயில் நிலையத்துக்குள் இருந்து வெளிவரும்போது கிழிசல் ஜீன்ஸ் அணிந்த ஒரு ஆசாமி உள்ளே போக நீலச்சீருடையணிந்த காவலர் கோபமாக ஏதோ சொன்னபடி அருகே வந்தார். ஆசாமி நடுவிரலை தூக்கிக் காட்டி மெல்லிதாக துப்பியபடி திமிரான தோள்ச்சரிவுடன் நடந்து சென்றார்.

சிட்னியில் இடுங்கலான பழைய தெருக்களும் பழைய கட்டடங்களும் இருக்கின்றன. பல கட்டடங்கள் பழைய மும்பையின் சில பகுதிகளை நினைவூட்டின. சில தெருக்கள் கோவா போல் பிரமையளித்தன.சிட்னியில் ஒரு வலுவான குற்ற உலகம் இருப்பதாக முருகபூபதி சொன்னார். துறைமுகத்தை ஒட்டி குற்றவுலகம் இல்லாமலிருக்க வாய்ப்பே இல்லை என்று நான் சொன்னேன். துறைமுகம் எப்படியோ போதைப்பொருட்களின் இடமாக ஆகிறது. போதைப்பொருள் என்பது நிழல் உலகின் நாணயம்.

1788க்கு முன் சிட்னி பகுதியில் கிட்டத்தட்ட 8000 பழங்குடிகள் வாழ்ந்திருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. பிரிட்டிஷார் அம்மக்களை இயோரா என்று சொன்னார்கள். அவர்களிடம் காவலர் அவர்கள் எங்கிருந்து வருகிறார்கள் என்று கேட்டபோது ‘இங்கிருந்து’ என்னும் பொருளில் அவர்கள் இயோரா என்று சொன்னார்களாம். சிட்னி பகுதியில் மட்டும் மூன்று மொழிக்குலங்கள் இருந்தன. அவர்களுக்குள் உள்ள இனக்குழுக்கள் சிறுவேறுபாடுகள் கொண்ட மொழிவடிவங்களைப் பேசினார்கள். ஒவ்வொரு இனக்குழுவுக்கும் அவர்களுக்குரிய நிலப்பகுதி ஒதுக்கப்பட்டிருந்தது.

1770ல் பிரிட்டிஷ் கடல்தளபதி ஜேம்ஸ் கூக் என்பவர் கர்னெல் விரிகுடாவில் பாட்டனி குடா என்னும் இடத்தில் வந்திறங்கினார். வேகல் (Gweagal) என்ற பழங்குடியினரை அவர் அங்கே கண்டார். அதைத்தொடர்ந்து குற்றவாளிகளைக் கொண்டுவந்து தங்க வைப்பதற்கான ஒரு குடியிருப்பை ஆர்தர் பிலிப் அங்கே உருவாக்கினார். அந்த இடத்தில் தண்ணீர் வசதி குறைவாக இருந்தமையால்

போர்ட் ஜாக்ஸன் பகுதிக்கு அவ்வருடமே அது மாற்றப்பட்டது. அப்போதைய பிரிட்டிஷ் உள்துறைசெயலர் தாமஸ் டவுன்ஷெண்ட் சிட்னி பிரபுவின் நினைவாக சிட்னி என்று பெயரிட்டார்.

மறுவருடம் குற்றவாளிகளுடன் வந்த சின்னம்மை நோய் பழங்குடிகளை தாக்கி ஆயிரம்பேரைக் கொன்றது. ஆகவே பழங்குடிகள் குடியேற்றத்தை கடுமையாக எதிர்க்க ஆரம்பித்தார்கள். ஆனால் நவீன ஆயுதங்கள் கொண்டிருந்த பிரிட்டிஷ் குடியேற்றக்காரர்கள் அவர்களைக் கொன்றே ஒழித்தார்கள். 1820ல் கவர்னர் மக்வாரி (Macquarie) அவரது பழங்குடி மேம்பாட்டுத் திட்டத்தை முன்வைத்து பழங்குடிக்குழந்தைகளை வலுக்கட்டாயமாக 'சீர்திருத்த' முயன்றபோது மிகச்சில பழங்குடிகளே எஞ்சியிருந்தார்கள்.

கவர்னர் மக்வாரியின் காலத்தில்தான் சிட்னி இன்றைய அமைப்பை அடைந்தது என்கிறார்கள். அயர்லாந்து விடுதலைக்கான கிளர்ச்சி நடந்தமையால் ஏராளமான குற்றவாளிகள் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பப்பட்டார்கள். அவர்களைப் பயன்படுத்தி சாலைகளும் பாலங்களும் கட்டடங்களும் உருவாக்கி எழுப்பப்பட்டன. உலகப்போருக்குப் பிந்தைய நிதி நெருக்கடி ஆஸ்திரேலியாவை கடுமையாக பாதித்தது. அந்த நெருக்கடியால்தான் அங்கே சிட்னி பாலம் போன்ற பெரும் கட்டுமானங்கள் எழுந்தன.

மீண்டும் சிட்னி பாலத்தின் அடியில் வந்து சேர்ந்தோம். நல்ல வெயில். ஆனால் இதமான குளிர் இருந்தது. ஏராளமான சுற்றுலாப்பயணிகள் வந்து அப்பகுதியெங்கும் நிறைந்திருந்தார்கள். அதிகமும் மங்கோலிய இனத்தைச் சேர்ந்தவர்கள். ஆஸ்திரேலியாவைச் சுற்றியுள்ள பெரும்பாலான நாடுகள் மஞ்சளினத்தவரால் நிறைந்தவை. அவர்கள் அடிக்கும் நிறத்திலேயே பொதுவாக உடையணிகிறார்கள். பெரும்பாலும் சிவப்பு மற்றும் மஞ்சள். நீல நிற உடையணிந்த மஞ்சளினத்தவரைப் பார்ப்பதே அபூர்வம் என்று தோன்றியது.

மீண்டும் மீண்டும் ஓபரா ஹால் புகைப்படமாகிக்கொண்டே இருந்தது. இந்தப்புகைப்படங்களின் விந்தைகளை எண்ணித்தீராது. இவற்றை எடுப்பவர்களுக்கு அவை வாழ்க்கையின் மறக்கமுடியாத கணங்கள். அவர்கள் அதை எப்படியும் மனதில் நிறுத்திவைத்திருப்பார்கள், ஆகவே அவர்களுக்கு

புகைப்படம் தேவையே இல்லை. அவர்கள் அவற்றை பிறருக்குக் காட்டவே எடுக்கிறார்கள். ஆனால் காலம்செல்லச்செல்ல அவர்கள் முதிர்ந்து சுருங்கும்போது நினைவுகளை மலரச்செய்வனவாக அதே புகைப்படங்கள் மாறக்கூடும்.

தெளிவத்தைக்கு எழுபது வயது. முருகபூபதி ஐம்பதுகளில். நான் நாற்பதுகளில். ஆனால் அந்த இடத்தில் சுற்றுலாப்பயணி என்ற அடையாளம் அளிக்கும் உற்சாகத்துடன் சிரித்துக்கொண்டும் விதவிதமாக புகைப்படங்களுக்கு போஸ் கொடுத்துக்கொண்டும் கண்டபடி வேடிக்கை பார்த்துக் கொண்டும் சுற்றிவந்தோம். அந்தப் பொது இடத்தில்தான் எத்தனை எத்தனை மனிதர்கள். கட்டிப்பிடித்துக் கொண்டே நடமாடும் காதலர்கள். குழந்தைகளுடன் செல்லும் குடும்பங்கள். சிறிய குழுக்களாக சீனமுதியவர்கள் கசங்கிய பாலிதீன் தாள் போல சுருக்கங்கள் அடர்ந்த முகத்துடன் சென்றார்கள்.

சிட்னி குடா முழுக்க வேடிக்கைக்காரர்கள்தான். சிறிய பாட்டரி மைக்குடன் கித்தார் வாசித்து பாடும் இளைஞர்கள். அவர்களில் ஒரு வெள்ளையர் பாப் மார்லி போல சடைகள் கொண்ட சிகையலங்காரம் செய்திருந்தார். கைகளில் விதவிதமான குச்சிகளை வைத்துக்கொண்டு டிரம் வாசிக்கும் ஒரு கறுப்பர் முகத்தில் சூட்டுத்தழும்புகளுடன் இருந்தார். வென்ரிகிலேரிசம் செய்யும் ஒருவர் ‘புரபசர் மேக்’ என்று கையால் எழுதிய அட்டையை தன் சூட்கேஸில் சாய்த்து வைத்திருந்தார். அவரைச்சுற்றி சில குழந்தைகள் சிரித்துக்கொண்டு நின்றன.

சிவசக்தி அருண்மொழியை புகைப்படங்களாக எடுத்துத் தள்ளிக்கொண்டிருந்தார். அருண்மொழி பூமியிலேயே இல்லை. பொதுவாக அவளுக்கு அவள் வயதுக்குரிய நிதானமேதும் கிடையாது. சின்னப்பெண் போல கிரீச்சிடுவதும் சிரிப்பதும் ஓடுவதுமெல்லாம் உண்டு. இப்போது எல்கேஜி குழந்தையாக ஆகிவிட்டது போலிருந்தது.

அங்கேதான் முதன்முறையாக ஆஸ்திரேலிய பழங்குடி ஒருவரை பார்த்தேன். மிகப்பெரிய மூங்கில்வாத்தியம் ஒன்றை வாயில்வைத்து பூம்பா பும்பா என்று ஆழமான அதிர்வொலியை எழுப்பிக்கொண்டிருந்தார். அந்த ஒலியுடன் அவரை

முதன்முதலாகப் பார்த்தபோது என் மனம் அதிர்ந்தது – ஏனென்றால் எனக்கு மிக நன்றாகப்பழக்கமான முகமாக அது இருந்தது. எங்கே எங்கே என்று மூளையைக் குடைந்தபடியே இருந்தேன்.

அவர் இடுப்பில் ஒரு சிறிய துணியை நம்மூர் கச்சம்போல் அணிந்திருந்தார். மற்றபடி வெற்றுடம்பு. கரிய நிறம். சுருட்டை முடி. நல்ல வயதிருக்கும். எழுபதோ அதற்கும் மேலோ. போதைப்பழக்கம் கொண்ட கண்கள். உடம்பெங்கும் வைணவர்களின் நாமத்தை விபூதிப்பட்டையாகப் பூசிக்கொண்டது போல வெண்ணிறமான அடையாளங்கள். வித்தை காட்டி பிச்சைதான் எடுத்துக் கொண்டிருந்தார். அவர் ஒரு குழந்தையை அருகே அழைத்தபோது எனக்கு மூளை மின்னியது – அவர் அச்சு அசல் அப்படியே மறைந்த மலையாள எழுத்தாளர் பொன்குன்னம் வர்க்கி போல் இருந்தார்!

நான் எண்பதுகளில் ஒருமுறை பொன்குன்னம் வர்க்கியைப் பார்த்திருக்கிறேன். சட்டைபோடாமல் வீட்டுத்திண்ணையில் அமர்ந்திருந்தார். கேரளத்தின் புதுயுக எழுத்தாளர்களில் ஒருவர். உழவர்களின் துயரை எழுதிய இடதுசாரிப் புரட்சியாளர். மத ஆதிக்கத்துக்கு எதிராக கிளர்ந்தெழுந்த பகுத்தறிவுவாதி. ஒரு நண்பருடன் அவரை பார்க்கச்சென்றிருந்தேன். முழங்கையைக் காட்டி ‘பாட்டில் இருக்கா?’ என்று கேட்டார். இருந்தது. உற்சாகமாக அவரது இளமை நாட்களைப்பற்றி பேசினார். பஷீர், தகழி, தேவ் ஆகியோருடன் அவருக்கு இருந்த நெருக்கமான நட்பைப்பற்றி பேசினார். கொஞ்சநேரத்தில் சாமி மலையேறிவிட்டது.

ஆஸ்திரேலிய பழங்குடியினர் வேறு சிலரையும் பார்த்தேன். இளைஞர்கள். மூங்கில் தடிகளில் குச்சியால்தட்டி தாளமிட்டபடி அந்த வாத்தியத்தை வாசித்தார்கள். அவர்களிடம் இரு விஷயங்கள் நம்மை அதிர்ச்சியுறச்செய்யும். ஒன்று அவர்களின் தோற்றம் சுத்தமான தமிழகத்தோற்றம். ஒரு ஆஸ்திரேலியப் பழங்குடியினரை மதுரை, விருதுநகர் அல்லது கொல்லம் கோட்டயம் பக்கம் உள்ளவர் என்று சொன்னால் எவரும் நம்பிவிடுவார்கள். நிறம் முடி முகம் மட்டுமல்ல அசைவுகள்கூட. இன்னொன்று அவர்கள் பேசிக்கொள்வதை குறிப்பிட்ட தூரத்தில் நின்று அசப்பில் கேட்டால் யாரோ வேகமாகக் கன்னடம் பேசுவது போன்ற பிரமை நமக்கு ஏற்படும்.

அந்தப் பெருநகரின் ஆடம்பரத்தோற்றத்தின் முன்னால் அந்தப் பழங்குடிகள் அப்படி வந்து அமர்ந்திருப்பது எனக்கு கலவையான உணர்வுகளை உருவாக்கியது. என் அப்பாவோ தாத்தாவோ அங்கே வந்து அமர்ந்திருப்பது போன்ற உணர்வு அது. என் குலமூத்தார் ஒருவர் அங்கே விபூதி அணிந்து அமர்ந்து சங்கும் மணியும் முழக்கி பிச்சை எடுத்துக்கொண்டிருப்பது போல. அவர் குடிக்காகவும் உணவுக்காகவும் தானறிந்த தன் குலத்து பண்பாட்டுச்சின்னங்களை அங்கே விற்றுக்கொண்டிருந்தார். சுற்றுலாப்பயணிகளுக்காக மிக மலிவாக்கப்பட்ட பழங்குடிப் பண்பாடு. பூமராங் வளைதடிகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தன.

இன்னொருபக்கம் அந்த ஒட்டுமொத்த பண்பாட்டையும் அப்பழங்குடியினர் சவாலுக்கு அழைப்பது போல் இருந்தது. ஆலமரத்துக்கு கீழே அருகு நிற்பது போல. ஆலமரத்துக்கு கிளை அதிகம். அருகுக்கு வேர் அதிகம். அந்த முதியவர் அங்கே நிற்பது அந்தத் தொழில்மயப்பண்பாடின் உள்ளே எத்தனை பெரிய பண்பாட்டு வெற்றிடம் இருக்கிறதென சுட்டிக்காட்டுவதுபோல் இருந்தது.

‘நல்லவேளை இலங்கையிலயும் இந்தியாவிலயும் வெள்ளைக்காரங்க வர்ரப்ப நாம எண்ணிக்கையிலே ஜாஸ்தியா இருந்தோம். இல்லாட்டி சென்னையிலயும் கொழும்பிலயும் நாம இப்டி உக்காந்து பிச்சை எடுத்திட்டிருப்போம். வெள்ளைக்காரங்க வந்து வேடிக்கைபாத்து ஃபோட்டோ எடுத்துப்பாங்க’ என்றேன். முருகபூபதி சிரித்தார்.

உடலில் வாய் போன்றது துறைமுகம். அதனூடாகவே ஒரு நாடு பேசுகிறது. அல்லது காது போன்றது, அதனூடாகவே ஒரு நாடு கேட்கிறது. ஆனால் அவை நோயைக் கொண்டுவரும் புண்களும் ஆகலாம். அதற்கு சிட்னி ஓர் உதாரணம்.

16. மண்ணின் மனிதர்கள்

ஆ ஸ்திரேலிய பழங்குடிகள் உலகின் மிகத்தொன்மையான பண்பாட்டுக்கு வாரிசுகள் என்கிறார்கள். கிட்டத்தட்ட எழுபதாயிரம் வருடங்களுக்கு முன்பு பெரும்பனியுகத்தில் கடல்கள் உறைந்திருந்தபோது அவர்கள் ஆசிய மையநிலம் வழியாக நடந்தே இங்கே வந்திருக்கலாம் என்கிறார்கள். வெள்ளையர்கள் ஆஸ்திரேலியாவுக்கு வந்தபோது அந்தக் கண்டத்தில் ஏழரை லட்சம் பழங்குடிகள் இருந்ததாகச் சொல்கிறார்கள். அவர்கள் பூமியில் தனித்துவிடப்பட்டமையாலும் எண்ணிக்கை குறைவாக இருந்து வளங்கள் அதிகமாக இருந்தமையாலும் அவர்கள் மானுட நாகரிக வளர்ச்சியின் பல புற அடையாளங்களை அடையவேயில்லை. உதாரணமாக அவர்களுக்கு விவசாயம் தெரியாது. மிருகங்களை பழக்கவில்லை.

உணவை தேடிச்சேகரித்து உண்பதும் வேட்டையாடுவதும்தான் அவர்களின் வாழ்க்கை. ஆண்கள் கங்காருகளையும் சிறிய மிருகங்களையும் வேட்டையாடினார்கள். பெண்கள் பொறிவைத்து பறவைகளைப் பிடிப்பது, கிழங்குகள் சேகரிப்பது ஆகியவற்றைச் செய்தார்கள். ஆகவே அவர்கள் உணவுக்காக விரிந்த ஆஸ்திரேலிய நிலங்களில் அலைய நேர்ந்தது. இதனால் மிகக்குறைவான பொருள்களையே கொண்டுசென்றார்கள். ஆயுதங்கள் சில உடைகள் வழிபாட்டுப்பொருள்கள். நிலையான உறைவிடம் அவர்களுக்கு இல்லாததனால் நிலையான பண்பாட்டு வளர்ச்சியும் சாத்தியமாகவில்லை.

கிட்டத்தட்ட 500 இனக்குழுக்கள் ஆஸ்திரேலிய பழங்குடிகளுக்குள் உண்டு. ஒவ்வொன்றுக்கும் அவற்றுக்கான மொழி உண்டு. குலமூத்தாரே மக்களுக்கு தலைவராக விளங்கினார். பெரும்பாலும் அது ஒரு மூத்தார்குழுவாக இருக்கும். ஒரு சமூகத்தின் புறவாழ்வின் வளர்ச்சிக்கும் அகவாழ்வின் வளர்ச்சிக்கும்

நேரடியான உறவேதும் இல்லை என்பதற்கான சிறந்த உதாரணமாக ஆஸ்திரேலியா பழங்குடியினர் சுட்டப்படுகிறார்கள். அவர்கள் புறப்பண்பாட்டு வளர்ச்சி என்ற நிலையில் ஆரம்பப் படியில், பொறுக்கியுண்ணும் நிலையில், இருப்பவர்கள். ஆனால் அவர்களின் வாழ்க்கை நோக்கு, அதாவது மெய்யியல், மிக வளர்ந்த நிலையில் இருந்தது.

ஆஸ்திரேலியப் பழங்குடிகளின் மெய்யியலை இப்போது விரிவாக ஆராய்ச்சி செய்துவருகிறார்கள். அவர்களின் மெய்யியலின் அடிப்படை அலகுகள் மூதாதையர் மற்றும் இயற்கை. இவ்விரு சொற்களும் அவர்களின் மெய்யியலில் ஆழமான பொருள் கொண்டவை. மூதாதையர் என்னும்போது அவர்கள் இறந்தவர்களை மட்டும் சொல்லவில்லை இப்படிச் சொல்லலாம். இறப்பவர்கள் கருத்துருவமாக மாறி காலத்தில் பின்னுக்குச் செல்கிறார்கள். இவ்வாறு காலத்தின் பின்னுக்குச் சென்று தொடக்கநிலையை அடைந்தால் அங்கே இருக்கும் தூய கருத்துநிலை என்பதும் மூதாதையே. அந்த கருத்துநிலையில் இருந்தே இந்த பிரபஞ்சம் உருவாகியிருக்கிறது. அதாவது மூதாதை என்பது முன்னால் இருந்தது என்றே பொருள்படுகிறது.

அதேபோல இயற்கை என்பதும் அவர்களுக்கு வெறும் ஜடப்பொருள்தொகை அல்ல. அவர்கள் நோக்கில் இயற்கை ஒரு உயிர் போன்றது. அதற்கு எண்ணங்களும் வாழ்க்கையும் உண்டு. அது நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. இயற்கையில் உள்ள ஜடப்பொருட்கள் தாவரங்கள் மனிதர்கள் எண்ணங்கள் ஆகியவை எல்லாமே ஒன்றில் இருந்து இன்னொன்றாக மாறக்கூடியவை. இயற்கையைச் சேதப்படுத்துவது மாற்றுவது எல்லாம் பாவம். ஆகவே அவர்களுக்கு வேளாண்மை விலக்கப்பட்டது.

இவ்விரண்டு அடிப்படைகளை இணைக்கும் சக்தியாக கனவை அவர்கள் எண்ணுகிறார்கள். மூதாதையர் அனைவருமே கனவுகளுக்குள் சென்றுவிடுகிறார்கள். அங்கே இருந்துகொண்டு அவர்கள் மக்களை வழிநடத்துகிறார்கள். இயற்கையை விட அதில் உள்ள மனிதர்களைவிட கனவு இன்னும் பிரம்மாண்டமானது. இயற்கையே அந்த கனவுக்குள் தான் நிகழ்கிறது. ஆகவே ஆஸ்திரேலிய பழங்குடிகள் தங்கள் முன்னோர் வாழ்ந்து

இயற்கையில் கனவுவடிவமாக உறைந்துவிட்ட வாழ்க்கையை அப்படியே மாற்றமில்லாமல் மீண்டும் வாழ்கிறார்கள் எனலாம்.

இதிலிருந்து அவர்கள் தங்கள் குலக்குறி மரபை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு தனிமனிதருக்கும் அவருக்குரிய குலக்குறி உள்ளது. மரங்கள், விலங்குகள், இயற்கைப்பொருட்கள், நட்சத்திரங்கள் ஆகியவை குலக்குறிகளாக ஆகின்றன. ஒருவருக்கு அவருக்குரிய மரம் அல்லது பூச்சி அல்லது மிருகம் இருக்கலாம். அந்த குலக்குறியை ஒட்டியே அவரது தனிவாழ்க்கையின் எல்லா விஷயங்களும் தீர்மானமாகின்றன. குலக்குறியே ஒருவரின் திருமண உறவுகள், சடங்காசாரங்கள் ஆகியவற்றை தீர்மானிக்கிறது.

உண்மையில் இந்தத் தகவல்களை ஆஸ்திரேலிய சுற்றுலாத்துறையின் வெளியீடுகளில் இருந்தும் இணையத்தில் இருந்தும் பொறுக்கிக் கொண்டிருக்கிறேன். இந்தக் கோணத்தில் ஒரு தமிழன் ஆஸ்திரேலியப் பழங்குடியை புரிந்துகொள்வதைப்போல முட்டாள்தனம் வேறு இருக்க முடியாது. அவர்கள் நம்முடைய முன்னோர்களும்கூட. ஏதோ ஒருவகையில் நம்மை வைத்து அவர்களை புரிந்துகொள்ள முயலலாம். ஒருபோதும் வெள்ளையர்கள் அவர்களை புரிந்துகொள்ள முடியாது. வெள்ளையர்கள் நம்மைப்பற்றி எழுதியிருப்பது எவ்வளவு அபத்தம் என நாம் அறிவோம். அதைப்போலத்தான் இருக்கும் இவையும்.

உதாரணமாக இந்த குலக்குறி (டோட்டம்) என்ற சொல். இது செவ்விந்திய பழங்குடிகளை ஆராய்ந்த லூயிஸ் மார்கன் போன்ற ஆரம்பகால மானுடவியலாளர்கள் உருவாக்கிக் கொண்ட ஒரு புரிதல். அம்மக்கள் சில இயற்கைச்சின்னங்களை தங்கள் குடும்பத்துக்குரியதாகவோ குலத்துக்குரியதாகவோ கொள்கிறார்கள் என்பதில் இருந்து உருவான புரிதலைக்கொண்டு குலக்குறி என்னும் கௌத்துருவை உருவாக்கி அதை உலகமெங்கும் உள்ள பழங்குடிகள்மீது போடுகிறார்கள். எந்த அளவுக்கு இந்த முட்டாள்தனம் செல்கிறதென்றால் நெற்றியில் படையாக திருமண் அணிந்திருக்கும் அய்யங்காரைக் கண்டு அவர் தன் குலக்குறியை நெற்றியில் வரைந்து வைத்திருக்கிறார் என்று சொல்லும் அளவுக்கு.

இயற்கையின் ஆற்றலை பிரபஞ்ச சக்தியான பிரம்மத்தின் தோற்றநிலைகளாகக் கண்ட வேதமரபை இயற்கை சக்திகளைக் கண்டு அஞ்சி அவற்றை கும்பிட்டார்கள் என்று எழுதிவைத்தார்கள் ஆரம்பகால இந்தியவியலாளர்கள். இந்தியர்கள் கல்லையும் மண்ணையும் மரத்தையும் வணங்குகிறார்கள் என்றார்கள். நாம் கல்லாய் மண்ணாய் மரமாய் – வானாகி மண்ணாகி வளியாகி ஒளியாகி ஊனாகி உயிராகி – நின்ற ஒன்றை வணங்குவதைத்தான் அப்படி புரிந்துகொண்டிருந்தார்கள் என நாம் அறிவோம். ஆஸ்திரேலியப் பழங்குடிகளைப்பற்றிய வெள்ளையனின் புரிதல் எந்த லட்சணத்தில் இருக்கிறதென எப்படித்தெரியும்?

ஆஸ்திரேலியப் பழங்குடியின் குலக்குறி குறித்து நான் என்னை வைத்தே புரிந்துகொள்ள முடியும். இந்திய சோதிடமரபில் ஒவ்வொருவருக்கும் நட்சத்திரம் உண்டு. மரமும், விலங்கும் நிறமும் உண்டு. என்னுடைய நட்சத்திரம் அனுஷம். மரம் மருதம். மிருகம் வெள்ளாடு. நிறம் இளஞ்சிவப்பு. என் அண்ணாவின் நட்சத்திரம் ஆயில்யம். மரம் கடம்பு. உயிரினம் பாம்பு. நிறம் நீலம். பழங்காலத்தில் திருமணம் உள்ளிட்ட சடங்குகளுக்கு இந்த தகவல்கள் பரிசீலனைசெய்யப்படும். இந்தவழக்கம் ஆஸ்திரேலியப் பழங்குடியினரிடம் இருக்கலாம்.

ஆஸ்திரேலியப் பழங்குடியினரின் சடங்குகள் பல இந்தியச் சடங்குகளைப்போலவே இருக்கின்றன. ஒரு வயதுவரை குழந்தைக்குப் பெயரிடுவதில்லை, அதுவரை அதை மனிதனாக எண்ணுவதில்லை. எங்களூரிலும் அப்படித்தான். ஒருவயதான பின்னர் 'சோறுகொடுத்து' பெயரிடுவார்கள். அது வரை அக்குழந்தைக்குப் பெயரில்லையாதலால் மரணதேவதைகள் அதை கூட்டிச்செல்லமுடியாது என்பார்கள். மாற்று கோத்திரங்களில் இருந்தே பெண் எடுக்கவேண்டும் என்ற வழக்கம் இங்கிருப்பதைப்போலவே அங்கும் இருக்கிறது.

சு.கி.ஜெயகரன் பல்வேறு ஆஸ்திரேலியப் பழங்குடி மொழிகளில் தமிழ் மொழிச்சொற்களின் திரிந்த வடிவங்கள் இருப்பதை விரிவாக எழுதியிருக்கிறார். இம்மக்களைப்பற்றி தமிழ்பண்பாட்டு நோக்கில் விரிவான ஆய்வுகள் செய்யும்போது பல புதிய திறப்புகள் நிகழலாம். இந்திய சாதியமைப்பைப்

பற்றியே ஒரு பொருட்படுத்தும்படியான புரிதலை இன்னும் உருவாக்க முடியாத வெள்ளையர் ஆஸ்திரேலியப் பழங்குடிகளைப் பற்றி என்ன சொன்னாலும் அது தொண்ணூறு விழுக்காடு தவறாகவே இருக்கும்.

ஆஸ்திரேலியா நிலத்துக்கு வந்த வெள்ளையர்கள் அதை ‘ஆளில்லா நிலம்’ (terra nullius) என்று அறிவித்தனர். அங்கே வாழ்ந்த மக்களை அவர்கள் மனிதர்களாகவே எண்ணவில்லை. 1993ல்தான் ஆஸ்திரேலிய அரசு இந்த சட்டத்தை நீக்கி ஆஸ்திரேலிய மண்ணில் பழங்குடிகளின் உரிமையை அதிகாரபூர்வமாக அங்கீகரித்தது. ஆஸ்திரேலியப் பழங்குடி மக்கள் மீதான வெள்ளையர் சமூகத்தின் எதிர்வினை அவர்களின் பண்பாடு, மதம் ஆகியவற்றின் சில அடிப்படைகளைச் சுட்டக்கூடியதாகும். மூன்றுவகையான அணுகுமுறைகள் அவர்கள்மேல் கடைப்பிடிக்கப்பட்டன. 1. இன ஒழிப்பு முறை 2. இனமேம்பாட்டு முறை 3. தனிப்பண்பாட்டு அனுமதி முறை.

முதலில் ஆஸ்திரேலியாவுக்கு வந்தவர்கள் குற்றவாளிகளும் காவலர்களும் என்பதனால் ஐரோப்பியப் பண்பாட்டின் ஆகக்கடைசிநிலைகளில் இருந்தவர்களே இங்கே வந்தார்கள். அவர்களைப் பொறுத்தவரை ஆஸ்திரேலிய பழங்குடிகள் மனிதர்களே அல்ல. மிருகங்கள். ஊனுக்கும் தோலுக்கும் பயன்பாமாடார்கள் என்பதனால் மிருகங்களிலும் கடையர்கள். ஆகவே அவர்களைக் கூண்டோடு கொன்றே ஒழித்தார்கள். பழங்குடி மக்கள் அழிக்கப்பட்டது மானுட வரலாற்றின் பெரும் சோகங்களில் ஒன்று. கொடும் நோய்களிலும் செயற்கைப்பஞ்சங்களிலும் அவர்கள் கொல்லப்பட்டார்கள். அவர்களை எலிகளைப்போல வேட்டையாடி கொல்ல அரசு அனுமதி இருந்தது. பழங்குடிகளை துரத்திச்சென்று சுட்டுக்கொல்லும் விளையாட்டுக்கள் அக்காலத்தில் பிரபலமாக இருந்தன.

இங்கே கவனிக்கவேண்டிய இரு விஷயங்களுண்டு. ஒன்று, ஆஸ்திரேலியாவுக்கு வந்து இந்த மானுட அழிவை நிகழ்த்தியவர்களில் கணிசமானவர்கள் ஐரீஷ் சுதந்திரப்போரிலும் ஸ்காட்லாந்து சுதந்திரப்போரிலும் கைதானவர்கள். அவர்களின் சுதந்திர லட்சியவாதம் இம்மக்களையும் தழுவியதாக இருக்கவில்லை. இது அன்றைய ஐரோப்பாவின் மனநிலையைக்

காட்டுகிறது. ஐரோப்பிய அறிவொளி இயக்கமும் அதன் பண்பாட்டு, தத்துவ வெற்றிகளும் அடிப்படையில் இந்த இனவாதத்தின் மீதுதான் அமர்ந்திருந்தன.

உதாரணமாக, இந்த மாபெரும் இன அழிவு நடந்துகொண்டிருக்கும்போது கார்ல் மார்க்ஸ் லண்டனில் இருந்தார். ஐரீஷ் விடுதலைப்போராட்டம் போன்றவற்றை வரலாற்றின் முற்போக்கு நிகழ்ச்சிகளாக சித்தரித்துக்கொண்டும் இருந்தார். ஆஸ்திரேலியா இன ஒழிப்பு குறித்து அன்றிருந்த பிற பிரிட்டிஷ் சிந்தனையாளர்களைப்போலவே அவருக்கும் தெரிந்திருந்தது. குலக்குறி போன்றவற்றைப் பற்றிப் பேசும்போது அவர் ஆஸ்திரேலியப் பழங்குடிகளைப்பற்றி விரிவாகவே அறிந்திருந்தார் என்றே எண்ணத்தோன்றுகிறது. அவர் ஐரோப்பியர் தொடர்பு மூலம் அப்பழங்குடிகள் 'நாகரிகம்' அடைகிறார்கள் என்ற எண்ணம் கொண்டிருந்தார்.

இந்தியா குறித்து மார்க்ஸ் கொண்டிருந்த எண்ணங்களுக்கும் இதுவே பின்னணி. நிலப்பிரபுத்துவ இந்தியாவுக்கு பிரிட்டிஷ் ஆட்சி ஒரு பெரிய முன்னகர்வு சக்தி என அவர் எண்ணினார். பின்னர் மார்க்ஸியம் சோவியத் ருஷ்யாவில் ஆட்சியமைத்தபோது தொலைதூர ஆர்ட்டிக் நிலப்பகுதியில் வாழ்ந்த பழங்குடிகளை அது கிட்டத்தட்ட ஒழித்துக்கட்டியமைக்கான கோட்பாட்டு விதை மார்க்ஸில் உள்ளது. பின்னர் சோவியத் ருஷ்யக் கூடமைப்புக்குள் ஐரோப்பிய ருஷ்யா ஆசிய ருஷ்யாவின் காவலனாகவும் கடவுளாகவும் ஆனதன் உளவியல் வேர் மார்க்ஸிலேயே உள்ளது.

இன்னொன்று, இந்த இன ஒழிப்பு என்னும் கருதுகோள். இனத்தூய்மை என்ற கருதுகோள் தொன்மையானது. ஆனால் பூரணமான இன அழிப்பு என்பதை நாம் ஆபிரகாமிய மதங்களின் சிந்தனைகள் பரவிய இடங்களிலேயே காணமுடியும். 'நாம் மற்றும் பிறர்' என்ற பிரிவினையை திட்டவட்டமாக நிறுவும் தன்மை யூத மதத்தின் அடிப்படைகளில் ஒன்று. இஸ்லாமிய மதம் ஈரானுக்கு வந்தபோது அங்கிருந்த பாரசீகப்பண்பாட்டை பூரணமாக அழித்ததுடன் அந்த இனமக்களையும் இல்லாமலாக்கியது. எகிப்தில் மாபெரும் நாகரீகத்தை உருவாக்கிய காப்டிக் இனம் வேரற்று போய் இன்று சில ஆயிரங்களே எஞ்சியுள்ளன.

ஐரோப்பாவில் தத்துவத்திலும் மெய்யியலிலும் பெரும் வளர்ச்சி பெற்றிருந்த பல்வேறு பாகன் இன மக்கள் சுவடற்று அழிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களை கொடூரமான காட்டுமிராண்டிகளாகச் சித்தரிக்கும் கதைகள் மட்டும் உள்ளன. அவை இன்று திரைப்படமாகவும் வந்துகொண்டிருக்கின்றன. ஐரோப்பா சென்ற அமெரிக்கக் கண்டத்தில் செவ்விந்தியர்கள் ஆஸ்திரேலிய பழங்குடிகளைப்போலவே பூரணமான இன அழிப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். இங்கும் கவனிக்க வேண்டிய ஒன்று உண்டு, மானுட இனத்தின் பரிணாமம் குறித்த பல ஊகங்களை செவ்விந்தியர்களை ஆராய்ந்த லூயிஸ் மார்கனில் இருந்துதான் மார்க்ஸ் எடுத்துக்கொண்டிருக்கிறார். ஆனால் செவ்விந்தியர்கள் பண்பாட்டால் பிந்தியவர்கள், அவர்களை ஐரோப்பியர் மீட்டார்கள் என்ற கருத்தையே அவர் கொண்டிருந்தார்.

இத்தகைய இன ஒழிப்பு என்பது இந்தியாவில் எந்தச் சிறிய பழங்குடி இனத்துக்கும் நிகழவில்லை என்பதை நாம் கவனிக்கவேண்டும். தன் தனித்தன்மையை பேணுதல், பிறரை ஒதுக்கி வைத்தல், அடிமைப்படுத்துதல் இரண்டும் நிலப்பிரபுத்துவ காலத்துடன் பிரிக்கமுடியாதபடி பிணைந்தவை. ஏனென்றால் நில அடிமைமுறை அவ்வாறுதான் உருவாகிறது. அது அக்காலத்து பொருளியலின் அடிப்படை அலகு. ஆனால் அது இன ஒழிப்பு என்னும் அளவுக்குச் செல்லவில்லை. பெரும்பாலும் பழங்குடிப்பண்பாடு இருந்த கிழக்காசிய நாடுகள்மீது ஆதிக்கம் செலுத்திய சோழர்கள் அங்கே இன அழிப்பை நிகழ்த்தவில்லை.

1900த்தில் இரண்டாவது அணுகுமுறை பயன்பாட்டுக்கு வந்தது. இதை இனமேம்பாட்டுமுறை என ஏன் சொல்கிறோம் என்றால் ஐரோப்பியர் தங்களை பண்பாட்டால் மேம்பட்ட இனம் என்று எண்ணினார்கள். அந்த மேம்பட்ட பண்பாட்டை நோக்கி பிற மக்களை வலுக்கட்டாயமாக இழுத்து வர முயன்றார்கள். 1972 வரை ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டுக்காலம் இந்த அணுகுமுறை நீடித்தது. பழங்குடிகள் வலுக்கட்டாயமாக பிடித்துவரப்பட்டு முகாம்களில் அடைக்கப்பட்டார்கள். அவர்களுக்கு நாகரிகம் வன்முறை மூலம் புகட்டப்பட்டது. குழந்தைகளை பெற்றோர் ‘கெடுத்து’விடக்கூடும் என்பதனால் அவர்கள் பிடுங்கப்பட்டு முகாம்களில் பாதிரிமார் கட்டுப்பாட்டில்

வளர்க்கப்பட்டார்கள். அந்த வதையை பழங்குடிகள் எதிர்த்தார்கள். ஆகவே இதுவும் பெரும் மனித அழிவையே உருவாக்கியது.

இந்த அணுகுமுறை ஐரோப்பிய இனவாதத்தின் இன்னொரு முகம் மட்டுமே. பிற பண்பாடுகள் மேல் அவர்களுக்கு மதிப்பில்லை. மக்களைக் கொல்வதற்குப் பதில் அவர்களின் ஆளுமையைக் கொல்லலாமே என்ற எண்ணம் கொண்டிருக்கிறார்கள். உலகளாவிய மதம் மாற்றும் இயக்கங்களின் உளவியல் இதுவே. இந்தியாவுக்கு வந்த பல மதமாற்றக்காரர்கள் இந்த மனநிலையையே கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக புனித சேவியர், கால்டுவெல், ரிங்கல் துபே போன்றவர்கள் இந்தியர்களைப் பற்றி எழுதிய வரிகளை காணலாம். பூரணமான பண்பாட்டு அவமதிப்பும் இனவெறுப்பும் ததும்புபவை அக்குறிப்புகள். நாடார்களை மதம் மாற்றி கல்விபுகட்டி ‘மேம்படுத்த’ முயன்ற கால்டுவெல் திருநெல்வேலி சாணார்களின் வரலாறு போன்ற நூல்களில் அவர்களைப் பற்றி எழுதியிருப்பது மானுடவெறுப்பு ததும்பும் அவதூறு என்றே சொல்லவேண்டும்.

1967ல்தான் ஆஸ்திரேலிய பழங்குடிகளுக்கு குடியுரிமை வழங்கியது. பழங்குடிகளுக்குக் குடியுரிமை வழங்காத ஆஸ்திரேலிய அரசின் செயல்பாடுகளை எதிர்த்து பண்டித நேரு கடுமையான கண்டனங்களை தெரிவித்திருக்கிறார். 1972ல் அவ்வரசு பழங்குடிகள் தங்கள் வாழ்க்கையை தாங்களே தீர்மானித்துக்கொள்ளலாம் என்னும் உரிமையை வழங்கியது. ஆனால் அதற்குள் பழங்குடிகள் மீளமுடியாதபடி சிதறடிக்கப்பட்டிருந்தார்கள். அவர்களின் பூர்வீக நிலங்கள் பிடுங்கப்பட்டு அவர்கள் நகரங்களில் கைவிடப்பட்ட தலைமுறையினராக ஆகிவிட்டிருந்தார்கள். தங்கள் தொன்மையான பண்பாட்டை இழந்து புதிய நகர்மயப்பண்பாட்டுக்குள் இணைய முடியாத தத்தளிப்பு அவர்களுக்கு ஏற்பட்டுவிட்டிருந்தது.

ஆஸ்திரேலிய பழங்குடிகளின் இன்றைய நிலை இரு வகையாகப் பிரித்துப் பார்க்கத்தக்கது. ஒன்று திருடப்பட்ட தலைமுறை என்று அழைக்கப்படுகிறது. வலுக்கட்டாயமாக தங்கள் வாழ்விடங்களில் இருந்தும் பண்பாட்டில் இருந்தும் பிரிக்கப்பட்டு ஐரோப்பியமயமாக்கப்பட்டு அந்த மாற்றத்தினால் ஆத்மாவை

இழந்து அன்னியப்பட்ட மக்கள். இவர்களில் பெரும்பாலானவர்கள் போதை அடிமைகள். திறனற்ற உதிரி உழைப்பாளர்கள்.

இரண்டாம் வகையினர் கைவிடப்பட்ட தலைமுறையினர். இவர்கள் நகர்ப்புறங்களிலும் தொலைதூர நிலங்களிலும் எந்தவிதமான பாதுகாப்பும் இல்லாமல் கைவிடப்பட்ட மக்கள். இவர்களுக்கும் எவ்விதமான பண்பாட்டு வேர்களும் இல்லை. ஆனால் இப்போது அரசு இவர்களின் பூர்வ நிலங்களை திருப்பி அளித்து காடுகளுக்குள் வாழ அனுமதிக்கும்போது இயல்பான ஒரு வாழ்க்கைக்கு ஓரளவுக்கு திரும்பிச்செல்ல இவர்களால் முடிகிறது என்கிறார்கள்.

இச்சூழலில் இந்தியாவில் பழங்குடிமேம்பாட்டை வடிவமைத்த வெரியர் எல்வின் குறித்து பேசவேண்டியிருக்கிறது. வெரியர் எல்வின் ஒரு பிரிட்டிஷ்காரர். இந்தியாவுக்கு சாதாரணமாக வந்தவர் காந்தியைச் சந்தித்தார். காந்தியின் ஒரு கேள்வி அவர் மனதில் ஆழமாகப் பதிகிறது. 'வாழ்க்கையின் அல்லது பண்பாட்டின் வெற்றியை எதை வைத்து அளப்பது?' காந்தி சொன்னார் 'மகிழ்ச்சியை வைத்து' என்று.

பின்னர் இந்தியப் பழங்குடிகளுடன் வாழ்ந்து அவர்களின் வாழ்க்கையை ஆராயும் வெரியர் எல்வின் அந்த வரியையே தன் கோட்பாடாக ஆக்கிக் கொண்டார். பழங்குடிகள் தங்களுக்கென்று ஒரு முழுமையான வாழ்க்கைமுறை கொண்டவர்கள். அதில் அவர்கள் மகிழ்ச்சியாகவும் இருக்கிறார்கள். அவர்கள் நல்ல உடையணிகிறார்களா நல்ல வீடுகளில் வாழ்கிறார்களா என்ற கேள்வியை வைத்து அவர்களை எடை போடலாகாது. அவர்களே விரும்பினாலொழிய அவர்களின் வாழ்விடங்களையும் வாழ்க்கைமுறையையும் மாற்ற நமக்கு அதிகாரம் இல்லை.

இந்தக்கொள்கை 'எல்வின் கொள்கை' எனப்படுகிறது. நேருவை இக்கொள்கையால் கவர எல்வினால் முடிந்தது. இந்தியப் பழங்குடி நல அமைப்பின் பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட்டது. பழங்குடிகளை தொந்தரவு செய்யாத ஒரு கொள்கையை இந்தியா வகுக்க இதுவே வழியமைத்தது. இதெல்லாம் 1950களில் என்பதையும் அப்போது ஆஸ்திரேலியா பழங்குடிகளை

கொன்றொழித்துக்கொண்டிருந்தது என்பதையும் நாம் நினைவுகொள்ளவேண்டும்.

எல்வின் கொள்கை பழங்குடிகளின் ‘வறுமையை கொண்டாடக்கூடிய கற்பனாவாத’ நோக்கு கொண்டது என்று இப்போது சில நவீன ஆய்வாளர்கள் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அவர்களால் அதை உலகளாவிய முன்னுதாரணங்களால் நிரூபிக்க முடியவில்லை. பழங்குடிகளை பல்கலை வட்டாரத்தில் நின்று ஆராயும் மேட்டிமைநோக்கே அவர்களிடம் காணக்கிடைக்கிறது. மேலும் அத்தகைய ஆய்வுகளுக்குள் மதமாற்ற சக்திகளின் நிதியுதவி பெருமளவில் உள்ளது என்பதும் வெளிப்படை.

பழங்குடி உளவியல் அவர்கள்மேல் செலுத்தப்படும் சீர்திருத்தத்துக்கு எதிரானது என்பதற்கும், அச்சீர்திருத்தங்கள் அவர்களை பிச்சைக்காரர்களாகவே ஆக்கும் என்பதற்கும் ஆஸ்திரேலியா மட்டுமல்ல அந்தமானின் ஓங்கிகளின் நிலைமையும் உதாரணம். அவர்கள் பகுதிகளுக்குச் சாலை போட்டுக் கொடுக்கும்போது அங்கே வணிகர்கள் சென்று சேர்கிறார்கள். ஒரு சில வருடங்களுக்குள் அம்மக்கள் அடிமைகளாகவும் கடன்காரர்களாகவும் குடிகாரர்களாகவும் ஆகிவிடுகிறார்கள். ஓங்கிகளும் ஜாரவாக்களும் சாலையோரம் நின்று சுற்றுலாப்பயணிகளிடம் பிச்சை எடுக்கிறார்கள் இன்று.

சிட்னி மையத்தில் இருந்து ஒரு மாபெரும் தெப்பப்படகில் ஏறி மறுபக்கம் கடற்கரைக்குச் சென்றோம். அதில் அமர்ந்துகொண்டு சிட்னிபாலத்தைப் பார்ப்பது பிரமிப்பான அனுபவமாக இருந்தது. சிறிய ஃபைபர் கட்டுமரங்களில் நைலான் பாய்களைக் கட்டிக்கொண்டு இளைஞர்கள் நீரில் சறுக்கிச் சென்றார்கள். ஆஸ்திரேலியாவில் நீர் விளையாட்டுகள் மேல் பொதுவாகவே மோகம் அதிகம் என்பதை கவனித்திருக்கிறேன். பல வீடுகளில் நீர்ச்சறுக்கு பொருட்களும் சிறிய படகுகளும் இருப்பதைக் காணலாம்.

அலை வந்து தெப்பத்தை அடித்து உள்ளே நீரை அள்ளித்தூவியது. குளிர்ந்த காற்றில் அலைகள் நீல நைலான் பரப்பு போல வளைந்து எழுந்து அடங்கின. அருண்மொழி சிவசக்தியின் கறுப்புக்கண்ணாடியை வைத்துக்கொண்டாள். சிவசக்தி அவளை புகைப்படம் எடுத்தார். ஒரு படத்தில் மாமுக்கோயா என்ற

மலையாள நடிகர் கறுப்புக்கண்ணாடி அணிந்து வரும்போது இந்திரன்ஸ் என்னும் மலையாள நடிகர் அவருக்கே உரித்தான திருவனந்தபுரம் உச்சரிப்பில் ‘எவனாரெடே, ரெஜினீகாந்தோ?’ என்பார். அது கேரளத்தில் மிகபிரபலமான ஒரு பகடி. அந்தச் சாயலில் நான் ‘எவளாரெடே நெயனதாரெயோ?’ என்றேன். அதன்பின் அருண்மொழி ஒருமணிநேரம் என்னிடம் பேசவில்லை.

மறுபக்கம் சென்று கடற்கரையை அடைந்தோம். மதியவெயில் பளீரென்றிருந்தது. கடல்முழுக்க நீர்விளையாட்டு ஆடுபவர்களின் பாய்மரங்கள் தெரிந்தன. அலைகளில் ஏறி நீர்ச்சறுக்கு செய்பவர்கள் நீரின் வளைவு பின்னால்வர ஆதிசேடனால் துரத்தப்படும் பூச்சிகள் போல பறந்து வந்து ஒரு கட்டத்தில் கவிழ்ந்து அலையால் உண்ணப்பட்டு மீண்டும் நுரை நெளிந்த நீர்ப்பரப்பில் மேலெழுந்தார்கள். மணலில் கைக்குட்டையாடை அணிந்த பெண்கள் படுத்துக்கொண்டு வெயிலில் வறுபட்டார்கள். படிகளில் கிழவிகள் அமர்ந்துகொண்டு கறுப்புக்கண்ணாடிகள் வழியாக ஒளிகொந்தளித்த கடலைப்பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அங்கே ஒருமணிநேரம் இருந்துவிட்டு திரும்பி மீண்டும் தெப்பத்தில் ஏறி ரயிலுக்கு வந்தோம். எல்லாவற்றுக்கும் சேர்த்து ஒரே சீட்டுதான். சிட்னியில் அநுர ஏற்பாடு செய்திருந்த கூட்டத்துக்கு தாமதமாகிக் கொண்டிருந்தது. ரயிலில் கொஞ்சம் பதற்றம் அடைந்தோம். ஆனால் ஆசி. கந்தராஜாவே இன்னும் அரங்குக்குப் போய்ச்சேரவில்லை என்று முருகபூபதி ஃபோனில் பேசிவிட்டுச் சொன்னார். ரயில் நிலையத்திற்கு ஆசி. கந்தராஜா வந்து அழைத்துச்சென்றார்.

அரங்கில் குறைவாகவே கூட்டம் இருந்தது. இலக்கியச் சந்திப்புகளுக்கான மனநிலை இல்லை. ஈழ அழிவுக்கு எதிராக அங்கே கிளர்ச்சிகள் நடந்துகொண்டிருந்த காலம் அது. மாத்தளை சோமு வந்திருந்தார். தெளிவத்தை ஜோசப்பைக் கண்டதும் இருவரும் கட்டிக்கொண்டு மலையகத்தின் விவரங்களைப் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

கூட்டத்தில் முருகபூபதி தலைமை வகித்து என்னைப்பற்றியும் தெளிவத்தை ஜோசப்பைப்பற்றியும் பேசினார். தெளிவத்தை மலையக இலக்கியத்தின்

தோற்றம் வளர்ச்சி இன்றைய நிலை ஆகியவற்றைப் பற்றிப் பேசினார். நான் பொதுவாக இலக்கியத்தைப்பற்றிப் பேசினேன். கேள்விகளின்போது பொத்தாம்பொதுவான கேள்விகளுக்குப் பதிலாக என்னுடைய படைப்புகள் மற்றும் கருத்துகளை ஒட்டியே கேள்விகள் எழுந்தது மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது.

கூட்டத்தில் முருகபூபதி திடீரென்று அருண்மொழியிடமும் பேசச்சொன்னார். அவள் என் நூல்களை தொகுப்பதுண்டு. அதைப்பற்றி பேசுமாறு சொன்னார்கள். அவள் திகைத்து திணறியபின்பு வந்து ஒருவழியாக தன்னுடைய நூல்தொகுப்புமுறையைப்பற்றிச் சொன்னாள். ஒரு வகையான கோட்பாட்டையும் அளவுகோலையும் வைத்துக்கொள்ளாமல் அந்த எழுத்தாளருடனான தனிப்பட்ட வாசகத்தொடர்பை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு செய்யும் நூல்தொகுப்புமுறை தன்னுடையது என்றும் அதுவே இலக்கியப்படைப்புகளுக்குரியது என்றாள்.

கூட்டம் முடிந்ததும் எஸ்பிஎஸ் (SBS – Special Broadcasting Service)என்னும் ஆஸ்திரேலிய தேசிய வானொலியின் பன்மொழிச்சேவைப்பிரிவுக்கு செல்லவேண்டும் என்றார் முருகபூபதி. அங்கே ஒரு பேட்டிக்கு ஏற்பாடு செய்திருந்தார்கள். ரேய்சல் என்னும் ரேமண்ட் செல்வராஜ் என்ற நிகழ்ச்சியாளர் பேட்டியை எடுப்பார் என்றார். நானும் முருகபூபதியும் ஆசி.கந்தராஜாவும் அருண்மொழியும் வானொலி நிலையத்துக்குச் சென்றோம்.

ஆஸ்திரேலியாவில் மிகப்பிரபலமான வானொலி அது. அரசு முதலீடு கொண்டதென்றாலும் அரசுப்பிரச்சாரம் உள்ளதல்ல. கிட்டத்தட்ட பிபிஸி எனலாம். ஆஸ்திரேலியாவில்பேசப்படும் எல்லா மொழிகளுக்கும் சராசரி இரண்டுமணிநேரம் வரை அந்த நிகழ்ச்சியில் இடமளிக்கப்படுகிறது. நான் ஏற்கனவே அந்நிகழ்ச்சியில் பேசியிருக்கிறேன் தொலைபேசிமூலம்.

ரேய்சல் என்னை பேட்டி எடுத்தார். உடனே அருண்மொழியிடமும் பேட்டி எடுக்கலாம் என்றார் முருகபூபதி. அருண்மொழி மூச்சுத்திணறக்கூடாதே என்று நான் எழுந்து பாத்ரூம் போய்விட்டேன். அங்கே பேசியபோது ஏற்கனவே சொன்னதை இன்னும் வளர்த்துக்கொண்டு சொன்னதாகச் சொன்னாள். இலக்கியத்தின் வடிவத்தை மட்டுமே எடிட் செய்யமுடியும். அதற்கான

வடிவபோதம் பழைய செவ்வியல் நூல்களில் உள்ள வாசிப்பில் இருந்து உருவாகும் என்றாள்.

இரவில் நான் ஆசி.கந்தராஜாவின் காரில் அவரது வீட்டுக்குத் திரும்பினேன். ஆஸ்திரேலிய வானொலியை அங்குள்ள பழங்குடிகள் கேட்கிறார்களா என எண்ணிக்கொண்டேன். அங்கே இருபது பழங்குடி மொழிகளும் இருநூறுக்குமேல் துணைமொழிகளும் உள்ளன. எல்லாவற்றுக்கும் ஒரு மணிநேரம் கொடுத்து அவர்கள் ஒரு வானொலி நடத்தலாம். உலகுக்கு அது ஒரு புது முயற்சியாக இருக்கும்.

17. நீலமலை

நா ஞ்சில்நாட்டில் தாடகைமலை என்ற ஒரு மலை உண்டு. நாஞ்சில்நாடனின் ஊரான வீரநாராயண மங்கலத்தில் நின்று பார்த்தால் அந்த மலை ஒரு மாபெரும் பெண்ணுருவம் தலைமுடி பரப்பி கால்களை நீட்டி முலைக்குன்றுகளுடன் மல்லாந்து படுத்திருப்பதாகவே தோன்றும். இன்னும் கச்சிதமாகப் பார்க்கவேண்டுமென்றால் பூதப்பாண்டி கோயிலில் நின்று பார்க்கவேண்டும். பார்க்கப்பார்க்க அந்த உருவம் அப்படியே பூதாகரமாக தெளிந்து வருவது ஒரு பெரிய அனுபவம்.

இமையமலையில் பெரும்பாலான சிகரங்களுக்கு இவ்வாறு உள்ளூர் பெயர்கள் உண்டு. இயற்கைமீது படியும் பழங்குடியின் பார்வை என்பது கிட்டத்தட்ட சிறு குழந்தையின் பார்வைதான். குழந்தைகள் எப்படி வெளியுலகை தன்னுள் உள்ள பிம்பங்களுடன் இணைத்துக்கொள்கிறார்களோ அப்படித்தான் ஆதி மானுட மனமும் செயல்பட்டிருக்கிறது. அதற்கான தடையங்கள் நம்முடைய மொழியில் குவிந்துகிடக்கின்றன.

உதாரணமாக நுனிவாழையிலையை எங்களூரில் நாக்கிலை என்பார்கள். வாழையின் தண்டை வாழைக்கை என்பார்கள். வாழையின் அடிக்கிழங்கை வாழைமாணம்– வாழையின் பிருஷ்டம் – என்பார்கள். வாழை குலைப்பதற்காக முதல்பூநுனியை நீட்டுவதை தும்பிக்கை நீட்டுதல் என்பார்கள். வாழைக்காய் கொத்துகளை சீப்பு என்பார்கள். வாழை என்ற ஒரே மரத்தை எத்தனை படிமங்கள் வழியாக உள்வாங்கிக்கொண்டிருக்கிறது தொல்மனம்!

ஏப்ரல் இருபத்தொன்றாம் தேதி ஆசி.கந்தராஜாவின் மகன் ஜங்கரனும் ஆசி.கந்தராஜாவும் நானும் அருண்மொழியும் மூன்று சகோதரிகள் என்னும் குன்றுக்குச் சென்றோம். சிட்னி அருகே உள்ள இந்த மலைக்கு நீலமலை

என்று பெயர். ஊட்டிமலைகளுக்கும் நீலகிரி என்றுதான் பெயர். கோவைதாண்டிச் செல்லும்போது உண்மையிலேயே நீலநிறமாக அலையலையாக நீலகிரித்தொடர் விரிந்து கிடப்பதைக் காணமுடியும். சிட்னியின் நீலமலைகளை அப்படிப் பார்க்கமுடியவில்லை. உயரமாக ஏறி ஏறிச்சென்ற ஆறுவழி நெடுஞ்சாலையில் ஐங்கரன் திறமையான நிதானத்துடன் வண்டியை ஓட்டிச்சென்றார்.

ஆசி.கந்தராஜாவின் மகன் ஐங்கரன் அங்கே பல்மருத்துவம் படித்து முடிக்கும் நிலையில் இருக்கிறார். அவரது மகள் மருத்துவம் பயில்கிறாள். கே.எ.ஃப்.சிவில் பொதுமருத்துவத்தை விடவும் வாய்ப்புகள் அதிகமுள்ள துறை பல்மருத்துவம் என்றார் ஆசி.கந்தராஜா. அங்கே உள்ள மக்களில் அழகான பல்வரிசை மிகக்குறைவாகவே காணக்கிடைத்தது என்று எனக்குப் பட்டது. பொதுவாக ஆப்ரிக்க— கறுப்பு வம்சாவளியினருடைய பற்கள்தான் பளிங்குவெண்மையுடன் உள்ளன. வெள்ளை இனத்தின் பற்கள் எலும்பு நிறம் கொண்டவை. நமக்கும் பற்கள் வெண்ணிறம்தான். ஆனால் வட இந்தியாவில் குறிப்பாக பஞ்சாபில் பற்கள் எலும்புநிறத்துடன் இருப்பதுண்டு.

இளம்பெண்களின் பற்கள் கே.எ.ஃப்.சிவில் அதிகமும் கறை படிந்து இருப்பதாக நான் ஐங்கரனிடம் சொன்னேன். சிகரெட்தான் காரணம் என்றார் ஆசி.கந்தராஜா. அதைவிட காப்பி ஒரு காரணம் என்றார் ஐங்கரன். மிகவும் கெட்டியான கறுப்புக்காப்பி அதிகமாக அங்கே குடிக்கப்படுகிறது. அது பற்களை மிகவும் கறையாக்குகிறது. இப்போது பற்களை சீரமைக்க வந்துள்ள பல்வேறு வழிமுறைகளைப் பற்றி சொன்னார். என் பையன் பற்களில் கிளிப் மாட்டியிருக்கிறான். மகளுக்கும் கிளிப் போட்டிருக்கிறேன். ‘கிளிப்பேச்சு’ என்று கிண்டல் செய்வதுண்டு.

இப்போது இந்தியாவில் பொதுவாகவே குழந்தைகளுக்கு பல் எத்திக்கொண்டுவருகிறது. சென்னையில் இன்னும் அதிகம். நான் ஊகிப்பதைச் சொன்னேன் காரணம் சூழல் மோசமாக ஆகிக்கொண்டே இருக்கிறது. ஆகவே சிறுவயதில் குழந்தைகளுக்கு மூச்சுத்திணறல் ஏற்படுகிறது. வாயைத்திறந்து வைத்துக்கொண்டு அவர்கள் தூங்குகிறார்கள். ஆகவே பல்முளைக்கும் வயதில் அவை வெளியே நீட்ட ஆரம்பிக்கின்றன. என் பிள்ளைகள்

பிறக்கும்போது நாங்கள் இருந்தது மோசமாக சூழல் சீர்கெட்ட தர்மபுரியில். அது உண்மையாக இருக்கலாம் என்றார் ஐங்கரன்.

ஐங்கரன் இசை படிக்கிறார். குறிப்பாக அவர் ஒரு நல்ல தபலா வித்வான். மும்பையில் சென்று மாதக்கணக்காக தங்கி குருகுல முறைப்படி கற்கிறார். உஸ்தாத் ஸாகிர் ஷுசையினுடன் தபலா வாசித்திருக்கிறார். ஆச்சரியமாக இருந்தது. ஆனால் அவருக்கு தமிழே தெரியாது, ஆங்கிலமும் சுத்தமான ஆங்கில உச்சரிப்பு.

நீலமலைக்குச் செல்லும் வழியோரமாக அற்புதமான பண்ணைவீடுகளைக் கண்டோம். மரத்தால் ஆன பழையபாணி பண்ணைவீடுகள். புதியவகை பண்ணைவீடுகள். பல பண்ணைவீடுகளைச் சுற்றி அழகான தோட்டங்கள் அமைத்திருந்தார்கள். நிலம் மாறுபடும்தோறும் மரங்கள் மாறுபட ஆரம்பித்தன. பைன் மரங்கள் தென்பட்டன. குளிரும் காருக்கு வெளியே அதிகரித்தபடியே வந்தது.

நகரத்தில் இருந்து கிட்டத்தட்ட ஐம்பது கிலோமீட்டர் தூரத்தில் இருந்தது நீலமலை. கடல்மட்டத்தில் இருந்து ஆயிரத்தி இருநூறு மீட்டர் உயரம்தான். பெரிய மலை என்று சொல்லமுடியாது. அங்கே அதிக மழைபெய்வதனால் இருசிறு ஆறுகள் உற்பத்தியாகின்றன. நீர்வளம் இருப்பதனால் இப்பகுதியில் நெடுங்காலமாகவே பழங்குடிகள் வசித்துவந்திருக்கிறார்கள். இங்கே இருந்த கிலென்புருக் அருகே ஒரு குகையில் தொல்பழங்கால கீறல் ஓவியங்கள் உள்ளன. கல் ஆயுதங்களை தயாரிக்கும் கற்களும் கிடைத்துள்ளன.

நீலமலை உச்சிக்கு வந்து வெளியே இறங்கியதும் கடுமையான குளிரை உணர்ந்தேன். ஜாக்கெட் போட்டுக்கொண்டிருந்தாலும் குளிர்ந்தது. சிறிய தூறல் இருந்தது. குடைகள் பிடித்துக்கொண்டோம். அதிக பயணிகள் இல்லை. பெரும்பாலானவர்கள் வழக்கம்போல சீன வம்சாவளியினர். சாலையோரமாக நின்றபோது மலைகளுக்கு அப்பால் ஏரி ஒன்று பளபளவென்று தெரிந்தது. அதைச்சுற்றி பச்சை ஆர்ந்து செழித்திருந்தது. மலைக்கு அப்பால் உள்ள அந்த நிலம்தான் நியூசவுத் வேல்ஸிலேயே வளமான பகுதி. அந்தப் பச்சைநிலம் சமவெளி கன்னிம்ப்லா சமவெளி என்று சொல்லப்படுகிறது.

ஆனால் நெடுங்காலமாகவே அந்த நிலம் வெள்ளையர்களால் கண்டடையப்படவில்லை. நீலமலையைக் கடந்துசெல்ல பாதை இல்லை என்றே வெள்ளையர் நம்பினார்கள். ஆனால் பழங்குடிகளுக்கு அம்மலைகளைத்தாண்டி மறுபக்கம்செல்ல வழிகள் தெரிந்திருந்தன. அவர்கள் இப்போது பில்பின் பிளவு என்னும் மலை இடைவெளிவழியாகவும் கோக்ஸ் ஆறுவழியாகவும் அப்பால்சென்றார்கள். ஏரியாக தேங்கியிருக்கும் ஆற்றின்பெயர் நேப்பியன் ஆறு, கோக்ஸ் ஆறு அதில் சென்று கலக்கிறது. அந்த ஏரி திர்ல்மீர் (Thirlmere) எனப்படுகிறது.

அந்தமலையைக் கடந்து சென்ற முதல் ஐரோப்பியர் என்று ஜான் வில்ஸன் என்ற முன்னாள் குற்றவாளியைச் சொல்கிறார்கள். 1788ல் முதல் கப்பலிலேயே கே.எ.ஃப்.சிவுக்கு வந்த வில்சன் 1792ல் விடுதலையானார். அவர் சிட்னிக்கு வெளியே பழங்குடிகளுடன் இணைந்து வாழ்ந்தார். அவர்களுக்கும் வெள்ளையருக்கும் இடையே மொழிபெயர்ப்பாளராகவும் இருந்தார். 1797ல் அவர் மலைக்கு அப்பால் அந்தப் பசுமையான நிலத்தை தான் கண்டுபிடித்திருப்பதாக அறிவித்தார். அவர் பழங்குடிகளுடன் சேர்ந்து அம்மலையை தாண்டியிருக்கக்கூடும் என்று சொல்கிறார்கள்.

சாலையோரமாக அப்பகுதியைப் பற்றிய தகவல்களும் வரைபடங்களும் வைக்கப்பட்டிருந்தன. வில்சன் அப்பகுதியைக் கடந்த தகவலும் எழுதி வைக்கப்பட்டிருந்தது. மலையுச்சியில் இருந்து அப்பகுதியைப் பார்க்க பரவசமாக இருந்தது. பொதுவாக கே.எ.ஃப்.சிவில் புல்வெளியின் பசுமையைத்தான் பார்க்கமுடிந்தது. காட்டின் பசுமையே வேறு. சற்றே நீலம் கலந்த இருண்ட பசுமை அது. அது வளத்தின் அடையாளமாதலால் அதைக் கண்டதுமே நம் மனம் மலர்ந்துவிடும். குமரிமாவட்டத்தில் பல இடங்களில் மலையுச்சிமேல் நின்று பார்த்தால் பச்சை மரகதப்பரப்பைக் கண்டு கண்நிறைய முடியும்.

வில்சனின் கதையை பின்னர் இணையத்தில் வாசித்தேன். நியூசவுத் வேல்ஸின் அப்போதைய கவர்னர் ஹண்டர் வில்சனை அதிகாரபூர்வ வழிகாட்டியாக நியமித்தார். ஜான் பிரைஸ் என்பவருடன் ஒரு நிலக்கண்டுபிடிப்புக் குழுவை அவருடன் அனுப்பினார். அந்தக்குழு நேப்பியன் ஆற்றைக் கடந்து இன்றைய

மிட்டகாங் வரை சென்றது. மலையைக் கடப்பதற்கான வழி இவர்களால் உறுதிப்படுத்தப்பட்டது. மீண்டும் அக்குழு சென்று திர்ல்மீர் ஏரியை அடைந்தது. கே.எ.ஃப்.சிவின் வளமான வேளாண்நிலம் இவ்வாறாகக் கண்டுபிடிக்கப்பட்டது. வில்சன் ஒரு பழங்குடிப்பெண்ணை கடத்தமுயன்றபோது பழங்குடிகளால் கொல்லப்பட்டார்.

வில்சனின் கதை மிகவும் ஆர்வமூட்டுவது, கிட்டத்தட்ட ஒரு ஹாலிவுட் படத்துக்கான கதை. அதைப்போல பல கதைகள் நம் இந்தியாவிலும் உள்ளன. வார்ட் ஆண்ட் கானர் கேரள — குமரிமாவட்ட காட்டுப்பகுதிகளை சர்வே எடுத்தபோது பல திகில் நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. கோதையாறுக்கு மேல் முத்துக்குளிவயல் என்னும் உச்சிமலையில் இருந்து தமிழகத்துக்குச் செல்லும் ஒரு மலைவெடிப்பை பழங்குடிகளில் இருந்து அவர்கள் கண்டுபிடித்தார்கள். அதேபோல மருத்துவாழ்மலை வழியாக பணகுடிக்குச் செல்லும் ஒரு சிறிய சந்துபாதையை கண்டுபிடித்தார்கள். இவற்றுக்கு காவல்போட்டு பேணமுடியாது, குற்றவாளிகளுக்கே பயன்படும் என்பதனால் அவற்றை நிரந்தரமாக மூடிவிட்டார்கள். வேலுப்பிள்ளையின் திருவிதாங்கூர் ஸ்டேட் மேனுவலில் இந்தத் தகவல்கள் உள்ளன. இவையெல்லாம் சுவையான புனைகதைக்குரிய தகவல்கள்.

மலைவிளிம்பில் நின்றுகொண்டு பனிமூடிய சமவெளியைப் பார்த்தோம். பக்கவாட்டில் மலைநீட்சி ஒன்று உள்ளது. அதில் மூன்று சிகரங்கள். அவை மூன்று சகோதரிகள் என்று சொல்லப்படுகின்றன. ஓரளவு ஆந்திரப்பகுதி மலைகளை நினைவுபடுத்தின அவை. காற்று வீசி மலைகளில் உள்ள கனிமங்களை அரிப்பதனால் விதவிதமான வடிவங்களில் அந்த மலைகள் எழுந்து நின்றன. ‘மெக்கென்னாஸ் கோல்ட்’ படத்தில் காட்டப்படும் பொன்னிறமான கிராண்ட் கேன்யன் மலைச்சிகரங்கள் போல. அந்தப்படம் வந்தபோது ஒளிப்பதிவாளர் கர்ணன் அதேபோல ‘கங்கா’ என்ற படத்தை எடுத்தார். அதில் ஆந்திராவில் ராயலசீமாவில் உள்ள அதேபோன்ற அரிக்கப்பட்ட மலைகளை படம்பிடித்திருந்தார். அபத்தமான அந்த கறுப்புவெள்ளைப் படத்தில் மலைக்காட்சிகள் மட்டும் அற்புதமாக இருக்கும்!

மூன்றுசகோதரிகளும் வெள்ளைப்பனிமூட்டத்தால் முக்காடு போட்டிருந்தார்கள். அங்கேயே நின்றுகொண்டிருந்தபோது மெல்ல மெல்ல பனி விலகியது. சகோதரிகள் தெரிய ஆரம்பித்தார்கள். பின்னர் மேகம் நீங்கி துல்லியமாகவே தெரிந்தார்கள். அவற்றுக்கு உருவச்சிறப்பு ஏதும் இல்லை. மூன்று குவைகள். ஆனால் அவற்றின் தொன்மை நம்மை ஒருவகையான பரவசத்துக்கு ஆளாக்குகிறது.

மலைவிளிம்பு வழியாகவே நடப்பதற்கு வழியமைத்திருக்கிறார்கள். மலைச்சரிவு முழுக்க அடர்த்தியான யூகலிப்டஸ் மரங்கள்தான். மரங்களால் அந்த மலைவிளிம்புகள் சரியாமல் அள்ளிப்பிடித்து நிறுத்தப்பட்டிருக்கின்றன என்ற எண்ணம் ஏற்படும். மலைகளுக்கு நடுவே உள்ள ஆழமான பகுதி மலைக்காடுகள். மழைக்காடுகள் குட்டையான மரங்களுடன் அவற்றுக்கு நடுவே செறிந்த புதர்களுடன் இருந்தன.

கயிற்றுவண்டியில் இறங்கிச்சென்று மழைக்காடுகளைப் பார்ப்பதற்கு வழிசெய்திருந்தார்கள். நாங்கள் சென்றபோது கூட்டமே இல்லை. அங்கே ஒரு சிறிய வேடிக்கைப்பொருள் கடையும் இருந்தது. நான் பொதுவாக கே.எ.ஃப்.சிவில் எதுவுமே வாங்கிக்கொள்ளவில்லை. இந்திய ரூபாயில் கொள்ளை விலை. எல்லாமே இந்தியாவில் மலிவாகக் கிடைப்பவையும் கூட.

கயிற்றுவண்டியில் நாங்கள் மூவர் மட்டுமே. ஐங்கரன் வரவில்லை. கயிற்றுவழி இறங்கும்போது பக்கவாட்டில் செங்குத்தான மலைவிளிம்பு இறங்கியது. விதவிதமாக அரிக்கப்பட்ட சாக்லேட் நிறமான பாறைகள். பாறை இடுக்குகளில் பெரெணி போன்ற கூம்பிலைச்செடிகள் நிறைய நின்றன.

ஆசி.கந்தராஜா மழைக்காடுகளைப்பற்றிச் சொல்லிக்கொண்டே வந்தார். மையநிலத்தில் அனேகமாக மழைக்காடுகள் இல்லை என்றே சொல்ல வேண்டும். இம்மாதிரி மலையிடுக்குகளில் உருவாகும் சிறிய பகுதிகளை மழைக்காடுகள் என்று ஒரு மங்கலவழக்குக்காகவே சொல்கிறோம். கே.எ.ஃப்.சிவின் பெரும்பாலான மழைக்காடுகள் நியூகினியா தீவுகளிலும் நியூசிலாந்திலும்தான் உள்ளன.

ஆனால் ஒருகாலத்தில் மழைக்காடுகள் இருந்திருக்கின்றன. வெள்ளையர் குடியேறும்போது மழைக்காடுகளும் மழையும் அதிகம். வெள்ளையர்

விவசாயத்தை விட லாபகரமான தொழிலாக மேய்ச்சலை நினைத்தார்கள். காரணம் அதற்கு ஆள் அதிகம் தேவை இல்லை. ஆஸ்திரேலியாவின் மழைக்காடுகள் எல்லாமே அவர்களால் தீவைத்து அழிக்கப்பட்டு புல்வெளிகளாக ஆக்கப்பட்டன. பின்னர் மழை குறைந்து புதிய மழைக்காடுகள் உருவாக முடியாத நிலை வந்தது.

இன்று பிரேஸில் போன்ற நாடுகளில் அமெரிக்க நிறுவனங்கள் மழைக்காடுகளை அழித்து இறைச்சிக்கன்றுகளை வளர்க்கும் உயர்திறன் உற்பத்தி மேய்ச்சல்நிலங்களை உருவாக்குகின்றன. இந்தியாவிலும் தொண்ணூறுகளில் ஒரிஸா, மத்தியபிரதேசம், கர்நாடகம் போன்ற இடங்களில் அவ்வாறு மேய்ச்சல்நிலங்களை உருவாக்க அவை முன்வந்தன. அரசு சார்ந்த ஆதரவு வழக்கம் போல தீவிரம். 'வேளாண்மை நிபுணர்கள்' அது மிக நல்ல வழிமுறை என்றும் ஒரு தீங்கும் ஏற்படாது என்றும் ஆலோசனைகள் சொன்னார்கள். அந்நியச்செலாவணி வந்து குவியும் என்றார்கள். எப்போதும் எதற்கும் விலைபோகும் நிபுணர்களே இந்தியாவின் சாபம்.

ஆனால் சூழலியலாளர் அதைக் கடுமையாக எதிர்த்தார்கள். மேய்ச்சல்நிலங்களை ஒன்றுக்கும் உதவாத பாலையாக ஆக்கிவிட்டு அந்நிறுவனங்கள் சென்றுவிடும். மேய்ச்சல்வெளியானது ஒரு பெரும் காடு அளவுக்கே நீரை கோருவதாகும். ஆனால் காட்டைப்போல பல்லுயிர்பெருக்கத்தை தக்கவைப்பதோ அல்லது மழைபெய்வதை உருவாக்குவதோ அல்ல. மேலும் இந்தியாவில் புல்வெளி நிலங்களில்தான் இந்தியாவில் அதிகம் உண்ணப்படும் சோளம் கம்பு போன்ற தானியங்கள் விளைகின்றன. வட இந்தியாவில் மகேந்திரசிங் டிகாயத் கர்நாடகத்தில் நஞ்சுண்டசாமி போன்ற விவசாயிகளின் தலைவர்களின் எதிர்ப்பால் அத்திட்டம் நிறைவேறவில்லை.

கீழே மழைக்காடுகள் வழியாக நடந்து செல்வதற்கு ஒரு பாதை உருவாக்கியிருந்தார்கள். நாங்கள் செல்லும்போது உண்மையிலேயே மழை சொட்டிக்கொண்டிருந்தது. மழைக்காடுகளுக்குரிய சில தனித்தன்மைகள் அங்குமிருந்தன. தரைமுழுக்க அடர்ந்த புதர்களும் சருகுகளும் உடைந்து விழுந்த கிளைகளும் மூடியிருந்தன. மட்கும் ஈர இலைகளின் வாசமே

மழைக்காட்டின் வாசம். ஆனால் எங்களூரில் தரையை காலால் விலக்கிப்பார்த்தால் நூற்றுக்கணக்கான பூச்சிபுழுக்களைக் காணமுடியும். மழைக்காட்டின் தரை என்பது ஒரு மாபெரும் குடல் என்பார்கள். ஆகவே புதர்களுக்குள் பறவைகளும் செறிந்திருக்கும். அங்கே அதிக பறவைகளைக் காணமுடியவில்லை. தரையில் அதிகமாகத் தென்படும் மக்பீ அனேகமாக கண்ணிலேயே படவில்லை. ஆனால் ரேவன் தென்பட்டது.

காடு வழியாக நடந்து செல்லும் வழியில் அக்காலத்தில் நிலக்கரி எடுக்கப்பட்ட குகை ஒன்றை அப்படியே வைத்திருக்கிறார்கள். நிலக்கரியுடன் தங்கமும் கிடைத்திருக்கிறது. மண்ணுக்குள் முயல்வளை போல செல்லும் சுரங்கவழியை அமைத்து அதனூடாகச் சென்று நிலக்கரியை வெட்டியிருக்கிறார்கள் – முழுக்க முழுக்க கையாலேயே அந்த உழைப்பு நிகழ்ந்தது. பல இடங்களில் இடுப்பளவு நீரில் நின்று வேலைசெய்ய வேண்டும். எங்கும் நீர் ஊறிச் சொட்டிக்கொண்டே இருந்தது. காற்று புகுவதற்கு சில இடங்களில் வெளியே திறக்கும் சாளரக்குகைகளை வெட்டியிருந்தார்கள். உள்ளே விளக்குகளை அமைத்து அந்த வேலையைச்செய்யும் தொழிலாளர்களை சிலைகளாகச் செய்து வைத்து சாளரம் வழியாகப் பார்த்தபோது ஆச்சரியமாக இருந்தது.

சென்ற நூற்றாண்டின் உழைப்புக்கு ஈடிணையே இல்லை. அந்தக்காலத்தில் சுரங்கங்களில் பாரஃபின் விளக்குகளை உபயோகிப்பார்கள். அவை மற்ற பந்தவிளக்குகளைப்போல புகை கக்காது, ஆனால் ஆக்ஸிஜனை எடுத்துக்கொள்ளும். சர் ஹம்ப்ரி டேவி என்பவர்தான் முதன்முதலில் சுரங்கத்துக்கான விளக்கை கண்டுபிடித்தார் என்பார்கள். ஆனால் அந்தக் கண்டுபிடிப்பெல்லாம் அந்த மலைக்குகை வரை வந்து சேர்ந்திருக்கும் என்று தோன்றவில்லை.

சிறுவயதில் எருமை ஒன்றுக்கு புட்டத்துக்காயத்தில் புழு வந்து கம்பவுண்டர் சிகிச்சை செய்தபோது நான் உடனிருந்தேன். தேனடைபோல காயத்தில் புழுக்கள். அதை வெட்டி எடுத்தபின் உள்ளே புழுக்கள் துளைத்துச் சென்றிருந்ததை தோண்டினார். நம்பமுடியாத ஆழம் வரை சென்ற புழு தங்குவதற்கான இடங்களை செதுக்கிக் கொண்டிருந்தது. சலம் வெளியேற

வழி அமைத்திருந்தது. அந்த அளவு தொழில்நுட்பம். அதன் உடலே தோண்டுவதற்கான கடப்பாரை போல இருந்தது. ஒவ்வொரு கணமும் தோண்டுவதுபோல அதன் உடலும் உயிரும் நெளிந்தன. இயற்கைப்பெரும்சக்தி அதற்கு போட்ட கட்டளை அது! அதைப்போல மனிதன் அந்த மலையை தோண்டிச் சென்றிருப்பதாகப் பட்டது.

மழைக்காடு வழியாக நடந்துசென்று ஒரு ரயில்பாதையை அடைந்தோம். செங்குத்தாக ஏறக்கூடிய தூக்கு ரயில் அது. அதிலும் கூட்டமே இல்லை. எங்கள் பக்கவாட்டில் அரித்து சிதிலரூபம் கொண்ட செங்குத்தான மலை எழுந்துவந்தது. மலைவிளிம்பை ஒட்டியே அமைந்திருந்த ராட்சத படிக்கட்டு என்னும் காட்டுநடைபாதை அழகாக தெரிந்தது. திரும்பிவந்தபோது அங்கே ஐங்கரன் இருந்தார்.

காரில் திரும்பும்போது சரியான போக்குவரத்துச்சிக்கலில் மாட்டினோம். ஆகவே பக்கவாட்டில் திரும்பி மலைப்பாதைவழியாக இறங்கி இன்னொரு சாலையில் சென்றோம். நெடுந்தூரம் வரை தெரியும் பாதை இறங்கிச்செல்வதைப் பார்க்க அழகாக இருந்தது. தார்ச்சாலை ஆறுபோல ஓடும், அங்கே அருவியாகக் கொட்டுவது போல பட்டது.

திரும்பிவரும் வழியில் கே.எஃப்.சி (கெண்டக்கி ஃப்ரைடு சிக்கன்) மெக்டொனால்ட் இரு கடைகளையும் தேடிக்கொண்டே வந்தோம்.அவருக்கு கே.எஃப்.சி கடையின் கோழிரொட்டி ரொம்பவே பிடிக்கும் என்றார். நான் பெங்களூரில் கே.எஃப்.சி கடை தொடங்கப்பட்ட போது உருவான கிளர்ச்சி குறித்து சொன்னேன். முதலில் அதை விவசாயிகள் எதிர்த்தார்கள். சிறுவணிகர்களும் எதிர்த்தார்கள். அரசு அதில் அஜினோமோட்டோ (எம்.எஸ்.ஜி) இருப்பதாக அறிக்கை வெளியிட்டதும் பொதுமக்களும் எதிர்த்தார்கள். நஞ்சுண்டசாமி தலைமையில் விவசாயிகள் கடைகளை தாக்கினார்கள்.

ஆனால் பின்னர் கே.எஃப்.சி கடைகள் பெங்களூரில் வந்தன. ஆனால் அவை எதுவுமே பெரிய அளவில் பரவவில்லை. ‘இந்தியாவிலே கே.எஃப்.சி பரவறது கஷ்டம்....அது நூறு கிலோமீட்டருக்கு ஒரு தடவை சுவை மாறுபடும் நாடு. கே.எஃப்.சி உலகமெங்கும் ஒரே சுவையை உருவாக்க நினைக்கிறது என்றார்.

எதிர்ப்பாளர்களின் வாதங்களை நான் சொன்னேன். பெருமுதலீடுள்ள கே.எஃப்.சி போன்ற அமைப்புகள் சிறிய வணிகங்களை நசுக்கி அழிக்கும் உச்சகட்ட விளம்பரம் மூலம் நம் உணவுப்பழக்கத்தை மாற்றிவிடும். நம்மை அவர்களின் சுவைக்கு ஆளாக்கிவிடுவார்கள்.

ஆனால் என் நோக்கில் இந்திய உணவுகளை அளிக்கும் பெருநிறுவனங்கள் வருவது நல்லது. இங்கு எந்தவகையான ஒழுங்கும் நேர்மையும் இல்லாத தொழிலாக இருப்பது ஓட்டல்தான். இந்திய உணவகங்கள் போல சுத்தமில்லாத தரமில்லாத உணவை வழங்கும் உணவகங்களை எங்குமே காண முடியாது. உதாரணம், நாகர்கோயில் சென்னை சாலையோர உணவகங்கள். அசுத்தத்தின் உச்சம் அந்த விடுதிகள். சிறு நீரும் மலமும் குவிந்த சூழல். நாய்கள் படுத்திருக்கும் சமையல் கொட்டகை. அங்கே பணியாற்றிய சுகாதார அலுவலர் என் வாசகர். நாய்கள் காகங்கள் கழுதைகளை எல்லாம் சமைப்பார்கள் என்றார். வருடக்கணக்காக சமையல் பாத்திரங்களைக் கழுவ மாட்டார்கள். எந்த சட்டமும் அவர்களை தொடாது. பெரும்பாலும் சாதிச்சங்க பாதுகாப்புள்ளவர்கள்.

கே.எஃப்.சி போன்ற இந்திய உணவுநிறுவனங்கள் வந்து நுகர்வோருக்கு பல வாய்ப்புகள் வழங்கப்படுமென்றால் மட்டுமே இந்த மொத்தக்குத்தகையை தகர்த்து தரத்தை நிலைநாட்ட முடியும் என நினைக்கிறேன். கே.எஃப்.சிக்கு ஏன் அஞ்சவேண்டும்? இந்திய உணவின்மூலம் கே.எஃப்.சியை அஞ்சவைக்கலாம் என்றுதான் படுகிறது. அமெரிக்காவில் கெண்டக்கி பகுதியில் லூயிஸ்வில்லில் தொடங்கப்பட்ட கடைதான் கே.எஃப்.சி. கர்னல் ஹார்லாண்ட் சாண்டர்ஸ் 1952ல் அதை தொடங்கினார். அது இன்று ஓர் உலக நிறுவனம்.

அதைப்போன்ற பெரிய உணவுநிறுவனங்கள் இந்தியாவில் உருவாக வேண்டிய காலம் நெருங்கிவிட்டிருக்கிறது. ஏனென்றால் இன்று இந்தியா மிகவேகமாக வணிகமயமாகிக்கொண்டிருக்கிறது. பயணங்கள் அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. இந்தியத்தொழில்துறை சார்ந்தவர்களுக்கு பயணங்களில் உணவு என்பது மிகமிகச் சிக்கலானதாக இருப்பதை காணலாம். ஒவ்வொரு ஊரிலும் ஒவ்வொரு உணவை உண்பதென்பது அபாயகரமானது. செல்லுமிடங்களில் நம்பகமான உணவகங்களை விசாரிப்பது, என்ன

சாப்பிடலாமென தெரிந்துகொண்டுசெல்வது போன்ற காலமெல்லாம் மலையேறிவிட்டது. சீரான நம்பகமான உணவு சாதாரணமாகக் கிடைத்தாகவேண்டும். இந்திய நிறுவனங்கள் உருவாகாவிட்டால் கே.எ.ஃப்.சி, மெக்டொனால்ட் போன்றவர்களின் பர்கருக்கு நாம் பழகித்தான் ஆகவேண்டும்.

அன்றுமாலை நாங்கள் ரேய்ச்சல் வீட்டுக்குச் சாப்பிடச்சென்றோம். ரேய்மண்ட் செல்வராஜ் எங்களூர்க்காரர். குளச்சல் அருகே பொழிக்கரை. அப்பா பெயர் ரேமண்ட். அவர் கிறித்தவ நிறுவனம் மூலம் ஆஸ்திரேலியா சென்று அங்கே இதழாளராக ஆனவர். அவரது மனைவி ஜப்பான்காரர். அவர் முந்தியநாள் என்ன உணவு சாப்பிடுகிறேன் என்று கேட்டிருந்தார். ஜப்பானிய உணவு என்று நான் சொன்னேன்.

செல்வராஜின் மனைவி எங்களை சிரித்துக்கொண்டே வரவேற்றார். சிரித்துக்கொண்டே இருக்கும் முகம் அவருக்கு. அவரது மகன் பெயர் தமிழ். அதை ஜப்பானிய மொழியில் தமிறோ என்று சொல்கிறார்கள். அதற்கு ஜப்பானிய மொழியில் என்ன பொருள் என்று கேட்டேன். ஜப்பானிய சித்திர எழுத்து முறையில் சொல்லுக்கு நிலையான பொருள் இல்லை என்றார் அவர். அதை எப்படி எழுதுகிறோம் என்பதை வைத்துத்தான் பொருள் வருகிறது. ஒரே சொல்லை ஜப்பானில் பலவகையில் எழுதலாமாம்.

அங்கே ஜப்பானிய உணவு பரிமாறப்பட்டது. முதலில் குச்சியில் கோர்த்து சுடப்பட்ட இறால். அதன் பின்னர் சுஷி. சுஷி ஒரு ஜப்பானிய சிறப்புணவு. சில நறுமணப்பொருட்களை சேர்த்து செய்யப்பட்ட அரிசி உருளையுடன் பச்சை மீனை தகடுகளாக வெட்டி சுருட்டிச் செய்யப்பட்டது. அருண்மொழி ‘பச்சைமீனா அய்யோ வேண்டாம்’ என்று சொல்லிவிட்டாள். எனக்கும் தயக்கம்தான். ஆனால் பார்ப்போமே என்றும் பட்டது.

செல்வராஜ் சாப்ஸ்டிக்கால் சாப்பிடும்படி சொன்னார். நான் ‘அய்யய்யோ!’ என்றேன். ‘ ரொம்ப எளிது’ என்று அவர் மனைவி அதை பிடிக்கச் சொல்லிக்கொடுத்தார். உண்மையிலேயே எளிது. ஸ்பூனைவிட வசதியானது. நான் அந்த உணவை முழுக்க சாப்ஸ்டிக்கால் சாப்பிட்டேன். சாப்ஸ்டிக் வாங்கிக்கொண்டுவந்து அஜிதனுக்கும் சைதன்யாவுக்கும்கூட கற்றுக்கொடுத்து அவர்களும் எளிதாக சாப்பிட்டார்கள்.

என் நண்பரும் தேர்ந்த இலக்கிய வாசகருமான பெரா. பெர்னாட் சந்திரா அவர்கள் (தொழில்முறையில் அவருக்கும் இலக்கியத்துக்கும் தொடர்பில்லை. அவர் வணிகவியல்) சிலமுறை எனக்கு மீன் கொண்டுவந்து தந்திருக்கிறார். ஒருமுறை கணவாய் மீனை கொண்டுவந்தார். அருண்மொழி அது விலுக் விலுக் என்று இருக்குமே என்றபோது அதை சமைப்பதைப்பற்றியும் சொன்னார். அதை வேகச்செய்யக்கூடாது. கொதித்ததுமே எடுத்துவிடவேண்டும் என்றார். அப்படியே செய்தபோது மிகச்சிறப்பாக இருந்தது. அப்போது பெர்னாட் சந்திரா ஜப்பானில் கணவாயை பச்சையாக சாப்பிடுகிறார்கள் என்றார். ஆச்சரியமாக இருந்தது.

ஆனால் சுஷியில் இரு பச்சை மீன்கள் இருந்தன. சிவப்பாக இருந்தது சூரை. அல்லது டியூனா. சூரைமீன் நல்ல சிவப்பு. ரோஜாநிறம். அதனாலேயே இங்கே சிலபேர் சாப்பிட மாட்டார்கள். ரத்தமாக இருக்கிறது என. இன்னொரு மீன் கணவாய். அது வெண்ணெயின் நிறம். இரண்டையும் அழகாக அடுக்கி பெரிய பூ போல செய்து தட்டில் பரிமாறினார். இந்த சுஷி ஒவ்வொன்றும் நீள்வட்ட வடிவில் இருந்தது. அதுவே சுஷியின் பிரபலமான வடிவம். சீன ஜப்பானிய உணவின் சிறப்பே பலவகையான சாஸ்கள் (தொடுரசம்?). அவற்றில் சில கடுமையான காரம் கொண்டவை. ஆந்திரர்களே அலறும் அளவுக்கு.

மீன்சுருளை அப்படியே சாப்ஸ்டிக்கால் தூக்கி வாயில்போட்டு சாப்பிட்டேன். முதலில் சூரை. நெளுநெளுவென இருந்தது. ஆச்சரியமான விஷயம் வேகவைத்த மீனைவிட அது மென்மை என்பதுதான். வித்தியாசமான சுவையும் இருந்தது. ‘அந்தகரண விருத்தி’ முடிந்து ததாகரண விருத்தி ஆரம்பித்ததும் சுவையாகவே உணர்ந்தேன். அடுத்து கணவாய். கணவாய்மீன் மிகமிக சுவையாகவே இருந்தது. மென்மையான வெண்ணைபோன்ற புரோட்டீன் சுவை. கணவாய்மீனை வேறு எவ்வகையில் சாப்பிட்டாலும் அந்தச் சுவை வராது.

சுஷிக்கு அதற்கான அரிசி உண்டு. அதை சாப்ஸ்டிக்கில் எடுத்து சாப்பிடலாம். ஒட்டிக்கொண்டிருக்கும். நான் அதை எடுத்துச் சாப்பிட்டபோது அடுத்து என்னால் ஜப்பானிய வாள் கடானாவை எடுத்துச் சுழற்ற முடியும் என்ற தன்னம்பிக்கையை அடைந்தேன். சுஷி முன்பெல்லாம் ஊறுகாய்போட்டு வைக்கப்பட மீனுடன் சமைக்கப்பட்டிருந்தது. காரணம் பச்சை மீன் என்றால் கொஞ்சம்கூட கெடக்கூடாது. செல்வராஜின் மனைவி அதை தெளிவாகவே

சொன்னார், மீன் மிகமிக புதிதாக இருக்கவேண்டும் என. சுஷிக்கு என மீனும் அரிசியும் விற்கும் கடைகள் உள்ளன. அங்கே வாங்க வேண்டும் என.

சாப்பிட்டுவிட்டு விடைபெற்றுக் கிளம்பினோம். ஓர் ஆச்சரியம் என்னவென்றால் பெரும்பாலான தமிழர் வீட்டுக் குழந்தைகளைப்போல அல்லாமல் தமிரோ நன்றாகவே தமிழைப் புரிந்துகொள்கிறார் என்பது. பார்ப்பதற்கு குட்டி சமுராய் மாதிரி தோற்றம். ஜப்பானியர்களுக்கு சீனர்களைவிட பெரிய கண்கள். பெரிய முகம். சமுராய் உண்மையிலேயே ஜப்பானியச் சண்டைக்கலை கற்றுக்கொள்கிறார். கூடவே மிருதங்கமும்! கையில் ஒரு வளர்ப்புப்பிராணி வைத்திருந்தார். வெள்ளெலி போன்ற வெண்ணிறமான கீரி. அது அவர் மேல் சுற்றிச் சுற்றி பரபரப்பாக இருந்தது.

நள்ளிரவில் விடைபெற்று ஆசி. கந்தராஜா வீட்டுக்குக் கிளம்பினோம். செல்வராஜ் அவரே வண்டியை ஓட்டிக் கொண்டுவந்து எங்களை விட்டார்.

18. ரயிலில்

தொ ல்லியல் ஆய்வாளரான செந்தீ நடராஜன் என் வீட்டுக்கு வந்திருந்தபோது கேட்டேன், நாகர்கோயிலுக்கு ரயில் வந்த நாள். அவர் உடனே அவரது மனைவிக்கு ஃபோன் போட்டு கேட்டு விட்டு ஆகஸ்ட் ஆறு 1972 இல் ரயில் விடுவதற்கான கால்கோள் விழா நடந்தது என்றார். நான் ஆச்சரியப்பட்டபோது தன் மகள் அன்றுதான் பிறந்தாள் என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

திருவனந்தபுரத்துக்கு ரயில் வந்து அரைநூற்றாண்டு கழிந்துதான் நாகர்கோயிலுக்கு ரயில் வந்தது. குமரிமாவட்டத்தின் மேடுபள்ளமான நில அமைப்பு காரணமாக இங்கே ரயில்பாதை அமைப்பது மிகவும் கடினமாகக் கருதப்பட்டது. பாதி இடங்களில் ரயில் ஆழமான குழிக்குள் ஓடும். மிச்ச இடங்களில் அது பாலங்கள் மேல் ஓடும். பலகோடி ரூபாய் செலவில் பாதை அமைத்தால் அதற்கேற்ப வருவாய் இருக்காதென்று சொல்லப்பட்டது.

ஆனால் குமரிமாவட்டத்தில் உள்ள கன்யாகுமரி முனை என்பது ஒரு பண்பாட்டுப்புள்ளி என்றும் அது ரயிலால் இணைக்கப்பட வேண்டும் என்றும் குமரிமுனையில் உருவான விவேகானந்த கேந்திரம் கோரிக்கை விடுத்து வலியுறுத்தியபடியே இருந்தது. அதன் நிறுவனரான ஏக்நாத் ரானடே பலமுறை இந்திராகாந்தியைச் சந்தித்து கோரிக்கை விடுத்தார். ஏற்கனவே குமரிமாவட்டத்துக்கு ரயிலுக்காக குமரிமாவட்ட காங்கிரஸ் மட்டுமே முயன்றுவந்தது. அதில் வங்க லாபியும் மராட்டிய லாபியும் இணைந்தபோது தேர் நகர்ந்தது.

அப்போது கன்யாகுமரியின் பாராளுமன்ற உறுப்பினர் கு.காமராஜ். அவர் இந்திராவுக்கு எதிரணியை உருவாக்க முயன்று தோற்றவர். பழைய காங்கிரஸ்

தலைவராக, அரசியலில் ஓரம்கட்டப்பட்டு அவர் இருந்த அந்திம காலம் அது. ஆகவே இந்திராகாந்தி கன்யாகுமரி தொகுதியை மாற்றாந்தாய் மாதிரி நடத்தினார். ஆனாலும் வலுவான அழுத்தம் காரணமாக ரயிலுக்கு ஒத்துக்கொண்டார். ஆனால் அதன் பெருமை காமராஜுக்குப் போகாமல் பார்த்துக்கொண்டார்.

ஆகவே துவக்க விழாமேடையில் காமராஜ் மிக ஓரமாக ஒரு சாதாரண எம்.பியாக அமரச்செய்யப்பட்டார். அவர் புறக்கணிக்கப்பட்டு கூனி அமர்ந்திருந்தார். இந்திரா காந்தி காமராஜை பொருட்படுத்தவே இல்லை. காமராஜ்தான் எழுந்து சாதாரணமாக வணக்கம் சொன்னார். அந்த நிகழ்ச்சி குமரிமாவட்டத்தினரை — குறிப்பாக நாடார்களை — பெரிதும் பாதித்தது. பின்பு தமிழக காங்கிரஸ் ஒன்றான பிறகும்கூட இங்குள்ள காங்கிரஸ்காரர்களில் கணிசமானவர்கள் அதில் இணையவில்லை. அவர்கள் ஜனதா ஆக மாறினார்கள். அவர்களின் மன அமைப்பு திராவிடக்கட்சிகளில் அல்லது கம்யூனிஸ்டு, பாரதியஜனதா கட்சிகளில் சேர அனுமதிக்காது. ஆகவே இன்றும் அவர்களில் ஒருசாரார் தேவகௌடாவின் மதச்சார்பற்ற ஜனதாதளமாக நீடிக்கிறார்கள். தமிழகத்தில் அக்கட்சி வேறெங்காவது இருக்கிறது என்று நான் நினைக்கவில்லை.

எட்டு வருடம் கழித்துத்தான் ரயில் வெள்ளோட்டம் ஓடியது. அதைக் காண மக்கள் இருபக்கமும் திரண்டார்கள். அந்தக்கூட்டம் நெடுநாள் நீடித்தது. ரயிலில் சென்றால் ஜனங்கள் ஓடிவந்து ரயிலைப் பார்ப்பதை மேலும் பத்து வருடங்களுக்குக் காணமுடிந்தது. மேயக் கட்டப்பட்ட பசுக்கள் ரயிலைக் கண்டு மிரண்டு கயிற்றை இழுத்து திமிறி ஓடி சுற்றி வருவதைக் காண முடிந்தது. பல வருடங்கள் விபத்துக்கள் நடந்தன. இப்போது பசுக்கள் திரும்பியே பார்ப்பதில்லை.

நான் ரயிலை வேடிக்கை பார்த்த தலைமுறை. அன்றுமுதல் இன்று வரை ரயில்மேல் அபாரமான மோகம் உண்டு. ரயிலில் தனியாக பல ஆயிரம் கிலோமீட்டர் சுற்றியிருக்கிறேன். இந்திய ரயில்வே என்பது உலகின் அற்புதங்களில் ஒன்று. இத்தனை மாறுபட்ட நிலங்கள் மொழிகள் பண்பாடுகள் வழியாக செல்லும் ஒரு ரயில்பாதை உலகில் குறைவாகவே இருக்கும்.

கொஞ்சம் கவனித்தால் ஒரு ஸ்டேஷனில் இருந்து அடுத்த ஸ்டேஷனுக்குள் நிலமும் பண்பாடும் மாறிவிட்டிருப்பது தெரியும். நாகர்கோயிலுக்கும் நெல்லைக்கும் இடையே இரு நாடுகளுக்கு இடையே உள்ள வேறுபாடு உண்டு.

ரயில் பிரியத்தால் ஆஸ்திரேலியாவில் ஒரு நீண்ட ரயில் பயணம் செய்யவேண்டும் என்ற எண்ணம் கொண்டிருந்தேன். சிட்னியில் இருந்து மெல்பேர்னுக்கு வருவது ரயிலில் ஆகலாம் என்றேன். ஆனால் ரயில் கட்டணமே விமானத்துக்கும் என்றார்கள். ரயில் போதும் என்றேன். நிலத்தைப் பார்க்கலாம். மேலும் ரயிலில் இருப்பது என்பதே ஒரு உற்சாகமான விஷயம்.

21.4.2009 அன்று காலை ஆறுமணிக்கு எங்களை ஆசி. கந்தராஜா கொண்டுவந்து ரயில் ஏற்றிவிட்டார். விடிந்தும் விடியாத காலையில் ரயில் நிலையத்தில் சீனப்பெண்கள் கனத்த மேக்கப்புடன் சிதல் கூட்டங்கள் போல பிலுபிலுவென்று ஓடிக்கொண்டிருந்தார்கள். பெட்டியை ரயிலின் சரக்குப்பகுதியில் போடலாம் என்று போனோம். குறிப்பிட்ட எடைக்கு மேலே இருந்தால்தான் எடுப்போம் என்றாள் அங்கே இருந்த ஒரு பெண். ஒரு கனமான லாப்ரடார் நாய் 'வாழ்க்கையிலே இதெல்லாம் சகஜமப்பா' என்ற பாணியில் கொஞ்சம்கூட கவலைப்படாமல் கூண்டுக்குள் அமர்ந்திருந்தது. பயணம்செய்து ஐநூறு கிலோமீட்டரைத் தாண்டினாலும் அது சொந்த வீட்டிலேயே இருப்பதாக நினைக்கும்.

ஆஸ்திரேலியாவில் ரயில் அவ்வளவாக பரவவில்லை. விரிந்த நிலப்பரப்பு கொண்ட நாடுகளில் ரயில் பெரிய சக்தியாக வளர்ந்திருக்கும். அவ்வாறு நடக்காததற்குக் காரணம் அந்நாட்டில் மக்கள் பரவல் மிகவும் குறைவு என்பதே. அதன் கடற்கரை பகுதிகளில்தான் குடியேற்றம். அந்நகரங்களை ரயில் இணைக்கிறது. அதன் பின் வடக்குக் கடற்கரையில் உள்ள எடிசன் போன்ற பகுதிகளில் மக்கள் வாழ்கிறார்கள். மற்றபடி ஆஸ்திரேலிய மையநிலம் என்பது காலியான ஒரு பொட்டல். எடிசனுக்கு ஆஸ்திரேலிய மையநிலம் வழியாக ஒரு ரயில் போடுவது பைத்தியக்காரத்தனம். கடல்வழியாக கண்டத்தைச் சுற்றிக்கொண்டு போவதே எளிது. பின்னர் விமானம் வந்துவிட்டது.

சிட்னி—மெல்பேர்ன் ரயிலை பயன்படுத்துபவர்கள் மிகவும் குறைவு. ஆங்காங்கே வழியில் இறங்குபவர்கள்தான் அதிகமும் அந்த ரயிலில் செல்கிறார்கள் என்ற எண்ணம் ஏற்பட்டது. மெல்பேர்ன் வரை வந்தவர்கள் ஐந்து சத பயணிகள்கூட இல்லை. ஆசி. கந்தராஜா சிட்னியில் இருந்து மெல்பேர்னுக்கு விமானத்தில், நேரம் இருந்தால் காரில்தான் வருவேன் என்றார். காரில் வந்தால் அந்தக்காரிலேயே மெல்பேர்னில் சுற்ற முடியும் என்ற வசதி. ரயிலை விட வேகமாக காரில் சென்று விடலாம். என்னூறு கிலோமீட்டரை அதிகபட்சம் எட்டு மணி நேரத்தில் காரில் கடக்கலாம். ரயில் பன்னிரண்டு மணிநேரம் எடுத்துக்கொண்டது.

வசதியான ரயில், நல்ல இருக்கைகள். நான் வசதியாகச் சாய்ந்து அமர்ந்துகொண்டேன். வெளியே அமைதி பரவிய புல்வெளிகள் மெல்ல சுழன்று சென்றன. வால் சுழற்றிபடி குதிரைகள் மேய்ந்தன. சரிவுகளில் குதிரைக்குழு ஒன்று தலை குனித்து உந்தி ஏறிச்சென்றது.

மரக்கிளைகளில் பெருங்காக்கைகள் சிறகடித்துச் சென்றமர்ந்தன. மீண்டும் மீண்டும் வேலியிடப்பட்ட புல்வெளிகள். ஆனால் அவை சலிப்புக்குப் பதில் ஒருவகையான தியான மனநிலையை உருவாக்கின. அதிலேயே மூழ்கி கனவு கண்டவன் போல அமர்ந்துகொண்டிருப்பது அலாதியான அனுபவமாகவே இருந்தது. அருண்மொழியிடம் நீண்ட காதல்மொழிகளைச் சொன்னேன்.

ரயிலில் எங்களுக்கு நேர்முன்னால் ஒரு கறுப்பு இனப் பெண்மணி தன் நான்கு குழந்தைகளுடன் பயணம்செய்தாள். அவளுக்கு முப்பது வயதுதான் இருக்கும். பெரிய பெண்ணுக்கு பன்னிரண்டு அடுத்த வனுக்கு எட்டு அடுத்தவனுக்கு ஆறு, சின்னப்பெண்ணுக்கு நான்கு என்று வயது இருக்கும். ஏறியதுமுதலே சின்னப்பெண் எதற்காகவோ அடம்பிடித்தாள். ‘நோ நோ’ என்று சிணுங்கல். அம்மாக்காரி அவளை ரகசியமாகக் கிள்ளினாள். சத்தமில்லாமல் மிரட்டினாள். உருட்டி விழித்தாள். குட்டிப்பெண் மேலும் மேலும் அடம்பிடிக்கவே பளீர் என்று ஒன்று வைத்தாள்.

ஒருவகையில் அது நல்ல உத்தி. குட்டி கதறியழுது, தாயைப் பிராண்டி, அடித்து, கைகால்களை உதைத்து, பிலாக்கணம் வைத்து முடித்ததும் தெளிந்து உற்சாகமாகி அடுத்த வேலையைக் கவனிக்க ஆரம்பித்தது. அதன்

பெயர் லாரா. அம்மா கோழி தன் குஞ்சுகளிடம் கோ கோ என்று சொல்லிக்கொண்டே இருப்பதுபோல "லாரா நோ லாரா" என்று சொல்லிக்கொண்டே இருந்தாள். மூத்த இரு குழந்தைகளுக்கும் அவர்களின் வீட்டுப்பாட நோட்டுகளையும் பென்சில்களையும் கொடுத்து எழுதும்படி சொன்னாள். அவர்கள் வாய் ஓயாமல் பேசியபடி அவ்வப்போது ஒரு சில எழுத்துக்களை எழுதினார்கள்.

முன்னால் இருந்து சமுராய்கொண்டை போட்ட ஒரு குண்டு ஜப் பானியப்பையன் — இல்லை பெண்ணா? — வந்து சேர்ந்தான். நீலக்கண் கொண்ட ஒரு வெள்ளைக்காரப்பயல். சாக்லேட் தின்று கொண்டே இருந்த ஒரு சின்னப்பெண். பயலின் தங்கையாக இருக்கும். இரு சீனக்குழந்தைகள். ஜமா சேர்ந்துவிட்டது. சீட் வழியாக ஏறி மறுபக்கம் தலைகுப்புறக் கவிழ்தல்தான் முதல் விளையாட்டு. அப்படி கவிழ்பவர்களை பிடித்து இழுத்துப் போடுதல் உதைத்தல் கூச்சலிடுதல் என அது விரிவுபெற்றது. கொஞ்சம் பெரிய ஜப்பானியப்பெண் வந்ததும் தங்களை பெரிய பெண்களாக உணர்ந்த இரு சிறுமியரும் தனியாக ஒதுங்கி கிளுகிளுச் சிரிப்புடன் பேசிக்கொள்ள ஆரம்பித்தார்கள். சட்டென்று கைகளை தட்டிக்கொண்டு பாட்டு, பாப் பாட்டா இல்லை நர்சரி ரைமா?

கறுப்பி ஏதோ கடும்வெப்பநாட்டு பிறவிகொண்டவள். குளிர் இல்லை என்றே சொல்லலாம். ஆனால் அவள் ஏற்கனவே போட்டிருந்த பிளாஸ்டிக் ஜாக்கெட்டுக்கு மேல் நல்ல கம்பளி ஒன்றைப் போர்த்திக் கொண்டு தூங்க ஆரம்பித்தாள். லாரா கைதட்டி 'ஜெய்ஹோ' என்று பாடினாள். ஏ.ஆர்.ரஹ்மான் தான் அப்போது ஆஸ்திரேலிய பரபரப்பு. இதன் நடுவே வீட்டுப்பாட நோட்டுகள் தாள்களாகி கிழிசல்களாக மாறி சிம்புகளாக உருப்பெற்றன. ஒரு சீனப்பெண்மணி பெரிய பிளாஸ்டிக் கூடையுடன் குப்பை சேகரிக்க வந்தபோது ஜப்பானிய வளரிள நங்கை பொறுப்புணர்வுடன் அதையெல்லாம் சுருட்டி பொறுக்கி அதில்போட்டு கைகளை தட்டினார். கதை நிறைவு. அதற்குள் பசி. பெரிய பைகளைத் திறந்து ரோல்கள் ஹாம்பர்கர்கள் கோக் என எடுத்துத் தின்ன ஆரம்பித்தார்கள். ஜப்பானிய குழந்தை கிட்டத்தட்ட பைக்குள்ளேயே நுழைந்து விட்டது. பையில் உள்ள அனைத்தையும் இழுத்து வெளியே போட்டு மீண்டும் உள்ளே திணித்தார்கள்.

ரயில் நிற்கும் இடங்கள் எல்லாம் சிறிய ஸ்டேஷன்கள். பல ஸ்டேஷன்களில் பத்துப்பேர்தான் இறங்கினார்கள். பல இடங்களில் — அது விடுமுறைக்காலம் என்பதனால் — இறங்கியவர்கள் சிறுவர் சிறுமியர். காத்து நின்றவர்கள் அனேகமாக பாட்டிகள். சிலசமயம் தாத்தாக்கள். பாட்டிகளை பேத்திகள் ஆரத்தழுவிக்கொள்வதை கட்டிப்பிடித்துக் கொஞ்சியபடியே செல்வதைக் கண்டேன். சின்னஞ்சிறு ரயில் நிலையங்களில் காலப்பழமை இருந்தது. பெரிய இரும்புத்தூண்கள். கருங்கல் போட்ட பிளாட்பாரங்கள்.

லாரா திடீரென வந்து என்னருகே வந்து என்னை வேடிக்கை பார்க்க ஆரம்பித்தாள். பின்பு சென்று தன் தோழியைக் கூட்டி வந்தாள். அவர்கள் இருவரும் அபாரமான ஆர்வத்துடன் என்னை வேடிக்கை பார்த்தபின் தங்களுக்குள் புன்னகை செய்து கொண்டார்கள். நாங்கள் ஆசி.கந்தராஜா கொடுத்த டியூனா மீன் நடுவே வைத்த சண்ட்விச்சை சாப்பிட்டோம். ஜூஸ் குடித்தோம். ரயிலிலேயே ஒரு உணவுக்கடை இருந்தது. நான் போய் கொஞ்சம் பர்கர் வாங்கி வந்தேன்.

ரயில் ஒரு விசித்திரம். அதன் உட்பக்கம் சட்டென்று ஒரு சிறிய கிராமமாக ஆகிறது. வெளியே காலம் நகர்வது போல வெளி ஓடிச் செல்கிறது. நான் இந்தியப்பெருநிலத்தை ஊடுருவிச் செல்லும் நம் ரயிலின் அனுபவத்தை எண்ணிக்கொண்டேன். அது ஒரு பெரும் ஜனக்கொந்தளிப்பு. சில இடங்களில் மக்கள் கூச்சலிட்டுக் கொண்டு கிட்டத்தட்ட ஒரு கோட்டையை படைகள் கைப்பற்றுவது போல ரயிலை நோக்கி பாய்ந்து முற்றுகையிட்டு அகழிகளைத் தாண்டி வாசல்களை ஊடுருவி வென்றெடுப்பார்கள். திடீரென முந்நூறு பேர் ஒரு முன்பதிவுப்பெட்டியில் ஏறி எல்லா இடங்களையும் நிரப்பி வழிவதுண்டு. இந்திய ரயில் என்பது மனித வாழ்க்கை தளும்ப தளும்ப நிரப்பப்பட்ட ஒரு பாத்திரம் போல.

ஜம்முதாவியில் இருந்து டெல்லி வழியாக சென்னைக்குள் செல்லாமல் அரக்கோணம் வழியாக மதுரை வரை வரும் ஒரு ரயில் உண்டு — ஜம்முதாவி எக்ஸ்பிரஸ். கொஞ்சம் நிதானமான ரயில். ஆகவே இடம் கிடைப்பது எளிது. டெல்லியில் அதில் ஏறுபவர்களில் எழுபது சதவீதம்பேர் மதுரைக்கு தெற்கே உள்ள தமிழர்கள். மிச்சம்பேர் மன வாடுகள்.

முன்பதிவுகள் ஒட்டுமொத்தமாகச் செய்யப்படுவதனாலும் ஒரு பெட்டி நிறைய ஒரே ஊருக்கு டிக்கெட் அளிக்கப்படுவதனாலும் பெட்டிகள் கிராமத்தன்மை கொண்டுவிடும். ஆந்திர பெட்டிகள் ஆந்திராவிலேயே கழன்றுவிடும். திருப்பதி பெட்டி கழன்றுவிட்டால் மிச்ச எல்லாமே மதுரைதான்.

ஏறியதுமே மேலே ஸ்பீக்கர் வைத்து கட்டி டேப் ரெக்கார்டரில் பாட்டு போட்டுவிடுவார்கள். எம்ஜிஆர், சிவாஜி பாடல்கள் இளைய ராஜா ஹிட்ஸ், விஜய் தத்துவப்பாடல்கள். பெண்கள் அறிமுகம் முடிந்ததுமே தரையில் உட்கார்ந்தும் படுத்தும் பேசிக்கொள்ள ஆரம்பிப்பார்கள். பேன் பார்ப்பது கதைப் புஸ்தகம் படிப்பது. ஆண்களில் பெரும்பாலானவர்கள் சீட்டு, சிலர் தண்ணீர்ப்புட்டிகளில் கோக்குடன் ரம் கலந்து மெல்லவே அருந்தி வானில் பறந்தபடிகூட வருவார்கள். ஒட்டுமொத்தமான சாப்பாட்டுக்கடைகள். ஒருநாள் முழுக்க புளி— எலுமிச்சை சாதம். அதன்பின் ரயில்வே சாப்பாடு. நான் எப்போதுமே முதல்நாள் முழுக்க ஓசிச்சாப்பாடுதான். ‘‘தம்பிக்கு எந்த ஊரு? நம்மளுக்கு கொக்கிரகுளம் பக்கமாட்டு பாத்துக்கிடுங்க…’’

இரவில்தான் மெல்பேர்ன் வந்து சேர்ந்தோம். எங்களைக் கூட்டிச் செல்ல முருகபூபதி வந்திருந்தார். ஒரு ரயில் நிலையத்தில் இறங்கி அடுத்ததில் ஏறி அவரது ஊருக்குச் சென்று இறங்கி காரில் அவரது வீட்டுக்குச் சென்றோம். அங்கே தெளிவத்தை ஜோசப் இல்லை. எனக்கு ஒரு வாழ்த்துக்கடிதம் எழுதிக்கொடுத்துவிட்டு ஊருக்குத் திரும்பிச்சென்றிருந்தார். நள்ளிரவில் நோயல் நடேசன் வந்தார். ஒரு நாய்க்கு அறுவை சிகிச்சை செய்ததாகச் சொன்னார்.

மறுநாள் காலை நானும் அருண்மொழியும் தயாராக இருந்தோம். காலையில் நோயல் நடேசன் வந்து கூட்டிச்சென்றார். அவரது வீட்டில் அவரது மனைவியும் பையனும் மனைவியின் அம்மாவும் அப்பாவும் இருந்தார்கள். நோயல் நடேசனின் மனைவி சியாமளா மருத்துவர். தமிழ்ப்பண்பாட்டுடனான உறவென்பது சன் டிவி சீரியல்கள். தமிழைக் காதால் கேட்பதற்காகவே அதை அவர் பார்க்கிறார் என்று பட்டது.

சியாமளாவின் அம்மா அப்பா இருவருக்கும் முதிர் வயது. தாத்தாவுக்கு தொண்ணூற்று ஆறு. சதமடிக்க மூன்று வருடம் போதும். நடமாட்டம் இருந்தது. காலையில் ஷூக்கள் அணிந்து கொண்டு நடைக்கான ஒரு ஊன்றுகோலுடன்

அருகே உள்ள தெருக்களில் நடந்துவருவார். இலங்கையிலும் சிங்கப்பூரிலும் உயர் பதவிகளில் இருந்தவர். முதுமையில் மூளை கூர் இழக்கவில்லை. நுண்மையான நகைச்சுவை உணர்ச்சியும் பொது அறிவும் உடையவர். அருமையான சிரிப்பு. நினைவு மட்டும் ஆங்காங்கே மங்கி மங்கி மீண்டது.

தாத்தா தினமும் தொலைக்காட்சியில் ஈழச்செய்திகளைப் பார்த்துக்கொண்டிருந்தார். இரவில் மெல்ல ரேடியோ வைத்து செய்திகளைக் கேட்டுக்கொண்டிருந்தார். முதியவர்களுக்கு உள்ள வழக்கப்படி அவருக்கு சரியான தூக்கம் இல்லை. நான் நள்ளிரவில் பாத்ரூம் போக எழுந்தபோது கூடத்தில் தொலைக்காட்சி முன்னால் தரையிலிருந்து சூடான காற்றுவரும் துளைக்கு மேலே நின்றுகொண்டு கால்பந்தாட்டம் பார்த்துக்கொண்டிருந்தார்.

தாத்தாவும் பாட்டியும் முதுமையில் ஒருவருக்கொருவர் அனு சரணையாக ஆகிப்போன தம்பதிகள். தாத்தா தினமும் காலையில் திருவாசகம் ஓதுவார். பாட்டி ‘பார்ன் எகெய்ன்’ கிறித்தவர், தீவிர விசுவாசி, அவருது ரேடியோவில் எந்நேரமும் கிறித்தவ ஜெபங்களும் பாட்டுகளும்தான். நினைவுகளை கிளர்த்தும் தகவல்கள் இருவர் முகங்களையும் மலரச்செய்வதைக் கண்டேன். ஆனால் இருவருக்குமே இந்தியா சார்ந்த நினைவுகள் அதிகமில்லை. அவர்கள் வாழ்வது இலங்கை மண்ணில்தான்.

பாட்டியும் தாத்தாவும் முதியவர்கள் ஆதலினால் ஆஸ்திரேலிய அரசு அவர்களுக்கு பராமரிப்பு நிதி வழங்குகிறது. வீடுகளில் அவர்களை வைத்துப் பார்த்துக்கொள்வதை ஊக்குவிப்பதற்காக. வாரம் இருமுறை ஒரு வெள்ளைக்கார அம்மணி வந்து புயல்வேகத்தில் தாத்தா பாட்டியின் அறையைச் சுத்தம்செய்து செல்வார். ஒவ்வொருநாளும் தாத்தாவையும் பாட்டியையும் காலைமுதல் மாலைவரை கூடவே இருந்து கவனித்துக்கொள்வதற்காக ஒருவர் சம்பளம் ஆஸ்திரேலிய அரசே வழங்கும். அவர்களின் மகன் ஓய்வுபெற்று சும்மா இருக்கிறார். ஆகவே அந்தவேலையை அவர் செய்கிறார்.

முதுதாத்தாபாட்டிகளை வீட்டில் வைத்திருப்பது இயலாத காரியமாக ஆகிக்கொண்டிருக்கிறது. இன்று எல்லாருக்குமே அவரவர் உலகம். அவரவர் சவால்கள். முதியவர் தனித்து விடப்படுவதை தவிர்க்கவே முடியாது. அவர்கள்

அவர்களின் உலகைச் சேர்ந்தவர்களுடன் சரியான மருத்துவ நிபுணர் கண்காணிப்பில் அதற்கென்றே கட்டப்பட்ட முதியவர் விடுதிகளில் இருப்பதே யதார்த்தமாகப் பார்த்தால் சிறந்தது. ஆனால் அவர்கள் தாங்கள் கைவிடப்பட்டவர்களாக உணரக்கூடும். மேலும் அடிக்கடி நிகழும் மரணங்கள் அவர்களை உணரக்கூடும். மேலும் அடிக்கடி நிகழும் மரணங்கள் அவர்களை வெகுவாக தளர்த்துகின்றன. இது இந்நூற்றாண்டின் ஒரு சமூகச் சிக்கல்.

தினமும தாத்தா விரிவாக செய்திகளை வாசிக்கக் கேட்டு தெரிந்து கொள்வார். அதன்பின் பிபிசி செய்திகளைப் பார்ப்பார். தாத்தாக்கள் அன்றாடச் செய்திகளை அப்படி கவனிப்பது நமக்கு கொஞ்சம் ஆச்சரியமாக இருக்கும். ஆனால் அது வாழ்க்கைமீதான பிடிப்பின் ஆதாரம். அன்றாட விஷயங்களில் அக்கறை காட்டுகிறவர்கள் ஆரோக்கியமாக நெடுநாள் வாழ்கிறார்கள். தாத்தா மானசீகமாக காலாவதியாகவே இல்லை.

அன்று என்னுடைய பிறந்தநாள். நாற்பத்தி ஏழு முடிகிறது. எனக்கே எனக்கு அவ்வளவு வயதாகிறதென்பதை நம்ப முடியவில்லை. இன்னும் கொஞ்சநாளில் ஐம்பது. ஐம்பதுக்கு மேலே கிழவன் என்பது நம்மூர் வழக்கம். சால் பெல்லோ போல எழுபதுக்குமேல் கல்யாணம் செய்யும் திராணியெல்லாம் நம்மிடம் இருப்பதில்லை.

பிறந்தநாள் அன்று காலை நடேசன் வீட்டுக்கு அருகே உள்ள பூங்காவுக்கு காலைநடை சென்றோம். பச்சை பொங்கி விரிந்திருந்த தனிமையான அழகான பூங்கா. ஒரு ஸ்பானியல் நாய் உற்சாகத்தை ஒழுங்குப்பயிற்சியால் கட்டுப்படுத்த முயன்று அடிக்கடி துள்ளிக் குதித்துக்கொண்டு அவ்வப்போது சந்தேகத்துடன் புதர்களை நோக்கி மோப்பம் பிடித்து “யார்ரா?” என்று கேட்டுக்கொண்டு ஒரு இளம் பெண்ணின் கூடவே போயிற்று.

பூங்காவில் எழுபதுக்கு மேல் வயதான ஏழெட்டு மூத்தகுடிமக்கள் பூப்பந்தாட்டம் ஆடிக்கொண்டிருந்தார்கள். உற்சாகமாக ஓடி ஓடி பந்தை அடித்தார்கள். துள்ளி துள்ளி விழும்போது மார்புச்சதைகள் ஆடின. குடித்த பீரை எல்லாம் வியர்வையாக ஆக்கி விடுவார்கள். மீண்டும் பீர் பீப்பாய்முன் அமர. வாழ்க்கைமேல் விருப்பு கொண்ட எல்லாரையுமே நாம் உடனே விரும்ப ஆரம்பித்துவிடுகிறோம். ஏனென்றால் இந்த பூமியில் நிறைந்து நிற்கும் மாபெரும்

ஆற்றல் ஒன்றை அவர்களில் நாம் கண்டுகொண்டிருக்கிறோம். இந்தப் பூமியின் நைட்ரஜன் — கார்பன் குழம்பிலிருந்து உயிர்க்குலத்தை உருவாக்கி எடுத்த ஆற்றல் அது.

தாத்தாவை இதை எழுதும்போது எண்ணிக்கொள்கிறேன். நடேசன் வீட்டில் இருந்து விடைபெறும்போது அவர்களை வணங்கினோம். என் கைகளைப் பற்றி முத்தமிட்டு வாழ்த்தினார். தாத்தா சென்ற ஜூன் பத்தாம் தேதி மரணமடைந்துவிட்டதாக நடேசன் தொலைபேசியில் கூப்பிட்டுச் சொன்னபோது அதைத்தான் எண்ணிக்கொண்டேன்.

19. நதிக்கரையில்

ஆ ற்றங்கரைகளில்தான் பெரும்பாலான நகரங்கள் அமைந்திருக்கின்றன. ஏனென்றால் நகரங்கள் இயல்பாகவே அமைவது அங்கேதான். முற்காலங்களில் உள்நாட்டுப் போக்குவரத்துக்கு நதிகளையே நம்பி இருந்திருக்கிறார்கள். டெல்லி யமுனையின் கரையில் அமைந்தது அதனால்தான். மதுரை வைகைக் கரையில் அமைந்ததும் அக்காரணத்தாலேயே.

காலப்போக்கில் நதிகளை போக்குவரத்துக்காக நம்புவது அனேகமாக நின்றது. அதற்கு ஒரு காரணம் விரிவான காட்டழிவின் விளைவாக நதிகளில் நீர்ப்போக்கு குறைந்தது என்பதுதான். பின்னர் அணைகள் வந்தன. நதி நீர் திசைமாற்றப்பட்டபோது பெரும்பாலான நதிகள் வறண்ட தடங்களாக மாறின.

அத்துடன் நகரங்களின் வளர்ச்சி காரணமாக பெருமளவில் கழிவுநீர் நதிகளில் கலக்க ஆரம்பித்தது. ஒரு நகரம் திட்டமிட்டு பெரும் செலவில் கழிவுநீரோடைகளை வேறுவகையில் அமைக்காவிட்டால் அந்நகரின் கழிவுநீர் நதியில்தான் கலக்கும். ஏன் என்றால் மழைநீர் நதிக்கு ஓடிவந்து சேரும் இயல்பான வழிகளைத்தான் அந்நகரம் சாக்கடையாகப் பயன்படுத்தும்.

இவ்வாறு மெல்லமெல்ல நகரை ஒட்டியிருக்கும் நதிகள் எல்லாம் சாக்கடைத்தடங்களாக மாறின. திருப்பூரின் நொய்யல் சென்னையின் கூவம் போல சிற்றாறுகள் வெறும் சாக்கடைகளாக மாறியது எதிர்பார்க்கக்கூடியதுதான். ஆனால் மதுரைக்குப்பின் வைகையும் நெல்லைக்குப்பின் தாமிரவருணியும் கழிவோடைகளாக மாறியதென்பது ஆச்சரியம் ஊட்டக்கூடியது. ஏன் திருச்சிக்குப் பின்னர் காவேரிகூட கழிவு வாடையுடன் தான் ஓடிக்கொண்டிருக்கிறது.

நாகர்கோயில் நகரை ஒட்டி பழையாறு செல்கிறது. பழையாறுதான் நாகர்கோயிலை உருவாக்கியது. பழையாறு கடலில் கடக்கும் மணக்குடிக் காயல்வழியாக கடலில் இருந்து கப்பல்கள் வந்து தமிழ்மையநிலத்தில் இருந்து வண்டிகளில் வரும் சரக்குகளைக் கொள் முதல் செய்யும் இடம் கோட்டாறு சந்தை என்று புகழ்பெற்றிருந்தது. 'கோட்டாறும் வெள்ளாறும் புகையால் மூட' குமரியை அநபாயன் குலோத்துங்கசோழன் வென்றதை கல்வெட்டு சொல்கிறது.

நான் கல்லூரியில் படிக்கும் காலத்தில்கூட பசும்தாழைப் புதர்கள் நடுவே நீலநீர் சுடர்விட பழையாறு அற்புதமான அழகுடன் நகரை அணைத்து ஓடிக்கொண்டிருந்தது. காலையில் நூற்றுக்கணக்கானவர்கள் அந்நீரில் குளித்துக்கொண்டிருப்பார்கள். பழையாறை ஒட்டித்தான் நாகர்கோயிலின் பல அழகிய புராதன சிறு கோயில்கள் இருந்தன. பழையாற்றின் கரையில் இருந்த குளிர்ந்த பசுந்தோப்புகளில் சென்றமர்ந்து பேசிக்கொண்டிருப்போம்.

ஆனால் இன்று பழையாறு நாற்றம் அடிக்கும் சாக்கடையாக ஆகிவிட்டிருக்கிறது. நாகர்கோயில் நகரின் எல்லா சாக்கடைகளையும் நகராட்சியே அந்த ஆற்றுக்குக் கொண்டுசென்று விட்டிருக்கிறார்கள். கழிப்பறைக் கழிவுகள் உட்பட! இருந்தும் சுசீந்திரம் பகுதியில் அந்நீரில் எளிய மக்கள் குளிக்கிறார்கள். ஏன் என்றால் ஏழை மக்களின் வீடுகளில் குளியலறை இருப்பதில்லை. குடிநீரையே அவர்கள் சண்டைபிடித்துத்தான் குழாயில் பிடிக்கவேண்டும். குடும்ப உறுப்பினர் அனைவரும் குளிக்கும்படி நீர் வீட்டில் இருக்காது. பொது நீரில் குளித்தே ஆகவேண்டும். அம்மக்களின் ஜீவாதாரமான இந்த விஷயத்தை எந்தப் பிரக்ஞையும் இல்லாமல் அரசாங்கம் அழிக்கிறது.

மெல்பேர்ன் நகரம் யாரா நதிக்கரையில் அமைந்துள்ளது. ஒரு நதிக்கு கொஞ்சம் பெண்மை கலந்த பெயர் இருப்பதுதான் நம் மனதுக்கு உவப்பாக இருக்கிறது. யாரா எனக்குப் பிடித்த பெயராக இருந்தது. அதற்கு ஆஸ்திரேலியப் பழங்குடிகளான உருஞ்சேரி மக்கள் (Wurundjeri) போட்ட பெயர் பிர்ராரங் (Birrarung). யாரா நதி 242 கிலோமீட்டர் தள்ளி இருக்கும் யாரா மலைகளில் இருந்து பிறந்து யாரா சமவெளி வழியாக ஓடிவந்து

மெல்பேர்ன் அருகே ஹாப்ஸன் வளைகுடாவில் கடலில் கலக்கிறது. யாரா நெடுங்காலமாகவே உருஞ்சேரி மக்களின் கூடுகைமையமாகவும் கடலுக்குள் அவர்கள் செல்வதற்கான வழியாகவும் இருந்துள்ளது.

நானும் டாக்டர் நடேசனும் அருண்மொழியும் 22 ஏப்ரல் காலையில் கிளம்பி யாரா நதிக்கரையோரமாகச் சென்றோம். யாரா நதியின் இரு கரைகளையும் சீராக வரம்பிட்டு வைத்திருந்தார்கள். சிமிட்டி கரைகல் நடுவே சீராக ஓடிய நதிநீர் மிகவும் சுத்தமாக இருந்தது. ஒருநதிநீர் சுத்தமாக இருப்பதை அதன் வாசனையே சொல்லிவிடும்.

இக்காலகட்டத்தில் ஒரு நகர் அருகே ஓடும் நதியை சுத்தமாக வைத்திருப்பதென்பது பெரும் செலவுபிடிப்பது. நகரின் மழைநீர் நதிக்குள் கொஞ்சம்கூட வராமல் வரம்பிடவேண்டும் – மழைநீரில் கண்டிப்பாக சாக்கடை இருக்கும். நகரின் கழிவுநீரை நதிக்கு தொடர்பில்லாத வேறுவழிகளில் வெளியே கொண்டுசென்று சுத்தம் செய்ய வேண்டும். ஆஸ்திரேலியாவின் சாதகமான அம்சம் என்னவென்றால் அங்கே பெருமழை கிடையாது. கழிவுநீரை வெளியே கொண்டுசென்று சுத்தம் செய்ய ஆளில்லாத திறந்தவெளி எல்லையில்லாமல் இருக்கிறது.

யாரா ஒரு நீலப்பளிங்குச்சாலை போல கிடந்தது. அதில் ஹயாக்கிங் எனப்படும் இலகுபடகுகளை இளைஞர்கள் ஓட்டிக்கொண்டிருந்தார்கள். துடுப்புகள் துழாவும்போது நீர்த்துளிகள் தெறிக்கும் ஒளி கண்களைக் கூசச்செய்தது. நதிக்கரை ஓரமாக அமர்ந்திருப்பதற்கான நூற்றுக்கணக்கான இருக்கைகள். அவற்றில் கணிசமான காதலிணைகள் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள்.

மெல்பேர்ன் நகரம் விக்டோரியா மாகாணத்தின் தலைநகரம். ஆஸ்திரேலியாவின் இரண்டாவது பெரியநகரம் இதுவே. மெல்பேர்ன் நகரத்துக்கு அப்பெயர் பிரிட்டிஷ் பிரதமாராக இருந்த இரண்டாவது விஸ்கவுன்ட் ஆஃப் மெல்பேர்ன், வில்லியம் லாம்ப் பிரபுவின் பெயரால் அமைக்கப்பட்டது. 1835 வாக்கில் மெல்பேர்ன் நகரம் உருவாகியது என்று சொல்கிறார்கள். எளிய ஒரு துறைமுகப்பகுதிக் குடியிருப்பாக இருந்த மெல்பேர்ன் ஆஸ்திரேலியாவின் தங்கவேட்டைக் காலகட்டத்தில்தான் பெரிய

நகரமாக மாறியது. உலகின் வாழ்வதற்குச் சிறந்த பதினொன்றாவது நகரமாக ‘எகனாமிஸ்ட்’ இதழால் மெல்பேர்ன் தேர்வுசெய்யப்பட்டிருக்கிறது.

யாரா நதியருகே மெல்பேர்ன் நகரத்தின் பிரபலமான சதுக்கங்களில் ஒன்று இருந்தது. கோடையில் அங்கே கூட்டம்கூட்டமாக மக்கள் வந்து சீல் மிருகங்கள் போல சட்டையில்லாமல் கிடப்பார்கள் என்றார் டாக்டர் நடேசன். அங்கே சென்று சற்று அமர்ந்திருந்தோம். அப்பகுதியெங்கும் ஓர் ஓய்வான மனநிலை நிலவியது.

உண்மையில் இந்த சிக்கல் சுற்றுலாப்பயணிகளின் கண்ணைக் கட்டக்கூடியது. நாம் அனேகமாக சுற்றுலாமையங்கள் சதுக்கங்கள் ஆகியவற்றையே அதிகமும் பார்வையிடுகிறோம். அங்கே மக்கள் ஓய்வாகவும் உற்சாகமாகவும்தான் இருப்பார்கள். அந்த மனநிலை நமக்கும் இருக்கும். அந்தக் கண்ணுடன் நாம் அந்நகரத்தையோ நாட்டையோ பார்க்கலாகாது. ஆனால் நாம் கவனிப்பதைவிட ஆழமாக நம் ஆழ்மனம் கவனிக்கும். ஆஸ்திரேலியாவில் எப்போதுமே ஒரு இதமான தன்மையை நான் உணர்ந்துகொண்டே இருந்தேன்.

சீனக்கடை ஒன்றுக்குச் சென்று உணவுண்டோம். நான் பழச்சாறில் வேகவைத்த சீவிய பன்றிக்கறி சாப்பிட்டேன். அருண்மொழி பீதியுடன் கோழிக்கறியில் பன்றியை கலக்கமாட்டார்களே என்று கேட்டுக்கொண்டாள். சிக்கன் நூடில்ஸ் அவளுக்கு. பன்றிக்கறி நன்றாக சமைக்கப்பட்டால் வேறெந்தக் கறியைவிடவும் ருசியானது — சாப்பிட்டால் நூறு கிலோமீட்டர் ஓடி கொழுப்பை செரிக்க வேண்டும்.

சாப்பாட்டுடன் அவர்கள் கொடுத்த பச்சை டீ மிகச்சிறப்பாக இருந்தது. சீனி பால் இல்லாத சூடான டீ. மிதமான கசப்பும் மணமும். இறைச்சி உண்பதனால் வரும் மெல்லிய இரைப்பை கனத்தையும் மசாலா கரிப்பையும் பச்சை டீ உடனடியாகச் சரிசெய்துவிடுகிறது. அசைவ உணவுடன் பச்சை டீ குடிக்க வேண்டும் என எண்ணிக்கொண்டேன், கிடைத்தால்.

மறுநாள் ஏப்ரல் 23 அன்று அருண்மொழியும் டாக்டர் நடேசனின் மனைவி டாக்டர் சியாமளாவும் வெளியே சென்று கடைகளைச் சுற்றிப்பார்த்துவிட்டு வந்தார்கள். நான் வீட்டிலேயே அமர்ந்து கணிப்பொறியில் கடிதங்களுக்கு

பதில்போட்டேன். ஏராளமான கடிதங்கள் வந்திருந்தன. இன்னொரு நாட்டில் சற்று ஓய்வாக இருப்பதும் நன்றாகவே இருந்தது. என் இணைய தளத்தில் சில புதிய கட்டுரைகளைப் போட்டேன். வெளிநாட்டுப்பயணத்தில் இருந்தாலும் அது விடாப்பிடியாக ஒவ்வொருநாளும் வந்துகொண்டுதான் இருந்தது.

அன்று மாலை நானும் அருண்மொழியும் டாக்டர் நடேசனும் அவர் மனைவியும் மெல்பேர்ன் நகரில் இருந்த மாபெரும் சூதாட்டக் கட்டடமான கிரௌன் காசினோவைப் பார்க்கச் சென்றோம். யாரா நதியின் தெற்குப்பகுதியில் இருக்கும் இந்த சூதாட்டவிடுதிக்கு வருடத்துக்கு ஒன்றரை கோடிப்பேர் வருகிறார்கள் என்று சொல்கிறார்கள்.

நல்ல குளிர் இருந்தது. நான் ஒரு பெரிய சிவப்பு மேல்சட்டையை அணிந்து சட்டைப்பைக்குள் கைகளை விட்டுக்கொண்டேன். காரை எங்கோ ஒரு இடத்தில் விட்டுவிட்டு ஒளிபரவிய நகரத்தெருவில் நடந்து காஸினோவை நோக்கிச் சென்றோம். செங்குத்தாக ஒளிவிடும் சதுரக் கண்ணாடித் தூண் போல எழுந்த பிரம்மாண்டமான கட்டடம். அதன் உச்சியில் இருந்த ஒளிரும் கிரீடம் போன்ற அடையாளத்தை தூரத்திலேயே பார்க்க முடிந்தது.

உலகப்புகழ்பெற்ற சிற்பியான டாரில் ஜாக்சன் உட்பட பல சிற்பிகள் இணைந்து வடிவமைத்த இந்த காசினோ 1997ல் திறக்கப்பட்டது. இதை திறந்துவைத்த நாளில் ஒரு நடிகை வெற்றுமுலைகளுடன் ஓடி ஒரு அதிர்ச்சியை ஏற்படுத்தினாளாம். அதை ஒரு வரலாற்றுச் செய்தியாக எழுதி வைத்திருந்தார்கள். படமும் வைத்திருந்திருக்கலாம்.

உள்ளே நுழைந்தோம். நான் முதன்முதலாக அத்தகைய ஒரு நவீந காசினோவுக்குள் நுழைகிறேன். உயர்தரமான கண்ணாடிகளாலும் பளிங்காலும் பளபளக்கும் பித்தளையாலும் கட்டப்பட்ட நவீன கட்டடம். எந்தத் திசையில் பார்த்தாலும் கண்ணைப்பறிக்கும் ஒளி. கம்பளம் விரிக்கப்பட்ட தரையில் இயந்திரங்களின் நடுவே நடந்தோம். மனிதர்கள் ஒரு திருவிழா முற்றம் போல கூடி நெரிசலிட்டு நடந்துகொண்டிருந்தார்கள். பெண்கள் அவர்களின் உயர்தர உடைகளில் உச்சகட்ட ஒப்பனையில் வந்திருந்தார்கள்.

பூமிப்பந்திற்கு தெற்கே கிரௌன் தான் ஆகப்பெரிய காசினோ என்று சொல்லப்படுகிறது. 2500 போக்கர் ஆடும் இயந்திரங்களும் 350 சீட்டாட்ட

மேஜைகளும் இந்த ஒரு கட்டடத்துக்குள் உள்ளன. காசினோ இயந்திரங்கள் கலகலவென ஓடிக்கொண்டே இருந்தன. அங்கே அரசு உத்தரவின்படி சில எச்சரிக்கை வாசகங்களை எழுதி வைத்திருந்தார்கள். 'இயந்திரத்தை மனிதன் வெல்ல முடியாது, அவை வெல்லும்பொருட்டே படைக்கப்பட்டவை' 'சூதாட்டம் ஏதேனும் ஓர் எல்லையில் நிறுத்தப்பட்டாக வேண்டும்' என்பது போல. நம்முடைய டாஸ்மாக் குப்பிகளில் 'குடி குடியை கெடுக்கும்' என்றெல்லாம் எழுதி வைத்திருப்பதுபோல. குடியர்கள் அப்படி எழுதாத புட்டி போதிய போதையை அளிப்பதில்லை என்று எண்ணுவதாகச் சொன்னார்கள்.

இயந்திரங்களில் ஆடிக்கொண்டிருந்தவர்களிலும் சரி, சீட்டாடிக்கொண்டிருந்தவர்களிலும் சரி, சீனர்களே அதிகமும் கண்ணில்பட்டார்கள். சீனர்களுக்கு பொதுவாக சூதாட்ட மோகம் அதிகம் என்று எண்ணுகிறேன். சூதாட்டத்தை குடி உட்பட எல்லா கேளிக்கைகளுடனும் கலந்து ஒரு முழுமையான பாவச்செயலின் இன்பக்கிளுகிளுப்பு இருக்கும்படி செய்திருக்கிறார்கள். அந்த காசினோவின் மாடியில் நிறைய இரவுவிடுதிகளும் நடனசாலைகளும் குடியரங்குகளும் உள்ளன.

இரவில் வீடுதிரும்பிக் கொண்டிருக்கும்போது அந்தச் சூதாட்ட விடுதி குறித்து பேசினோம். அருண்மொழியை அது கொஞ்சம்கூட கவரவில்லை. போகலாம் போகலாம் என்று படுத்திக் கொண்டிருந்தாள். அங்கே நிலவிய ஒருவகையான போதைநிலை அல்லது கிறுக்குநிலை மிரட்சியை உருவாக்கக் கூடியதாக இருந்தது. அந்த இடத்தில் நிற்கவேமுடியாதபடி ஒருவகையான பதற்றம்.

ஆனால் அன்றிரவு நான் அந்த சூதாட்டவிடுதியில் நடந்துகொண்டிருப்பதாக ஒரு கனவு வந்தது. கூடவே ஹீரோவும் வருகிறது. என் கையில் இருந்து எதுவோ கீழே விழ நான் பொறுக்கிக் கொண்டே இருக்கிறேன். அதை எண்ணிப்பார்க்கையில் ஆச்சரியமாக இருக்கிறது. அந்த இடம் ஆழ்மனதை ஏதோ ஒருவகையில் வசீகரிக்கிறது. நான் எதை தவறவிடுகிறேன் அங்கே? ஏன் கூடவே நாய் வந்தது? கள்ளமில்லாத ஹீரோவை கூட்டிக்கொண்டு போவதன் வழியாக ஆழ்மனம் ஒரு குற்ற உணர்ச்சியை சமன்செய்து கொண்டதா? யாரறிவார்?

20. மெல்பேர்ன்

ஆஸ்திரேலியாவில் பயணம்செய்யும்போது வழிதவற வாய்ப்பே இல்லை. துல்லியமாக வழிகள் வகுக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்ட நாடு. பிரம்மாண்டமான ஒரு வரைபடம் போன்றது அது. வழிதவற முடியாத சாலையின் சோர்வூட்டும் அம்சம் என்னவென்றால் அதில் புதியவை என எதுவுமே நிகழ முடியாதென்பதே. அந்நிலையில் பயணத்தின் கவர்ச்சிகளில் முக்கியமான ஒன்று இல்லாமலாகி விடுகிறது. வழி தவறுவதென்பது நமக்கு முன் உள்ள சாத்தியக் கூறுகளில் நாம் முற்றிலும் அறிந்திராத ஒன்று திறந்து கொள்கிறது என்பதுதான்.

14—4—2009 அன்று மெல்பேர்னில் பேராசிரியர் காசிநாதன் எங்களை அழைத்துச் செல்ல வந்தார். இலங்கையில் பேராதனை பல்கலையில் தத்துவப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்று ஆஸ்திரேலியாவில் வசிக்கிறார். விட்கென்ஸ்டீனின் தத்துவத்தில் ஆராய்ச்சி செய்தவர். அவரது மைய ஆர்வமே தத்துவமும் விட்கென்ஸ்டீனும்தான். வழி தவறுவதற்காக மட்டுமே ஒரு பயணத்தை அவருடன் மேற்கொண்டோம்.

எந்த விதமான இலக்கும் இல்லாமல் ஒரு கார்ப்பயணம். மையச்சாலைகளை தவிர்த்தார். செயற்கைக்கோள் வழிகாட்டியை மூடினார். ஓட்ட ஆரம்பித்தார். விட்கென்ஸ்டீன் குறித்து நான் சந்தேகங்களாகக் கேட்டுக்கொண்டிருந்தேன். அவரது விளக்கங்கள் கச்சிதமாக இருந்தன. நடுவே இந்திய சிந்தனை குறித்த விவாதங்கள்.

சாலையோரமாக ஒரு பண்ணை. குதிரைகள் கூட்டம் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தன. குதிரைகள் மேய்வதைப் பார்க்கும்போது ஒருவகையான ஏக்கம் மனதில் எழுகிறது. என்ன ஒரு கம்பீரமான உடல்.

இறுகிய தசைகள். சிலிர்க்கும் பிடரி. பட்டுமின்னும் மயிர்ப்பரப்பு. காலடி தூக்கி வைப்பதில் தலை திருப்புவதில் நிற்பதில் மேடேறுவதில் என்ன ஒரு ஆண்மை. ஒரு ஆணழகன் அமர்ந்து அரிசியில் கல்பொறுக்குவதைக் காணும்போது ஏற்படுவது போல ஓர் ஒவ்வாமை.

மெல்பேர்ன் நகரைச் சுற்றியுள்ள சிறிய கிராமங்கள் வழியாகச் சென்றுகொண்டிருந்தோம். ஆஸ்திரேலியாவின் நகரங்கள் அமெரிக்காவை நகல்செய்கின்றன என்றால் கிராமங்கள் பிரிட்டனை நகல்செய்தவை என்று பட்டது. ஆனால் மிகவும் 'புளோ அப்' செய்யப்பட்ட பிரிட்டன்.ஒவ்வொரு வீடும் ஒன்றில் இருந்து பத்துபதினைந்து கிலோமீட்டர் தள்ளி இருக்கும் 'கிராமம்'.

அந்த கிராமத்தை இணைப்பது, அந்த வீடுகளை ஒரு கிராமமாக உணரச்செய்வது நடுவில் இருக்கும் கடைவீதி. அனேகமாக ஒரு கிலோமீட்டர் கூட நீளமில்லாத தெருக்கள். ஆனால் அகலமானவை, சுத்தமானவை, வசதியானவை. நாங்கள் சென்றபோது இலையுதிர்காலத்தின் ஆரம்பம் போல இலைகள் உதிர்ந்து கருங்கல் பாவப்பட்ட சாலையோரப்பாதையில் பறந்தன. கொஞ்சம் குளிர் கலந்த காற்று வீச ஸ்கர்ட்டை பற்றிக்கொண்டு ஒரு பெண் ஒடுங்கி நடந்து சென்றாள். காற்றில் கொஞ்சம் தூசி கலந்திருந்தது.

தெருவில் பழைய பல கட்டடங்களை அப்படியே விட்டு வைத்திருக்கிறார்கள். அதன்மூலம்தான் அந்தத் தெருக்களுக்கு ஒரு வரலாற்றுத்தோற்றம் அல்லது தனித்தன்மை இருக்கிறது. நூறு வருடம் முன்பு அப்படியே ஏதோ பிரிட்டானியக் கட்டடத்தை நகல்செய்து கட்டப்பட்ட மதுக்கடை ஒன்றின் முன் நிற்கையில் நினைத்துக்கொண்டேன், மனிதர்களுக்கு வரலாறு ஓர் ஆறுதலை அளிக்கிறது என்று. இங்கே எனக்குமுன் என் முன்னோர் வாழ்ந்தார்கள் என எண்ணுவது ஓர் இதமான உணர்வு. அது நமது தனிமையில் நமக்குத்தேவையாக இருக்கிறது! காசிநாதன் அங்கும் ஒரு புத்தகக் கடையைக் கண்டுபிடித்தார். அந்தகிராமத்தின் நிறுவனங்கள் என்பவை சிலவே. நாலைந்து 'பப்'கள். மதுக்கடை ஒன்று. மூன்று ஓட்டல்கள். வேளாண்மைப்பொருட்கள் விற்கும் சில கடைகள். உடைகள் பழுதுபார்க்கும் புராதனமான நிறுவனம் ஒன்று. ஒரு பலசரக்குக் கடை. அவ்வளவுதான். ஆனால் புத்தகக் கடை இருந்தது! அந்த பரந்த நிலவெளியின் தனிமையில் உயிர்வாழ புத்தகங்கள்

இன்றியமையாதவை போல. அவையும் முன்னோர் வாழ்ந்துசென்றதன் தடையங்கள் அல்லவா?

அது பழைய புத்தகக் கடை. வாசித்த புத்தகங்களை சில காசுகளுக்கு அங்கே கொண்டு விற்கலாம். புதியவற்றை வாங்கிக் கொள்ளலாம். சின்னஞ்சிறு கிராமமானாலும்கூட அங்கே அத்தனை புத்தகங்கள் புழக்கத்தில் இருந்தன. நாவல்கள் மட்டுமல்ல பலவகையான துறைநூல்களும்கூட. காசிநாதன் அங்கும் நூல்கள் விட்கென்ஸ்டீன் ஏதேனும் உண்டா என்று பார்த்தார். இருந்தன! நான் புத்தகங்களை மேய்ந்தேன். வழக்கம்போல கொஞ்சம் தொடக்கங்களை வாசித்துப்பார்த்தேன். குடியேறலின் (எமிக்ரேஷன்) அவசியம் குறித்து ஒரு நூல்.

தொடக்க அத்தியாயத்தில் ஆசிரியர் குடியேறல்மூலம் குடியேறப்படும் நாடும் குடியனுப்பும் நாடும் எவ்வாறு பொருளியல் மேன்மை அடைகின்றன என்று விளக்கியிருந்தார். பிலிப்பைன்ஸில் ஒவ்வொரு வருடமும் முக்கியமான தேசிய விருது அந்நாட்டைவிட்டு வேறுநாடுகளில் குடியேறி பணம் சம்பாதித்து ஊருக்கு அனுப்புபவருக்கு அளிக்கப்படுகிறது என்று சொல்லி அவ்விழாவை விவரித்தபடி ஆரம்பிக்கிறது நூல். அதற்குள் காசிநாதன் திரும்பிவிட்டார். நான் அதை அங்கேயே விட்டு கிளம்பினேன்.

காரிலேயே மாலைவரை கிராமச்சாலைகளில் சுற்றிவந்தோம். ஒருகட்டத்தில் உண்மையாகவே வழி தவறி சம்பந்தமில்லாத இடங்களுக்கெல்லாம் சென்றோம். செங்குத்தான சரிவாக இறங்கும் சாலைகள். சருகுபரவிய சிறிய சாலைகள். ஆனால் எங்கும் காலியாகக் கிடக்கும் பெரும் நிலவெளியையும் அவ்வப்போது தனித்து கதவுகள் மூடி தியானத்தில் ஆழ்ந்திருக்கும் வீடுகளையும் மட்டுமே கண்டேன். கிராமம் என்றால் மக்களின் வாழ்க்கையால் உயிர் துடிக்கும் ஒரு பகுதி என்று எண்ணும் இந்தியக் கண்ணுக்கு அது ஏமாற்றம் அளிப்பதே.

மாலையில் திரும்பி வீடுவந்துசேர்ந்தோம். எங்கே போனீர்கள் என்றார் டாக்டர். எங்கும் செல்லவில்லை, செல்வதை மட்டுமே செய்தோம் என்று விளக்கினேன். ‘காசிநாதர் அப்படிப்பட்ட ஆள்தான். தத்துவம் படிச்சவர் எண்டா அப்டித்தான்’

என்றார் நடேசன். வழிதவறுவதற்காகவே உருவாக்கப்பட்ட ஒரு துறையாக தத்துவத்தைக் கருதுகிறார் போலும்!

மறுநாள் சிவராமனுடன் மெல்பேர்ன் நகரைச் சுற்றினோம். பாண்டிச்சேரியைச் சேர்ந்த சிவராமன் ஒரு கட்டட வரைகலைக்காரர். அவரது மனைவிக்கு குமரிமாவட்டத்தில் திருவட்டார் பக்கம் அடைப்பிரதமன் எல்லாம் விரும்பிச் சாப்பிட்டிருக்கிறார். டாக்டர் நடேசன் எங்களை கொண்டுவந்து மெல்பேர்ன் நகர் நடுவே அவரிடம் ஒப்படைத்தார்.

சிவராமன் தத்துவவாதிக்கு நேர் எதிர். துல்லியமான மனவரைபடம் உள்ள மனிதர். மொத்த மெல்பேர்ன் நகரையும் அலசி ஆராய்ந்து தொகுத்து வைத்திருந்தார். அவர் செல்லும்போதே மெல்பேர்ன் நகரை மாற்றிக்கட்டிக்கொண்டிருந்தாலொழிய வழிதவற வாய்ப்பே கிடையாது. நகரத்தைச் சுற்றி ஒரு டிராம் ஓடிக்கொண்டே இருக்கிறது. நாகர்கோயில் பார்வதிபுரம் முதல் பார்வதிபுரம் வரை ஓடும் பேருந்து போல. அதில் ஏறி வேண்டிய இடத்தில் இறங்கி வேடிக்கை பார்த்து மீண்டும் ஏறிக்கொள்ள வேண்டியதுதான்.

இளமழை அவ்வப்போது பெய்தது. குளிரும் இருந்தது. மெல்பேர்னின் மையநகர் பகுதியை காலாலேயே நடந்து சுற்றிப்பார்த்தோம். விக்டோரியா மாகாணத்தின் பாராளுமன்றம் முன்னால் நின்று நான் புகைப்படம் எடுத்துக்கொண்டேன். கிட்டத்தட்ட வங்கப்புலியின் பிணமருகே நின்று படம் எடுத்துக் கொள்ளும் காலனியாதிக்க பிரிட்டிஷ்காரர் போல ஓர் உணர்வு. கொஞ்ச நாளில் அங்கே ஒரு தமிழர் ஆட்சி செய்யாமலா போய்விடுவார்?

மெல்பேர்ன் நகரத்தில் நடுநடுவே மழையில் நனைந்தும் அவ்வப்போது ஓடியும் பெரும் கட்டடங்களைச் சுற்றி வந்தோம். சாலை ஒன்றைக் கடக்கும்போது வரிசையாக ரோல்ஸ்ராய்ஸ், மெர்ஸிடிஸ் பென்ஸ் கார்கள் நின்றன. எல்லாமே பழைமையானவை. அன்று ஆன்சாக் நாள் என்றார் சிவராமன். ஆஸ்திரேலியாவின் படைகள் கலிபோலியில் கொல்லப்பட்ட நாள். ஆகவே போரில் பங்குபெற்றவர்களின் வாரிசுகளும் முன்னாள் படைவீரர்களும் கௌரவிக்கப்படுகிறார்கள். பல முக்கியமான ராணுவ அதிகாரிகள் அவர்களின் பழைய கார்களில் பழைய சீருடைகளுடன் வந்திருந்தார்கள். கார்கள்

காலத்தில் மெல்ல கலைப்பொருட்களாக ஆகிவிட்டிருந்தன. அவற்றின் பளபளப்பு தங்கம் மின்னும் உட்பக்கம் போன்றவை சென்றகாலத்தின் கம்பீரத்தை நினைவுறுத்தின.

மெல்பேர்னின் உயரமான கட்டடம் யுரேகா டவருக்குச் சென்றோம். நுழைவுச்சீட்டு எடுத்து அதை பார்க்கப்போனோம். 2002ல் இதன் பணிகள் ஆரம்பமாயின. 2006ல் முடிந்தது. ஃபெண்டர் கட்சாலிடிஸ் (Fender Katsalidis) நிறுவனத்தால் வரையப்பட்டு குரோகோன் (Grocon) நிறுவனத்தால் கட்டப்பட்டது இது. அதன் பிரதான சிற்பியான நொண்டா கட்சாலிடிஸ் (Nonda Katsalidis) ஒரு முக்கியமான கலைஞர் என்று சிவராமன் சொன்னார்.

297 மீட்டர் உயரமுள்ள இந்த கட்டடம் 91 அடுக்குகள் கொண்டது. கீழே உள்ள ஒன்பது அடுக்குகளும் கார் நிறுத்துமிடங்கள். மிச்சமுள்ள அடுக்குகள் எல்லாமே குடியிருப்புகள். தனித்தனி கான்கிரீட் துண்டுகளாக கீழே வைத்தே செய்து கிட்டத்தட்ட நான்கு மாதங்களில் தூக்கி வைத்து கட்டிமுடிக்கப்பட்ட கட்டடம் இது.

அதிவேக மின்தூக்கிவழியாக மேலே ஏறிச்சென்றோம். அங்கே நான்குபக்கமும் பார்ப்பதற்கான கண்ணாட்சிச்சாளரங்கள். வெளியே இளவெயில் பரவிய நகரம். அப்பால் யாரா உருகி வழியும் ஈயம் போல சென்று வளைந்து கிளைபிரிந்து கடலில் கலக்கும் காட்சி. உயரத்தில் இருந்து பார்க்கும்போது நாம் ஒட்டுமொத்தமாகப் பார்க்கிறோம். நகரங்களை, சமவெளிகளை. அப்போது சிறிய விஷயங்களில் இருந்து மனம் விலகிவிடுகிறது. ஒருவகையான அமைதியும் தியானநிலையும் கைகூடுகிறது.

பார்வைமேடையில் ஒரு வசதி. ஒரு கண்ணாடிப்பேழைக்குள் நாம் சென்றதும் அந்தப்பேழையை இயந்திரம் மூலம் தள்ளி கட்டடத்தைவிட்டு வெளியே நீட்டச்செய்கிறார்கள். காலடியில் அதல பாதாளத்தில் பேன்கள் வரிசையாகச் செல்வது போல கார்கள். அவற்றின் கண்ணாடிகள் மின்னிச் சென்றன. வயிற்றை உயரத்தின்மீதான மானுட அச்சம் கவ்விப்பிடித்திருந்தது.

மேலிருந்து பார்க்கையில் தூரத்தில் ஒரு மைதானத்தில் ஆன்சாக் நாளுக்கான கொண்டாட்டங்கள் தொடங்குவது தெரிந்தது. ஒரு அணிவகுப்பு ஆரம்பமாகப்

போகிறது. தாத்தாக்கள் தேமே என்றுதான் எல்லாவற்றையும் செய்தார்கள். கீழிறங்கி வந்தபோது உற்சாகமாக சிரிக்கும் தாத்தாக்கள் அணிவகுத்துச் சென்ற ஆன்சாக் பரேட் கடந்து செல்வதைப் பார்த்தோம்.

மெல்பேர்ன் நகரின் மைய ஈர்ப்பான அருங்காட்சியகத்தையும் தேசியக்கலைக்கூடத்தையும் பார்த்தோம். கலைக்கூடத்தில் முகப்பிலேயே குளோட் மோனேயின் பிரம்மாண்டமான வாட்டர்லில்லீஸ் ஓவிய வரிசையில் ஒன்று இருந்தது. ரெம்ப்ராண்ட், பிக்காஸோ போன்றவர்களின் ஓவியங்களுடன் ஆஸ்திரேலியாவின் முக்கியமான பல கலைஞர்களின் ஓவியங்கள் இருந்தன. ஹான்ஸ் ஹெய்ஸன், ஃப்ரெட் வில்லியம்ஸன் போன்றவர்களின் நிலக்காட்சி ஓவியங்களில் ஆஸ்திரேலியாவின் நிலத்தின் விரிவும் மௌனமும் அற்புதமாகப் பதிவாகியிருந்தன.

குறிப்பாக ஆஸ்திரேலியாவின் நீளமான மண்சாலைகள். யாருமே நடக்காதபோது அவை தனிமையில் உறைந்து கிடக்கின்றன. சிலசமயம் ஒருவர் அதில் செல்லும்போது தனிமை இரட்டிப்பாகி விடுகிறது. அந்த மனிதர் சாலையின் தன்மையை இன்னும் துயரமான இனிமை கொண்டதாக ஆக்கிவிடுகிறார் என்று பட்டது.

ஆனால் நான் அங்கே கூர்ந்து கவனித்தது சர் சிட்னி நோலான் வரைந்த நெட் கெல்லி ஓவிய வரிசை. நெட்கெல்லி என்ற கலகக்காரனை விசித்திரமான காட்சிப்பிம்பங்கள் வழியாக சித்தரிக்க முயல்கிறார் நோலான். நெட்கெல்லி அவரே ஒரு இரும்புக்கவசத்தை தயாரித்து அதைப்போட்டுக்கொண்டு போலீஸிடம் போர் புரிந்தார். அந்த கவசத்தை அணிந்தபடியே அவர் நீதிபதிமுன் கொண்டுவரப்பட்டார். அந்தக் கவசத்தை பலகோணங்களில் நோலான் நெட்கெல்லிக்கு குறியீடாக ஆக்கியிருந்தார். அந்த ஓவியங்கள் ஏன் என்னைக் கவர்ந்தன என்றே தெரியவில்லை.

நவீனக்கலைகளின் காட்சியகத்தில் நவீன ஓவியக்கலையின் கிறுக்கும் மேதமையும் கலந்த பலவகையான ஓவியங்கள். விதவிதமான கலவைச்சித்திரங்கள். அபத்தமான வடிவங்கள். எல்லை மீறிப்பாயும் பிரக்ஞை பொருள் வடிவம் கொண்டதன் தடையங்கள் அவை. சென்ற தலைமுறையில்

கலை என்பது அடையாளம் என்ற வேருள்ள சொல்லாக ஒலித்தது. இன்று கலைத்தல் என்ற பொருளை நோக்கியே மனம் செல்கிறது.

இயற்கை அருங்காட்சியகங்கள் நமக்குள் அபாரமான மன எழுச்சியை உருவாக்கக்கூடியவை. குறிப்பாக சிறுவயதில் அவை ஒரு மாபெரும் பிரபஞ்ச தரிசனமாகவே அமையக்கூடும். அங்கே கண்ணாடிக்கூண்டுக்குள் விதவிதமான ஆஸ்திரேலிய எறும்புகளின் உலகை அமைத்திருந்தார்கள். சின்னக்குழந்தைகள் கண்ணாடிக்குமிழ் ஒன்றுக்குள் தலையை விட்டுக்கொண்டு எறும்புகளின் அன்றாட வாழ்க்கையை அருகே இருந்து பார்க்க முடியும். ஆஸ்திரேலியாவின் பல வகையான உயிரினங்களை அங்கே உறைந்த பொம்மைகளாகக் கண்டோம். மரணத்தின் கண்ணாடித்திரைக்குஅப்பால் நின்றபடி அவை சத்தமில்லாமல் உறுமின.

இரவில் அருண்மொழியும் சிவராமனும் ஒரு இந்திய ஓட்டலுக்குள் நுழைந்து சாப்பிட்டார்கள். நான் அந்தத் தெருவில் ஓர் எல்லையில் இருந்து இன்னொரு எல்லைக்கு நடந்தேன். மழையின் குளிர் இருந்தது. என்னைத்தாண்டிச் சென்றவர்கள் என்னைப் பார்ப்பதுபோல் ஒரு பிரமை. பெரும்பாலானவர்கள் கையில் புதிதாக வாங்கிய மதுக்குப்பிகளுடன் விரைந்து சென்றார்கள்.

சிவராமன் எங்களை டாக்ஸியில் ஏற்றிவிட்டார். டாக்டர் என்னிடம் நான் கிளம்பும்போது ஒரு கவரைத் தந்து அதில் பணம் இருப்பதாகவும் கவர் மீது விலாசம் எழுதப்பட்டிருப்பதாகவும் சொல்லியிருந்தார். தாமதமாகுமென்றால் டாக்ஸியில் வரும்படியும் பத்துடாலருக்குள் ஆகும் என்றும் சொன்னார். டாக்ஸி அவர் வீட்டுக்கு முன்னால் சென்று நின்றபோது நான் பார்த்தேன், 12 டாலர். உறைக்குள் இரு ஐந்து டாலர் மட்டுமே இருந்தது.

நான் டாக்ஸிக்காரரிடம் இரு நோட்டுகளையும் கொடுத்துவிட்டு இரண்டு டாலரை இப்போது வீட்டுக்குள் போய் வாங்கிக்கொண்டு வந்து தருவதாகச் சொன்னேன். அவர் சம்மதித்தார். அருணாவிடம் விஷயத்தைச் சொன்னேன். அவள் இறங்கி நடந்து வீட்டுக்குள் போய் ஐந்து டாலருடன் வந்தாள். அதை டாக்ஸிக்காரரிடம் அளித்தேன். அவர் வாங்கிவிட்டு நோட்டுகளை கையால் தட்டியவர் நீங்கள் எவ்வளவு டாலர் கொடுத்தீர்கள் என்றார்.

பத்து என்றேன். இல்லை அவை ஐம்பது டாலர் நோட்டுகள் என்றார். நான் வாயைப்பிளந்தேன். மேற்கொண்டு ஒருவருடம் அருண்மொழி அதைத்தான் சொல்லப்போகிறாள் என்றுதான் அப்போது மனம் ஓடியது. லூதியானாவைச் சேர்ந்தவர் டாக்ஸிக்காரர். தாடியில்லா சர்தார்ஜி. சிரித்தபடி பை சொல்லிவிட்டு கிளம்பினார். அருண்மொழி முகத்தைப் பார்க்காமல் நேராக வீட்டை நோக்கிச் சென்றேன்.

21. விழாவும் விடையும்

க லாப்ரியாவின் புகழ்பெற்ற மேற்கோள் ஒன்று உண்டு, பயணத்தில் உற்சாகமான ஒரே அம்சம் வீட்டுக்குத் திரும்பி வருவதுதான் என. ஆஸ்திரேலியப்பயணமும் முடிவை நோக்கி நெருங்கியது. ஊர்திரும்ப சில நாட்களே இருந்தன. ஏப்ரல் இருபத்தேழு அன்று தாய் ஏர்வேஸில் ஊருக்கு செல்வதாக இருந்தோம்.

அதற்குள் ஆஸ்திரேலியா ஒருமாதிரி சொந்தநிலம்போன்ற ஒரு சாயலைக் கொண்டு முகம் கொடுத்துப் பேச ஆரம்பித்தது. நானும் அருண்மொழியும் டாக்டருடன் காலையில் அருகே உள்ள பூங்காவுக்கு நடக்கச்செல்லும்போது முதல்முறையாக இயற்கையில் நாம் அடையும் முக்கியமான சந்தோஷம் ஒன்றை அடைந்தோம் – நேற்று பார்த்தவை இன்றும் அப்படியே இருப்பதை உணரும் சந்தோஷம். பின்னர் அவை கொஞ்சம் மாறியிருக்கின்றன என்பதைக் காணும் மேலதிக சந்தோஷம்.

டாக்டரின் மனைவியுடன் மெல்பேர்ன் நகரின் குட்டிக்குட்டி வேடிக்கைகளைப் பார்க்கச் சென்றோம். பெரியதோர் ஞாயிற்றுக்கிழமைச் சந்தை. மைதானத்துக்குக் கூரையிட்டதுபோன்ற ஒரு இடத்தில் பலநூறு கடைகள். சின்னச்சின்ன கைவினைப்பொருட்கள். அலங்காரப்பொருட்கள். வீட்டு உபயோகப்பொருட்கள். பெரும்பாலும் சீனர்கள்தான் கடை வைத்திருந்தார்கள்.

எதையும் வாங்க வேண்டாமென்ற எங்கள் முன்னுறுதியைக் கலைக்கும் சக்தி அந்தக் கடைகளுக்கு இருக்கவில்லை. கடைகள் தோறும் சென்று எங்களுக்கு எவையெல்லாம் தேவையில்லாமலிருக்கின்றன என்பதைக் கண்டு குதூகலம் அடைந்தோம். கடைக்கு அருகே குழந்தைகள் விளையாடுவதற்காக ஒரு பூங்கா இருந்தது. அன்று மழையும் குளிருமாக இருந்தமையால் யாரும்

இருக்கவில்லை. விளையாட்டு ரயில்கள் ஓய்ந்து கிடந்தன. பசுமை கலந்து ஒளிவிட்ட குளத்து நீரில் வெண்ணிறமான அன்னங்கள் மிதந்தன.

இருபத்தைந்தாம் தேதி நானும் அருணாவும் டாக்டர் மனைவியுடன் மெல்பேர்ன் நகரத்தின் இந்து ஆலயத்துக்குச் சென்றோம். பெரும்பாலான புலம்பெயர்ந்த கோயில்களுக்கு பொதுப்பெயர் சிவ விஷ்ணு ஆலயம். சைவமதமும் வைணவ மதமும் ஒன்றாக ஆனாலொழிய அன்னிய மண்ணில் நிதி திரட்டிச் செயல்படமுடியாத நிலை. எப்படி முற்காலங்களில் சாக்தமும் சௌரமும் காணாபத்தியமும் சைவ வைணவங்களுடன் இணைந்தன என்பதைக் காட்டும் சமகால உதாரணம் இது.

பல தெய்வங்களை உள்ளடக்க வேண்டியிருப்பதனால் ஆகம நெறிகள் மெல்ல மீறப்பட்டு தெய்வங்கள் வரிசையாக அமர்ந்தருளச் செய்யப்படுகின்றன. இந்து ஆலயங்கள் அனைத்திலும் உள்ள அமைப்பான பல கடவுள்தொகை என்ற வடிவம் உருவாகி வந்த விதம் இதுவே. பின்னர் அதற்கு Pantheonism என்று இந்தியவியலாளர் பெயரிட்டார்கள். இந்து மதம் மற்ற வழிபாடுகளை விழுங்கிவிடும் பூதம் என்று முற்போக்காளர் கதை சொல்ல ஆரம்பித்தார்கள். புலம்பெயர்ந்த இந்துமதத்தின் ‘வழிபாட்டு வன்முறை’ பற்றிய கதைகளும் மெல்ல இனிமேல் வரக்கூடும்.

அந்தப் பூங்காவின் முன்பகுதியில் முதல் உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட பெரிய கவசவண்டிகள் இரண்டு நின்றிருந்தன. சங்கிலிச்சக்கரங்களும் பிரம்மாண்டமான துப்பாக்கிக் குழாய்களும் கொண்ட இரும்புராட்சதர்கள். ஒன்றின் மீது ஏறி அமர முயன்றேன். மழையின் ஈரத்தில் நன்றாகவே வழுக்கியது. விடாமுயற்சியுடன் ஏறி அமர்ந்தேன். சிறுவயதில் முதல்முறையாக யானைமேல் ஏறிய அதே மனக்கிளர்ச்சியை அடைந்தேன். யானைமேல் இருக்கும்போது யானை நம்மைப்பற்றி என்ன நினைக்கிறது என்ற எண்ணம் எழுந்துகொண்டே இருக்கும். நாம் நம்மைப்பற்றிய ஓர் நினைப்பு மீது ஏறி அமர்ந்திருக்கிறோம் என்ற ஒரு பயம் இருக்கும். ஆனால் இது இரும்பு. இரும்புக்கு சுயம் கிடையாது.

ஸ்டாலின்காலத்து தொழிற்புரட்சியை ‘இரும்புவெள்ளம்’ என்று அக்கால எழுத்தாளர் ஒருவர் எழுதினார். தொழிற்புரட்சி என்பதே இரும்பின்

ஆதிக்கம்தான். இரும்புக் கப்பல்கள் இரும்பு யந்திரங்கள் இரும்பு பீரங்கிகள்... இரும்பு இல்லாத சமூகங்களை அவை ஒழித்துக்கட்டின. அப்படி அடையாளமில்லாமல் ஆக்கப்பட்ட ஒரு மானுடம்தான் ஆஸ்திரேலியப் பழங்குடிச்சமூகம். இந்த மண்ணில் இரும்பு அதை வென்ற ஆதிக்கத்தின் சின்னம் போல வந்து கனத்து குளிர்ந்து இறுகி அமர்ந்திருக்கிறது.

அன்றுமுழுக்க எனக்கு மின்னஞ்சல்களைப் பார்க்கும் வேலை. ஏராளமான மின்னஞ்சல்கள் குவிந்துகிடந்தன. பெரும்பகுதி மின்னஞ்சல்கள் ஈழ விஷயம் சார்ந்தவை. இலங்கையில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக இலங்கை அரசு எடுத்துவந்த ராணுவநடவடிக்கைகள் உச்சமடைந்திருந்தன. புலிகள் கிட்டத்தட்ட சுற்றி வளைக்கப்பட்ட நிலையில் இருந்தார்கள். அவர்கள் கிட்டத்தட்ட லட்சம் தமிழ் மக்களை பிணைக்கைதிகள் போல பிடித்து வைத்திருப்பதாக தகவல்கள் வந்தன.

ஆஸ்திரேலியாவிலும், ஐரோப்பாவிலும் ஈழத்தமிழர்கள் விடுதலைப்புலிகள் மீதான தாக்குதல் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்து தெருமுனைப்போராட்டங்களிலும் ஆர்ப்பாட்டங்களிலும் ஈடுபட்டிருந்தார்கள். இலங்கை அரசு விடுதலைப்புலிகளை தாக்குவதாக எண்ணி குத்துமதிப்பாக தாக்கி தமிழர்களைக் கொன்று கொண்டிருந்தது. தமிழர்கள் மட்டுமே தங்களுக்கு காப்பு என்று எண்ணிய புலிகள் சர்வதேச சமூகம் தலையிட்டு ஒரு ஒப்பந்தம் ஏற்படும் என நம்பி அம்மக்களை மிரட்டல்மூலம் தங்கள் கூடவே தக்க வைத்துக்கொண்டிருந்தார்கள்.

எனக்கு வந்த மின்னஞ்சல்கள் இருவகை. ஒன்று தமிழர்கள் மீதான தாக்குதலை உடனடியாக நிறுத்தச்சொல்லும் போராட்டங்களில் பிற தமிழ் எழுத்தாளர்களைப்போல நானும் ஏன் உணர்ச்சிகரமாகக் குரல் கொடுக்கவில்லை என்று கோரும் மின்னஞ்சல்கள். பல தமிழ் எழுத்தாளர்கள் மிகையுணர்ச்சியுடன் எழுதித் தள்ளியிருந்தார்கள். மிகையுணர்ச்சியை வெளிப்படுத்துவதில் தமிழில் நமக்கு ஈராயிரம் வருடத்து மரபே இருக்கிறது. எந்தப்பயனும் இல்லாத வெறும் சொற்கள் அவை. ஆனால் அவற்றை சொல்லாதவர்கள் தமிழ் விரோதிகளாக ஆகிவிடும் கெடுபிடி நிலை உருவாக்கப்பட்டிருந்தது.

மறுபக்கம் புலிகள் வலுக்கட்டாயமாக தமிழர்களை பிடித்து வைத்திருப்பது, தப்ப முயலும் எளிய மக்களை கொலைசெய்வது குறித்த கடிதங்கள். இக்கடிதங்கள் இரண்டு வகை. ஒன்று சுல்தான், காருண்யன் என்ற பெயர்களில் உணர்ச்சிகரமான மொழியில் பொதுவாக எல்லா முக்கிய ஆளுமைகளுக்கும் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டவை. அவற்றில் பலசமயம் ஆதாரபூர்வமான தகவல்கள்தான் அதிகம் இருந்தன. அவற்றில் ஒன்றுக்கு விடுதலைச் சிறுத்தைகள் சட்டமன்ற உறுப்பினர் ரவிக்குமார் 'நீங்கள் ஐந்தாம் படை' என்று குற்றம்சாட்டி அனுப்பியிருந்த கடுமையான கடிதமும் அதற்கு காருண்யன் என்பவர் உணர்ச்சிகரமாக அனுப்பியிருந்த பதிலும் இருந்தது.

இரண்டாவது வகை கடிதங்கள் எனக்கு நன்றாகத்தெரிந்த வாசகர்கள் அனுப்பியவை. அவைதான் என்னை ஆழமான சங்கடத்தில் ஆழ்த்தின. குறிப்பாக கிறித்தவ மதபோதகரும் எங்களூர்க்காரருமான வாசகர் எழுதியவை. அவர் கிளிநொச்சியில் சேவை அமைப்பு ஒன்றில் இருந்தார். (விசித்திரமான ஒரு விஷயம் அதிதீவிர ரோமன் கிறித்தவராக இருந்த அவர் சட்டென்று பெந்தேகொஸ்தே சபையில் சேர்ந்துவிட்டார். காரணம், போர்க்களத்தில் அவர் கண்ட சடலங்களின் ஆவிகள் அவரை பீடித்து தூங்க விடாமல் செய்தனவாம். இப்போது பெந்தேகொஸ்தே கடிதங்களாக எழுதி என்னை மதம் மாற்றம் செய்ய முயல்கிறார்.)

அவர் எப்போதுமே புலி ஆதரவாளர். அதற்காகவே அவர் இலங்கைக்குச் சென்றார். ஆனால் இப்போது புலிகளால் பொதுமக்கள் தாக்கப்படுவது குறித்து புலம்பி எழுதியிருந்தார். தப்பி ஓடும் மக்களை பின்னாலிருந்து ஒட்டுமொத்தமாகச் சுட்டுக் கொன்றுதள்ளுகிறார்கள் என்றார். அதையும் மீறி மக்கள் தப்பி ஓடிக்கொண்டிருக்க புலிகளைக் காக்கும் மக்கள் கவசம் கரைந்துகொண்டே இருக்கிறது என்றார். தப்பி ஓடுபவர்களின் எண்ணிக்கை புலிகளால் கட்டுப்படுத்த முடியாதபடி ஆகும்போது கதைமுடியும், அதைத் தடுக்கவே புலிகள் மூர்க்கம் கொள்கிறார்கள் என்றார்.

இலங்கை அரசின் நோக்கமே அதுதான். புலிகளிடம் இருந்தால் இலங்கை அரசு குண்டுவீசி கொல்லும். தப்பி ஓடினால் புலிகள் சுடுவார்கள், ஆனால்

சிலரேனும் தப்ப முடியும். ஆகவே தப்பி ஓட மக்கள் முடிவெடுத்தார்கள். மேலும் பல நண்பர்கள் யாழ்ப்பாணத்தில் இருந்தும் கொழும்புவில் இருந்தும் கண்டியில் இருந்தும் எல்லாம் இச்செய்திகளை உறுதிப்படுத்தி கடிதங்கள் அனுப்பிக்கொண்டே இருந்தார்கள்.

மனநிம்மதி இழந்து நிலைகொள்ளாமல் இருந்தேன். இருபக்கமும் கடிதங்களாக வந்து கொண்டிருந்தன. 'தமிழர்கள் கொல்லப்படும்போது தமிழ் எழுத்தாளனாக நீ ஏன் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை, வா தெருவுக்கு' என அதட்டல்கள். மறுபக்கம், 'மனிதாபிமானமும் காந்தியமும் பேசும் நீ எளிய மக்கள் அரசியல் சதுரங்கத்தில் கொக்குகுருவி போல சுட்டுத்தள்ளப்படும்போது ஏன் சும்மா இருக்கிறாய்?' என்ற கேள்விகள்.

ஓர் எழுத்தாளனின் தார்மீகம் என்பது உண்மையில் பொதுப்போக்கு மூலம் உருவாக்கப்படும் உணர்ச்சியலைகளில் பெரும்பாலானவர்களால் கவனிக்காமல் விடப்படும் மானுடப்பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டுவதே. எழுத்தாளன் தன் தரப்பின் பொதுஎதிரிக்கு எதிராக கொந்தளித்து எழுவதை விட தன் தரப்பின் அதார்மீகத்துக்கு எதிராகவே போராட வேண்டும். ஒவ்வொருமுறையும் காந்தி செய்தது அதையே. அதற்காகவே அவர் பழிசுமத்தப்பட்டு கொல்லவும்பட்டார்.

தமிழர்கள் கொல்லப்படுவது புதிதாக ஆரம்பித்த விஷயம்போல இங்கே எழுத்தாளர்களும் இதழாளர்களும் மிகையுணர்ச்சி கொண்டார்கள்.

ஆனால் அந்தக் கடைசிப்போரில் கொல்லப்பட்டவர்களை விட பல மடங்குபேர்கள் கடந்த வருடங்களில் கொல்லப்பட்டுக்கொண்டே இருந்தார்கள். ஒரு கட்டத்தில் அது பழகிப்போய் அன்றாட சம்பவமாக ஆகி, எல்லாரும் சொந்த வேலைகளைத்தான் கவனித்துக்கொண்டிருந்தார்கள். எவருக்கும் மனசாட்சி கொதிக்கவில்லை. ஆனால் புலிகளின் தலைமையைக் காப்பாற்றும் பொருட்டு ஊடகங்கள் வழியாக உருவாக்கப்பட்ட உணர்ச்சியலையை எல்லாரும் ஒன்றுக்குப் பத்தாக எதிரொலித்தார்கள். திகுதிகுவென எரிந்தார்கள்.

புலிகளால் கொல்லப்பட்ட மக்களைப்பற்றி ஒரு குரல், ஒரு சின்ன அக்கறை கூட எந்த ஒரு வாயில் இருந்தும் வரவில்லை. யாருடைய மனிதாபிமானமும் யாருடைய தமிழுணர்வும் அவர்களை நோக்கி திரும்பவில்லை. எந்த

இனப்பாசமும் அவர்களுக்கு கவசமாகவில்லை. இந்நிலையில் ஒரு மனசாட்சியுள்ள, சிந்திக்கும் எழுத்தாளன் செய்திருக்கவேண்டியது அந்த மக்களுக்காக குரல்கொடுப்பதையே. அதன்பொருட்டு அவன் புறக்கணிக்கப்பட்டிருப்பான். ஏன் கொல்லவும் பட்டிருப்பான். ஆனால் அவன் செய்திருக்கவேண்டியது அதையே. தல்ஸ்தோய் அதைத்தான் செய்திருப்பார். நிகாஸ் கசந்த் ஸகீஸ் அதைத்தான் செய்திருப்பார். ஐசக் பாஷவிஸ் ஸிங்கர் அதைத்தான் செய்திருப்பார்.

ஆனால் நான் அதைச்செய்யவில்லை. இன்று அதற்காக வெட்கமும் தன்னிரக்கமும் கொள்கிறேன். நான் ஒன்றும் காந்தியோ காந்தியவாதியோ அல்ல, காந்தியின் வழியை தேர்ந்தெடுப்பதற்கான ஆழமான ஆன்ம கம்பீரம் இல்லாத, உணர்ச்சிவசப்பட்ட, எளிய எழுத்தாளன்; கற்பனாவாதி மட்டுமே நான் என அத்தருணத்திலேயே உணர்ந்தேன்.

அதைச்செய்ய என்னை தடுத்தது எது? ஒன்று விடுதலை இயக்கம் என்ற வகையில் புலிகள் மீது இருந்த பற்றுதான். வன்முறையின் வழி குறித்த ஆழமான அவநம்பிக்கை எனக்கு இருந்தாலும் அவர்களின் ஆரம்பகால இலட்சியவாதம் அப்பழுக்கற்றது என்றே நம்புகிறேன். பின்னர் அவர்கள் அடைந்த சீர்கேடுகள் எல்லாமே எந்த ஒரு வன்முறை அமைப்பும் வன்முறையை நடைமுறைப்படுத்தும்போது தவிர்க்கமுடியாமல் அடைவதே. அவ்வகையில் பார்த்தால் வன்முறையின் உச்சத்திலும் குறைந்தபட்ச அடிப்படை அறநெறியுடன் இருந்த ஒரே அமைப்பு புலிகளே.

இன்னொன்று, பிரபாகரன். தனிமனித ஆராதனையை நான் இன்று செய்வதில்லை. வன்முறையாளர்கள் நாயகர்கள் அல்ல என்றே எண்ணுகிறேன். ஆனால் என் இளமையில் நான் அவரை ஆராதித்திருக்கிறேன். அவர் என் இளமைநினைவுகளின் ஒரு பகுதி. அது என் சொந்த இளமை. ஆகவே நான் அதை வெட்டி உதற முடியவில்லை. அவர் தப்ப வாய்ப்பிருந்தால் தப்பவேண்டும் என்று நான் விரும்பினேன். ஏன், பிரார்த்தனைகூட செய்தேன்.

இந்த மனநிலை காரணமாக நான் புலிகள் மக்களைக் கொல்கிறார்கள் என வந்த ஆதாரபூர்வமான தகவல்களை நம்ப மறுத்தேன். மாற்றுத்தரப்புகளை உருவாக்கிக் கொண்டேன். அந்தத் தகவல்களை நடுநிலையாளர் என நான்

நம்பும் முக்கியமான நான்கு இதழாளர்களுக்கு அனுப்பினேன். அவர்கள் நால்வருமே திட்டவட்டமாக, மேலதிக ஆதாரங்களுடன், அதை உறுதிசெய்தார்கள், அவர்களில் மூவர் எப்போதும் புலிகளை ஆதரித்தவர்கள். இருந்தாலும் நான் அந்த தகவல்களை நம்புவதை ஒத்திப்போட்டேன்.

ஆகவே நான் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை. கருத்து தெரிவிக்காதது குறித்து நான் வசைபாடப்பட்டேன். அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. இப்படியெல்லாம் கூச்சலிடும் கும்பலை என்றைக்குமே நான் ஒரு பொருட்டாக எண்ணியவன் அல்ல. ஆனால் இன்று என் ஈழ நண்பர்கள், புலி அமைப்பில் இருந்தவர்கள்கூட, எளிய மக்களை புலிகள் கொல்லும்போது நீங்கள்கூட ஒன்றுமே சொல்லவில்லையே என்று எழுதுகிறார்கள். ஒவ்வொரு நாளும் கடிதங்கள் வந்துகொண்டே இருக்கின்றன.

‘துப்பாக்கிமுனையில் கொண்டுசென்று அமரச்செய்யப்பட்டேன், எட்டுநாள் பட்டினி கிடந்தேன், தப்பி ஓடும்போது புலிகள் என் இரு பிள்ளைகளையும் சுட்டார்கள்’ என்று ஒருகடிதம். ‘விஷ்ணுபுரம்’ வழியாக அறிமுகமான நெருக்கமான வாசகர் எழுதியது. ‘அச்சம் காரணமாகத்தானே சும்மா இருந்தீர்கள், அல்லது புகழை இழக்க அஞ்சினீர்கள்’ என்கிறார் நண்பர். அவர்களின் கேள்விகள் முன் சுருங்கிப்போகிறேன். ஆனால் ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன், கண்டிப்பாக அச்சம் இல்லை. கண்டிப்பாக புகழாசையும் இல்லை. ஒன்றும் சொல்லாமல் இருந்ததற்காகவே ஏகப்பட்ட வசைகளைக் கேட்டுவிட்டேன். இழப்பதற்கு எனக்கு பெரும்புகழ் ஒன்றும் இல்லை.

அன்று ஆவேசத் தமிழ்வெறிக்கூச்சல் எழுப்பியவர்கள் எவரும் இக்கேள்விகளை எதிர்கொள்ள மாட்டார்கள். அவர்களிடம் வாசகர்கள் கேட்கவும் போவதில்லை. நான் மட்டும் இக்கேள்விகளை மேலும் மேலும் எதிர்கொள்ள வேண்டும். வரும்காலங்களில் இந்நிகழ்ச்சி குறித்து மேலும் மேலும் அனுபவப்பதிவுகள் வெளிவந்து நம்மை சங்கடத்தில் ஆழ்த்தும் – வரலாற்றை நாம் எளிதாக மறந்துவிடுவோம் என்பதனால் பெரும்பாலானவர்கள் அவற்றைக் கவனிக்க மாட்டோம், அவ்வளவுதான்.

நான் சொல்லவிருப்பது ஒன்றே. இது மனசாட்சியின் பதிலாக இல்லாமல் இருக்கலாம், தர்க்கபூர்வமான பதில் மட்டுமாக இருக்கலாம், ஆனாலும் இதுவே விளக்கம். எந்த ஒரு வன்முறை அமைப்பும் அதன் அழிவின் விளிம்பில் நிதானத்தையும் மையக்கட்டுப்பாட்டையும் இழக்கும். உலக வரலாற்றில் இது மீண்டும் மீண்டும் நடந்திருக்கிறது. கடைசிப்போரில் போர் வெற்றி, அல்லது தாக்குப்பிடித்தல் மட்டுமே முக்கியமாக ஆகிறது. அப்போது மரங்கள் கட்டடங்கள் போலத்தான் எளிய மக்களும். எப்படியாவது அந்தக் கடைசித்தருணத்தை தாண்டிவிடும் முயற்சி அது.

ஆகவே புலிகளின் கடைசிக்கால அத்துமீறல்களை அவர்களின் கொள்கையுடனும் தலைமையுடனும் இணைக்க வேண்டாமென்றே நினைக்கிறேன். அது வன்முறையின் விலை. ஏதேனும் ஒரு கட்டத்தில் வன்முறையை நம்பியதற்கு, எதிர்தரப்பின் எளிய மக்கள் கொல்லப்பட்டபோது மகிழ்ச்சியடைந்ததற்கு, மிகையுணர்ச்சிப் பிரசாரங்களை நம்பியதற்கு, அநீதிகளை இன,மொழி உணர்வின் பேரால் ஏற்றுக்கொண்டதற்கு நாம் அளிக்கும் கப்பம். குரூரமான பாடம்தான். வன்முறையை நம்பிய எந்த சமூகமும் இந்த விலையைக் கொடுத்திருக்கிறது. சோவியத் சமூகம், ஜெர்மனிய சமூகம், சீன சமூகம்...

ஏப்ரல் 26 அன்று ஆஸ்திரேலியாவில் 'உதயம்' இதழும், விக்டோரியா பல்தேசியக் கலாசார ஆணையமும் (VMC) மெல்பேர்ன் தமிழ்ச்சங்கமும் இணைந்து எனக்கு ஒரு வரவேற்புக்கூட்டத்தை ஏற்பாடு செய்தன. புலிஆதரவுக்கூட்டங்கள் நடந்துகொண்டிருந்தமையால் மிகக்குறைவானவர்களே வந்திருந்தார்கள். நான் குத்துவிளக்கு ஏற்றி கூட்டத்தை முறைப்படி தொடங்கி வைத்தேன்.

எழுத்தாளர் முருகபூபதி என்னை அறிமுகம்செய்து பேசினார். மு.தளையசிங்கத்தின் மாற்றுமார்க்ஸியக் கோட்பாடான மெய்முதல்வாதம் குறித்து நான் எழுதிய நீண்ட கட்டுரையை முருகபூபதி நினைவுகூர்ந்தார். ஈழத்தில் நாம் அன்றாட அரசியலையே அதிகமாக இலக்கியத்தில் பேசியமையால் தளையசிங்கம் போன்றவர்களை கவனிக்க மறந்துவிட்டோம் என்றார். என்னுடைய இலக்கிய இயக்கத்தில் உள்ள கறாரான

அழகியல்தன்மையைச் சுட்டிக்காட்டினார். ‘உதயம்’ இதழாசிரியரான டாக்டர் நோயல் நடேசன் என்னுடைய ‘காடு’ நாவலைப்பற்றி விரிவாகப் பேசினார். காட்டை நுண்ணிய தகவல்கள் வழியாக ஒரு காட்சி சித்தரிப்பாக, உண்மை அனுபவம் போல அந்நாவல் அளிக்கிறது என்றார்.

நான் ‘சுவையறிதல்’ என்ற தலைப்பில் பேசினேன். உரையை முழுக்கவே எழுதிவிட்டு அதை ஒருமுறை மனப்பாடமும் செய்துவிட்டு ‘ஸ்பாண்டேனியஸ்’ ஆக பேசுவது என் வழக்கம். ஆகவே உரை செறிவாகவும் நன்றாகவும் வந்திருந்தது. அருண்மொழி புத்தகத்தை எடிட் செய்வதைப்பற்றிப் பேசினார். இருவகை செம்மையாக்கம் உள்ளது. ஒரு சராசரி பொதுவடிவத்தை முன்வைத்து படைப்புகளை செம்மைசெய்வது. அதை மேலைநாடுகளில் வணிக எழுத்துக்களுக்குச் செய்கிறார்கள். இன்னொன்று ஓர் எழுத்தாளனின் நடை, இயல்பு,நோக்கம் எல்லாவற்றையும் நுட்பமாக அறிந்து அவரது படைப்புகளை மட்டுமே செம்மைசெய்வது. தான் செய்வது இரண்டாவதையே என்றாள்.

அதன் பின்னர் கேள்வி பதில்கள். வழக்கம்போல புலி எதிர்ப்பு, ஆதரவு என்ற இரு தரப்புக் கருத்துகளும் கொஞ்சம் மறைமுகமாகப் பேசப்பட்டன. நான் ஒரு கேள்விக்குப் பதிலாக ஒரு கதை சொன்னேன். திருநெல்வேலி அப்பாவி ஆசாமி ஒருவர் பணகுடிக்குப்போனார். முழு நிலவிலே பொட்டல் பாதையில் நடந்து போனபோது இரு சண்டியர்கள் எதிரே வந்தார்கள். போதையில் இருவருக்கும் சண்டை. ‘டேய் மேலே பாருடா, நிலா இருக்கு. அப்டீன்னா இன்னைக்கு அம்மாசை’ என்றார் ஒருவர். ‘டேய் கேனப்பயலே நிலா இருந்தா அன்னைக்கு பௌர்ணமிடா... சூரியன் இருந்தாத்தான் அம்மாசை’ என்றார் அடுத்தவர். பெரிய வாக்குவாதம், பூசல்.

‘சரி, இந்தா அய்யா வாறாரே, அவர்ட்டேயே கேப்போமே’ என்றார் ஒருவர். ‘சாமி படிச்சவரு மாதிரி இருக்கீங்க நல்லா பாத்து சொல்லுங்க. இன்னைக்கு அம்மாசையா பௌர்ணமியா’. இருவர் கையிலும் திருப்பாச்சி அருவாள். அப்பாவி கொஞ்சம் தயங்கி பவ்யமாகச் சொன்னார் ‘தெரியலீங்க... நான் வெளியூரு.’ நானும் வெளியூர், அரசியல் பேசக்கூடாது என்று சொல்லி முடித்துக்கொண்டேன்.

இருபத்தேழாம் தேதி காலைமுதலே பெட்டிகளை கட்ட ஆரம்பித்துவிட்டோம். எவ்வளவு அடுக்கினாலும் கடைசியில் போட்டு திணித்து இறுக்கித்தான் வைக்கவேண்டியிருக்கிறது, ஆகவே ஆரம்பத்திலேயே திணிப்போமே என்றேன். அருண்மொழி என்னை முறைத்து ‘போய் உன் வேலையைப்பார்’ என்றாள். கடைசியில் காலால் மிதித்தே இறுக்கிக்கொண்டிருந்தாள். எல்லாம் அழுக்குத்துணி.

இருபத்தேழாம்தேதி மாலை தாய் ஏர்வேஸ் விமானத்தில் பாங்காக் கிளம்பினோம். விமானத்தில் பாதி காலியாக இருந்தது. தாய்லாந்தில் புதிய அதிபருக்கு எதிராக பழைய அதிபர் கிளப்பிய அரசியல் கலவரம் காரணமாக சுற்றுலாப்பயணிகள் குறைந்துவிட்டனர். தாய்லாந்திற்கு மாதம் தோறும் போகும் ஆஸ்திரேலியர் உண்டு. குடி சூது மாது ... இப்போது அலுவல் நிமித்தம் போகும் சீன வம்சத்தவர் மட்டுமே கண்ணில்பட்டனர்.

தாய்லாந்து விமானநிலையத்தில் காலை ஆறுமணிக்கு வந்து சேர்ந்தோம். இரவு ஒன்பது மணிக்குத்தான் எங்களுக்கு சென்னை விமானம். மொத்த பகலும் விமானநிலையத்தில்தான். நான் ஜான் கிரிஷாம் எழுதிய ‘ஜட்ஜ்மெண்ட்’ என்ற நாவலை வாசித்தேன். நான் அவரது எந்த ஒரு நாவலையும் வாசித்ததில்லை. எல்லா புகழ்பெற்ற வணிக எழுத்தாளர்களிலும் ஒரு நாவலை வாசித்துப் பார்த்துவிடுவது என்ற கொள்கை எனக்கு உண்டு. வழக்கமான அமெரிக்க திரில்லர் நாவல். அமெரிக்கச் சட்டச்சிக்கல்களைக் கொஞ்சம் கலந்திருக்கிறார் என்று சொல்லலாம். அருண்மொழி தூங்கினாள்.

விமானநிலையத்தில் ஒருவர் அறிமுகமானார். சுப்ரமணியம் சிதம்பரத்தைச் சேர்ந்தவர். இந்தோனேஷியாவில் நிலவியலாளராக இருக்கிறார். அங்கே நிறைய நிலத்தடி எண்ணெய் இருப்பதாகச் சொன்னார். அதை அகழ்வதற்கான நிறுவனங்களில் ஏராளமான தமிழர்கள் வேலைபார்க்கிறார்களாம். அரிசி கிடைக்கும், நல்ல ருசியான சிவப்பு அரிசி. மீன் கொள்ளை மலிவு. ஊரில் இருந்து மளிகை கொண்டுபோய் சமைப்பார்கள். பிள்ளைகளை எல்லாம் ஊரில் விட்டு படிக்க வைக்கிறார், அங்கே நல்ல கல்வி இல்லை.

எப்போதும் பூகம்பத்திற்கான வாய்ப்பு உள்ள மண். ‘முதல் அதிர்ச்சி கிடைச்சிட்டாபோரும்சார் எப்பவுமே நம்ம கால் பூகம்பத்துக்கு தயாரா

இருக்கும்... பூகம்பம் வர்ர அனுபவம் இருக்கே, அதை சொன்னா தெரியாது. என்ன நடக்குதுன்னே தெரியாது. மனசு படபடன்னு அடிக்கும். காலிலே விறு விறுன்னு இருக்கும். தலை சுத்தும். கேட்டா பூகம்பம்னு சொல்லுவாங்க. சுவரிலே மாட்டியிருக்கிற படங்கள்லாம் ஆடும்.' அவர் பூகம்பத்தை ரசிக்கிறாரா என்ற சந்தேகம் எனக்கு ஏற்பட்டது.

பாங்காங் சுவர்ணபூமி விமானநிலையத்தில் இருந்த பெரிய தாய் பாணி ஓவியங்களை பார்த்தபடி சுற்றி வந்தோம். ஒரு வெண்கலத்தொட்டியில் வெண்தாமரைகள் மலர்ந்திருக்க அருகே ஓர் சீனமுக இளைஞன் அமர்ந்து மூங்கில் வாத்தியம் ஒன்றை அருமையாக இசைத்துக்கொண்டிருந்தான். பலவகையான மனிதர்கள். சீனமுகங்களுக்குள் இப்போது பலவகையான இனங்களை இடங்களை காணப்பழகிவிட்டிருந்தேன்.

ஒருவழியாக இரவில் விமானம் வந்தது. ஏறி அமரும்போதே தூங்கும் நிலையில்தான் இருந்தேன். ஆஸ்திரேலியாவை விட்டு வருவது, ஊர் போய்ச் சேர்ந்து பிள்ளைகளைப் பார்ப்பது போன்ற பெரிய விஷயங்கள் எல்லாம் விலகி விமானம் வந்துவிட்டது என்ற சின்ன மகிழ்ச்சியே என்னை அக்கணங்களில் நிறுத்தி வைத்திருந்தது. இருக்கையில் அமர்ந்ததுமே அருண்மொழியிடம் குட்நைட் சொன்னேன்.

சென்னைவரை அருண்மொழி விழித்துக்கொண்டிருந்தாள். சென்னை கீழே தெரிந்ததும் என்னை உசுப்பினாள். 'பார் பார்' என்றாள். நான் கீழே பார்த்தேன். ஒளிக்குவியல்களாக சென்னை என்னை நோக்கி வந்தது.

22. ஊர் திரும்புதல்

சென்ற ஏப்ரல் எட்டாம் தேதி ஆஸ்திரேலியா வந்தேன். மெல்பேர்ன் நகரில் நான்குநாட்கள். பின்னர் கான்பரா நகரில் ஐந்து நாட்கள். பின்னர் சிட்னியில் நான்குநாட்கள். மீண்டும் மெல்பேர்ன். இன்று (27—4—2009) நள்ளிரவு பதினொரு மணிக்கு தாய் ஏர்வேய்சில் ஊர்திரும்புகிறேன். பாங்காங்கில் 28—4—2009 அன்று காலை ஆறுமணிக்கு இருப்போம். இரவு ஒன்பது மணிக்கு மீண்டும் விமானம். 28—4—2009 அன்று நள்ளிரவு சென்னையைச் சென்றடைவோம்.

ஆஸ்திரேலியா ஓர் உற்சாகமான அனுபவமாக இருந்தது. நிலம் என்றுமே பேரழகு மிக்கது. பாலையில் புல்வெளியில் வயல்வெளியில் எங்கும்... இந்த விரிந்த புல்வெளிகள் இனி என்றும் கனவின் ஒரு பகுதிதான்... இங்குள்ள இனிய நண்பர்கள், வாசகர்கள். அனைவருக்கும் எப்படி நன்றிசொல்வேன். எத்தனை மனம் திறந்த உபசரிப்புகள். பேரன்புகள். அனைவருக்கும் என் வணக்கம்.

2001ல் நான் கனடா சென்றிருக்கிறேன். அதுதான் என் முதல் வெளிநாட்டு அனுபவம். முதல் உலகத்தைப் பார்த்தல். அது கணந்தோறும் வியப்பு நிறைந்த அனுபவமாக இருந்தது. இப்போது பூமியின் இந்த முனையிலும் அந்த அற்புதமான மனமலர்ச்சி நிறைந்த நாட்கள் மீண்டு வந்தன. முக்கியமான காரணம் இம்முறை என் செல்லமனைவி கூடவே இருந்தாள். மண்ணில் அவளுக்கு இணையான துணை எனக்கு வேறில்லை.

இப்பயணத்தை பயணத்தின்போதே எழுத முடியவில்லை – மடிக்கணினி இல்லாமல் இருந்தது. சென்னை சென்றதும்தான் ஒன்று வாங்குவதாக இருக்கிறேன். ஆஸ்திரேலிய அனுபவங்களை ஊர் திரும்பிய பின்பு எழுதுவேன்.

இந்தப்பயணத்தில் நான் உணர்ந்த உச்ச அனுபவம் என்பது ஒன்றுதான். எழுபதுகள்வரை இன ஒதுக்குமுறை இருந்த நாடு இது. இங்கிருந்த பழங்குடிகளை கொன்றே ஒழித்த மக்களின் வாரிசுகள் வாழும் நாடு. இன்று அந்த வரலாற்றுப்பின்புலத்தில் இருந்து தங்களை விடுவித்துக்கொண்டுவிட்டிருக்கிறார்கள். உலகம் முழுக்க இருந்து குடியேற்றங்களை வரவேற்கிறது இந்நாடு. இங்கே வெள்ளையர் சிறுபான்மையினராக ஆகிக் கொண்டிருக்கிறார்கள். பெருமையுடன் அவர்கள் அதை தங்கள் தேசிய அடையாளமாக காண்கிறார்கள்.

நெல்ஸன் மண்டேலாவின் போராட்டத்துக்கு உறுதுணையாக இருந்த நாடு இது. அவரது முதல் பேருரை நிகழ்ந்த அன்னிய மண் இது. தங்கள் இறந்தகாலத்து போர்மனநிலைக்காக திறந்த மனத்துடன் மன்னிப்பு கோரிய நாடு இது. இங்கே வாழும் பலரிடம் கேட்டேன், அவர்கள் எப்படி உணர்கிறார்கள் என. அரசு நிர்வாகத்தில், சமூக அமைப்பில், அன்றாடப்புழக்கத்தில் ஒருபோதும் நிற – இன வேறுபாட்டை தாங்கள் காணவில்லை என அவர்கள் சொல்லும்போது மனம் நிறைகிறது.

இந்நாட்டின் ஒவ்வொரு பொதுக்கூடுகையும் பல இன மக்களால் நிறைந்திருக்கிறது. பல நிறக்குழந்தைகள் கூவி ஆர்ப்பரித்து பூங்காக்களில் விளையாடுகின்றன. பூமியில் உள்ள அனைத்து நாடுகளும் இந்தக் காட்சியால் நிறையும்போதுமட்டுமே மானுடம் முழுமை பெற்றுள்ளது என்று பொருள்.

இந்த மகத்தான இணைவு பத்தாயிரம் வருடம் முன்னரே தோன்றிவிட்ட ஒரு நிலத்தில் பிறந்தவன் நான். அண்ணன் கறுப்பனாகவும் தம்பி வெளுப்பனாகவும் இருக்கும் நிலையை இயல்பாகக் கொண்ட ஒரு நாட்டில். இன்னும் ஐந்து தலைமுறை கழிந்தால் ஆஸ்திரேலியா எப்படி இருக்குமோ அப்படி இருக்கும் ஒரு நாட்டில். ‘வசுதைவ குடும்பஹம்’ என்றும் ‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்றும் கண்டடைந்த ஞானிகளின் நாட்டில்.

நம்மில் பேதம் இருந்திருக்கிறது. இழிவாக்கமும் கீழ்மையாக்கமும் இருந்திருக்கிறது. பிரம்மாண்டமான ஒரு நிலப்பகுதியில் மக்கள் ஒருவரை ஒருவர் வென்று வாழ முற்பட்ட காலத்தின் அழிவுகளும் இருந்திருக்கின்றன. ஆனால் அவற்றுக்கு அப்பால் திறமறிந்த அறவோர் குரல் என்றும்

ஒலித்திருக்கிறது. பல இன, மொழி மக்கள் கோடானுகோடிப்பேர் வாழும் இந்த மண்ணின் வாழ்க்கையை மெல்ல மெல்ல அவர்கள் மேம்படுத்தியிருக்கிறார்கள். கபிலன் முதல் காந்தி வரை அந்த அறவோரின் வரிசை நீண்டு நம்மைத் தொட்டிருக்கிறது.

முந்நூறு வருடம் முன்பு என் மண்ணுக்கு வந்த வெள்ளையர் அவர்கள் மனதில் நிறைந்திருந்த இனவாதத்தின் விஷத்தை நம் மடியில் துப்பிவிட்டுச் சென்றார்கள். எங்களில் ஒருசாரார் அமுதமென அதை உண்டு உடலாக்கி வளர்க்கிறோம். அதை நவீனச் சிந்தனை என்றும் கோட்பாடென்றும் சுமந்தலைகிறோம். இனமென்றும் இனக்குழுவென்றும் மொழிக்குழுவென்றும் மதமென்றும் பிரிவினைபேசி நம்மை நாமே அழிக்க முன்னிற்கிறோம்.

மூதாதையர் தந்தவற்றை எல்லாம் இழந்து நிற்கும் வறியவர்களாகிய நாம் இன்று இம்மக்களிடமிருந்து நாம் அந்த அழியாத ஞானத்தை மீண்டும் கற்கவேண்டியிருக்கிறது. பூங்காவில் காலைநடை செல்லும்போது புத்தம்புதிதான பட்டுரோஜா போன்ற முகத்துடன் எதிரே வரும் வெள்ளைய நங்கை மனம் திறந்த முறுவலுடன் காலை வாழ்த்துச் சொல்லிப்போகிறாள். அவள் தள்ளிச்செல்லும் வண்டியில் இடுங்கிய கண்களுடன் அவளுடைய சீன இனக்குழந்தை வாய்க்குள் கையை ஒட்டுமொத்தமாக செருகி உட்கார்ந்திருக்கிறது. அவள் வாயில் நான்கேட்ட சொற்களுக்கு ‘யாதும் ஊரே! யாவரும் கேளிர்!’ என்றுதான் பொருளா?

அவள் சொல்லும் அந்தக் காலை வாழ்த்து ஒரு ஆசி. என் தேசத்துக்கும் ஒரு நல்ல காலை விடிவதாக!

23. கடலின் அலை

அ னைவருக்கும் என் வணக்கம்.

நண்பர்களே, டி.எஸ்.எலியட் ‘தத்துவமும் இலக்கியமும்’ என்று ஒரு கட்டுரை எழுதியிருக்கிறார். அந்தக் கட்டுரையில் ஒரு வரி வரும். இலக்கியம் தத்துவத்தை முன்வைப்பதில்லை, தத்துவசிந்தனையை பிறப்பிக்கும் மனநிலையை உருவாக்குகிறது.’

அந்த வரியை நான் என் நோக்கில் தொடர்ந்து வளர்த்தெடுத்துக் கொண்டிருக்கிறேன். ‘இலக்கியம் அரசியலை முன்வைப்பதில்லை, அரசியலை உருவாக்கும் மனநிலையையே அது அளிக்கிறது’, ‘இலக்கியம் சமூகசிந்தனையை முன்வைப்பதில்லை, சமூகத்தைப்பற்றி சிந்தனைசெய்யும் மனநிலையை உருவாக்குகிறது’ இவ்வாறு தான்...

அப்படியானால் இலக்கியம் அளிப்பது என்ன? ஒரு மன எழுச்சியை. அந்த மனஎழுச்சி ஒருவரில் தத்துவமாக ஒருவரில் அரசியலாக இன்னொருவரில் சமூக சிந்தனையாக விளையலாம். அந்த மன எழுச்சி என்பது ஓர் உண்மையான வாழ்வனுபவத்தை நாம் அடையும்போது அது நமக்களிக்கும் மன எழுச்சிக்கு நிகரானது. அதாவது இலக்கியமென்பது ஓர் நிகரான வாழ்வனுபவம்.

இந்த நிகரான வாழ்வனுபவத்தை இலக்கியம் எப்படி உருவாக்குகிறது? நுண்தகவல்கள் அதில் மிக முக்கியமான பங்கை ஆற்றுகின்றன. நாம் ஒவ்வொருவரும் கண்டு ஆனால் நம் மனதில் பதியப்பெறாத ஏராளமான தகவல்களால் ஆனது ஒரு நல்ல இலக்கியத்தின் உடல். அதன் செல்லே அதுதான். அந்தத்தகவல்களை வாசிக்கும்போது நம் கண்முன் ஒரு நிலமும்

அங்குவாழும் மக்களும் அவர்களின் வாழ்வின் அலைகளும் உண்மையாகவே திறந்துகொள்கின்றன.

நல்ல இலக்கியம் வாழ்க்கையை காட்சியனுபவமாக நமக்கு முன் நிறுத்துகிறது. நான் ருஷ்யாவை பார்த்ததில்லை. ஆனால் செண்ட் பீட்டர்ஸ்பர்க்கின் தெருக்களில் உறைபனியில் நடந்திருக்கிறேன். நான் போரைப்பார்த்ததில்லை ஆனால் ஒரு மாபெரும் படை இன்னொன்றை எதிர்கொள்ளும் சித்திரம் என் கண்முன் நிற்கிறது. தஸ்தயேவ்ஸ்கி தல்ஸ்தோய் கதைகளின் வழியாக!

ஒரு வாழ்வனுபவத்தின்போது நம் புலன்கள் அறியும் அனைத்து அனுபவங்களையும் இலக்கிய அனுபவம் நம் கற்பனையை தூண்டி நம்மை அடையச்செய்கிறது. நாம் அந்த வாழ்க்கைக்குள் நுழைந்து அங்கே வாழ ஆரம்பிக்கிறோம். அதுவே இலக்கியத்தின் முதல் தளம்.

அடுத்தபடியாக இலக்கியம் மனித மனத்துக்குள் ஆழமாகச் செல்கிறது. மனித எண்ணங்களும் உணர்ச்சிகளும் செல்லும் திசைவேகங்களை அது கூர்ந்து அவதானித்து நுட்பமாக எழுதிக்காட்டுகிறது. மேலான படைப்பாளி எந்த மனதுக்குள்ளும் செல்லக்கூடியவனாக இருப்பான். அது மிக எளிது. எல்லா கதாபாத்திரங்களிலும் தன்னை அவன் கூடுமாற்றிக்கொள்கிறான். ஆழத்தில் எல்லா மனமும் ஒன்றுதான். ஆகவே அவன் தன்னைப்பற்றி எழுதினால் உலகையே எழுதியவனாகிறான்.

மூன்றாவதாக படைப்பாளி வாழ்க்கையின் தருணங்களை எழுதுகிறான். தொடர்ந்து தன் சூழலில் உள்ள வாழ்க்கையைக் கவனிப்பதன் மூலமாகவும் அதில் உணர்ச்சிகரமாக ஈடுபடுவதன் மூலமாகவும் அவன் மானுடத்தருணங்களை கண்டுகொண்டே இருக்கிறான். அவற்றை தன் படைப்பில் மீண்டும் உருவாக்குகிறான். மேம்படுத்துகிறான். புதிதாக கற்பனை செய்கிறான்.

அவ்வாறு நிகரான வாழ்வனுபவமாக அமைந்து நம்மில் சிந்தனைகளை உருவாக்குவதே இலக்கியம். அதன்றி இலக்கியவாதி முன்வைக்கும் சிந்தனைகளுக்கு அந்த அளவில் எந்த மதிப்பும் இல்லை. அதன் அடிப்படையில் ஒருபோதும் இலக்கியம் மதிப்பிடப்படுவதும் இல்லை. சரியான

சிந்தனையை முன்வைப்பதனால் ஒரு படைப்பு சிறப்பானதாக ஆவதில்லை. தவறான சிந்தனையை முன்வைத்த படைப்பு மோசமான ஆக்கமாக ஆவதும் இல்லை.

நான் சென்ற தினங்களில் கான்பராவில் ஆழியாள் எனும்பேரில் கவிதைகள் எழுதும் மதுபாஷிணி ரகுபதி வீட்டில் தங்கியிருந்தேன். ரகுபதி அவர்களின் அழகிய சிறிய மகள் துகிதை. துகி வைத்த விழி வாங்காமல் ஒரு கார்ட்டூன் நிகழ்ச்சியைப் பார்ப்பதைக் கண்டேன். அந்தக் கார்ட்டூனில் டோரா என்று ஒரு சிறுமி. துகி டோராவுடன் தன்னை அடையாளப்படுத்திக்கொண்டிருக்கிறாள் – ஏனென்றால் டோராவுக்கும் கறுப்பு முடி, பெரிய கண்கள்.

டோரா செய்வதையெல்லாம் மலர்ந்த முகத்துடன் கனவில் அமர்ந்திருக்கும் துகி செய்கிறாள் என்பதைக் காணமுடிந்தது. டோரா வழியாக துகி அடையும் அனுபவம் என்ன? அது ஒரு மாபெரும் விடுதலைக் கொண்டாட்டம். குழந்தைக் கதைகளை தொல்பழங்காலம் முதல் எடுத்துப் பார்த்தால் இதைக் காணலாம்.

தவழ்ந்து எழும் ஒரு குழந்தை கண்டடையும் எல்லைகள் பயங்கரமானவை. அந்த எல்லைகள் குழந்தையை அச்சுறுத்துகின்றன. சோர்வுறச்செய்கின்றன. குழப்புகின்றன. அதனால் ஒரே சமயம் இரு நாற்காலிகளில் அமர முடிவதில்லை. காக்காவும், செடியும், நாற்காலியும், புத்தகப்பையும் அதனிடம் பேசுவதில்லை. அதனால் பறக்க முடிவதில்லை. வண்ணத்துப்பூச்சிகளுடன் சேர்ந்து வானில் துள்ள முடிவதில்லை. ஏன் அழகான ஒரு வால்கூட இல்லை! என்ன கொடுமை!

குழந்தைக்கதைகள் அந்த எல்லையை குழந்தை எளிதில் தாண்டச்செய்கின்றன. மரம் பறவைகள் பாறை எல்லாமே குழந்தையுடன் பேசுகின்றன. டோராவுடன் அவளுடைய புத்தகப்பை பேசுகிறது! துகி வாழும் கற்பனைப்பரப்பில் அவள் மிகப்பெரிய ஓர் உலகை உருவாக்கிக் கொண்டிருக்கிறாள்!

வெற்றிடத்தைக் காற்று நிரப்புகிறது என்பது அறிவியல் விதி. காற்று இல்லாவிட்டால் இந்தக்கட்டடங்கள் சரிந்துவிடக்கூடும். இந்த மரங்கள் வீழ்ந்துவிடக்கூடும். நம் மனதின் இடைவெளிகளை எல்லாம் கற்பனையே நிரப்புகிறது. நாம் வாழாத வாழ்க்கையெல்லாம் நம்முள் நிகழ்கிறது. நாம்

இழந்த மண்ணில் நம்மால் வாழ முடியும். நாம் இழந்த மனிதர்களுடன் வாழமுடியும்.

இலக்கியம் மனிதனுக்கு அளிக்கப்பட்டதைவிட பெரிய வாழ்க்கையை அவனுக்கு அளிக்கிறது நண்பர்களே. இங்கே அமர்ந்திருக்கும் ஆசி. கந்தராஜா அவர்கள் என்னைவிட பலமடங்கு அதிகம் பரப்பளவுள்ள வாழ்க்கையைப் பெற்றவர். பலநாடுகள் கண்டவர். ஓயாது பயணம்செய்பவர். ஆனால் அவரது வாழ்க்கை கூட மிகச்சிறியதே. ஓஷோ சொல்கிறார், எந்த அளவுக்கு பரபரப்பானதாக இருந்தாலும் ஒரு மனிதனின் ஒட்டுமொத்த வாழ்க்கை என்பது ஒரு மணிநேரத்தில் சொல்லி முடித்துவிடக்கூடியதே என்று.

அந்தச் சிறிய வாழ்க்கையை இலக்கியம் மூலம் நாம் பெரிதாக்கிக் கொள்கிறோம். ஒரு வாழ்க்கைக்குள் பல வாழ்க்கை வாழ்கிறோம். அந்த வாழ்க்கைகள் மூலம் நம் அனுபவத்தை, நம் விவேகத்தை, நம் சிந்தனையை பெரிதாக்கிக் கொள்கிறோம். இலக்கியம் அதற்காகவே எழுதப்படுகிறது.

நண்பர்களே, ஈழ இலக்கியத்தைப்பற்றி நான் சில கருத்துகளைச் சொல்லிவருகிறேன். சில மதிப்பீடுகளை முன்வைக்கிறேன். அதன் அளவுகோல் என்ன என்பதையே இங்கே சொன்னேன். எனக்கு வாழ்க்கையை அளியுங்கள் என்பதே என் கோரிக்கை. நான் உங்கள் வாழ்க்கையை உங்கள் சொல் வழியாக அனுபவிக்க வகைசெய்யுங்கள். அதுவே என் நோக்கில் சிறந்த இலக்கியம். சிந்தனைகளை அதில் இருந்து நானே உருவாக்கிக் கொள்வேன்.

அதுவல்லாமல் உங்கள் சிந்தனைகளை, உங்கள் அரசியலை, உங்கள் பூசல்களை முன்வைக்கும் இலக்கியத்தை நான் ஏற்க முடியாது. அது எனக்கு ஒன்றும் அளிப்பதில்லை. அது உங்களுக்குள் என்ன பொருள் அளித்தாலும் எனக்கு அதனால் எந்த லாபமும் இல்லை.

மேலான இலக்கியம் நாம் அறிந்த ஒன்றையே நமக்கு அளிக்கிறது. அது எதையும் நிரூபிப்பது இல்லை. நிரூபணம் இல்லாமலேயே நாம் ஒன்றை நம்புவது இலக்கியத்தில் மட்டுமே. ஒரு விஷயம் இலக்கியத்தில் நுட்பமாகச் சொல்லப்பட்டுவிட்டதென்றால் ஆம் இது உண்மை என நம் மனம் உடனே ஒப்புகிறது.

அதுவே இலக்கியத்தின் வலிமை. இலக்கியம் ஆசிரியனால் எழுதப்பட்டிருக்கலாம். அனுபவம் என்னுடையதல்லவா? நானடைந்த அனுபவம் எனக்களிக்கும் ஒரு கருத்து என் கருத்து அல்லவா? அதற்கு எனக்கு ஏன் நிரூபணம்?

நண்பர்களே, இன்னொரு வரி இங்கே நினைவுக்கு வருகிறது. சம்ஸ்கிருதத்தில் ஒரு பழமொழி உண்டு. 'ரிஷி அல்லாதவன் கவிஞன் அல்ல'. விவேகமும் ஞானமும் கனியாத ஒருவன் கவிஞன் அல்ல. எழுதுவதன் மூலம் வாழ்க்கையின் ஆழத்துக்குச் செல்பவனே கவிஞன். அதன் சாரத்தைக் கண்டு முதிர்ந்தவனே கவிஞன்

நான் அந்தவரியை மேலும் விரிவடையச்செய்துகொள்வேன் 'கவிஞன் அல்லாதவன் ரிஷி அல்ல' ஆம், ஒருவன் விவேகமும் ஞானமும் கொண்டுவிட்டான் என்றால் இயல்பாகவே அவன் கவிஞன் ஆகிவிடுகிறான். மேலான ஞானம் தன்னளவிலேயே மேலான இலக்கியமும் ஆகிறது..

ஏனென்றால் மேலான ஞானம் ஒருபோதும் ஒரு கருத்து மட்டுமாக இருப்பதில்லை. அது ஓர் அனுபவமாக இருக்கிறது. தன்னளவிலேயே அது ஓர் வாழ்க்கைக்கூறாக இருக்கிறது. அந்த ஞானம் நமக்கு 'தெரிவது' இல்லை. நமக்கு 'அனுபவமாகிறது'.

சலீம் அலி இந்தியாவின் மகத்தான பறவையியலாளர். பறவையியலின் ஒரு ரிஷி. 'எந்தப்பறவையும் உன்னைப்பார்க்கவில்லை என்று எண்ணாதே, நீ பார்க்கும் முன்னரே அது உன்னைப் பார்த்திருக்கும்' என்ன அற்புதமான வரி. எத்தனை அர்த்தங்களை திறந்து அளிக்கும் வரி. 'பறவை மண்ணில் பலவீனமானது' எத்தனை உக்கிரமான அனுபவத்தை அளிக்கும் வரி.

எல்லா ஞானங்களும் மொழியில் வந்துசேர்கின்றன. ஆறுகள் கடலில் சேர்வதுபோல. இலக்கியம் மொழியில் அடித்துக்கொண்டிருக்கும் அலை.

நன்றி.

(18—4—2009 சனிக்கிழமை அன்று சிட்னி வுட்ஸ்ஸ்டாக் கம்யூனிட்டி சென்டர் கான்பரன்ஸ் ஹாலில் எஸ்.பொன்னுத்துரை அவர்களின் மகனும் மித்ர பதிப்பகத்தின் உரிமையாளருமான பொன்.அநுர அவர்கள் ஏற்பாடுசெய்த

சந்திப்பில் ஆற்றிய உரை. மலையக எழுத்தாளர் தெளிவத்தை ஜோசப்பும் கலந்துகொண்டு உரையாற்றினார்.)

24. சுவையறிதல்

அனைவருக்கும் வணக்கம்.

பதின்வயதுகளில் புல்வெட்டும் நண்பர்களுடன் காட்டுக்குச் செல்லும் வழக்கம் எனக்கு இருந்தது. கல்லூரிக்குச்செல்லும் பாவனையில் கிளம்பி புத்தகங்களை ஏதேனும் கடைகளில் போட்டுவிட்டுச் செல்வேன். இரவில் திரும்பி வந்துசேர்வேன். படிப்பு உள்ள ஒரு நண்பன் கூடவருவதிலும் அவன் நிறைய கதைகளைச் சொல்வதிலும் நண்பர்களுக்கு மகிழ்ச்சி. காட்டைப்பார்ப்பதில் எனக்கு மகிழ்ச்சி.

ஒருமுறை ஒரு காட்டுயானையைப் பார்த்தேன். நாங்கள் ஒரு மேட்டில் ஏறியபோது கீழே விரிந்த சற்று வறண்ட நிலத்தில் பிரம்மாண்டமான கொம்பன் மேய்ந்துகொண்டு நின்றிருந்தது. உடம்பெல்லாம் செம்மண் படிந்து வரிவரியாக வெடித்திருந்தது. அச்செம்மண்ணின் மீது விழுந்த விதைகள் முளைத்து மெல்லிய பச்சை மயிர்ப்பரப்பு போல தெரிந்தது. மத்தகம் முழுக்க உதிர்ந்த மலர்களும் சருகுகளும். யானை ஒரு செம்மண் குன்றுபோல் தெரிந்தது.

காற்று எதிர்ப்பக்கமிருந்து வீசி யானையைக் கடந்து எங்களை அடைந்தது. ஆகவே யானை எங்களை உணரவில்லை. நாங்கள் அதன் உடலில் இருந்து வந்த யானைப்பிண்டத்தின் மணத்தை உணர்ந்தோம். மூச்சடக்கி யானையைப் பார்த்துக்கொண்டு முழந்தாளிட்டு அமர்ந்திருந்தோம். யானை என்ன தின்கிறது என்று கண்டு நான் பிரமித்துப்போனேன்.

எங்களூரில் தொட்டால்வாடி என்றொரு செடி உண்டு. அதன் இலைகள் நாம் தொட்டதுமே மூடிக்கொள்ளும். அதன் பூக்கள் ஆரஞ்சு நிறத்தில் உருண்டையாக இருக்கும். மிகமிக மெல்லிய இதழ்கள் கொண்ட சிறிய

பூக்கள் அவை. அந்தப்பூக்களை யானை தன் துதிக்கையால் ஒவ்வொன்றாக கொய்துகொண்டிருந்தது.

தேக்குமரத்தை வேருடன் பிழுதெடுக்கும் துதிக்கை! வெற்பு பிளக்கும் பெரும் மத்தகம்! விளையாடும் குழந்தை போல வால் சுழற்றி காது வீசி உடலை உழற்றிக்கொண்டு மெல்லமெல்ல அது பூக்களை கொய்தது. ஒருமணிநேரம் கொய்த பூக்களை அது அழுத்தி உருட்டியபோது ஒரு கோழிமுட்டை அளவுக்குத்தேறியது. அதை தன் தொங்கும் வாய்க்குள் துதிக்கையை விட்டு கடைவாயில் செருகி மென்றது. ருசியில் காது அசைவிழந்தது. வால் சுழி போட்டு நின்றது.

அந்த மாபெரும் வாய்க்கு அந்த பூப்பந்து எந்த மூலைக்குக் காணும்? ஒன்றும் புரியவில்லை. பின்னர் மெல்ல நடந்துசென்று மூங்கில்புதரை அடைந்தது. யானை மூங்கில் உண்ணும் நுட்பத்தை நான் அப்போதுதான் கவனித்தேன். மூங்கில் புதரை ஒட்டுமொத்தமாகத் தின்றாலும் அதன் பசி அடங்கிவிடாது. ஆனால் முதலில் மூங்கிலின் தளிர்குருத்துக்களை மட்டும் அது பிய்த்துச் சேர்த்து தின்றது. மூங்கிலின் குருத்தில் மெல்லிய இனிப்பு இருக்கும் என்பதை தின்றுபார்த்தவர்கள் அறிந்திருப்பீர்கள்.

முழு மூங்கில்கூட்டத்தையும் சுற்றிவந்து தளிர்களைத் தின்று தீர்க்க வெகுநேரமாகியது. அதன்பின்பு மூங்கில் இலைகளின் தளிர்களை அது பிய்த்துத் தின்றது. அதன்பின் இன்னும் சற்று முற்றிய இலைகளை. பிறகு மூங்கில்தடிகளையே பிடுங்கி உடைத்து மென்று தின்றது. மெல்ல அந்த மூங்கில் கூட்டத்தையே தின்றுவிடக்கூடும்!

ஆம், யானைப்பசியிலும் யானை தன் ருசியை இழப்பதில்லை. அதன்முன் மொத்த காடும் தீனியாக விரிந்து கிடக்கும்போதும் அது பூவுக்கும் தளிருக்கும் இலைக்கும் இடையேயான வேறுபாட்டை மறப்பதில்லை. தன்முன் பலநூறு சுவைகளாக மாறி விரிந்துகிடக்கும் இயற்கைக்கு யானை அளிக்கும் கௌரவம் அது.

அந்த கௌரவத்தை இலக்கியத்துக்கு அளிக்கும் செயலையே நான் விமரிசனம் என்று சொல்கிறேன். யானைப்பசி கொண்டவனே நல்ல விமரிசகன். அவனுடைய வாசிப்பு ஒருபோதும் துவண்டுவிடக்கூடாது. அவனுக்கு

புதியவற்றில் சலிப்பே வரக்கூடாது. ஆனால் அவனுக்கு யானையின் ருசியும் இருக்க வேண்டும். என் வகையில் விமரிசனம் என்பது சுவையறிதல்தான்.

சுவை என்று சாதாரணமாகச் சொல்கிறோம். சுவை என்றால் என்ன? நாக்குச்சுவையையே எடுத்துக்கொள்வோம். மதுரையின் இட்லி சுவையானது என்கிறார்கள். வடக்குமாசி வீதியில் இட்லிக்கார அன்னம்மா பாட்டி சாதாரணமாக கால்பரப்பி அமர்ந்து இட்லி அவித்து சுடச்சுட சாம்பாரும் இரண்டுவகை சட்டினியுமாக வாழையிலைக்கீற்றில் வைத்து நீட்டுகிறாள். தேவைப்பட்டால் இட்டிலிப்பொடிமீது நல்லெண்ணெயை ஊற்றிக் குழைத்து அளிக்கிறாள். அந்தச்சுவை மதுரையின் சாரங்களில் ஒன்று அல்லவா?

நண்பர்களே, அந்தச் சுவை எத்தனை நூற்றாண்டுகளாக உருவாகித் திரண்டு வந்தது? அந்த வழியாகச் சென்று நாம் மதுரையின் வரலாற்றையே அள்ளிவிடமுடியாதா என்ன? நம் மரபும் நாம் பிறமரபுகளுடன் கொண்ட நூற்றாண்டுக்கால உரையாடலும் அல்லவா இட்டிலியையும் சட்டினிசாம்பாரையும் உருவாக்கி நமக்களித்திருக்கிறது?

சங்ககாலத்திலேயே தமிழில் புளிக்கவைத்து அப்பம்செய்யும் முறை இருந்தது. பின்னர் பல்லவர் காலத்தில் உளுந்து வந்துசேர்ந்தது. மராட்டியர்கள் சாம்பாரைக் கொண்டுவந்தார்கள்; சௌராஷ்டிரர்கள் வெங்காயத்தை அறிமுகம் செய்தார்கள். இட்லியை சூடாக சாம்பாரில் முக்கி வாயிலிடும்போது நம் நாவில் கரையும் அந்த நுண்ணிய சுவையென்பது நம் பண்பாட்டின் சுவை அல்லவா?

இலக்கியத்தில் நாம் தேடும் சுவை என்பது நம் பண்பாட்டின் நுண்மையே ஒழிய வேறு அல்ல. பண்பாட்டு நுண்மைகளை தொட்டுத்தொட்டு எடுத்துசேர்க்கும் ஒரு கலையே இலக்கியம் என்பது. பூத்த காட்டில் பலகோடி மலர்களில் அத்தாவரங்களின் இனிமை திரண்டு நிற்கிறது. ஆழங்களில் வேர்கள் அறியும் இனிமை. சூரிய ஒளியில் இலைகள் அறியும் இனிமை. அந்த இனிமையை மலர்களின் ஆழங்கள் தேக்கிவைத்திருக்கின்றன.

காட்டின் இனிமையை நாம் மலைத்தேனீக்களின் தேனில் அறிகிறோம். கிளைகளில் தொங்கும் தேனீக்கூடுகள் காட்டின் துடிக்கும் இதயங்கள் அல்லவா? கோடி கோடி மலர்களில் இருந்து தேனீக்கள்

கொண்டுவந்துசேர்க்கும் தேன் அது. ஒவ்வொரு தேனீயிடமும் ஒரு துளித்தேன் இருக்கிறது. ஒரு மொழியின் ஒவ்வொரு சொல்லிலும் இருக்கிறது அப்பண்பாட்டின் ஒரு துளிச்சாரம்.

பண்பாட்டின் மொத்த நுண்சுவையையும் தன் படைப்பில் திரட்டிவைக்க முடிந்தால் அதுவே பேரிலக்கியம். பேரிலக்கியங்களே ஒரு மக்கள்திரளின் பண்பாட்டு ஆவணங்கள். ஒரு பண்பாட்டுக்குப் பதிலாக ஒரு நூலை நிறுத்த முடிந்தால் அதுவே பேரிலக்கியமென்றார் கதே. அந்தப்பண்பாடு அழிந்தாலும் அந்த நூலில் இருந்து அதை மீட்டுருவாக்கம் செய்யமுடியும். முப்பது நூற்றாண்டுக்கால பழமைகொண்ட தமிழ்ப்பண்பாட்டுக்கு கம்பராமாயணம் ஒன்றேபோதும் என நான் சொல்லத் துணிவேன்.

ஒரு பண்பாடு தன் இலக்கியங்கள் மூலம் தன்னை மெல்லமெல்ல திரட்டிக்கொள்கிறது. ஒவ்வொரு கணமும் அந்தச்செயல்பாடு நடந்துகொண்டிருக்கிறது. எந்த ஒரு சமூகத்தில் எல்லா நாளிலும் பல்லாயிரம் கவிதைகள் எழுதப்படுகின்றன. நூற்றுக்கணக்கில் கதைகள் எழுதப்படுகின்றன. சமூகத்தில் மிக அதிகமாக உற்பத்தி செய்யப்படும் விஷயங்களில் ஒன்றாக இருக்கிறது இலக்கியம்!

இதைப்பற்றி நீங்கள் எண்ணிப்பார்த்ததுண்டா? நம் சமூகத்தில் ஒருநாளில் எத்தனை கதைகளும் கவிதைகளும் உருவாக்கப்படுகின்றன என்று? இதழ்களில், நாளிதழ்களில், தொலைக்காட்சிகளில், வானொலிகளில்... இவற்றில் பெரும்பகுதியை உதவாத குப்பை என நாம் நிராகரித்திருப்போம். இவற்றை ‘குறைக்க’ ஏதேனும் செய்யவேண்டும் என்று சொல்பவர்களும் உண்டு. ஆனால் இவை மூச்சுக்காற்று போல ஒரு சமூகத்தின் இயல்பான செயல்பாடு என்றே நான் நினைக்கிறேன்.

இந்த இலக்கியச்செயல்பாடு மூலம்தான் ஒரு சமூகத்தின் புனைவுமொழியும் கவிமொழியும் உயிருடன் நீடிக்கின்றன. ‘வெட்டவெளியில் ஒரு பறவை’ என்று ஒரு கவிஞன் எழுதியதுமே ஏன் நமக்கு சுதந்திரம் என்னும் விழுமியம் ஞாபகம் வருகிறது? அந்தக் கவிமொழி நமக்குள் ஓடிக்கொண்டிருக்கிறது என்பதனால்தான். இலக்கியத்தின் நுண்மொழி என அதைச் சொல்லலாம்.

இலக்கியம் தொடர்புறுத்தப்படுவது அந்த நுண்மொழி வழியாகவே. அந்த மொழி நாம் பயன்படுத்தும் அன்றாட மொழிக்கு நிகராகவே செயல்பாட்டில் இருந்தாகவேண்டியிருக்கிறது. அது பண்பாட்டில் இருந்து பெறப்படும் நுண்மையான சுவைகளில் இருந்து முளைப்பது. ‘அமைதி என்பது வந்தமர்ந்த பறவையினால் அசையும் கிளையோ’ என்று கவிஞன் (தேவதேவன்) எழுதினால் அந்த அனுபவத்தை நம் மனம் அறிகிறது. அவனறிந்த அந்தத்தருணத்தின் அழகை, அந்தப் பண்பாட்டு நுண்மையின் சுவையை நாம் பெறுகிறோம்.

இதற்காகவே ஓயாமல் இலக்கியம் எழுதப்படுகிறது. பல தளங்களில். பல தரங்களில். இதன் மூலம் அச்சமூகம் தான் வாழும் வாழ்க்கையை நுட்பமாக சுவைக்கிறது. அந்தச்சுவையை பதிவுசெய்து பகிர்ந்து கொள்கிறது. அதன்மூலம் மேலும் சிறந்த சுவைக்கான எதிர்பார்ப்பை உருவாக்குகிறது. மெல்லமெல்ல தன் சுவையை அதிகரித்துக்கொள்கிறது. அதாவது தன் பண்பாட்டை ஒவ்வொரு கணமும் நுட்பமும் கூர்மையும் கொண்டதாக ஆக்கிக்கொள்கிறது.

தன்னைத்தானே நுண்மைப்படுத்திக் கொள்ளும் இந்தப்போக்கில்தான் மேலும் மேலும் நல்ல இலக்கியங்கள் உருவாகின்றன. அவை திரண்டு பேரிலக்கியங்கள் பிறக்கின்றன. பேரிலக்கியங்கள் அப்பண்பாட்டின் களஞ்சியங்கள். பின்னர் வரும் அனைத்து படைப்புகளும் அப்பேரிலக்கியங்களாலேயே அளவிடப்படுகின்றன.

பேரிலக்கியங்கள் விளைந்த தமிழில் எல்லா இலக்கியங்களும் அவற்றின் முன்வைத்து மட்டுமே அளவிடப்பட வேண்டும், அதுவே இயல்பானது. ஒரு நாவலின் நாடகத்தனமும் கவித்துவமும் கம்பராமாயணத்துடன் ஒப்பிடப்படுகின்றன. காதலின் பரவசம் கொண்ட கவிதை ஆண்டாளின் சொற்களுக்கு முன் நின்றாகவேண்டியிருக்கிறது. இலக்கிய அளவுகோல்கள் இவ்வாறுதான் உருவாகின்றன.

பெரும்பசியுடன் இலக்கியத்தில் இறங்கும் இலக்கியவிமர்சகன்கூட இலக்கியத்தின் அரிதாகக் கிடைக்கும் அதிநுண்மைகளைத்தான் முதலில் அடையாளம் கண்டுகொள்வான். அவற்றை அறிந்தபின்னரே அவன் அடுத்த

கட்டத்துக்குச்செல்ல வேண்டும். ஈழ இலக்கியம் பற்றிப் பேசும்போது நான் ஏன் மு.தளையசிங்கம்,எஸ்.பொன்னுதுரை,சு.வில்வரத்தினம், அ.முத்துலிங்கம் என்று செல்கிறேன் என்ற வினாவுக்கு இந்தப்பதிலையே என்னால் சொல்லமுடியும்.

இவர்கள் மட்டுமே எழுதுகிறார்கள் என்று நான் சொல்லமாட்டேன். யானை தன் பெரும்பசியையும் மீறி கண்டுகொள்ளும் நுண்சுவைகள் இவர்களின் ஆக்கங்களில் உள்ளன என்பதே அதன் பொருள். ஒரு மொழியில் சிறந்த இலக்கியங்கள் உருவாகவேண்டுமென்றால் அப்பண்பாட்டின் அனைத்துச் சுவைகளும் இலக்கியம் நோக்கி வரவேண்டும். அங்கே அவை செறிவுறவேண்டும், மேம்படவேண்டும். அந்தப் பரிணாமத்தின் உச்சியில் மேலும் மேலும் சிறந்த இலக்கியங்கள் உருவாகும்.

விமரிசகன் அந்த இலக்கியங்களை அப்பண்பாடு உருவாக்கிய பேரிலக்கியங்களை வைத்து மதிப்பிடுவான். அந்த இலக்கியங்களை வைத்து அவற்றுக்கு கீழே உள்ள பிற இலக்கியங்களை மதிப்பிடுவான். மூங்கில் மரமே மூங்கில் தளிரை உருவாக்கியதென்று யானைக்குத்தெரியும். மூங்கில்தளிரில் மூங்கில்தண்டின் சுவை மேலும் செறிவுகொண்டிருக்கிறதென அது புரிந்திருக்கிறது.

சுவை என்னும் விஷயத்தை மேலும் அழுத்திச்சொல்ல விரும்புகிறேன். என் அப்பா மறைந்த பாகுலேயன் பிள்ளை அவரது கிராமத்துக்கு வெளியே போகாமலேயே வாழ்ந்தார். அங்கேயே அவர் தேடிய அனைத்துச்சுவைகளும் இருந்தன. ஒரு வயலில் மட்டும் செம்முட்டன் என்னும் தனிநெல்லை பயிரிடுவார். அதற்கு ரசாயன உரம் போட மாட்டார். கசக்கும் தாவரங்களின் தழையைக் கூட போடமாட்டார். அந்த நெல்லின் கைக்குத்தல் அரிசியை மட்டுமே சாப்பிடுவார். புட்டுக்கு மட்டும் வேறு ஒரு நெல். புட்டு மணியன் என்னும் அந்த நெல் புட்டு அவிப்பதற்கு மட்டுமே உரியது.

முற்றத்தில் நின்ற நான்கு தென்னை மரங்களில் இருந்து பறித்த தேங்காய்களையே கறிக்கு அரைக்கவேண்டும் என்பார். நெய் இல்லாத சூரை மீன் வாங்கினால் மட்டும் நெய் குறைவான ஆற்றங்கரை தென்னையில் தேங்காய் பறித்து அரைக்க வேண்டும். ஊறுகாய்க்கு காய்தருவதற்கு அதற்கான மாமரம் உண்டு. மாம்பழத்துக்கு வேறு மாமரம். மாம்பழப்புளிசேரி

வைப்பதற்கு வேறு மாமரம். இதில் எது மாறினாலும் அவரால் கண்டுகொள்ளமுடியும். குறைசொல்லும் வழக்கம் அவருக்கு இல்லை. தொடாமல் நீக்கி வைத்துவிடுவார்.

இது நாவின் சுவை. இவ்வாறு எத்தனை சுவைகள் உள்ளன வாழ்க்கையில். ஒவ்வொரு இடத்திலும் குடிநீருக்கு தனிச்சுவை. ஒவ்வொரு ஆற்றுநீரிலும் குளிப்பதற்கு தனி சுகம் இருக்கிறது. குமரிமாவட்ட ஆறுகளின் நீர் கனமாக தோலை அழுத்தும், தாமிரவருணிநீர் மயில்பீலிபோல உடலை வருடிச்செல்லும். ஒவ்வொரு பருவகாலத்துக்கும் ஒவ்வொரு அழகு. ஒவ்வொரு மணம். ஒவ்வொரு மண்ணிலும் ஒவ்வொரு வசந்தகாலம். குமரிமாவட்டத்திலேயே மலைப்பகுதியில் மழை கருமையானது. நாகர்கோயிலில் செம்மைகலங்கும் நிறம்கொண்டது. நெல்லைநிலத்தில் அதற்கு விசித்திரமான நீல நிறம்.

அனுபவங்களின் சுவைகள் எல்லையற்றவை. வாழ்க்கை மாறும் தோறும் வண்ணங்கள் மாறுகின்றன. பள்ளிப்பருவ ஆதர்ச அழகி நம் கண்ணெதிரே அரைக்கிழவியாகி நிற்கும் அனுபவத்தின் விசித்திரம்தான் என்ன! அவள் தோற்றத்தின் முதுமைக்குமேல் மிக இளமையான நினைவுகள் கடந்துசெல்வதன் மாயத்தை எப்படிச் சொல்வது. நமது மார்பின்மீது குப்புறக்கிடந்து தூங்கி நம் வயிற்றின்மீது சிறுநீர் சூடாக வடியவிட்ட நம் மகன் கால்தடுக்கும் நம்மை கனத்த கைகளுடன் தோள்பற்றி நிறுத்தும் அனுபவத்தின் எல்லையின்மைதான் எப்படிப்பட்டது!

இன்பங்களை மட்டும் சொல்லவில்லை. துன்பங்களும் சுவைகளே. எத்தனை கொடுந்துன்பத்திலும் நம் உள்ளே ஒரு நாம் அவற்றை ரசித்து கவனித்துக் கொண்டிருக்கிறோம். துன்பத்தை அனுபவித்த நாம் மெல்லமெல்ல மட்கி மறைந்தாலும் துன்பத்தைக் கண்ட நாம் அப்படியே நீடிக்கிறோம். கடந்தகால துன்பங்களெல்லாம் இன்றைய மறைமுக இன்பங்களாவதன் மர்மம் இதுவே.

அத்தனை சுவைகளையும் மொழியினூடாக பதிவுசெய்து சேர்த்து வைக்கும் கலையே இலக்கியம். அப்படிச்சேர்த்த சுவைகளினூடாக மேலும் மேலும் சுவைகளை கற்பனைசெய்வதே இலக்கியத்தின் வழிமுறை. அவ்வாறு கற்பனைசெய்யப்பட்ட அதிநுண்ணிய ஒரு சுவை நோக்கி எப்போதும் பண்பாட்டை இட்டுச்செல்ல முயல்வதே இலக்கியத்தின் இயல்பு.

அத்தகைய இயல்பு கொண்ட படைப்பாளிகள் இவர்கள். இவர்களின் ஆக்கங்களில் நாமறிந்த தமிழ்ப்பண்பாட்டின் சாரம் வெளிப்படுகிறது. நானறியாத ஈழத்து மண்ணின் நூறு நூறு சுவைகள் எழுந்துவருகின்றன. அம்மண்ணில் ஒவ்வொருநாளும் நிகழ்ந்து காலத்தில் மறையும் வாழ்க்கையின் கணங்கள் நுண்ணிய சித்தரிப்புகள் வழியாக நம் பண்பாட்டுச்சாரத்தில் சேகரிக்கப்படுகின்றன. நம் சுவைநரம்புகளாக அவை மாறுகின்றன. அதனாலேயே இவர்கள் முக்கியமான படைப்பாளிகள்.

முன்னொரு காலத்தில் சீனமன்னன் ஒருவன் ஓர் இனக்குழுவை முழுமையாகவே அழித்தொழித்தான். அவர்களின் பண்பாட்டின் ஒரு சிறிய அம்சம்கூட இல்லாமல் செய்தான். அந்த இனக்குழுவின் குலப்பாடகனைக் கொன்றான். அந்தப் பாடகனின் நரம்பிசைக் கருவியையும் உடைத்தான். ஆனால் அக்கருவியில் நரம்புகளை இழுத்துக்கட்டும் ஒரு கிளிஞ்சலை மட்டும் ஒரு வீரன் எடுத்து வைத்துக்கொண்டான். அது வித்தியாசமாக இருந்தது.

பல நூற்றாண்டுகள் கழிந்து ஒரு இசைக்கலைஞன் அந்தக் கிளிஞ்சல் ஒரு நரம்பிசைக்கருவியின் உறுப்பு என்று கண்டுகொண்டான். அதை பயன்படுத்தவேண்டுமானால் அந்த நரம்புகள் எப்படி இருக்க வேண்டும் என அவதானித்தான். அந்த நரம்புகளை கட்ட அந்தக்கருவியின் குடம் எப்படி இருக்க வேண்டும் என்று ஊகித்தான். அவ்வாறாக அவன் அந்தக் கருவியை மீண்டும் உருவாக்கினான்.

அந்தக்கருவியை அவன் இசைத்தபோது அந்தக் குலப்பாடகனின் இசை மீண்டு வந்தது. அந்த இசை எழுந்தபோது இறந்துபோன இனக்குழு மூதாதையரின் ஆவிகள் மக்களின் உடல்களில் தோன்றின. அவை அழுதபடி தங்கள் கதைகளை சொல்ல ஆரம்பித்தன. அந்தக்கதைகள் வழியாக எல்லாமே மீண்டு வந்தது.

ஒரு துளி சம்பலில் யாழ்ப்பாணம் எஞ்சுகிறது நண்பர்களே. நம் நாக்கில் எஞ்சும் ஒரு சுவை ஒரு வாழ்க்கைமுறையின் விதை. நம் வாக்கில் எஞ்சும் ஒரு சொல் ஒரு பண்பாட்டின் விதை.

இலக்கியம் என்பது ஒரு மகத்தான விதைநிலம்.

நன்றி.

(26—4—2009 அன்று ஆஸ்திரேலியா மெல்பேர்ன் நகரில் உதயம் இதழும் விக்டோரியா பல்தேசிய கலாசார (VMC) ஆணையம், மெல்போன் தமிழ்ச்சங்கம் இணைந்து நடத்திய ‘ஈழ இலக்கியம் ஒரு விமரிசனப்பார்வை’ என்னும் நூலின் வெளியீட்டுவிழாவில் ஜெயமோகன் ஆற்றிய உரை.)

25. ஆஸ்திரேலியாவில் இனவெறித் தாக்குதல்

அ ன்புள்ள ஜெயமோகன்,

ஆஸ்திரேலியாவில் இப்போது இந்தியர்கள்மேல் நடக்கும் இனவெறித்தாக்குதல்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஜாஸ் டயஸ்

ஆ ஸ்திரேலியாவின் தாக்குதல்களைப் பற்றி இம்மாத 'சண்டே இண்டியன்' இதழில் (27 ஜூன் 2009) மிண்ட்டு பிரார் என்ற ஆஸ்திரேலிய சீக்கியர் எழுதிய கடிதம் உள்ளது. 'ஆஸ்திரேலியர்கள் மேல்தான் குற்றமா?' என்ற அக்கட்டுரை மிக முக்கியமான ஒன்று. அதில் அவர் அங்கே படிக்கச் சென்றிருக்கும், குடியேறியிருக்கும் இந்தியர்களின் நடத்தை பற்றிச் சொல்லி அது அங்குள்ள மக்களிடம் உருவாக்கியிருக்கும் ஆழமான மனக்கசப்பை பற்றிச் சொல்லியிருக்கிறார். நூற்றுக்கு நூறு நான் அனுபவித்தறிந்த, உடன்படக்கூடிய, ஒரு கோணம் அது.

டெல்லியில் நீங்கள் இருந்திருந்தால் வட இந்தியர்கள், சீக்கியர்கள் குறிப்பாக, நடந்துகொள்ளும் முறையை அறிந்து மனம் கசந்திருப்பீர்கள். குறிப்பாக தென்னிந்தியர்களை அவர்கள் நடத்தும் விதம். அவர்களுக்கு விசித்திரமான ஒரு உயர்வு மனப்பான்மை. பெரும்பாலான உயர்வு மனப்பான்மைகள் ஆழமான தாழ்வு மனப்பான்மையில் இருந்து செயற்கையாக உருவாக்கிக் கொள்ளப்பட்டவை. தென்னிந்தியர்களை மூளைக்காரர்கள் என்று அவர்கள் சரியாகவோ தப்பாகவோ எண்ணிக்கொண்டு வரும் உயர்வு மனப்பான்மையா இது?

நான் மும்பை விமான நிலையத்தில் வரிசையில் நிற்கும்போது ஒரு தடித்த சீக்கியர் தன் மனைவியுடன் வந்து ‘ஜா’ என என்னை உந்திவிட்டு என் முன்னால் நின்றார். நான் அவரிடம் வரிசையில் நிற்கும்படி சொன்னேன். என் முகத்தில் உந்தி போடா என்று இந்தியில் சொன்னார். பின்னால் நின்ற அவரது மனைவியும் என்னை வைதார். எனக்குப்பின்னால் நின்ற ஒரு தமிழர் ‘அவனுக அப்டித்தான் சார். அவனுக கிட்ட சண்டை போட முடியாது’ என்றார்.

இனிமேல் கவனியுங்கள், சீக்கியர்களும் பொதுவாக வட இந்தியர்களும் உங்களை தாண்டிச்சென்றால் தள்ளி உந்திச் செல்வார்கள். வழியோ மன்னிப்போ கேட்க மாட்டார்கள். ஒரு பேச்சுக்குக் கூட மரியாதையான சொற்களைச் சொல்ல மாட்டார்கள். தங்களுக்குள் நம்மைப்பற்றி கெட்டவார்த்தை சொல்லி சிரிப்பார்கள். நம்மிடம் எதையாவது கேட்டார்கள் என்றால் நாம் அவர்களின் வேலைக்காரர்கள் என அவர்கள் நினைப்பது போலிருக்கும். எந்தவகையான பொது இட மரியாதைகளையும் பேண மாட்டார்கள்.

இது சென்னையிலும் தமிழகத்திலும்கூட அவர்களின் வழக்கமாக இருக்கிறது. ரயிலில் ஒரு வட இந்தியர் என்னிடம் அவரது மேல் பெர்த்தை எடுத்துக்கொள்ள முடியுமா என்றார். அவரால் ஏறமுடியாதாம். சரி என்றேன். ஆனால் படுக்கப்போகும்போது பார்த்தால் மேல் பர்த் முழுக்க அவரது பெட்டிகள். அதை கீழே எடுத்துக்கொள்ளும்படி அவரிடம் கேட்டேன். ‘அதெப்படி, கீழே இடமில்லை’ என்றார். ‘சரி அப்படியானால் நீங்கள் அங்கே படுங்கள்… நான் ஏன் உங்கள் பெட்டிகள் நடுவே படுத்துக்கொள்ள வேண்டும்?’ என்றேன். அவர் கடுமையான கோபத்துடன் என்னை வசை பாடினார்.

நான் அவரிடம் கீழே இருக்கும் என் படுக்கையிடத்தை விட்டுத்தரும்படி கேட்டேன். ‘அதை நீ எனக்கு கொடுத்து விட்டாயே’ என்றார். எனக்கு முதலில் திகைப்பு. இப்படிக்கூடவா இருப்பார்கள்! என்ன நியாய உணர்வு அது என. பலமுறை சொன்னேன். கைநீட்டி ‘ஜாவ் ஜாவ்’ என்றார் பிச்சைக்காரனை துரத்துவது போல. அவரை அப்படியே அவரது படுக்கையுடன் இழுத்து கீழே போட்டேன். எழுந்து அடிக்க வந்தார். நானும் அடிக்க தயாரானேன். பக்கத்துப்

படுக்கையில் இருந்த பலர் கத்த ஆரம்பித்தார்கள். அவர்கள் எல்லாம் அவரது ஆட்கள். நானும் கத்தினேன். அது தமிழகம் என்பதனால் அவர்கள் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆனால் இரவு நெடுநேரம் வசைபாடிக்கொண்டே இருந்தார்.

நான் வடஇந்தியாவில் – அதாவது பீகார், பஞ்சாப், உபியில் — பார்த்திருக்கிறேன், பஸ்ஸில் ஒருவர் அவரது பெட்டியை நம் காலடியில் வைப்பார், அவர் காலை நீட்டி வசதியாக உட்கார்வதற்காக. அதில் உள்ள பிழையே அவர்களுக்குப் படாது. சொல்லப்போனால் திட்டுவார். நம்மைத் தாண்டி எச்சிலை பறக்க விடுவார். ரயிலில் நம் இடத்தை எடுத்துக்கொள்வது சர்வ சாதாரணம். தனியாக வட இந்தியாவில் பயணம்செய்வதென்பது மிக அபாயகரமானது. வட இந்தியாவில் வாழ நேர்ந்த தென்னிந்தியர்கள் இவர்களின் அட்டூழியங்களுக்கு அஞ்சித்தான் வாழ்கிறார்கள்.

இந்த மனநிலையைப் பற்றி ஒருமுறை நான் ஒரு மூத்த கேரள இதழாளர்களிடம் உரையாடியபோது அவர் சொன்ன சித்திரம் வேறு. வட இந்தியர்களாக நாம் ரயிலில், கல்வி நிறுவனங்களில் எல்லாம் காணநேரும் மக்கள் உண்மையில் வட இந்திய உயர்சாதி – உயர் குடியினர். பாரம்பரியமாகவே நியதிகளுக்கு அப்பாற்பட்டு வாழும் ஆணவம் அவர்களுக்கு இருக்கிறது. ஒரு சட்டத்தை மதிப்பதென்பது அவர்களுக்கு இழிவான ஒன்றாகவே தெரிகிறது. உண்மையான உயர்குடிகள் என்றால் வரிசையில் நிற்கக் கூடாது, எங்கும் காத்து நிற்கக் கூடாது, எவரிடமும் பணியக்கூடாது, தன்னுடைய வசதிகளுக்காக பிறரை ஏவ வேண்டும், பிறர் தங்களுக்கு பணிசெய்ய பிறந்தவர்கள் – இதுதான் இவர்களின் பொதுவான மனநிலையாக இருக்கிறது.

இந்த ஆணவத்தை தாங்கித் தாங்கி சொல்லிழந்து சுயமிழந்துபோன கோடானுகோடி மக்களால் ஆனதே உண்மையான வட இந்தியா. அந்த மக்களைப் பார்த்தால் அவர்கள் அஞ்சி கூசிக் குறுகி வளைந்து வாழ்வதைப் பார்த்தால் நமக்கு துணுக்குறுகிறது. அவர்களுக்கு சுயமரியாதை என்பதே இருப்பதில்லை. நண்பர் சொன்னார், ஒரு வட இந்தியப் பணக்காரன் புத்தம் புது ஊரில் இறங்கி அங்கே நிற்கும் ஒரு ஏழையை அடே போட்டுக் கூப்பிட்டு

தனக்கு ஒரு வேலையை ஏவ முடியும். அவன் செய்வான், செய்யாமலிருக்க முடியாது.

இந்தக் குடும்பங்களின் வாரிசுகள்தான் ஆஸ்திரேலியா அல்லது கனடா அல்லது அமெரிக்கா செல்கிறார்கள். தங்கள் சொந்த ஊரில் சட்டம் நெறிக்கு அப்பாற்பட்ட பூலோக தேவர்களாக எண்ணிக்கொள்ளும் அதே மனநிலையை அப்படியே அங்கும் காட்டுகிறார்கள். அது பெரும்பாலும் சகித்துக்கொள்ளப்படுவதில்லை. இந்திய மாணவர்கள் மேல் பொதுவாக உருவாகியிருக்கும் வெறுப்புக்கு இதுவே ஊற்றுக்கண்ணாக இருக்கக் கூடும்.

சமீபகாலமாக தமிழ்நாட்டில் இந்த மனநிலை பரவி வருகிறது. இளைஞர்கள் எந்தவித நாகரிக ஒழுங்குகளுக்கும் கட்டுப்படாது நடந்து கொள்வதே இப்போதைய மோஸ்தர் என்றால் மிகையல்ல. நடுச்சாலையில் குடிப்பது, பைக்குகளில் ஆர்ப்பாட்டம் போட்டுச்செல்வது, அப்பாவிகளை துன்புறுத்துவது. இந்த மனநிலை நமது பணக்கார வீட்டுக் குழந்தைகளுக்கு இயல்பாகவே வந்து விடுகிறது. தங்களை வரம்பெற்ற மனிதர்களாக, உலகமே தங்களுக்கு ஏவல் செய்ய வேண்டிய ஒன்றாக, இவர்கள் எண்ணுகிறார்கள். எந்தச் சட்டமும் தங்களை எதுவும்செய்யமுடியாது என எண்ணுகிறார்கள்.

உண்மையில் அப்படித்தான். ஒன்றும் செய்ய முடியாது இங்கே. பணம் இருந்தால் போலீஸ் உங்கள் குற்றேவல் கும்பல்தான். நம் பெற்றோர் பிள்ளைகளை இப்படித்தான் இப்போது வளர்க்கிறார்கள். சென்னையில் எந்தவித பொதுஇட மரியாதையும் இல்லாத இளைஞர்களை நீங்கள் ஸ்பென்ஸர் பிளாசாவில்தான் பார்க்கலாம். பண்படாத மிருகங்கள் போல நடந்துகொள்ளும் சிறுவர் சிறுமியரை. பேச்சு மட்டும் ஆங்கிலத்தில் இருக்கும், அதுவே நாகரிகம் என்ற நம்பிக்கையும்.

சென்ற மாதம் திருவனந்தபுரம்—சென்னை விமானத்தில் ஒரு பதின்வயதுப்பெண்ணைப் பார்த்தேன். பார்த்தாலே தெரியும் நவீன இந்திய உயர்குடிப்பெண் என. விமானம் புறப்பாடு அறிவித்த பின்னரும் அவள் குறுஞ்செய்தி அனுப்பிக்கொண்டிருந்தாள். செல்ஃபோனை அணைக்கும்படி பலமுறை அறிவிப்பு வந்தபின்னரும் அவள் பொருட்படுத்தவில்லை. பணிப்பெண் வந்து மென்மையாக செல்ஃபோனை அணைக்கும்படி சொன்னாள். அச்சிறுமி

கோபத்துடன் ‘போ…அணைக்கிறேன்’ என்றபின் மேலும் தன் பாட்டில் குறுஞ்செய்தி அனுப்பிக்கொண்டிருந்தாள்.

பணிப்பெண் மீண்டும் சொன்னாள். அவள் கடும் கோபத்துடன் ‘போ…நான் அணைக்கிறேன்’ என்றபின் மீண்டும் தொடர்ந்தாள். பணிப்பெண் அருகிலேயே நின்றிருந்தாள். அவள் தலை தூக்கி புதிதாகக் கேட்பது போல ‘ஏன்?’ என்றாள். பணிப்பெண் மிகப் பணிவாக செல் ஃபோனை அணக்கும்படி சொன்னாள். அவள் பேசாமல் மீண்டும் குறுஞ்செய்தி அனுப்பியபின் அணைத்தாள். கிட்டத்தட்ட பத்து நிமிடம். பணிப்பெண் நன்றி என்றாள். அவள் ‘கோ டு ஹெல்’ என்றாள். விமானமே இந்தப்பெண்ணுக்காக காத்திருந்தது.

இந்த இளவரசி யார்? கிரானைட் அல்லது இறால் ஏற்றுமதி செய்யும் ஒரு ஆசாமியின் மகளாக இருப்பாள். இன்னமும் நிலப்பிரபுத்துவ காலம் விட்டு மீளவில்லை. முதலாளித்துவத்துக்கு அதற்கான சில மரியாதைகள் பண்புநலன்கள் உண்டு. அவை எதுவுமே இவள் மண்டையில் ஏறவில்லை. முதலாளித்துவம் மூலம் உருவாக்கப்பட்ட ஒருவகை நிலப்பிரபுத்துவ ஜீவி. நம் உயர்வற்க இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் இப்படிப்பட்டவர்கள். சமீப காலமாக நட்சத்திர ஓட்டல்களில் இம்மாதிரி ஆசாமிகளை தொடர்ந்து பார்த்து வருகிறேன்.

இவர்கள்தானே ஆஸ்திரேலியா அல்லது ஐரோப்பாவுக்குச் செல்லும் இந்தியர்கள்? நானே மெல்பேர்னில் மெட்ரோ ரயிலில் இந்திய மாணவர்கள் இரைந்து கத்தி அநாகரிகமாக நடந்துகொள்வதைப் பார்த்தேன். ரயில் நிலையத்தில் துப்பிக்கொண்டே செல்லும் ஒருவனைப் பார்த்தேன். அவர்கள் உருவாக்கும் மனப்பதிவு என்பது இப்படி ஒரு வன்முறையாக வெடிப்பது புரிந்துகொள்ளக் கூடிய ஒன்றே. இந்தியாவிலும் பல இடங்களில் இத்தகைய வன்முறைகள் வெடித்துள்ளன.

இதை வெள்ளைய இனவெறி என தந்திரமாக திசை திருப்பிவிட்டது இந்திய ஊடகங்கள் என அதே சண்டே இண்டியன் இதழில் ஆஸ்திரேலிய இதழாளர் ஆண்ட்ரூ போல்ட் எழுதுகிறார். இந்திய மாணவர்கள் தாக்கப்பட்ட சம்பவங்களில் எடுக்கப்பட்ட கண்காணிப்பு காமிரா பதிவுகளில் தாக்கியவர்களில் எல்லா இனத்தவரும் இருப்பது தெளிவாகவே பதிவான

பிறகும் இது வெள்ளைய இன வெறி என்றே வன்மமாக பிரசாரம் செய்யப்படுகிறது. இந்த விஷயம் இந்திய ஊடகங்களில் இருக்கும் இதே இந்திய உயர்குடி ஆசாமிகளால் வர்க்க உணர்வுடன் மிகைப்படுத்தப்பட்டது என்றே நான் எண்ணுகிறேன்.

இந்திய மாணவர்கள் இந்த ‘நிறவெறி’ தாக்குதல்களுக்கு எதிராக சிட்னி மற்றும் மெல்பேர்ன் நகரில்செய்த போராட்டங்கள் ஆபாசமானவை. இந்தியாவில் கும்பல்மனநிலையையே போராட்ட உத்தியாக ஆக்கும் ஒரு கேடுகெட்ட பண்பாடு நம்மிடம் உள்ளது. சாலைகளை மறிப்பது, தெருவில் கூச்சலிட்டு நடனமாடுவது, கத்துவது என அனைத்து நெறிகளையும் மீறுவதே இங்கே நாம் போராட்டமாக கருதியிருக்கிறோம். சாலையில் செல்லும் சம்பந்தமில்லாத அப்பாவிகளை தாக்குவதும், அவமதிப்பதும்கூட இங்கே போராட்டமுறைதான்.

இதற்குக் காரணம் இங்குள்ள நம் ஊடகங்கள். ஒரு நியாயமான போராட்டத்தை அவை பொருட்படுத்தாது. ஆனால் ஒரு சிறிய வன்முறை அதில் சேர்ந்துகொண்டால் பெரிய செய்தி ஆகிவிடும். நாகர்கோயில் வடசேரியில் தண்ணீர்ப் பஞ்சம், மக்கள் தர்ணா என்றால் செய்தியே அல்ல. வடசேரியில் மக்கள் தண்ணீர்க் குடங்களால் பேருந்துகளை தாக்கினார்கள் என்றால் புகைப்படச்செய்தி. இந்த கும்பல் மனநிலையை ஆஸ்திரேலியாவில் செய்து நாம் நம்முடைய கௌரவத்தை மேலும் இழந்து வெறுப்பை மேலும் சம்பாதித்துக்கொண்டிருக்கிறோம்.

ஆஸ்திரேலியாவில் இனவெறித் தாக்குதல்கள் நடப்பதாக நான் நம்பவில்லை. அங்கே உள்ள தாக்குதல்கள் நம்மவர்களின் நாகரிகமில்லாத செயல்களுக்கான எதிர்வினைகளாக இருக்கும் வாய்ப்பு அதிகம். அத்துடன் சிறு திருட்டு நோக்கமும் இருக்கலாம். அதை நம்மவர் எதிர்கொண்ட முறை அந்நாட்டை அவமதிப்பது. அதற்கான எந்த தார்மீக உரிமையும் நமக்கில்லை. ஒரு கௌரவமான சிவில் சமூகமாக நாம் மாறுவதற்கு நம் இளையதலைமுறைக்கு நாம் இன்னமும் பயிற்சி கொடுக்க வேண்டும் என்பதே இந்தப் போராட்டங்கள் காட்டும் உண்மை.

புல்வெளி தேசம்: ஆஸ்திரேலியப் பயணம் Pulveli Desam: Australia Payanam
ஜெயமோகன் Jeyamohan ©

This digital edition published in 2015 by

Kizhakku Pathippagam

177/103, First Floor, Ambal's Building,

Lloyds Road, Royapettah,

Chennai 600 014, India.

Email: support@nhm.in
Web: www.nhmreader.in

First published in print in December 2009 by Kizhakku Pathippagam

All rights reserved.

Kizhakku Pathippagam is an imprint of New Horizon Media Private Limited, Chennai, India.

This e-book is sold subject to the condition that it shall not, by way of trade or otherwise, be lent, resold, hired out, or otherwise circulated without the publisher's prior written consent in any form of binding or cover other than that in which it is published. No part of this publication may be reproduced, stored in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior written permission of both the copyright owner and the above-mentioned publisher of this book. Any unauthorised distribution of this e-book may be considered a direct infringement of

copyright and those responsible may be liable in law accordingly.

All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the publisher of this book.